ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீமத்ப்ரபந்நஜநகூடஸ்தரான

பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான் இவர்களருளிச்செய்த இயற்பா.

—:o:—

முதற்றிருவந்தாதிமுதல், நான்முகன்திருவந்தாதி

வரைக்கும்

மூலமும்,

இவற்றிற்கு

அப்பிள்ளையருளிச்செய்த வுரையும்,

பெரியவாச்சான்பிள்ளை

அருளிச்செய்த

வ்யாக்யாநமும்;

முதல்ஸம்புடம்

சித்ரகூடம்-கந்தாடை-திருவேங்கடாசார்யர்,

அரசாணிபாலை-கந்தாடை-க்ர்ஷ்ணமாசார்யரோடு

பரிசோதித்து,

சென்னபட்டணம்:

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தனர்.

1882௵ டிஸம்பர்மீ

Registered Copy-right.



ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

శ్రీశైలేశదయాపాత్రం ధీభక్త్యాదిగుణార్ణవమ్
యతీన్ద్రప్రవణంవన్దే రమ్యజామాతరంమునిమ్॥

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்।
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்॥

లక్ష్మీనాథసమారమ్భాం నాథయామునమధ్యమామ్।
అస్మదాచార్యపర్యన్తాం వన్దేగురుపరమ్పరామ్॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்॥

యోనిత్యమచ్యుతపదామ్బుజయుగ్మరుక్మ వ్యామోహతస్తదితరాణితృణాయమేనే।
అస్మద్గురోర్భగవతోఽస్య దయైకసిన్ధోః రామానుజస్యచరణౌ శరణంప్రపద్యే॥

யோநித்யமச்சுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணித்ருணயமேநே।
அஸ்மத்குரோர்ப்பகவதோஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌஶரணம்ப்ரபத்யே॥

మాతాపితాయువతయస్తనయావిభూతిస్సర్వంయదేవనియమేనమదన్వయానామ్।
ఆద్యస్యనఃకులపతేర్వకుళాభిరామం శ్రీమత్తదఙ్ఘ్రియుగళంప్రణమామిమూర్ధ్నా॥

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்।
ஆத்யஸ்யநஃகுலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா॥

భూతంసరశ్చమహదాహ్వయభట్టనాథ శ్రీభక్తిసారకులశేఖరయోగివాహాన్।
భక్తాఙ్ఘ్రిరేణుపరకాలయతీన్ద్రమిశ్రాన్ శ్రీమత్పరాఙ్కుశమునిం ప్రణతోఽస్మినిత్యమ్॥

பூதம்ஸரஸ்யமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஶேகரயோகிவாஹாந்।
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்॥

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பிள்ளைலோகஞ்சீயரருளிச்செய்த,

முதற்றிருவந்தாதித்தனியன்வ்யாக்யாநம்.

அவதாரிகை.—(கைதைசேரித்யாதி) இவ்வாழ்வார் "కఇతిబ్రహ్మ ణోనామ తేనతత్రాఞ్చితోహరిః। తస్మాత్కాఞ్చీతివిఖ్యాతా పురీపుణ్యవివర్ధనీ" "கஇதி ப்ரஹ்மணோநாம தேநதத்ராஞ்சிதோஹரி:। தஸ்மாத்காஞ்சீதிவிக்யாதா புரீபுண்யவிவர்த்தநீ" என்னும்படியான காஞ்சிபுரியில் புஷ்கரிணியில் புஷ்கரத்திலே விஷ்ணு நக்ஷத்ரத்திலே ஆவிர்ப்பவித்து திவ்யப்ரபந்த தீபமுகேநலோகத்தில் அஜ்ஞாநாந்தகாரத்தைப்போக்கி வாழ்வித்தபடியைச் சொல்லுகிறது - இதில்.

முதலியாண்டானருளிச்செய்த தனியன்.

கைதைசேர்பூம்பொழில்சூழ் கச்சிநகர்வந்துதித்த
பொய்கைப்பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள்வாழவருந்தமிழ்நூற்றந்தாதி
படிவிளங்கச்செய்தான் பரிந்து.

வ்யா.—(கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர்வந்துதித்த பொய்கைப்பிரான்) இத்தால்-இவர் ஜந்மவைபவஞ் சொல்லுகிறது. கைதை-கேதகை-தாழை. "கைதைவேலி மங்கை" என்றும், "கொக்கலர் தடந்தாழை வேலி" என்றும் சொல்லுமாப்போலே அதுதான் நீர் நிலங்களிலே யாய்த்து நிற்பது. "தாழை தண்ணாம்பல் தடம்பெரும் பொய்கைவாய்" என்னும்படி அம்பூந்தேனிளஞ்சோலை சூழ்ந்த * கச்சி வெஃகாவில் பொய்கையிலே * எம்பெருமான் பொன்வயிற்றிற் பூவேபோன்ற பொற்றாமரைப்பூவிலே ஐப்பசியில் திருவோணநாளாய்த்து - இவரவதரித்தது. பத்மஜனான பூவனைப்போலே யாய்த்துப்பொய்கையாரான விவர்பிறப்பும். "வந்துதித்த" என்கையாலே-ஆதித்யோதயம் போலேயாய்த்துஇவருதயமும். "வருத்தும் புறவிருள்மாய்ற்ற வெம்பொய்கைப்பிரான்" என்னக்கடவதிறே. பொய்கையிலே யவதரிக்கையாலே அதுவே நிரூபகமா யிருக்கை. அதுதான், ஸரஸ்வதி பயஸ்விநியாய்ப்ரவஹித்த ஸ்தலமாய்த்து; தத்தீரமான பொய்கையென்கை. (பொய்கைப்பிரான்) மருபூமியில்பொய்கைபோலேஎல்லார்க்குமுபகாரகராயிருக்கை. தீர்த்தகரராய்த் திரியுமவரிறே. கவிஞர்போரேறுகையாவது – கவிஶ்ரேஷ்டரென்றபடி. முதலாழ்வார்கள் மூவரிலும் முதலானவராகையாலே "ஆதிகவி" என்னும்படியான அதிஶயத்தையுடையரா யிருப்பர். * படைத்தான்கவியாலும் பரகாலகவியாலும், "செஞ்சொற்கவிகாள்" என்றும், "செந்தமிழ்பாடுவார்" என்றும் கொண்டாடப்படுமவருமாய், நாட்டிற்கவிகளுக்கும் விலக்ஷணகவியாயிருப்பர். "இது

பொய்கையார் வாக்கினிற் கண்டுகொள்க" என்றிறே தமிழர் கூறுவது. அந்த வேற்றமெல்லாவற்றையும் பற்ற "கவிஞர்போரேறு" என்கிறது.

ஏவம்வித வைலக்ஷண்யத்தை யுடையவர், வைஷ்ணவர்கள் வாழும்படி ஸ்நேஹத்தாலே விலக்ஷணப்ரமாண நிர்மாணம் பண்ணினபடி சொல்லுகிறது (வையத்தடியவர்கள் வாழ வருந்தமிழ் நூற்றந்தாதி படிவிளங்கச்செய்தான் பரிந்து) என்று. வையத்தடியவர்களாகிறார் - பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்கள். அவர்கட்கேயிறே வாழவேண்டுவது; * வானத்தணியமரர்க்கு வாழ்வு நித்யமாயிறே யிருக்கிறது. இத்தாலே இவர்கள் வாழுகையாவது – ஶேஷத்வவிபவத்தை ஸ்வாநுஸந்தாநத்தாலே யுண்டாக்குமதானப்ரபந்தமென்கை. "நின்தாளிணைக்கீழ் வாழ்ச்சி" என்னக்கடவதிறே. இவ்வநுஸந்தாநமே வாழ்வாகவுமாம். அருந்தமிழ் நூற்றந்தாதியாவது-அர்த்தநிர்ணயத்தில் வந்தால் அரிதாய், தமிழான ப்ரகாரத்தாலே ஸுலபமாய், அதுதான் நூறுபாட்டாய், அந்தாதியா யிருக்கை. உடையவர்நூற்றந்தாதிக்கேற்றம் எட்டுப்பாட்டாயிருக்கும். (அருந்தமிழ்நூற்றந்தாதி) அதுதான்வெளிறாயிருக்கையன்றிக்கே அரிதாய், ஸம்ஸ்க்ர்தமா யிருக்கையன்றிக்கேஅஸம்ஸ்க்ர்தமானத்ராவிடமாய்,ஆயிரம்ஐந்நூறாயிருக்கையன்றிக்கே நூறாயிருக்கை. அன்றிக்கே, வையத்தடியவர்கள்வாழவரும்தமிழ்நூற்றந்தாதிஎன்று ஆகவுமாம். அப்போது,வையத்தடியவர்கள் வாழவருமதானதமிழ்நூற்றந்தாதி என்றுநிர்வஹிக்கக்கடவது. நூற்றந்தாதிபடிவிளங்கச்செய்கையாவது-"வையம்தகளியா" என்று தொடங்கி, * ஓரடியை முடிவாக வருளிச்செய்த திவ்யப்ரபந்ததீபத்தாலே பூதலமெங்கும் நிர்மலமாம்படி நிர்மித்தானென்கை. * வருத்தும் புறவிருள்மாற்ற வெம்பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையுங்கூட்டி ஒன்றத்திரித்தன் றெரித்த திருவிளக்காகையாலே, படியிலே – பூமியிலே ப்ரகாஶிக்கும்படி செய்தருளினு ரென்றாகவுமாம். அன்றிக்கே,"படி"என்று-உபமாநமாய், த்ராவிடவேதத்துக்குப்படிசந்தமா யிருக்கும்படி செய்தருளினுரென்னவுமாம். விளக்கம்-ப்ரகாஶம். "படி" என்று - விக்ரஹமாய், "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்னும்படி கண்டறியும்படி செய்தாரென்றாகவுமாம். பரிவுடனே செய்கையாவது-சேர்ந்தவிஷய ஸ்நேஹத்தாலே யென்னுதல்; பரவிஷயஸ்நேஹத்தாலே யென்னுதல். "செய்யசுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்றாரிறே. ஸ்நேஹத்தாலேயிறே விளக்கெரிவது. இத்தால்-அவர் திவ்யப்ரபந்தோபகாரகத்வத்தால் வந்த உபகாரகௌரவஞ் சொல்லி யீடுபட்டதாய்த்து.

பிள்ளைலோகஞ்சீயர் திருவடிகளேஶரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாய நம:.

இயற்பாமுதற்றிருவந்தாதி.

அப்பிள்ளையுரையின் அவதாரிகை.

ஸ்ரீயஃபதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸமஸ்த கல்யாண
குணாத்மகனான ஸர்வேஶ்வரன், நித்யவிபூதியிலே நித்யாஸங்குசித
ஜ்ஞாநரான நித்யஸூரிகளை நித்யகைங்கர்யங்கொண்டு நித்யாநந்தி
யா யிருக்கச்செய்தேயும், அவர்களைப்போலே கைங்கர்ய நிரதராய்
வாழுகைக்கு இட்டுப்பிறந்துவைத்து அதுக்கசலாய், அவித்யாகர்ம
வாஸநாருசிப்ரக்ர்தி பரவஶராய் பரிப்ரமிக்கிற ஸம்ஸாரிசேதநரைத்
திருத்திப்பணிகொள்ளுகைக்காக, இவர்கள் அழிந்துகிடக்கிற தஶை
யிலே ஸ்வாஶ்ரயணோபகரணமான கரண களேபரங்களைத் தன்கரு
ணையாலே கொடுத்தருளி, அவற்றைக் கொண்டுவ்யபிசரியாதே நல்
வழிநடக்கைக்குடலாக ஶ்ருத்யாதிஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பிக்க,
அவற்றை திரஸ்கரித்து ஸ்வைரம் ஸஞ்சரிக்கிறதசையிலே ராமக்ர்
ணாதி ரூபேணவந்தவதரித்தருளி, உபதேஶாநுஷ்டாநங்களாலும்
ரூபௌதார்யகுணசேஷ்டிதங்களாலும் வசீகரித்து இவர்களைத் திரு
த்தப்பார்த்தவிடத்தில் அவற்றுக்கு மகப்படாதபடி இதரவிஷயங்
களிலே மண்டி இவர்கள் நஷ்டகல்பராய்ப் போகக்கண்டபடியாலே,
† ஆழ்வார்களைக்கொண்டு இவர்களைச் சேர்த்துக்கொள்வானாக* ஆமு
தல்வரான முதலாழ்வார்களை அநந்தரமவதரிப்பித்தருளினான். இவ
ர்களாகிறார் பகவதாகஸ்மிககடாக்ஷவிஶேஷலப்தமான ஜ்ஞாநப்ரே
மங்களைக்குறைவறவுடையராய், நித்யஸூரிகளைப்போலே பிறப்பே
பிடித்து பகவதநுபவத்திலே பழுத்துஸம்ஸாரயாத்ரையிற் கண்ண
ற்று, “இன்கவிபாடும்பரமகவிகள்” என்றும், “செந்தமிழ்பாடுவார்”

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநாவதாரிகை.

ஆழ்வார்களிற் காட்டில் பகவத்விஷயத்திலுண்டான அவகா
ஹநத்தாலே முதலாழ்வார்கள் மூவரையும் நித்யஸூரிகளோ பாதி
யாக நினைத்திருப்பர்கள்; “இன்கவிபாடும் பரமகவிகள்” என்றும்
“செந்தமிழ்பாடுவார்” என்றும். இவர்கள் அவதரித்தது ஓரோ
தேஶங்களிலேயாகிலும் காலப்பழமையாலே இன்னவிடமென்று
நிஶ்சயிக்கப்போகாது. [பேயரேயெனக்கு யாவரும் யானுமோர்
பேயனேயவர்க்கும்] பகவத்விஷயத்தில் அவகாஹியாதாரெல்லாரும்
தமக்குப் பேயரா யிருப்பர்; அவர்கள் நிலையில் தாம் நில்லாதபடி

---

† “ஸஜாதீயரைக்கொண்டு” என்றும் பாடம்.

என்றும் நாவீறுடையபெருமாளும் நாலுகவிப்பெருமாளுங் கொண்டாடும்படியான வேண்டப்பாடுடையராய், பரத்வாதிகளைந்தையும் ஒருக்காலேகண்டுமண்டி அநுபவிக்கும் சதிரையுடையரா யிருக்கச்செய்தே, ஆறுபெருக்கெடுத்து எங்குமொத்துப் போகாநிற்க நீர்க்கு நோக்கு ஓரிடத்திலேயா யிருக்குமாப்போலே, திருவுலகளந்தருளினவிடத்திலும் திருமலையிலும் கால்தாழ்ந்து அநுபவித்துப் போருமவர்களாய், அறிவுண்டாயிருக்க பகவத்விஷயத்தைக் காற்கடைக்கொண்டு இதரவிஷயங்களிலே மண்டித்திரிகிறஸம்ஸாரிகளோட்டை ஸஹவாஸம் துஸ்ஸஹமாய் அவர்கள் வர்த்திக்கிற நாட்டைவிட்டு அறிவுக்கு அடைவில்லாதஸ்தாவரங்கள் வர்த்திக்கிறகாட்டைவிரும்பி, அவ்விடத்திலும்யத்ரஸாயங்க்ரஹராய் ஒருவரையொருவர்அறியாதபடி மறைந்து வர்த்தித்தார் சிலமஹாபுருஷர்களாய்த்து. இப்படிவர்த்திக்கிற இவர்கள்மூவரும் யாத்ர்ச்சிகமாக ஒருநாள் திருக்கோவலூர்ப்ரதேஶத்திலே வந்து ஸங்கதராக, அவ்வளவிலே பெருமழையும் பெருங்காற்றும் ப்ரவ்ர்த்தமாக, அத்தைக்கண்டுமழைக்கு ஒதுங்கி ஓரிடைகழியிலே ஒருவர்புக்குக்கிடக்க; மற்றையவர்வந்து “திறக்கவேணும்” என்ன; ஒருவர்கிடக்க இடம்போருமத்தனையென்ன; “ஒருவர் கிடந்தவிடம் இவர்க்கு இருக்கலாங்காணும் திறவும்” என்ன; “ஒருவர் மூச்சு ஒருவர் பொறாதஸம்ஸாரத்திலே இப்படி சொன்ன இவர் கேவலரல்லர்” என்று திறக்க; அவரும் புகுந்து இவ்விருவருமாக இருக்கிறவளவிலே மற்றையவரும்வந்து திறக்கச்சொல்ல; “எங்களிருவர்க்கும் இருக்கவிடம் போருமத்தனை” என்ன; “இருவரிருந்தவிடம் மூவர்க்குநிற்கலாம்திறவும்” என்ன; “இவரும்

யாலே அவர்களுக்குத் தாம் பேயராயிருப்பர். இப்படியாலே பகவத்விஷயத்தில் அவகாஹியாதா ரிருக்குமிடத்திற்காட்டில் ஸ்தாவரங்களுள்ளகாடே யமையுமென்றிருப்பர்கள். [ஆன்விடை யேழன்றடர்த்தார்க் காளானாரல்லாதார் மானிடவரல்லரென் றென்மநத்தேவைத்தேனே] ஸர்வேஶ்வரன் திருவுள்ளம் ஊற்றுமாறிற்றளவிலும் க்ர்பைபண்ணும் தம்முடைய மநஸ்ஸிலும் கொடுமையை வைத்தேனென்கிறார். இனி அவர்கள் மநுஷ்யரல்லரென்று செம்பிலும் கல்லிலும்வெட்டிக்கொள்ளவமையும். “சிறந்தார்க்கெழுதுணையாஞ் செங்கண்மால்நாமம்மறந்தாரைமானிடமாவையேன்” என்னும்படியே–அறிவுநடையாடாதவர்களிருக்குமிடத்தில் வசிக்குமதில் காட்டிலே வர்த்திக்க வமையுமென்று காடுகளிலே வர்த்திப்பர்கள். இங்ஙனேசெல்லுகிறகாலத்திலேஒருமழையையும்காற்றையுங்கண்டுதிருக்கோவலூரிலே ஒரு இடைகழியிலே ஒருத்தர்புக்குக்கிடக்க; இருவராவார்சென்று “ஒருவர்கிடக்குமிடம்இருவர்க்குஇருக்கப்போரும்” என்று இருக்க; மூவராவார் சென்று “இருவரிருக்குமிடம் மூவர்க்கு

கேவலரல்லர்" என்று திறக்க; இவர்கள் மூவரும் கூடி நிற்கச்செய்தே, ஈஶ்வரன், தானும் பிராட்டியுமாகவந்து தனித்தனியே இவர்களைப்பின்பற்றித் திரிந்த நெஞ்சாறல்தீரஇவர்கள்மூவர்க்கும் நடுவே புக்கு நெருக்க, நம்மூவரையு மொழிய வேறுபுக்கு நெருக்குகிறவர்களார் என்று, விளக்கேற்றிப்பார்க்கவேணும் என்ன; அவர்களிலேயொருவரான பொய்கையார், லீலாவிபூதியில் கார்யகாரணரூபமான ஸமஸ்தவஸ்துக்களும் பகவததீநமாயிருக்கிறபடியைபரபக்திரூபாபந்நஜ்ஞாநத்தாலே தர்ஶித்து அத்தை ஒருவிளக்காகரூபித்துக்கொண்டு அநுபவபரீவாஹரூபமாக * வையந்தகளி யருளிச்செய்தார்; அநந்தரம், ஸ்ரீபூதத்தார் * வையந்தகளிகேட்கையாலே அந்த பரபக்திரூபாபந்நஜ்ஞாநம்முற்றி பகவத்தத்வத்தை விஶதமாக தர்ஶிக்கைக்கு உபகரணமானபரஜ்ஞாநமாகிற உஜ்வலதீபத்தை யேற்றுகிறவழியாலே * அன்பேதகளியருளிச்செய்தார்; அநந்தரம், மூன்றுமாழ்வார், அவனை அநுபவிக்கப் பெறில் தரித்தும் பெறாவிடில் மூச்சடங்கும்படியான பரமபக்தியை யுடையராய்க்கொண்டு அவன்படிகளைக்கட்டடங்கக்கண்டுமண்டியநுபவிக்கிற வழியாலே * திருக்கண்டேனருளிச்செய்தார்.

நிற்கப்போரும்" என்றுமூவரும்நிற்க; இருவர்வந்துநெருக்க;[நீயும் திருமகளும்] "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார்" என்னும் நீயும், உன்பரிகாரம் சென்று நலியப்புக, "𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿" "நகஶ்சிந்நாபராத்யதி" என்றுஏறிட்டுக்கொண்டு நோக்கும் திருமகளும். [நின்றாயால் குன்றெடுத்துப்பாயும் பனிமறுத்தபண்பாளா] மலையெடுத்து உடம்பிலே விழுகிற மழையைக் காத்தநீர்மையையுடையவனே. உடம்பிலே விழுந்தமழையை மலையெடுத்துப் பரிஹரித்தபோது பிறந்த ஹர்ஷம்போலேயாய்த்துஇவர்கள் நெருக்குப்பெற்றபோது இவனுக்கிருந்தபடி. [வாசல்கடைகழியா வுட்புகாக்காமரு பூங்கோவலிடைகழியே பற்றியினி] காமுகரானவர்கள் உகந்தவிஷயங்களிலே, போகச்சொன்னாலும் தூணைக் கட்டிக்கொண்டு நிற்குமாப்போலே இவ்வாசலுக்குப் புறம்புபோக மாட்டுகிறிலன்; உள்ளுப்புகுர மாட்டுகிறிலன். [இனி] இப்போது. இப்படி இருவருமாய்த் தங்களைநெருக்கப்புக்கவாறேநம்மையொழிய வேறே சிலர் நெருக்குகிறாருண்டென்று ஜ்ஞாநமாகிற விளக்கை யேற்றினார். [𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑌨 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 - ஜ்ஞாநதீபேநபாஸ்வதா] விளக்குண்டானாலும்ஜ்ஞாநமில்லையாகில்பதார்த்தங்களை விவேகிக்கப்போகாது.

முதலாழ்வார்க்கு ஜ்ஞாநம் பிறந்தபடி சொல்லிற்று; இருவராவார்க்கு ஜ்ஞாநம் முற்றி பக்தியானபடி சொல்லிற்று; மூவராவார்க்கு, பக்தியுடையராய் அவனை யொழியச் செல்லாதவர்களுடைய ஸாக்ஷாத்காரம் பிறந்தபடி சொல்லிற்று. இம்மூவர்க்கும் அர்

ஜ்ஞாநபக்தி ஸாக்ஷாத்காரங்கள் மூன்றும் ப்ரபந்தத்ரயத்துக்கும் தாத்பர்யமாக ஆசார்யர்களருளிச்செய்திருக்க, விருத்தமாக இங்ஙனே சொல்லலாமோவென்னில்; அதுக்குக்குறையில்லை;—அங்கு, ஜ்ஞாநமென்கிறது-பரபக்திரூபாபந்நஜ்ஞாநத்தை; பக்தியென்கிறது-பரஜ்ஞாநதஶாபந்நமானப்ரேமத்தை; ஸாக்ஷாத்காரமென்கிறது-பரஜ்ஞாநவிபாகரூபையான பரமபக்தியை. கர்மாநுஷ்டாநாந்தமாக ஜ்ஞாநமுதித்து, அது த்யாநோபாஸநாத்யவஸ்தாபந்நமாய் முற்றி, அநந்தரம் "ద్రష్టవ్యః" "த்ரஷ்டவ்ய:" என்னும்படி ஸாக்ஷாத்காரரூபமாய், அநந்தரம் விஷயவைலக்ஷண்யத்தை அவகாஹித்து பக்திரூபாபந்நமாய், பின்னை பரபக்த்யாதிகளாக பரிபக்வமாம் ப்ராமாணிகர்படியில் இவர்களுக்குமுதலிலே அந்வயமில்லையிறே. "கர்மஜ்ஞாநாநுக்ர்ஹீதையானபக்தியினுடைய ஸ்தாநத்திலே பகவத்ப்ரஸாதம் நின்று அநந்தரம் விளைந்தபரபக்தியாய்த்து இவரது" என்றிறே ப்ரதமாசார்யரான ஆழ்வார்க்கு ஆசார்யர்களருளிச்செய்வது; அது அல்லாத ஆழ்வார்களுக்கும் ஒக்குமிறே. அல்லாதபோது ஆழ்வார்களெல்லாரும் ஏகப்ரக்ர்திகளென்னப்போகாதே; ஆகையால் விரோதமில்லை.

பரபக்த்யாதிகள்மூன்றும் ஓரொருவர்க்கே குறைவறவுண்டாயிருக்கச்செய்தேயும் ஓரொருத்தர்க்கு ஒவ்வொன்றிலே ஊற்றமாயிருக்கும். பகவத்ஸ்வரூபாதிகளெல்லாம் எல்லார்க்கும் அநுபாவ்யமாகா நிற்கச்செய்தே ஓரொன்றில் ஒவ்வொருத்தர்க்கு ஊற்றம் சொல்லுகிறப்போலே அநுபவாபிநிவேஶரூபையான பரபக்த்யாத்

த்தமொன்றே. மூன்றுரிஷிகள்கூடி ஒருவ்யாகரணத்துக்கு கர்த்தாவானுப்போலே வக்த்ர்பேதமுண்டேயாகிலும் அர்த்தஶரீரம் ஒன்று. "த்ரிமுநிவ்யாகரணம்" என்னுமாப்போலே. "தகளி" என்றும், "விளக்கு" என்றும், "நெய்" என்றும் வர்ணிக்கிறபடி யெங்ஙனேயென்னில்; ஜகத்தானது ஸாவயவத்வாத் கார்யமென்னக்கடவது. கார்யமாவது - கர்த்ர்மத்தாகக்கடவது. அந்தகர்த்தா ஶங்கசக்ரகதாதரனென்கிறது. "శాస్త్రయోనిత్వాత్" "ஶாஸ்த்ரயோநித்வாத்" என்று-ஆநுமாநிகளை ஶாஸ்த்ரகாரர் தூஷிக்கச்செய்தே இங்கு ஆநுமாநிகமாகக்கொள்ளுப்படியெங்ஙனேயென்னில்; "వేదశాస్త్రావిరోధినా। యస్తర్కేణానుసన్ధత్తే సధర్మం వేద నేతరః" "வேதஶாஸ்த்ராவிரோதிநா। யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸதர்மம்வேத நேதர:" என்று-வேதஶாஸ்த்ரங்களோடு விருத்தமானதர்க்கம் நிஷேதிக்கப்படுகிறது; அவிருத்தமானது ஸ்வீகரிக்கப்படுமென்று சொல்லுகையாலே அநுதர்க்கமாகக் கொள்ளுகிறது. "న్యాయానుగృహీతస్య వాక్యస్యార్థనిశ్చాయకత్వాత్" "ந்யாயாநுக்ர்ஹீதஸ்ய வாக்யஸ்யார்த்த நிஶ்சாயகத்வாத்" என்கிறபடியே. ... ... *

யவஸ்தைகளிலும் தனித்தனியே ஊற்றஞ் சொல்லக் குறையில்லை. கர்த்ர்பேதமுண்டாயிருந்ததேயாகிலும் ஒருவனுக்கே க்ரமத்திலே பிறக்கக்கடவ பரபக்த்யாத்யவஸ்தாத்ரயமும் தளமாக ப்ரபந்தத்ரயமும் அவதரிக்கையாலே அர்த்தக்ரமம் பார்த்தால் ஏகப்ரபந்தமாய்த்தலைக்கட்டக்கடவது. பூர்வோத்தர மீமாம்ஸைகளுக்கு கர்த்ர்பேதமுண்டாயிருக்கச் செய்தே வேதாக்யைகப்ரபந்த வ்யாக்யாநரூபமாகையாலே ப்ரபந்தைக்யங் கொள்ளுகிறாப்போல் இங்கும் ப்ரபந்தைக்யங்கொள்ளத்தட்டில்லை. ... ... *

அ.—முதற்பாட்டு. விசித்ரகார்யமான ஜகத்துக்குகாரணமாம் போது விசித்ரஜ்ஞாநஶக்தியுக்தனாய் ஶங்கசக்ராதி திவ்யாயுததரானஸர்வேஶ்வரனேகாரணமாகவேணும் என்னும் அநுமாநத்தாலே ஜகத்காரண வஸ்துவை நிர்ணயியா நின்றுகொண்டு, ஸர்வஶேஷியான ஸர்வேஶ்வரன்றிருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமான வாசிக கைங்கர்யம் பண்ணப்பெற்றேனென்று க்ர்தார்த்தராகிறார்.

மு.—வையந்தகளியாவார்கடலேநெய்யாக
வெய்யகதிரோன்விளக்காகச் – செய்ய
சுடராழியானடிக்கேசூட்டினேன்சொல்மாலை
இடராழிநீங்குகவே யென்று.

பதம்.	உரை.
	"కాఠిన్యవాన్ యోఽబిభర్తి" "காடிந்ய வாந்யோ பிபர்த்தி" என்கிறபடியேபகவத்ஸங்கல்பாயத்தமான காடிந்யத்தை யுடைத்தான,
வையம்	ப்ர்திவியானது, மேல்நெய்யும் திரியுமாகரூபிக்கப்படுகிற வஸ்துக்களுக் காதாரமான,
தகளியா	தகளியாகவும்,
வார்	அந்த ப்ர்திவியைச் சுற்றுஞ் சூழ்ந்து த்ரவஸ்வபாவமாய், "తేనచక్రతసీమానోజలాశయాః" "தேநசக்ர

பதம்.	உரை.
	தஸீமாநோஜலாஶயாঃ" என்கிறபடியே பகவ தாஜ்ஞையாலே கரையை அதிக்ரமியாமல் அதுக்குள்ளேயடங்கிக் கிடக்கிற,
கடல்	கடலின் நீரான அம்ஶமானது, மேல் ஏற்றப்போகிற விளக்கை உத்தரோத்தரம் ஒளிவிட்டுக்கிளரப்பண்ணும்
நெய்யாக	நெய்யாகவும், கிரணமுகேநக்ரஸிக்கப்பட்ட ஜலத்தாலே அபிவ்ர்த்தமாய்

பதம்.	உரை.
வெய்ய	ப்ரதாபோத்தரமான
கதிரோன்	கிரணங்களை யுடையனுய்"భీషోదేతిసూర్యః" "பீஷோதேதி ஸூர்யஃ" என்கிறபடியே-ஈஶ்வராஜ்ஞைக்குநடுங்கி முப்பதுவட்டம் உதிப்பதும்அஸ்தமிப்பது மாய்த்திரியக்கடவஆதித்யன்,
விளக்காக	அர்த்த ப்ரகாஶகமான விளக்காகவும், * இருளன்னமா மேனிக்குவிளக் கேற்றினுப்போலே பகைத்தொடையாக,
செய்ய	சிவந்த,
சுடர்	ஒளியையுடைய,

பதம்.	உரை.
ஆழியான்	திருவாழி யாழ்வானை நிரூபகமாகவுடைய ஸர்வேஶ்வரனுடைய,
அடிக்கே	திருவடிகளிலே,
இடர்ஆழி	நித்ய கைங்கர்யம் பண்ணப்பெறுத வென்னுடைய துக்க ஸாகரமானது,
நீங்குகஎன்று	விட்டு நீங்கும்படியாக,
	தத்குண சேஷ்டிதங்களைஉள்ளீடாகவைத்துத்தொடுத்தநிரதிஶயபோக்யமான,
சொல்மாலை	ஶப்த ஸந்தர்ப்பங்களை,
சூட்டினேன்	அவற்றுக்கு அலங்காரமாம்படிஸாதரமாகஸமர்ப்பித்தேன்.

இவ்விஷயத்தை அறியப் பெறுமல் அஸத்கல்பராய் நோவுபடுகிற ஸம்ஸாரிகளுக்கு பரவஸ்து வாஸ்தவப்ரகாஶகமான இப்ப்ரபந்தாப்யாஸமுகத்தாலே * அநந்தக்லேஶபாஜநமானஸம்ஸாரஸாகரம் வற்றவேணுமென்று "சொன்மாலை சூட்டினேன்" என்றுமாம்.இப்படி விசித்ரப்ரபஞ்ச நிர்மாணநுகுணமான ஜ்ஞாநஶக்த்யாதி குணவைசித்ர்யயுக்தனுய் ஶங்கசக்ராத்யாயுததரனுன ஸர்வேஶ்வரனே ஜகத்காரணம் என்னும் அநுமாநத்தாலே காரணவஸ்துவை நிர்ணயித்தாராய்த்து. "శాస్త్రయోనిత్వాత్" "ஶாஸ்த்ரயோநித்வாத்" என்று - ஆநுமாநிகனை ஸூத்ரகாரர் தூஷித்திருக்கச்செய்தே இவர் அநுமாநத்தாலே காரணவஸ்துவைநிர்ணயம்பண்ணுவானென்னென்னில்; "ఆర్షం ధర్మోపదేశఞ్చ వేదశాస్త్రావిరోధినా। యస్తర్కేణానుసన్ధత్తే స ధర్మం వేద నేతరః" "ஆர்ஷம் தர்மோபதேஶஞ்ச வேதஶாஸ்த்ராவிரோதிநா। யஸ்தர்க்கேணநுஸந்தத்தே ஸதர்மம்வேதநேதரஃ" என்று - வேதஶாஸ்த்ரங்களோடுவிருத்தமானதர்க்கத்தையழித்துஅவிருத்தமான தர்க்கத்தை ஸ்வீகரிக்கையாலே இங்கும் அப்படி விரோதப்ரஸங்கம் சொல்ல இடமில்லை; "న్యాయానుగృహీతస్య వాక్యస్యార్థనిశ్చాయకత్వాత్" "ந்யாயநுக்ர்ஹீதஸ்யவாக்யஸ்யார்த்தநிஶ்சாயகத்வாத்" என்றிறே

ஸ்ரீபாஷ்யகாரருமருளிச்செய்தது. ப்ர்திவ்யாதிகளாலே - லீலாவிபூதியை உபலக்ஷிக்கிறது. "சுடராழி" என்று - நித்ய விபூதிக்கு உபலக்ஷணம். "அடிக்கே" என்று - திவ்ய மங்களவிக்ரஹத்துக்கு உபலக்ஷம். இப்படிஸ்வபக்ஷத்தை சிக்ஷிக்கவே "சூந்யமேதத்வம்" என்றும், "நிர்விஶேஷ்வஸ்துவேதத்வம்" என்றும், "விஶேஷணாந்த விஶிஷ்டவஸ்துவேதத்வம்"என்றும்சொல்லுகிறபரபக்ஷங்கள் அர்த்தாத்ப்ரதிக்ஷிப்தங்கள். ... ... (க)

வ்யா.—(வையம்தகளியா) ஸாவயவமுமாய் கார்யமுமாகையாலே "வையம்தகளி"என்கிறது.(வார்கடலேநெய்யாக)வார்கடல்-சூழ்ந்த கடல்; பூர்ணமான கடலென்னவுமாம். நதியினாலே ஜலம் புக்கதென்று பூர்ணமாகாதிருக்கையாலும், இல்லையென்று குறைய நினைக்கையாலும், பூமிக்கு உயர்ந்திருக்கச்செய்தேயும் பூமியைஅழிக்கமாட்டாமையாலும் கார்யமென்று தோற்றுகையாலே நெய்யாகக்கொள்ளுகிறது. (வெய்யகதிரோன்விளக்காக) முப்பதுநாழிகையிலே ஒருநாழிகை குறையவும் ஏறவும் நிற்கப்போகாமையாலே "భీషోదేతిసూర్యః" "பீஷோதேதிஸூர்ய:" என்று - ஈஶ்வரகார்யபூதனென்று தோற்றுகையாலே "விளக்கு" என்று சொல்லிற்று; தன்னையுங் காட்டி ஈஶ்வரனையும் ப்ரகாஶிப்பிக்கையாலே, "வெய்யகதிரோன்" என்று - விளக்கினுடைய ஸ்தாநத்திலே சொல்லுகையாலே. இப்படி ஸகலத்துக்கும் அவன் ஶேஷி, ஸகலமும் அவனுக்கு கார்யதயாஶேஷமென்றறிந்தால் அங்குத்தைக்கு அஸாதாரண பரிசர்யை பண்ணும்படி சொல்லுகிறதுமேல் (செய்ய சுடராழி) செய்யசுடரென்றது - ஶ்யாமமான திருமேனிக்குப் * பகைத்தொடையா யிருக்கை. இத்தால் - நிர்விஶேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்மமென்கிற பக்ஷத்தைத் தவிர்க்கிறது; இதராயுதங்களையுடைய தேவதாந்தரங்களையும் வ்யாவர்த்திக்கிறது. "அடிக்கே" என்று - விக்ரஹவத்தையைச் சொல்லுகிறது. "அடி" என்றத்தாலே - தம்முடைய ஶேஷத்வஞ்சொல்லுகிறது. (சூட்டினேன் சொன்மாலை) பரிமளம் மாறாத மாலையைச் சூட்டினேன். "சொல்தொடை" என்னுமாப்போலே. (இடராழி நீங்குகவேயென்று) இடர்க்கடலானது வற்றவேணுமென்று. தாபத்ரயத்தாலே தப்தரானவர்கள் இத்தைக்கற்றுத் தம்வழியேபோந்து இடர்க்கடலைப் பிழைப்பர்களென்று. அன்றிக்கே,அவனைப் பேசப்பெறாத தம்முடைய இடரோகவென்றுமாம்.

மற்றையாழ்வார்களில் இவர்கள் ஜ்ஞாநப்ரதாநராய், பரதஶையோடு உகந்தருளினவிடங்களோடு வாசியறக் கடல்கோத்தாப்போலே இவர்களுடைய பக்திஎங்குமொக்கவ்யாபித்திருந்ததே யாகிலும் * கிண்ணகத்திலாறுஎங்குமொக்கப்பரந்து வாராநிற்கநீருக்குஓரிடத்

திலே நோக்காமாப்போலே திருவுலகளந்தருளினவிடத்திலும் திருமலையிலும் ஊன்றியிருக்கும். இவர்கள் "பேயரோ யெனக்கு யாவரும்" என்னுமாப்போலே ஸம்ஸாரிகளோடு பொருந்தாமையாலும் ஸ்தாவரங்களுக்கு விபரீதஜ்ஞாநமில்லாமையாலும் அவற்றோடே பொருந்திக் காடுகளிலே வர்த்திப்பர்கள். யத்ரஸாயங்க்ருஹராய் அஸ்தமித்தவிடத்தே யுறங்கி ஒருவரையொருவ ரறியாமே திரியாநிற்பர்கள்; இவர்களைக்கூட்டி இவர்கள் தன்னை யநுபவித்து ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு வழிந்தசொல்லாலே தானும் ஜகத்தும் வாழ வேணுமென்று நின்றனெம்பெருமான். யாத்ர்ச்சிகமாக, ஒருஇடைகழியிலே, பெருங்காற்றும் மழையுங்கண்டு, புக்கு ஒருவர்கிடக்க; மற்றொருவர் "ஒருவர்கிடக்கிறவிடம் இருவர்க்கு இருக்கலாம்" என்றார்; மற்றையவர் "இருவரிருக்குமிடம் மூவர்க்கு நிற்கலாம்" என்றார்; இவர்களை யெம்பெருமானும் பிராட்டியும் புகுந்து நெருக்குகிறார்கள். [வாசல்கடைகழியாவுள்புகா] இவர்கள் ஸம்பந்தமில்லாத புறம்பும் உள்ளும் காட்டுத்தீயோடொக்கும். நம்மையொழிய நெருக்குகிறாரை யறிய ஒரு ப்ரகாஶம் வேணுமென்ன உண்டாக்குகிறார் இவர்களிலே யொருவர்; "పతింవిశ్వస్య" "பதிம்விஶ்வஸ்ய" என்கிறபடியே-ஶ்ரிய꞉பதியே ஜகத்துக்கு நிர்வாஹகன் என்கிறாரொருவர்; ஜ்ஞாநபக்தி ஸாக்ஷாத்காரங்கள் மூன்றும் அடைவே யொருவர்க்குப் பிறந்ததாலோ வென்னில்; ஒண்ணாது,—வ்யாகரணத்துக்குமூன்றுகர்த்தாக்களுண்டானாப்போலே இம்மூவருங்கூடி இவ்வர்த்தத்தை நிலையிட்டார்கள். அநுமாநமுகத்தாலே இழிகை நம்தர்ஶநத்துக்கு விருத்தமன்றோவென்னில்; வேதஶாஸ்த்ரவிருத்தமான அநுமாநம் இங்குத்தவிருகிறது. "వేదశాస్త్రావిరోధినాయ స్తర్కేణానుసన్ధత్తే" "வேதஶாஸ்த்ராவிரோதிநா யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே" என்று ஶாஸ்த்ரத்தோடுசேரும் அநுமாநம் இது. ஸாவயவத்வாத்கார்யம்; கார்யம் விசித்ரமாகையால் கர்த்தாவும் ஆஶ்சர்ய ஶக்தியாகவேணும்.

(வையந்தகளியா) பூமிகடிநையாகையாலே தகளியாக்கிற்று. (வார்கடல்) த்ரவத்ரவ்யமாகையாலே நெய்யாகக்கொண்டது. (வெய்யகதிரோன்) தேஜ꞉பதார்த்த மாகையாலே விளக்காகக்கொண்டது. இம்மூன்றும் பஞ்சபூதங்களுக்கு முபலக்ஷணம். (வையம்) பெரியவெள்ளத்திலே ஒருகழல் மிதக்கு மாப்போலே, பூமி ஜலத்திலே நிற்கும்போது இதுக்கு ஓர் அடிவேண்டாவோ. (வார்கடல்) பூமியை அபிபவியாதே நிற்கும்போது ஓர் அடிவேண்டாவோ. (வெய்யகதிரோன்) முப்பதில் ஒன்று ஏறுதல் குறைதல் செய்யாதா போதே, * ధిష్ఠేదసూర్యః * பீஷோதேதிஸூர்ய꞉ ஆகவேண்டாவோ; "యస్సర్వజ్ఞః" "யஸ்ஸர்வஜ்ஞ꞉" இத்யாதிகளிற்சொல்லுகிறவனாகவேண்டாவோ. (செய்யவித்யாதி) இதுக்கொருநாதனுள

ன்என்றறிந்தால்அடிமைசெய்யவேணுமே. (சுடராழியான்)ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும் ஜகத்தில் ஏகதேஶ ஸம்பந்தமுண்டேயென்னில்; அத்தை வ்யாவர்த்திக்கிறது; – ரூபாதிகளில்லையென்னும் வாதிகளை நிரஸ்தராக்குகிறது. (அடிக்கே) பிராட்டியல்லரோ, முறைதப்பாத படி வேணும். (சூட்டினேன் சொன்மாலை) ‘‘ 𑌯𑌤𑍋𑌵𑌾𑌚𑍋𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 ’’ ‘‘யதோவாசோநிவர்த்தந்தே’’ என்கிறவிஷயத்தை மறுபாடுருவப் பேசிப்பண்டில்லாதவழகு முண்டாக்கினேன்.(இடரித்யாதி)என்னை உளனுக்குகைக்காக. சொல்லாதிருக்கை இடர். ‘‘இடரார்படுவார்’’ இத்யாதிவத். த்ர்ணத்தை அநுஸந்திக்கிலும் ப்ரகாரிபர்யந்தமாயிருக்கும் இவர்களுக்கு. மாரனேர்நம்பி, ‘‘எம்பெருமானை மறக்கவிரகில்லையே’’ என்றாராம். ஜகத்தினிடர்தீருகை அர்த்தாத்ஸித்தம். (க)

அ.—இரண்டாம்பாட்டு. இப்படிஅநுமாநப்ரமாணங்கொண்டு வருத்தத்துடனே அவனுடைய பரத்வம் அறுதியிடவேணுமோ, அவன் விபூதிவிஷயமாகப்பண்ணியருளின * உமிழ்ந்தபர்யந்த திவ்யசேஷ்டிதங்களோரொன்றே அவனுடையபரத்வத்தை அறுதியிட்டுத்தாராதோவென்கிறார்.

மூ.—என்றுகடல்கடைந்ததெவ்வுலகம்நீரேற்ற
தொன்றுமதனையுணரேன்நான்; – அன்ற
தடைத்துடைத்துக்கண்படுத்தவாழி; இதுநீ
படைத்திடந்துண்டுமிழ்ந்தபார்.

பதம்.	உரை.
	தன்னை அர்த்தித்த தேவர்களபேக்ஷிதம்செய்கைக்காக‘‘அண்ணல் செய்தலை கடல் கடைந்து’’ என்னும்படி தன் ஸர்வேஶ்வரத்வந்தோற்ற,
கடல்கடைந்தது	கடல்கடைந்தருளிற்று,
என்று	எத்தனைநாளுண்டு என்றும்,
	ஈஶ்வராபிமாநிகளானருத்ராதிகளும் திருவடி விளக்குவார்,

பதம்.	உரை.
	விளக்கின தீர்த்தத்தை ஶிரஸாவஹித்து பரிஶுத்தராம்படி இந்த்ரன்ப்ரார்த்தனையை ஸார்த்தமாக்கும்படி அர்த்தியாய்க்கொண்டு,
நீரேற்றது	மஹாபலி பக்கலிலே நீரேற்றளந்து கொண்டது,
எ	எந்த,
உலகம்	லோகமென்றும்,
	அவ்வோ செயல்களிலேகுமிழ்நீருண்ணக்கடவதான,

பதம்.	உரை.
அதனை	அந்ததிவ்யசேஷ்டிதத்தை,
ஒன்றும்	ஏகதேஶமும்,
நான்	யான்,
உணரேன்	அநுஸந்திக்கமாட்டுகிறிலேன்;
அன்று	ராவணன் திருவினைப்பிரித்தவன்று, ‘‘సీతాముఖకమలసముల్లాసహేతోశ్చసేతోః’’ ‘‘ஸீதாமுககமலஸமுல்லாஸஹேதோஶ்சஸேதோ:’’ என்கிறபடியே-தந்முகோல்லாஸார்த்தமாக தத்ஸஜாதீயமான லவணஸமுத்ரத்தை,
அடைத்து	மலைகளாலே யடைத்து,
உடைத்து	அங்குள்ளவர்கள் இங்குவந்து நலியாதபடி தநுஷ்கோடியாலே யுடைத்து,

பதம்.	உரை.
	எழுப்பிக்கார்யங்கொள்ளலாம்படி,
கண்படுத்த	கண்வளர்ந்த,
ஆழி	கடலாக்கும்,
அது	அந்தக்கடல்;
நீ	ரக்ஷ்யவர்க்கஸம் ரக்ஷணத்திலே நித்ய தீக்ஷிதனாயிருக்கிறநீ,
படைத்து	அழிந்தவன்று ஸ்ர்ஷ்டித்து,
இடந்து	அவாந்தரப்ரளயத்திலேஇடந்தெடுத்து,
உண்டு	மேல்ப்ரளயத்தில் அழியாதபடி திருவயிற்றிலேவைத்து,
உமிழ்ந்த	வெளிநாடுகாணப்புறப்படவிட்டு, இப்படிஉன்கையிலே பருத்தி பட்ட பன்னிரண்டும் பட்டுக்கிடக்கிற,
பார்	பூமியாக்கும்,
இது	இந்தபூமி.

‘‘கண்டவாற்றால் தனதேயுலகெனநின்றான்’’ என்கிறபடியே இவ்வோதிவ்ய சேஷ்டிதங்கள்தானே அவனே ஸர்வாதிகனென்னுமிடத்தைக் காட்டுகிறதில்லையோவென்கை. என்று என்கையாலே - திரையும் நுரையும் இப்போதும் மாறிற்றில்லையென்கை. எவ்வுலகம் என்கையாலே - அளந்த அடிச்சுவடு இப்போதும் அப்படியே எடுக்கலாயிருக்கை. ... ... (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (என்று) இன்னமும்திரையும்நுரையும் மாறிற்றே. (எவ்வுலகம்) லோகாந்தரத்தேயோ; அடிச்சுவடுதெரியாதோ. (ஒன்றுமதனையுணரேன்நான்) அன்று எங்கேபோனேனோ. (உணரேன்நான்) அன்றைக்கு எனக்கென்னவே யொருத்தனைத்தேடி அந்தரப்பட்டேன். (அன்றித்யாதி) ஒன்றேயோ, * பருத்திபட்டபன்னிரண்டும் பட்டதில்லையோ. ‘‘உணரேன்!’’ என்று - இழந்தநாளைக்கு ஶோகிக்கிறார். கார்யாத்காரணாநுமாநம்வேணுமோ அவனு

டைய அதிமாநுஷசேஷ்டிதங்கள் கிடக்கச்செய்தே. கடைந்தநுரையும் திரையும் மாறிற்றே. (கடைந்தது) கடையப்புக்குக் கைவாங்கினவர்களை ஈஶ்வரனாகக்கொள்ளவேணுமோ. (எவ்வுலகம் நீரேற்றது) இன்று மஹாபலியாலே நோவுபடாநின்றதோ; அவனடிச்சுவடு மாறிற்றே; "வாமநன்மண்ணிது" என்னும்படிதோற்றுகிறதில்லையோ. இவ்வுலகமன்றே நீரேற்றது என்கிறது. (ஒன்றுமதனையுணரேன் நான்) இச்சேஷ்டிதங்கள் கிடக்க கார்யாத்காரணாநுமாநம் பண்ணித் திரியவோ நான். அன்றிக்கே "ஒன்று மதனையுணரேன்" என்றது-அதிமாநுஷ சேஷ்டிதங்களைக்கண்டு "எத்திறம்!" என்று மோஹிக்கிறாராகவுமாம். "என்று கடல்கடைந்த தெவ்வுலகம்" என்றது - எல்லாச்செயல்களுக்கும் உபலக்ஷணம். "என்று" என்றது — ஜ்ஞாநவைஶத்யம் சொல்லுகிறது. ஜ்ஞாநமாவது—யத்தேஶகால ஸம்பந்திதயா யாதோ ர்த்தம்தோற்றிற்று, தத்தேஶகாலஸம்பந்திதயா அவ்வர்த்தத்தைக்காட்டுகையிறே. (அன்றித்யாதி) நீ அணையடைத்து திருவில்லாலே யழித்துண்டாக்கின கடலிலே. கண்படுத்த-கண்வளர்ந்த. ஆழி, உடைத்து — ஸம்ஹரித்தென்னவுமாம். (இதுவித்யாதி)இல்லாதவன்று ஸ்ர்ஷ்டித்து ப்ரளயங்கொள்ள அண்டபித்தியில் நின்றும் ஓட்டுவிடுவித்து, ப்ரளயம் வருகிறதென்று ஏற்கவே திருவயிற்றிலேவைத்து வெளிநாடுகாணப்புறப்படவிட்டபார். இது என்றது — தாமிருந்த பூமியாகையாலே. அது என்றது- அத்தோடு ஸம்பந்தித்த கடலாகையாலும், அஸந்நிஹிதமாகையாலும். "ஆழி — அது" என்றந்வயம். செய்யுடையவனன்றே க்ர்ஷி பண்ணுவான்; அல்லாதார்க்கும் ஈஶ்வரத்வ ப்ரஸங்கமுண்டாகில் இதிலே அவர்களுக்கும் ஒருதொழிலுண்டாகாதோ. (உ)

அ.—மூன்றும்பாட்டு. "எவ்வுலகம் நீரேற்றது" என்று சொன்ன திருவுலகளந்தருளின திவ்யசேஷ்டிதத்திலே திருவுள்ளஞ் சென்று அத்தை அநுபவிக்கப்புக்கவிடத்தில் நிலைகொள்ள மாட்டாமல் அதிலேகிடந்தலைகிறார்.

மூ.—பாரளவுமோரடிவைத்தோரடியும்பாருடுத்த
நீரளவுஞ்செல்லநிமிர்ந்ததே—சூருருவின்
பேயளவுகண்டபெருமான்! அறிகிலேன்
நீயளவுகண்டநெறி.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஓரடி	அதிலோகமான அழகையுடைய ஒருதிருவடியை,		"படிக்களவாகநிமிர்த்த"என்கிறபடியே

பதம்.	உரை.
பாரளவும்	பூமியுள்ள வளவே நிற்கும்படி,
வைத்து	குசைதாங்கிவைத்து
ஓரடியும்	அத்தோடு துல்யவிகல்பம் பண்ணலாம்படியானமேலேயெடுத்தமற்றொருதிருவடியும்,
பார்	அண்டகடாஹத்தை
உடுத்த	சூழ்ந்த,
நீரளவும் செல்ல	ஆவரண ஜலத்தளவும்செல்ல,
நிமிர்ந்தது	வளர்ந்ததிறே;
	தன்வடிவைமறைத்து
சூர்உருவின்	தெய்வநங்கையான யஶோதை வடிவு கொண்டுவந்த,
பேய்	பூதநையை,
	அவள் நினைவு அவளோடேபோம்படி,
அளவு கண்ட	அளவிட்டு முடித்த செயலாலே,
பெருமான்	ஜகத்துக்கு ஶேஷியானவுன்னை நோக்கித்தந்தவனே,
நீ	நீ,
அளவு கண்ட	அளந்துகொண்ட,
நெறி	வழியை,
அறிகிலேன்	நான் இன்னபடியென்று அறியமாட்டுகிறிலேன்.

இச்செயலை அநுஸந்தித்தால் அதிலே ஆழங்காற்படுமதொழிய அளவிட்டுஅநுபவிக்கமாட்டுகிறிலேனென்றுகருத்து. "சூருமணங்குந்தெய்வப்பெண்பெயர்" என்கிறபடியே - திவ்யாகாரையான பேயென்றபடி. "பேயளவுகண்ட" என்றவித்தால் – ஸ்வயத்நத்தாலே அவனையறியப்புகில் பூதநைபட்டதுபடுவனென்று கருத்து. "அறிகிலேன் நீயளவுகண்டநெறி" என்கிறது – நீ என்திறத்தில் நினைக்கிறமார்க்கம் என்னவென்று அறிகிறிலேனென்றுமாம். ... (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பாரித்யாதி) அப்பூமியை ஓரடியும் வைத்தவடியைச்சொல்லவுமாம்; மற்றையடியாகவுமாம். (பாருடுத்த) "பௌவநீருடையாகச்சுற்றி" என்கிறபடியே பூமியை ஆவரித்த ஜலத்தைக்கடந்ததென்னவுமாம். மேலிலண்டத்தைச்சூழ்ந்த ஜலத்தளவும் சென்றதென்னவுமாம். (சூருருவினித்யாதி) "சூருமணங்கும்தெய்வப்பெண்" என்கிறபடியே-விலக்ஷணமானவடிவென்கிறது. பேயை "தெய்வப்பெண்" என்னலாமோ வென்னில்; "పిశాచా దేవయోనయః" "பிஶாசாதேவயோநய:" என்று-பிஶாசங்களையும்தேவயோனியிலேகூட்டுகையால்ஆம். (பேயளவுகண்ட) பேயாக பரிச்சேதித்த. பேயாகபரிச்சேதிக்கையாவது – முடிக்கையென்று பொருளாமிறே. (பெருமான்) பூதநையைமுடித்து ஒருஶேஷியை ஜகத்துக்குத் தந்தாய். "స్తన్యం తద్విషసమ్మిశ్రం రస్యమాసీజ్జగద్గురోః" "ஸ்தந்யம் தத்விஷஸம்மிஶ்ரம்ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ:;" (அறிகிலேனித்யாதி) நீசெய்த

வோரோ செயலை என்னால் பரிச்சேதிக்கப் போகிறதில்லை. அன்றியே,மஹாபலியாலே அபஹ்ருதையான பூமியையளந்து உன் திருவடிகளிலேயிட்டுக்கொண்டாப்போலே, என்னை உன் திருவடிகளிலேயிட்டுக்கொண்டு, பூதனையைப் போக்கினாப்போலே என்னுடைய விரோதியைப்போக்கி என்னை விஷயீகரித்தபடியறிகிலேன்என்னவுமாம்.பாரளவும்-குசைதாங்கின அருமை.உடுத்தநீரளவும்—ஆவரண ஜலம்.பேயளவு—எல்லை.பெருமான்—அச்செயலாலேஎன்னையுண்டாக்கினவன். நீ சிலரை பரிச்சேதிக்கும்போது வருத்தமில்லை; உன்னைப் பரிச்சேதிப்பார்முடிந்தே போமித்தனை. தாயைப் பேயாக்கினபடி. நீ அளவிட்டுவைத்த வுபாயம் உணராதொழியப் பண்ணுகிறாயோ, உணரப்பண்ணுகிறாயோ. ௩

அ.—நாலாம்பாட்டு. அவனருளடியாகவந்ததெளிவால் குறைவற்ற நானுமுட்பட நீஞ்சிக்கரையேறமாட்டாமல்கிடந்தலையா நிற்க, ஸ்வயத்நத்தாலே வந்த ஜ்ஞாநஸக்திகளைப் போரப்பொலியநினைத்து ஒருவனை அறிய ஒருப்படுவதே! என்னமதிகேடனோ! என்று ருத்ரனைக்ஷேபிக்கிறார்.

மூ.—நெறிவாசல்தானேயாய்நின்றானையைந்து
பொறிவாசற்போர்க்கதவஞ்சாத்தி - அறிவானும்;
ஆலமரநீழலறம்நால்வர்க்கன்றுரைத்த
ஆலமமர்கண்டத்தரன்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆலமர நீழல்	வடவ்ருக்ஷச் சாயையிலே,		பண்ணக்கடவ உபதேஸத்தைப் பண்ணிஆசார்யபதம்நிர்வஹித்தோம்என்றிருக்கும் பெரிசறிவாளனாய், அம்ர்தமதநதசையிற் பிறந்த,
அறம்	பகவத் ஸமாஸ்ரயணரூபமான தர்மத்தை,	ஆலம்	"ஹாலாஹலம்" என்கிறவிஷத்தை,
நால்வர்க்கு	அகஸ்த்ய புலஸ்த்ய தக்ஷ மார்க்கண்டேயர்களாகிற நாலுஸிஷ்யர்களுக்கும்,	அமர்	நாராயணாஜ்ஞையாலே கழுத்திலேயடக்கி,
அன்று	பகவத் விஷயத்தில் உவ்வக்குழி யிட இழிந்தவன்று,	கண்டத்து	காளகண்டனென்று விருதுபிடித்துத்திரியும்பெருமிடுக்கனாய்
உரைத்த	பகவத்விஷயத்தைமறுபாடுருவும்படி தர்ஸித்துச்சொல்லவல்லபேரளவுடையார்	அரன்	ஸம்ஹர்த்ர்த்வஸக்தி

பதம்.	உரை.
	யுக்தனாகஅபிமாநித்திருக்கிறாருத்ரன்,
ஐந்து	ஸ்ரோத்ராதிரூபேண ஐந்துவகைப்பட்டிடிருப்பதாய், விஷயங்களாகிறவறை நாற்றத்தைக் காட்டித் தன்னுடன் சேர்ந்தாரை முடிக்கும்,
பொறி	யந்த்ரகல்பமான,
வாசல்	இந்த்ரிய த்வாரங்களில்,
போர்	அடைக்கப்புக்கவர்கள் முகத்திலே அறைந்துபொருகிற,

பதம்.	உரை.
கதவம்	கதவை,
சாத்தி	வருத்தத்தோடே யடைத்து,
நெறி	உபாயமும்,
வாசல்	தத்ஸாத்யமானவுபேயமும்,
தானேயாய்	அநந்ய ஸாத்யனான தானேயாய்க் கொண்டு,
நின்றானை	நின்ற ஸர்வேஸ்வரனை,
அறிவானும்	ஸ்வயத்நஸித்தமான தன் ஜ்ஞாந ஶக்த்யாதிகளைக்கொண்டு அறிவதாக, இருக்கிறானும்.

என்ன அஜ்ஞனோவென்று கர்ஹிக்கிறார். "நெறிவாசல்" என்று - ஸ்வரூபாநுரூபமான உபாயமென்னவுமாம். ... (ச)

அ.—நாலாம்பாட்டு. நீரறிந்திலீராகில் ஈஶ்வர னறியானோ வென்ன; "எம்பெருமான் ப்ரஸாத மடியாகப்பிறந்த அறிவுடைய நான் தடுமாறாநின்றேன், தபஸ்ஸமாதியாலே பெற்ற வறிவுடையவன் உபதேஶிப்பதே!" என்று க்ஷேபிக்கிறார்.

வ்யா.—(நெறியித்யாதி) நெறியானவாசல்; உபாயமான வாசலென்னவுமாம். "நெறி" என்று - உபாயமாய், "வாசல்" என்று- உபேயத்தைச் சொல்லிற்றாய், உபாயமும் உபேயமும் தானேயாய் நின்றவனை யென்றுமாம். இப்போது இதுசொல்லுகிறது - ப்ராப்தி அவனை யொழியவுண்டாகிலன்றோ அறிவும் அவனை யொழியவுண்டாவதுஎன்கைக்காக.(ஐந்துபொறிவாசல்)ஒன்றைஅடைக்கில்ஒன்று திறக்குமென்கை. நீரையடைக்கப்புக்கால் ஓரிடமடைக்க ஓரிடம் கோழைப்படுமாப்போலே. "चञ्चलं हि मनः" "சஞ்சலம் ஹிமநஃ" என்கிறபடியே.(போர்க்கதவம்) அடைக்கப்புக்கால் ஒண்ணாதபடிபொரா நின்றகதவம்.சாத்திஎன்றது-அடைக்கப்போகாமையாலே. அறிவானும் என்று - க்ஷேபிக்கிறார். (ஆலமரநீழல்) தான் தபஸ்ஸு பண்ணின ஆலமரநிழலிலே. தான் பகவத்ஸம்பந்தம் பண்ணுவதுக்கு முன்னே ஶிஷ்யபரிக்ரஹம் பண்ணுவாரைப்போலே ஸர்வஜ்ஞான

அஜாதஶத்ருவுக்குப்ரஹ்மஜ்ஞாநமின்றியேயிருக்கிற *பலாகை உபதேஶித்தாற்போலே. (அறம்) ஸமாஶ்ரயணப்ரகாரம்.(நால்வர்க்கு) அகஸ்த்ய புலஸ்த்யாதிகளுக்கு. (ஆலமமர்கண்டத்தரன்) தாமஸ குணத்துக்குச் சேர்ந்தது செய்யுமதல்லது "సత్త్వాత్సఞ్జాయతేజ్ఞానమ్" "ஸத்வாத்ஸஞ்ஜாயதேஜ்ஞாநம்" என்கிறபடியே கதற அவன் கடவனோ வென்கிறார். நெறிவாசல் — ஸ்வரூபாநுரூபமான வுபாய மென்றுமாம். ஆய் நின்றானை — ஸித்தம். சாத்தி - வருந்திச் சாத்தலாமித்தனை, தள்ளிவிடவொண்ணாது, முகத்திலேயறையும். நல்ல விஷயம் காட்டாவிடில் குதறுகொட்டும். *పరన్ద్రృష్ట్వానివర్తతే-பரம்த்ருஷ்ட்வாநிவர்த்ததே பண்ணுவிடில் உபாயமுண்டோ.(அறிவானும்) படபடென ஶிஷ்ஷுக்கொள்ளுமித்தனையல்லது அறிவுக்கு அடைவுண்டோ. ஸீராமப்பிள்ளைக்கு பட்டர், "இதுவே தாரகமாக விருக்கிற ஸாதுவை நலியாதே" என்றருளிச்செய்தார். நால்வர் — தக்ஷாதிகள். (ஆலமித்யாதி) எம்பெருமான்கொடுத்த வெளிச்செறிப்புமாத்ரத்தையும், விஷஹரண ஶக்தியையுங்கொண்டு இத்துறையிலே இழியப்போமோ. ௬

அ.—அஞ்சாம்பாட்டு. நாட்டங்க "ருத்ரனேஸர்வாதிகன்" என்று அறுதியிட்டு அவன்காற்கீழ்த்தலை மடுத்துப் போற்றுவது புகழுவதாயன்றோ போருகிறது, நீர் அவனை க்ஷேபிக்கக் கடவீரோ வென்ன; ருத்ரனுடைய அநீஶ்வரத்வமும் எம்பெருமானுடைய ஈஶ்வரத்வமும் தத்தந்நாமவாஹநாதி ஸ்வரூபங்கள்கொண்டே அறுதியிடலாமென்கிறார்.

மூ.—அரன்நாரணன்நாமம்; ஆன்விடைபுள்ளூர்தி;
உரைநூல்மறை; உறையுங்கோயில்வரைநீர்;
கருமமழிப்பளிப்பு; கையதுவேல்நேமி;
உருவமெரிகார்; மேனியொன்று.

பதம்.	உரை.
	பிணஞ்சுடு தடிபோலே கண்டதடைய அழிக்கையே தொழிலாக வுடையவனென்னுமிடத்தைத்தெரிவிக்கிற,
அரன்	ஹரனென்று,
நாமம்	ஒருவனுக்குப்பேர்; ஸமஸ்த வஸ்துக்களையும்உள்ளும் புறம்பு மொக்க வ்யாபித்து ஸத்தையை நோக்கு மென்றுஅறிவிக்கிற,
நாரணன்	நாராயணனென்று,
நாமம்	ஒருவனுக்குப்பேர்;
ஆன்விடை	அறிவுகேட்டுக்கு நிதர்ஶநமாகச் சொல்

பதம்.	உரை.
	லப்படும் ரிஷபமே,
ஊர்தி	ஒருவனுக்கு வாஹநம்;
புள்	"த்ரயீமய:" "த்ரயீமயஃ" என்றுசொல்லப்படுகிற * வேதாத்மாவானபெரியதிருவடி,
ஊர்தி	ஒருவனுக்கு வாஹநம்;
உரை	ஒருவனைச்சொல்லும் ப்ரமாணம்,
நூல்	வேதவிருத்தார்த்தத்தைச் சொல்லும் பௌருஷேய மான ஆகமம்;
உரை	ஒருவனைச்சொல்லும் ப்ரமாணம்,
மறை	நித்யநிர்த்தோஷமாய் அபௌருஷேயமாய்யதாபூதவாதியாய் ஸ்வதஃப்ரமாணமான வேதம்;
உறையும் கோயில்	ஒருவன் நித்யவாஸம்பண்ணும்ஸ்தாநம்,
வரை	கடிநப்ரக்ருதியான தன்படிக்குச் சேர்ந்த கைலாஸம்;
உறையும் கோயில்	ஒருவனுகந்து வஸிக்கும் ஸ்தாநம்,
நீர்	தண்ணளி பண்ணி ரக்ஷிக்கும் தன்படிக்குச் சேர்ந்த க்ஷீரார்ணவம்;

பதம்.	உரை.
கருமம்	ஒருவன்செய்யுந்தொழில்,
அழிப்பு	கண்டதெல்லா வற்றையும் கண்ணற்று அழிக்கை;
கருமம்	ஒருவன் செய்யும் தொழில்,
அளிப்பு	ஸமஸ்தவஸ்துக்களையும் தண்ணளி பண்ணி ரக்ஷிக்கை;
கையது	ஒருவன்கையில் தரிக்குமாயுதம்,
வேல்	கொலைக்குபரிகரமான மூவிலைவேல்;
கையது	ஒருவன்கையிலேற்குமாயுதம்,
நேமி	ரக்ஷணத்துக்குபரிகரமான*அறமுயலாழி;
உருவம்	ஒருவன்ரூபம்
எரி	நெருப்புப் போலே ஏறிட்டுப்பார்க்கவொண்ணாதபடிகாலாக்நிஸங்காஶமா யிருக்கும்;
உருவம்	ஒருவன்வடிவு,
கார்	*கண்டவர்கள்கண்குளிரும்படி காளமேகம்போலே யிருக்கும்;
	இப்படி பரஸ்பரவிஸத்ருஶமான இரண்டுவஸ்துக்களில்,
ஒன்று	ஒன்று,
மேனி	ஶரீரமாயிருக்கும்.

ஒன்று ஶரீரியாயிருக்குமென்னுமிடம் அர்த்தஸித்தம். ஸர்வாத்மா என்றால் ஸர்வஞ்சாஸ்யஶரீரம் என்று ப்ரதிகோடிவருகிறாப்போலே. அன்றிக்கே, இவர்கள் ரூபம்பார்த்தால், எரிமேனியொன்று; கார்மேனியொன் றென்னவுமாம். ... ... (ரு)

அ.—அஞ்சாம்பாட்டு. நாட்டிலே ஈஸ்வரனாக நிஸ்சயித்துப் போருகிறவனை "அறிவானும்" என்றுநீர்சொல்லுகிறபடியெங்ஙனே யென்னில்; அவ்வீஸ்வரத்வம்போலே காணுங்கோள் அறிவுமெ ன்கிறார்.

வ்யா.—(அரன்நாரணன்நாமம்) ஒருத்தனுக்குநாமம் அரன்; ஒருத்தனுக்குநாமம் நாராயணன். ஸ்ர்ஷ்டமானஜகத்து தீம்பிலே கைவளர்ந்து, தன்னை முடித்துக் கொள்ளப்புக்கால் அத்தை ஸம் ஹரிக்கைக்காக அவன்கொண்ட வடிவுக்கு ப்ரகாரபூதனானவன் அரனாகிறான். ஈஸ்வரன் கையடைப்பாகக் காரியம் செய்யுமிடத் தில் அழியும் லீலாவிபூதியிலே இவனுக்கு அந்வயம். மாளுவிக்கு நிர்வாஹகராளுரைப்போலே. (நாரணன்) உபயவிபூதியும் தனக்கு ஆவாஸஸ்தானமாய் அவற்றுக்கு ஆலம்பநமா யிருக்குமென்றிட்டு "நாராயணன்" என்று திருநாமம். (ஆன்விடை புள்ளூர்தி) கைக்கொளாண்டிகளைப்போலே ஒருத்தனுக்கு ஒருஎருதுவாஹநம்; ஒருத்தனுக்கு ஒரு * வேதாத்மாவா யிருந்துள்ள பெரிய திருவடி. (உரைநூல்மறை) ஒருவனுக்கு உத்கர்ஷம் சொல்லுவது ஆகமம்; ஒருவனுக்கு உத்கர்ஷம்சொல்லுவது அபௌருஷேயமானவேதம். (உறையும்கோயில் வரைநீர்) தன்காடிந்யத்துக்குச் சேர்ந்த மலை ஒருவனுக்கு வாஸஸ்தானம்; தன்னுடைய தண்ணளிக்குச் சேர்ந்த நீர் ஒருவனுக்கு வாஸஸ்தானம். (கருமமழிப்பளிப்பு) ஒருவனுக்கு கர்மம் அழிக்கை; ஒருனுக்கு கர்மம் ரக்ஷை. அழிக்கை என்றால் அதுஒன்றிலும் நிற்கும்; அளிப்பு என்றால்-அழிக்கு மதிலும் செல் லும். (கையதுவேல்நேமி) ஒருவனுக்குஆயுதம் பிணந்தின்னிகளைப் போலே வேல்; ஒருவனுக்கு ஆயுதம் "తమసఃపరమోధాతా శఙ్ఖచక్రగదా ధరః" "தமஸ:பரமோதாதா ஸங்கசக்ரகதாதர:" என்கிற ஆயு தம். நிலாத்துக்குறிபகவாந்,பட்டரை, "பரமபதத்திலும் ஈஸ்வரன் சதுர்ப்புஜனா யிருக்குமென்னுமிடத்துக்கு ப்ரமாணமுண்டோ" என்று கேட்க, "తమసఃపరమోధాతా శఙ్ఖచక్రగదాధరః" என்று பேசா நின்றதிறே என்றருளிச்செய்ய; அவன்கோபிக்க; "ப்ரமாணகதியிரு ந்தபடி யிது ப்ரஸங்கரா மித்தனையிறே" என்றருளிச்செய்தார். (உரு வமெரிகார்) ஒருவனுக்கு வடிவு எரி; ஸம்ஸாரதப்தனாய்ச் சென்றவ னுக்கு நெருப்பிலே விழுந்தாப்போலே. ஒருவனுக்கு வடிவுகார்; தப்தனாய்ச்சென்றவனுக்கு * ஒரு நீர்ச்சாவியிலே வர்ஷித்தாப்போ லே ஸ்ரமஹரமானவடிவு. (மேனிஒன்று) இப்படி விஸத்ர்ஸமாயிரு க்கையாலே ஒன்று ஸரீரம்; ஒருத்தன் ஸரீரி. "అన్తఃప్రవిష్టశ్శాస్తా జనా నాంసర్వాత్మా" "அந்த:ப்ரவிஷ்டஸ்ஸாஸ்தாஜநாநாம் ஸர்வாத்மா" என்றால் ஸர்வஞ்சாஸ்யஸரீரம் என்று தோற்றுமாப்போலே

"ஒருத்தன் ஶரீரம்" என்றால் ஒருத்தன் ஶரீரியென்றுதோற்றுமிறே. ஜ்ஞாநமில்லாமையால் இவன் ஐஶ்வர்யமும் * ஆறல்பீறலென்கிறார்.

அரன்-சிலரை நஶிப்பிக்குமவனொருவன். நாரணன்-ததீயத்தை யொழிய உளனாகாதவனொருவன். "நீயென்னையன்றியிலை." ஆன்விடை-அவனைஶ்வர்யஸூசகம். புள்-"கருடவாஹநன்நிற்க"-இவனைஶ்வர்யஸூசகம். உரை-ஆப்திகேட்கவேண்டில்விப்ரலம்பாதிதோஷதூஷிதம். மறை-அபௌருஷேயநித்யநிர்த்தோஷஶ்ருதி. வரை-காடிந்யத்துக்குஸத்ர்ஶமானவிடம். நீர்-தண்ணளிக்குத்தக்கவிடம். கருமம், அழிப்பு - நஶிப்பிக்கை; அளிப்பு - ரக்ஷிக்கை. வேல்-காணவயிறழலும். நேமி-விட்டாலும் "இன்றொன்றறியேன்" என்னப்பண்ணும். எரி-நெருப்பைத்தூவும். கார்-காணஜீவிப்பிக்கும். மேனி ஒன்று-ஒன்றுஶரீரம். மற்றையவன் சரீரியென்று தன்னடையிலே வருமிறே.

அந்தர்யாமிப்ராஹ்மணத்தை நினைக்கிறார்; -அரன்-தன்னையொழிய ஒன்றை யழியாதே நிற்கில் ஈஶ்வரத்வமில்லை. ஆன்-அநீஶ்வரத்வஸூசகம். புள்-ஈஶ்வரத்வஸூசகம். நூல் - சொன்னவனுக்கு ஆப்தியில்லையாகில் அப்ரமாணம். மறை - ஆப்தவாக்யமான ப்ரமாணம். அழிப்பு அளிப்பு இவற்றை ஸூசிப்பிக்கிறது - அரன் நாரணன். வாசகஶப்தத்துக்கு வசநக்ரியைபோலே. வேல் - கலக்கவரிலும் பயமாம். நேமி - பிரிந்தாலும் "இன்றொன்றறியேன்" என்னப்பண்ணும். உருவம், எரிமேனி யொன்று; கார்மேனி யொன்று. இங்ஙனே சேர்ந்திருக்கவேண்டாவோ-க்ஷேபம். அறிவுடையார்க்குச்சொல்லவேணுமோ சேர ... ... (ரு)

அ.—ஆறும்பாட்டு. "அரன்-அறிவாளும்" என்று-ருத்ரனை அறிவுகேடனென்று க்ஷேபித்துச் சொன்னீர், நீர்தாம் அவனையறிந்து பிறர்க்குபதேஶிக்கும்படி எங்ஙனேயென்ன; ஸத்வம் தலையெடுத்தபோது ஸ்வயத்நத்தாலே சிறிதறிந்தானாய், ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலையெடுத்தபோது "ஈஶ்வரோஹம்" என்றிருக்குமவனைப்போலேயோ நான், நிர்ஹேதுகமாக அவன்றானே காட்டக்கண்டவனாகையாலே எனக்கு ஒருக்காலும் விஸ்ம்ர்தி ப்ரஸங்கமில்லையென்கிறார்.

மூ.—ஒன்றுமறந்தறியேனோதநீர்வண்ணனை; நான்
இன்றுமறப்பனோ வேழைகாள்!; - அன்று,
கருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன்கண்டேன்
திருவரங்கமேயான்திசை.

பதம்.	உரை.
அன்று	அறிவு நடையாடுகைக்கு யோக்யதையில்லாத வன்று,
கரு அரங்கத்துள்	கர்ப்பஸ்தாநத்திலே,
கிடந்து	கிடந்து, ஜாயமாநகாலத்திலே இத்தலையில் ப்ரதிஷேதமேபற்றாசாகக்குளிர கடாக்ஷித்துத்தன்படிகளைக்காட்டித் தருகையாலே ஸம்ஸாரிகளைத் தண்ணளி பண்ணிரக்ஷிக்கைக்காக,
திருவரங்கமேயான்	தாமே கோயிலிலே வந்து பள்ளிகொண்டருளுகிற பெரிய பெருமாளுடைய,
திசை	ஸ்வரூப ரூபகுணாதி ஸமஸ்தஸ்வ பாவங்களையும்,
கண்டேன்	ஸாக்ஷாத்கரித் தநுபவித்தேன்;
கைதொழுதேன்	காட்சிக்கநந்தரமான அஞ்ஜலிபந்தம்முதலானவர்த்தியிலேயும் அந்வயிக்கப் பெற்றேன்;
	மறுக்கஇடமறும்படி தன்பக்கலிலே இழுத்துக்கொள்ள வற்றாய்,
ஓதம்	ஓதம் கிளர்ந்த,
நீர்	ஸமுத்ரஜலம்போலேயிருண்டுகுளிர்ந்த,
வண்ணனை	வடிவழகை யுடையவனை,
ஒன்றும்	ஏகதேஶமும்,
மறந்தறியேன்	மறந்தறியேன்;
ஏழைகாள்	இதர விஷயங்களிலே மண்டித்திரிகிற அறிவுகேடர்காள்!,
நான்	மறக்கைக்கு ஹேது வுள்ளவிடத்தில்மறவாதநான்,
இன்று	நினைக்கைக்கு ஹேது வுள்ள இன்று,
மறப்பனோ மறப்பனோ.	

அ.—ஆறும்பாட்டு. அவனை ஶரீரதயா ஶேஷமென்றீராகில் நீரும் ஶேஷபூதரன்றோ, நீர் உபதேஶிக்கிறபடி யெங்ஙனே யென்னில்; எனக்குஅவன்ப்ரஸாதம்அடியாகையாலே விஸ்ம்ருதிஶங்கையில்லையென்கிறார்.

வ்யா.—(ஒன்றுமறந்தறியேன்-அன்றுகருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன்கண்டேன்) கர்ப்பவாஸம் பண்ணா நிற்கச்செய்தே ஐயோ! நோவுபட்டாயாகாதே! என்று அவன்கடாக்ஷிக்க அவனைக் கண்டேன். தம்முடைய விலக்காமையைக்கொண்டுஸாக்ஷாத்கரித்த தாகச்சொல்லுகிறார். (திருவரங்கமேயான்திசை — ஒன்று மறந்தறியேன்) பெரியபெருமாளிடையாட்டத்தில் அவருடையஸ்வரூபரூப

குணவிபூதிகளில் ஒன்றும் மறந்தறியேன். (ஓதநீர் வண்ணனை நான் இன்றுமறப்பனோ) ப்ரமஹரமானவடிவையுடையபெரியபெருமானை இன்று மறப்பனோ. இதுதான் தேஹயாத்ரையாய் பரப்ரதிபாதக போக்யமான காலத்திலே மறப்பனோ. (ஏழைகாள்) இவ்விஷயத்தில் புதிய துண்டறியாதவர்களே! யென்கிறார். திசையென்றது- அவனிடையாட்டத்திலே யென்றபடி. அத்திக்கிலேயென்றும்சொல்லக்கடவதிறே.

(ஒன்றித்யாதி) கண்டவளவிலே ஒன்றும் மறந்தறியேன். உம்முடைய ஸௌந்தர்யமோவென்னில்; அன்று (ஓதநீர் வண்ணனை) மறக்கவொண்ணாத வழகு. ஏழைகாள்-மறக்கவொண்ணாத விஷயத்தைவிட்டு நினைக்கவொண்ணாத விஷயத்தைப்பற்றி நிற்கிறவர்களே. அன்று-“அறியாக்காலத்துள்ளே” “ஜாயமானம் ஹி.” (கருவித்யாதி) மறக்கைக்கு ஹேதுவுள்ள விடத்திலே மறந்திலேன்; நினைக்கைக்கு ஹேதுவுள்ளவிடத்திலே-இன்றுமறப்பனோதிருவரங்கமேயானிடையாட்டம். பரதசையிலே - எல்லைநிலத்திலே.

அன்று கருவரங்கத்துட்கிடந்து - திருவரங்க மேயான்திசைகைதொழுதேன் கண்டேன்; ஒன்றும் மறந்தறியேன்; ஓதநீர்வண்ணனை நான் இன்று மறப்பனோ ஏழைகாள் ! என்றந்வயம் ... (சு)

அ.—ஏழாம்பாட்டு. இப்படியாகில் நாடடங்க எம்பெருமானைவிட்டு, கண்டகண்ட தேவதைகள்சாம்கீழே தலைமடுத்துத் திரிகைக்கடி யென்னென்னில்; உகவாதார், தன்னைவந்து கிட்டாமைக்கு அவன்பண்ணின மயக்குக்களென்கிறார்.

மூ.—திசையுந்திசையுறு தெய்வமும்,
தெய்வத்திசையுங் கருமங்களெல்லாம், - அசைவில்சீர்க்
கண்ணன்நெடுமால் கடல்கடைந்தகாரோத
வண்ணன்படைத்த மயக்கு.

பதம்.	உரை.	பதம்.	உரை.
திசையும்	திகுபலக்ஷிதையான பூமியும்,	இசையும்	சேர்ந்த,
திசை	அவ்வவதிக்குக்களிலே,	கருமங்கள்	ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களும்,
உறு	வர்த்திக்கிற,	எல்லாம்	யாவும்,
தெய்வமும்	தேவதைகளும்,	அசைவு	அபக்ஷயாதி தோஷங்கள்,
தெய்வத்து	அத்தேவதைகளுக்கு,	இல்	இன்றிக்கே,

ஆறாம்பாட்டு. ஜாயமானம் ஹி - ஜாயமானம் ஹி - ஜாயமானகாலத்திலே,

பதம்.	உரை.
சீர்	நித்யமானகல்யாணங்களையுடையனாய், அக்குணங்கள் ப்ரேரிக்க வந்து,
கண்ணன்	க்ர்ஷ்ணனாய் வந்து பிறந்த ஸௌலப்யத்தை யுடையனாய்,
நெடு	ஸங்கல்பஞானவிடத்திலும் அளவிடவொண்ணாத,
மால்	பெருமையை யுடையனாய், தம்பெருமை பாராதே ஶரணம் புக்க தேவர்களுக்காக,
கடல் கடைந்த	உடம்புநோவக் கடலைக்கடைந்து அபேக்ஷித ஸம்விதானம் பண்ணுமவனாய், ரக்ஷியாதே யழியச் செய்யிலும் விடவொண்ணாதபடி,
கார்	கறுத்த,
ஓதம்	கடல்போலே யிருண்டு குளிர்ந்த,
வண்ணன்	வடிவையுடையனானவன், தன்பக்கல் வாராதாரை அகற்றுகைக்கு,
படைத்த	உண்டாக்கின,
மயக்கு	ப்ராமகவஸ்துக்களாயிருக்கும்.
மயக்கு-	மயங்கப்பண்ணும் வஸ்துக்கள். (எ)

அ.—ஏழாம்பாட்டு. அல்லாததேவதைகள் ஶரீரதயாஶேஷபூதர் நிர்வாஹ்யர், அவனே ஶேஷி நிர்வாஹகனென்று சொல்லும்படி யெங்ஙனே? அவர்களும் ஒருதேஶங்களுக்கு ஈஶ்வரருமாய் அவர்களுக்கு ப்ரதானமான செயல்களுமுண்டாய்ச் செல்லாநிற்கவென்ன; அதுக்கும் அடி அவனே; அது அவன் ஸ்வாதந்த்ர்யத்துக்கு வர்த்திப்பிக்கிறதென்கிறார்.

வ்யா.—(திசையும்) திக்கோடேகூடின பூமியும். (திசையுந்தெய்வமும்) அத்திக்கிலே வ்யாப்தரான தேவர்களும். (தெய்வத்திசையும் கருமங்களெல்லாம்) அவ்வோ தேவதைகளுக்குப் பொருந்தின கர்மங்களெல்லாம். த்ரிபுரதஹநாதி. (அசைவில்சீர்) அல்லாதாருடைய சீருக்கு அசைவுண்டுபோலேகாணும். (கண்ணன்) தன்னை இதர ஸஜாதீயனாக்குவது தன்னுடைய இச்சையாலே. (நெடுமால்) "యతోవాచోనివర్తన్తే" "யதோவாசோநிவர்த்தந்தே" என்று ஓதப்படும் பெரியவன். (கடல்கடைந்த) பெரியவன் என்றிராதே அரியனசெய்து நோக்குமவன். (காரோதவண்ணன்) நோக்காதே

ஏழாம்பாட்டு. இப்படிப்பட்டவர்களும் அவனேகாரணமென்கையாலே, அவன் ஸ்வாதந்த்ர்யத்தை வர்த்திப்பிக்கிறது - அவன் பெருமையைக்காட்டுகிறதென்றபடி.

யழிக்கிலும் விடவொண்ணாதவடிவு. (படைத்தமயக்கு) பலஶக்தியையும் ப்ரவ்ர்த்தி நிவ்ர்த்தியையும் கொடுத்துவைத்தால் தன்வழி வாராதவர்களை அறிவுகெடுக்கும்படி அல்லாதா ரறியாவிடுவான். "दैवी ह्येषा गुणमयी" "தைவீ ஹ்யேஷாகுணமயீ."=(தெய்வத்திசையும்)ஸ்ர்ஷ்ட்யாதிகர்மங்கள். (அசைவில்சீர்)நித்யமான கல்யாணகுணம். (கண்ணன்நெடுமால்) ஆஶ்ரிதரைவிடாத பெரும்பித்தன். (கடல்கடைந்த) அபேக்ஷிப்பாரோ வேண்டுவது. (காரோதவண்ணன்) தானே உறிலும் விடவொண்ணாது. (எ)

அ.—எட்டாம்பாட்டு. இப்படி அநாஶ்ரிதரை மயங்கப்பண்ணுகிறவளவன்றிக்கே, ஆஶ்ரிதவிஷயத்தில் ஸத்யஸங்கல்பனான தன்னிலைகுலைந்தும் பக்ஷபதித்து ரக்ஷிக்குமென்கிறார்.

மூ.—மயங்கவலம்புரி வாய்வைத்துவானத்
தியங்குமெறிகதிரோன் றன்னை - முயங்கமருள்
தேராழியால்மறைத்த தென்னிதிருமாலே!
போராழிக்கையால் பொருது.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மயங்க	துர்யோதநாதிகள் பீத்யதிஶயத்தாலே அறிவழியும்படியாக,	இயங்கும்	குறிக்கவொண்ணாதபடி இதஸ்ததஸ்ஸஞ்சரிக்குமவனாய்,
வலம்புரி	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை,	எறி	ஸ்வதேஜஸ்ஸாலே ஸர்வரையும் அபிபவிக்கிற,
வாய்	திருப்பவளத்திலே,	கதிரோன் றன்னை	கிரணங்களையுடையனான ஆதித்யனை,
வைத்து	மடுத்து ஊதி,		ஆஶ்ரித விஷயத்தில் ஓரத்துக்கு உவாத்தான,
வானத்து	மறைக்கவொண்ணாத தன்னிலமான ஆகாஶத்திலே,		

பலஶக்தியையும் சேதநருக்குபோக்த்ர்த்வஶக்தியையும் தந்நிமித்தமான உபாயத்தை அநுஷ்டிக்கைக்குப்ரவ்ர்த்தி நிவ்ர்த்தி ஶக்தியையும் கொடுத்திருக்கச்செய்தேயும் தன்னை ஆஶ்ரயியாதே யிருக்குமவர்கள் இதர தேவதைகளைப்பற்றிக்கெட்டுப்போகைக்காக அந்த தேவதைகளைப் படைத்தமாயை. (அறியாவிடுவான்) - ஒருத்தரும் அறியாதபடி பண்ணிவைத்தமாயை. அன்றியே, தேவர்களுக்குபலப்ரத ஶக்தியையும் அத்தை லபிக்கைக்கு சேதநருக்கு ப்ரவ்ர்த்தி நிவ்ர்த்தியையும்கொடுத்துவைத்தால் அவர்களைவிட்டுத்தன்வழியே வாராதவர்களை, அவர்களைப்பற்றி அறிவுகெடும்படி தேவதைகளை ஸ்ர்ஷ்டித்தமாயை. இத்தை ஒருத்தருமறியாதபடி பண்ணினானென்றபடியாகவுமாம். ... ... எ.

பதம்.	உரை.	பதம்.	உரை
திரு	பிராட்டியார்பக்கல்,	ஆழி	திருவாழியோடே கூடின,
மாலே!	பெரும்பிச்சனானவனே;	கையால்	திருக்கையாலே,
	ஸகல ப்ராணிகளும் யுத்த திதர்க்ஷயாவந்து,	பொருது	பீஷ்மாதிகளைத் துரத்திப்பொருது,
முயங்கு	நெருங்கிக்கிடக்கிற,	நீ	ஸத்யஸங்கல்பனான நீ,
			அத்தைக்குலைத்து,
அமருள்	ஸமரபூமியிலே,	தேராழியால்	திருவாழியாலே,
போர்	பொருகைக்கு பரிகரமான,	மறைத்தது	மறைத்தருளிற்று,
		என்	ஏதுக்காக.

ஸர்வஸாதாரணமானவுறவுக்குச் சேருமோ, ஸத்யஸங்கல்பனாயிருக்கிற இருப்புக்குச்சேருமோ, உன்பெருமைக்குப் போருமோ, இவையெல்லாவற்றையும் காற்கடைக்கொண்டு இங்ஙனே செய்தருளிற்று ஏதுக்காக, ஆஸ்ரித விஷயத்தில் ஓரமாகாதே! என்று வித்தராகிறார். தேராழி - ரதாங்கம். ... ... (அ)

அ.—எட்டாம்பாட்டு. இம்மயக்குப் பொதுவோ வென்னில்; ஆஸ்ரிதனைத் தன்னை யழியமாறியும் நோக்குமென்கிறார்.

வ்யா.—(மயங்கவித்யாதி) அர்ஜுநன்நிமித்தமாக நிறுத்தி யுத்தம்பண்ணப்புக்கால் இவன் க்ரமத்தாலே தொடுத்துவிட்ட அம்புக்கு எதிரிகள்போகாதவளவில் தன்திருவாயிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வைக்குமித்தனை, அதுக்கு ஒருத்தராலு மிறாய்க்கப்போகாது, அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற எல்லாரும மயங்குமித்தனை. உகவையாலே மயங்குவாரும் பயத்தாலேமயங்குவாரும். "దేవానాం వవృధే తేజః ప్రసాదశ్చైవ యోగినామ్" "தேவாநாம்வவ்ர்தே தேஜஃ ப்ரஸாதஸ்சைவயோகிநாம்" என்கிறபடியே [సంఘోషాద్ధార్తరాష్ట్రాణాం హృదయాని వ్యదారయత్] అద్యైవనష్టం కురూణాం బలమితి ధార్తరాష్ట్రామేనిరే; తద్విజయాకాంక్షిణే సంజయోక్తయన్ కృష్ణభవీయానాం విజయస్థిరితి. [ஸகோஷா தார்த்த ராஷ்ட்ராணாம் ஹ்ர்தயாநி வ்யதாரயத்] அத்யைவநஷ்டம் குரூணாம்பலமிதிதார்த்தராஷ்ட்ராமேநிரே; தத்விஜயா காங்க்ஷிணே ஸஞ்சயோகதயந்ஈத்ர்பீபவதீயாநாம்விஜயஸ்திதிரிதி. (வானத்து) மறைக்கவொண்ணாத நிலத்திலே. (இயங்கும்) ஒருக்ஷணம் ஓரிடத்தில் நில்லாதவனை. (எறிகதிரோன்றன்னை) குறித்துப்பார்க்கப் போகாதபடி கிரணங்களை விடாநின்றுள்ளவனை. (முயங்கித்யாதி) "సత్యసఙ్కల్పః" "ஸத்யஸங்கல்பஃ" என்கிறஸ்ருதிக்குச்சேருமோ; "న మే మోఘం వచో భవేత్" "நமேமோகம் வசோபவேத்" என்றருளிச்

செய்தவார்த்தைக்குச் சேருமோ; ஈஸ்வரத்வத்துக்குச் சேருமோ. (திருமாலே) ஸத்யஸங்கல்பத்தை யழிக்குமவனைச் சொல்லுகிறது. (போராழியித்யாதி) ஆயுதமெடுக்கவொண்ணாதென்று சொன்ன பீஷ்மாதிகள்முன்னே ஆயுதத்தையெடுத்துப் பொருது.

(மயங்க) எல்லார்க்கும். ஆஶ்ரிதவிஷயத்தில் அவர்கள் ஸங்கல்பித்தபடியேநடத்தும்பக்ஷபாதி. (மயங்க) "ஆயுதமெடேன்" என்று வைத்து அர்ஜுநனம்பாலே தனித்தனியே கொல்லப்பற்றாமே ஒருக்காலேமுழுக்காயாக அவிய. (வானத்து) தூரத்தேநிற்கிறவனை. (இயங்கும்) ஸஞ்சரிக்கிறவனை. (முயங்கமருள்) தனியிடத்திலல்ல, எல்லாரும்காண. * எத்திறம் அறிந்தேன். (திருமால்) நாட்டார் பரிமாற்றமல்ல, இவை அந்தஃபுரத்தில் பரிமாற்றம். போரிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தாலே கொன்றான். ஆதித்யனை மறைத்தான்; ஸ்ரீபீஷ்மனைத் தொடர்ந்தான். (முயங்கமருள்) நெருங்கினயுத்தம். (தேராழி) ரதாங்கம்; திருவாழி. ... ... (அ)

அ.—ஒன்பதாம்பாட்டு. இவ்வளவன்றிக்கே, ஆபத்து முதிர்ந்தவளவில் "ஆஶ்ரிதர், அநாஶ்ரிதர்" என்று தரம்பாராதே இருந்ததேகுடியாகத் தன்னையழியமாறிநோக்கும் ஸ்வபாவனென்கிறார்.

மூ.—பொருகோட்டோரேனமாய்ப்புக்கிடந்தாய்க்கன்றுன்
ஒருகோட்டின்மேற்கிடந்ததன்றே; - விரிதோட்ட
சேவடியைநீட்டித்திசைநடுங்கவிண்துளங்க
மாவடிவின்நீயளந்தமண்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
விரி	விகஸிதமான,	நடுங்க	நடுங்கவும்,
தோட்ட	இதழையுடைய தாமரைபோலே,	விண்	உபரிதந லோகத்திலுள்ளார்,
சே	சிவந்த,	துளங்க	நடுங்கவும்,
அடியை	திருவடிகளை,	மா	பெரிய,
நீட்டி	வளர்த்து,	வடிவின்	வடிவை யுடையையாய்க்கொண்டு,
திசை	திருபலக்ஷிதையான பூமியிலுள்ளார்,	நீ	நீ,

எட்டாம்பாட்டு. ஆயுதமெடேனென்றநீ ஆயுதமெடுத்தது ஸத்யஸங்கல்பத்துக்குச் சேருமோ, ஸாதாரணமான ஈஶ்வரத்வத்துக்குப் பொய்சொல்லியழிக்கைசேருமோ. "மயங்கவலம்புரிவாய் வைத்து-முயங்கமருள்-வானத்தியங்குமெறிகதிரோன்றன்னை - தேராழியால் மறைத்து-நீ-ஆழிக்கையால்பொருது - திருமாலே என்றான்!" என்றந்வயமாக்கி அருளிச்செய்கிறார் (போரிலே யித்யாதி.) (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அளந்த	அளந்து காற்கீழிட்டுக்கொண்ட,	ஏனமாய்	வராஹ வேஷத்தை யுடையனாய்க் கொண்டு,
மண்	பூமியானது; நிலமகள்முலையில்குங்குமத்தோடு நிலத்தோடு வாசியமளங்கும்ஜாத்யுசிதமானசெருக்காலே,	புக்கு	ப்ரளயஜலத்திலே முழுகி,
பொரு	பொருது கொடுவருகிற,	இடந்தாய்க்கு	அண்டபித்தியினின்றும் இடந் தெடுத்துக்கொண்டேறினவுனக்கு,
கோடு	கொம்புகளை யுடைத்தாய்,	அன்று	அக்காலத்தில்,
ஓர்	அழகுக்குஅத்விதீயமான,	உன் ஒரு கோட்டின்மேல்	உன் எயிற்றின் ஏகதேசத்திலே, ஒருமறுப்போலே,
		கிடந்ததன்றே	கிடந்த தொன்றன்றோ.

ஆபத்துவந்தால் தலையாலே சுமந்து நோக்குதல், தலையிலே காலைவைத்து நோக்குதல் செய்யுமவனன்றோ நீ.ரக்ஷ்யவர்க்கத்தை நோக்குமளவில் உனக்கொருநியதியுண்டோவென்று உகந்தநுபவிக்கிறார். "விரிதோட்ட" என்று - விஸ்த்ருதமாய்ப்ரகாசிக்கிற திருத்தோடுகளை யுடையவனேயென்று ஸம்போதநமாகவுமாம். (௯)

அ.—ஒன்பதாம்பாட்டு. ஆஸ்ரிதரையொழியவும் ஜகத்துக்கு ஸத்தாநாஸம்வரில் பரிஹரிக்குமென்கிறார்.

வ்யா.—(பொருகோட்டோரேனமாய்) பொராநின்றகோட்டையுடைத்தான ஏனமாய். அத்விதீயமான ஏனமாய். ஜாதிச்செருக்காலே பூமியையுழுதுகொடுதிரியாநிற்கும். (புக்கித்யாதி) ப்ரளயங்கொண்டு,உபூசைக்கு பூமியில்லாதவன்று தன் எயிற்றிலேவைத்து நோக்கும். இத்தாற்சொல்லிற்றாய்த்து-உதாரனாயிருப்பானொருவன் நாலுபேருக்குச் சோறிட நினைத்தால் நாற்பதுபேருக்கு இட்டுமிகும்படி சோறுண்டாக்குமாப்போலே ரக்ஷ்யத்தினளவன்றிறே ரக்ஷகன் பாரிப்பு. (விரிதோட்ட சேவடியைநீட்டி) விரியாநின்றதோடுகளையுடைத்தான தாமரைபோலே யிருந்துள்ள சேவடியைநீட்டி. "விரிதோட்ட" என்று-ஸம்புத்தியாகவுமாம்;-திருமேனியிலே ஒளிவிரியும் தோட்டையுடையவனே.(திசைநடுங்க) திக்குக்களெல்லாம்

ஒன்பதாம்பாட்டு. தோடு-இதழ்.

நடுங்க. (விண்துளங்க) விண்ணிலுள்ள தேவஜாதியெல்லாம் நடுங்கும்படியாக. (மாவடிவின்நீயளந்தமண்) பெரியவடிவைக்கொண்டு நீயளந்தமண். ஆஶ்ரிதர்கார்யம் பெரியவடிவைக்கொண்டு புக்குச்செய்யிலும்செய்யும்; சிறியவடிவைக்கொண்டு பெரியனாய்ச்செய்யிலும் செய்யும். (பொரு) ஆபந்நராய் விலக்காதார்க்கும் தன்னைக்கொண்டு காரியங்கொள்ளுவார்க்கும் செய்யும்படி. (விரிதோட்ட) விரிகிறதோட்டையுடையவைபோலே யிருந்துள்ள. (விண்துளங்க) அபிமாநிகளான தேவர்கள்நடுங்கப் பெரியவடிவாலேயளந்தமண் திருவெயிற்றுக்கு ஒரு நீலரத்நம்போலே யிருப்பதே! என்னஆஶ்சர்யம். (௯)

அ.—பத்தாம்பாட்டு. இப்படி பெரியவடிவைக்கொண்டு சிறிய செயலைச்செய்து நோக்குமளவன்றிக்கே, சிறியவடிவைக் கொண்டு பெரியசெயலைச்செய்து நோக்கிலும் நோக்குமென்கிறார்.

மூ.—மண்ணும்மலையும்மறிகடலும்மாருதமும்
விண்ணும்விழுங்கியதுமெய்யென்பர்; - எண்ணில்,
அலகளவுகண்டசீராழியாய்க்கு, அன்றிவ்
வுலகளவுமுண்டோ; உன்வாய்.

பதம்.	உரை.
மண்ணும்	ஸர்வாதாரகமான பூமியும்,
மலையும்	அதுக்குதாரகமான குலபர்வதங்களும், அத்தைச்சூழ்ந்துகிடந்து,
மறி	அலையெறிகிற,
கடலும்	ஸமுத்ரங்களும், ததந்தர்வர்த்திகளுக்கு உச்வாஸாதிஹேதுவான,
மாருதமும்	காற்றும்,
விண்ணும்	அதுக்கு அவகாஶப்ரதமான ஆகாஶமும்,

பதம்.	உரை.
	இவற்றை யடையத் திருவயிற்றிலேஒரு புடையிலே யடங்கும்படி,
விழுங்கியது	அமுது செய்தருளினவித்தை,
மெய்என்பர்	பரமார்த்தமென்று உன்ஶக்திஸாமர்த்யத்தைத் தறைகாணவல்ல வைதிகபுருஷர்கள்சொல்லாகின்றார்கள்;
எண்ணில்	உன்படியைப் பரிச்சேதித்து அநுஸந்திக்குமளவில்,

பாட்டுக்கெல்லாம் பலிதமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதரித்யாதி.) "நீயளந்த மண் - அன்று - ஒருகோட்டின்மேல் கிடந்ததன்றே" என்றந்வயமாக்கி யருளிச்செய்கிறார் (திருவெயிற்றுக்கித்யாதி.) ௯.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அலகு	அளவிடுகைக்கு பரிகரமான அலகுகளையும்,	அன்று	இவற்றை யெடுத்துத் திருவெயிற்றிலே வைத்தருளின வன்று,
அளவுகண்ட	பரிச்சேதித்து எல்லை கண்டிருக்கிற, அஸங்க்யாதமான,	இவ்வுலகும்	இஜ்ஜகத்தோபாதியும்,
சீர்	கல்யாண குணங்களையும்,	அளவுண்டோ	பெருமையுடைத்தோ,
ஆழியாய்க்கு	திருவாழியையுமுடையையானவனுக்கு,	உன்	உன்னுடைய
		வாய்	திருப்பவளமானது.

இந்தச்சிறியதிருப்பவளத்தைக்கொண்டு பெரியஜகத்தையமுது செய்தருளின இவ்வாஶ்சர்யமென்னுயிருக்கிறதோ! என்றுஈடுபடுகிருர். ... ... (௧0)

அ.—பத்தாம்பாட்டு. சேராதனசெய்தும் ஆஶ்ரிதரை நோக்குமவனென்கிருர்.

வ்யா.—(மண்ணுமித்யாதி) ஆதாரமானமண்ணும் அதுக்கு உறுதியான மலையும் வேலியானகடலும் தாரகமானகாற்றும் அவகாஶப்ரதாநம்பண்ணும் ஆகாஶமும். (விழுங்கியதுமெய்யென்பர்) ஐந்த்ரஜாலிகர் செயல்போலே பொய்யன்று, இது ஆப்தரான ஆழ்வார்கள் மெய்யென்பர்கள். (எண்ணில்) ஆராயில். (அலகளவுகண்டசீராழியாய்க்கு) எண்ணிறந்தகுணங்களையும்திருவாழியையுமுடையனுனவுனக்கு. அலகாவது-பரிச்சேதகமிறே. அத்தை அளவுகண்டசீர்-அபரிச்சேதகமான அலகை பரிச்சிந்நமாக்கினசீர். (இவ்வுலகளவுமுண்டோ வுன்வாய்) இந்த ரக்ஷணத்தில் த்வரைதான் சிறியவடிவிலே பெரிய ஜகத்தைவைத்தான்.—(மண்ணுமித்யாதி) சேராச்சேர்த்தியானவையடைய மெய்யென்பர். ஐந்த்ரஜாலமென்னப்பெற்றதோ, ரிஷிகள் கூப்பிடாநிற்பர்கள். (எண்ணிலலகளவுகண்ட) எண்ணை அளவுபடுத்தும் குணங்கள். "గుణానామాకరః" "குணநாமாகரஃ" "బహవో నృప కల్యాణగుణాః" "பஹவோந்ருபகல்யாணகுணாஃ."

பத்தாம்பாட்டு. (அலகளவு) அலகை அளவுகண்ட. பரிச்சேதகம். கலாகாஷ்டாதிரூபமான வத்ஸராதிகளை எண்ணி பரிச்சேதிக்கை. "கோடி, ஶங்கம், பத்மம், மஹாஶங்கம்" என்றுப்போலே, காலத்துக்கு அவதியற்றிருக்கையாலே (அபரிச்சேதகமான அலகு) என்கிறது. பஞ்சபூதங்கள்பரஸ்பரம்பிந்நமாயிருக்கையாலே (சேராச்சேர்த்தி) என்கிறது. எண்ணிலலகளவு-எண்ணுநிற்கிற அலகை. குணங்களும் அப்படியே.

(ஆழியாய்க்கு) குணங்களும் அப்படியே. சீரியகை. (உலகளவுமுண்டோ)ரக்ஷகத்வப்பாரிப்புக்குஅடைவில்லாமை. ... (௧0)

அ.—பதினோராம்பாட்டு. இப்படி அவன்படிகளையநுபவித்துக்கொண்டு போருகிறவழியாலே, தமக்கு அவன்பக்கலுண்டான அபிநிவேஶத்தைப்பேசினார் - கீழ்; இப்போது கரணியான தம்மிலுங்காட்டில் தம்முடையகரணங்களுக்கு அவன்பக்கலுண்டான அபிநிவேஶாதிஶயத்தைப் பேசுகிறார்.

மூ.—வாயவனையல்லதுவாழ்த்தாது; கையுலகம்
தாயவனையல்லதுதாந்தொழா;—பேய்முலைநஞ்
சூணாகவுண்டானுருவொடுபேரல்லால்,
காணாகண்; கேளாசெவி.

பதம்.	உரை.
	என்னிலுங்காட்டில் "அவனெங்குற்றான்" என்றுபார்க்கிற,
வாய்	என்னுடையவாகிந்த்ரியமானது,
அவனையல்லது	அவனையொழிய,
வாழ்த்தாது	புகழாது;
கை	கைகளானவை, தரதமவிபாகம்பாராதே இருந்ததே குடியாக,
உலகம்	லோகத்தையடைய,
தாயவனையல்லது	அநாயாஸேந அளந்துகொண்ட ஶீலாதிகனானவனையொழிய,
தாம்தொழா	தாம்தொழப் பாராது;
பேய்முலை	பூதனையுடையமுலையில்,
நஞ்சு	விஷத்தை,
ஊணாக	தாரகமாக,
உண்டான்	விரும்பி யமுதுசெய்தவனுடைய,
உருவல்லால்	வடிவையொழிய,
கண்காணா	கண்காணாது;
பேரல்லால்	குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களையொழிய,
செவிகேளா	செவிகேளாது.

அ.—பதினோராம்பாட்டு. இவனுடைய ரக்ஷகத்வத்தில் த்வரையைக்கண்டு தம்முடைய இந்த்ரியங்கள் வ்யாகுலமானபடி சொல்லுகிறது.

திருவாழியிருக்கையாலே (சீரியகை)என்றபடி. (அடைவில்லாமை) சிறியவாயிலே பெரியஉலகைவைக்கை. ௧0

வ்யா.—(வாயித்யாதி) நீ அளவிதாம்படி அமையுங்காண் என்றாலும்கேளாது. (கையித்யாதி)திருவுலகளந்தருளினவனுடையநீர்மையைக்கண்டால், நான்வேண்டாவென்னிலும் தொழுதல்லது நில்லாது. (பேயித்யாதி) பேய் நஞ்சாகக்கொடுத்தாள், இவன் தாரகமாகவுண்டான். அவள் தன்னெஞ்சில்வன்மையாலே முடிந்தாளத்தனை. (உருவித்யாதி) அவனுருவல்லது கண்காணாது; அவன்பேரல்லது செவிகேளாது. ஆஶ்ரிதவிஷயத்திலும் ஸாமாந்யவிஷயத்திலுமிருக்குமிருப்பிலே ஸர்வேந்த்ரியங்களும் அபஹ்ர்தமானபடி.—(வாயித்யாதி) தான்புறம்பே வாழ்த்தப்பார்க்கிலும் தான்செய்யாது. (உலகந்தாயவனை) தொழாதார்தலையிலுமிருந்து தொழுவித்துக் கொள்ளும் திருவடிகளையுடையவனை யல்லது தான் தொழா; அவனும் ஏறவாங்கிலும் நானும் ஏறவாங்கிலும். (ஊணாகவித்யாதி) கொடாவிடில் பிழையேனென்று கொடுக்க, உண்ணாவிடில் பிழையேனென்று உண்டான். அந்யார்ஹமாய்த்து. ஹ்ர்ஷீகேஶனன்றோ. (௧௧)

அ.—பன்னிரண்டாம்பாட்டு. கீழ் ஸமாஶ்ரயணீயனாகச் சொன்னவவனை ஆஶ்ரயிக்குமிடத்தில் ததநுரூபமான ஸாதநம் பக்தியென்கிறார்.

மூ.—செவிவாய்கண்மூக்குடலென் றைம்புலனுஞ்செந்தீ
புவிகால்நீர்விண்பூத மைந்தும் - அவியாத
ஞானமும்வேள்வியும் நல்லறமுமென்பரே;
ஏனமாய்நின்றார்க் கியல்வு.

பதம்.	வுரை.	பதம்.	உரை.
செவிவாய்கண்மூக்குடலென்றைம்புலனும்	ஶ்ரோத்ரஜிஹ்வாசக்ஷுர்க்ராணத்வக்குக்களாகிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும்,		இந்தகரணகளேபரங்களாலே ஸாதிக்கப்படுமதாய்,
செந்தீ புவி கால்நீர்விண் பூதமைந்தும்	தேஜஃப்ர்திவீவாயுஜலாகாஶங்களாகிற பூதபஞ்சகமும் ததுப லக்ஷிதமான ஶரீரமும்,	அவியாத	அவிச்சிந்ந ஸ்ம்ர்திஸந்தாநரூபமான,
		ஞானமும்	பக்திரூபாபந்நஜ்ஞானமும்,
		வேள்வியும்	பக்த்யுத்பத்தி விவ்ர்த்திஹேதுவாகபலஸங்ககர்த்ர்த்வத்யா

பதினோராம்பாட்டு. (நீயளவிதாம்படி) உன்ப்ரேமமிருந்தபடி போருமென்றபடி. பேய்ச்சியை முடித்துத் தன்னைக்கொடுக்கையாலே (ஆஶ்ரிதவிஷயம்.) உலகமளக்கை (ஸாமாந்யவிஷயம்.) ஏறவாங்கிலும்) அவன் வேண்டாவென்று ஏறவாங்கிலும், நான்றான் தொழவேண்டாவென்றுஏறவாங்கிலும், அவனையொழியவேறொன்றையும் தொழாதென்றபடி. இத்தால் - இந்த்ரியங்களெல்லாம் அநந்யார்ஹமாய்த்தென்றபடி. ௧௧

பதம்.	உரை.	பதம்.	உரை.
	கபூர்வகமாகப் பண்ணும் யாகாதிகர்மங்களும்,	நல்லறமும்	விலக்ஷணதர்மமும்,
	நாள்தோறும் பக்தியை வளர்க்கக்கடவ விவேகவிமோகாதிகளும் ஆந்ருஶம்ஸ்ய தாநாதிகளுமாகிற,	ஏனமாய் நின்றார்க்கு	ஸர்வஸுலபனாய் ஆபத்ஸகனாய் நின்ற ஸர்வேஶ்வரனுக்கு,
		இயல்வு	ஸத்ஶஸாதநம்,
		என்பர்	என்று வேதவைதிக புருஷர்கள் சொல்லாநின்றார்கள்.

"భక్తితః" "பக்தித:" என்றும் "భక్త్యాప్యనన్యయాశక్యః" "பக்த்யாப்யநந்யயாஶக்ய:" என்றும் சொல்லக்கடவதிறே. அங்ஙனன்றிக்கே, தமக்கு போகோபகரணமான பக்தியை உபாஸகர் உபாயமாக வநுஷ்டிக்கும் கட்டளையைச்சொல்லி, பக்தியை க்ஷேபித்து ப்ரபத்தியை யருளிச்செய்கிறாராகவுமாம். அப்போதைக்கு, "ஏனமாய்நின்றார்க்கு-நல்லறமானவிவை-இயல்வு-என்பர்" தானேவந்து ஸங்கிஹிதனாய் ரக்ஷிக்குமவனைப் பெறுகைக்கு இவற்றை ஸத்ஶ ஸாதநமென்றுசொல்லாநிற்பர்கள், என்னவறிவிலிகளோ! என்று க்ஷேபமாகக்கடவது. "ஞாநப்பிரானை யல்லாலில்லை நான்கண்ட நல்லது" என்றிறே தம்முடைய ஸித்தாந்தம். ... ... கஉ

அ.—பன்னிரண்டாம்பாட்டு. (செவி) தம்முடைய அநுபவமான பக்தியைச் சொல்லுகிறதென்னவுமாம். பக்தியை விதிக்கிறதென்னவுமாம்.

வ்யா.—(செவியித்யாதி) ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும். (செந்தீயித்யாதி) இத்தால்-பஞ்சபூதாத்மகமான ஶரீரத்தைச் சொல்லுகிறது. இந்த்ரியங்களும் ஶரீரமும் ஹேயதயா அநுஸந்தேயம். (அவியாத ஞாநமும்)கீழிலவற்றைப்பற்றி விடாதஜ்ஞாநமும். அவியாதஞாநம் - அந்தர்க்ரஹீதமான ஆத்மஜ்ஞாநம். அன்றியே, தைலதாராவ தவிச்சிந்நஸ்ம்ர்தி ஸந்தாநரூப ஜ்ஞாநமென்றுமாம். (வேள்வியும்) பக்திவிவ்ர்த்யர்த்தமாகவும் பாபக்ஷயத்துக்காகவும் அநுஷ்டிக்கிற கர்மங்கள். "అగ్నిహోత్రాదితు తత్కార్యాయైవ తద్దర్శనాత్।అప్ర

பன்னிரண்டாம்பாட்டு. "அவியாத ஞாநம்" என்கையாலே-பக்திக்கு ஜ்ஞாபகம்.இது ஸாத்யபக்தியாதல்; ஸாதநபக்தியாதல்.(பற்றிவிடாத) த்யாஜ்யம் என்கிற நிலையை விச்சேதமின்றிக்கே பற்றியிருக்கிறஜ்ஞாநம். உபாஸகனுக்கு அநுஷ்டிக்கவேணுமென்னுமதுக்குஸூசகமும் விஷயவாக்யமும் அருளிச்செய்கிறார் (அக்நிஹோத்ராதீத்யாதி.)

యాఽగ్నిహోత్రాది హుతం కార్యాయైవ తత్తదర్శనాత్, ఆప్రయాణాత్తదపి హి దృష్టమ్। యజ్ఞేన దానేన తపసా౽నాశకేన బ్రాహ్మణా వివిదిషన్తి'' "அக்நிஹோத்ராதிதுதத் கார்யாயைவதத்தர்ஸநாத், ஆப்ரயணாத்தத்ராபிஹித்ர்ஷ்டம், யஜ்ஞேநதாநேநதபஸாநாஸகேந ப்ராஹ்மணாவிவிதிஷந்தி'' என்றும்சொல்லுகிறபடியே.(நல்லறம்)விவேகாதிகள்.(என்பரோ ஏனமாய்நின்றார்க்கியல்வு)ஏனமாய்நின்றாரைப் பெறுகைக்குப் பண்ணும் ப்ரவர்த்தியிவையென்பர்.ஆபத்தே அடையாளமாகத் தானேரக்ஷிக்குமென்கையாலே-அவன் உபாயமாகத்தம்முடையஅநுபவமான.பக்தியைச்சொல்லுகிறதென்றுமாம்.

அ.—(செவி) கீழ் - ப்ராப்யப்ரிக்ஷைபண்ணினார்; இனிப்ராபகம் சொல்லுகிறார்.

வ்யா.—(செவியித்யாதி)ஸர்வேந்த்ரியங்களுக்குமுபலக்ஷணம். (செந்தீயித்யாதி) ஆக இருபத்துநாலுக்கு முபலக்ஷணம், (அவியாதவித்யாதி) கர்மயோகாந்தர்க்கதமானஜ்ஞாநம். ப்ரக்ர்தி ஹேயதயாஜ்ஞேயை; ஆத்மா உபாதேயதயாஜ்ஞேயன்; ஈஸ்வரன் உபாதேயதமனாய்க்கொண்டு ஜ்ஞேயன்."ஜ్ఞాలం హి''"சஞ்லம் ஹி.'' (வேள்வி) கர்மயோகம். (நல்லறம்) ஆந்ர்ஸம்ஸ்யாதிதர்மங்கள். (என்பர்)வேதஸாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தி. (ஏனமாய்நின்றார்) தளர்ந்தபோது எடுக்குமவன். "என்பரோ'' என்று - க்ஷேபமானபோது ப்ரவர்த்தி கொண்டு புகுவதைக்கைவாங்கினவன்று எடுக்கவிருக்க, "ஞானப்பிரானையல்லாலில்லை'' "அறிவாரும்'' என்றாப்போலே. (இயல்வு) உபாயம். ... ... ௧௨.

அ.—பதின்மூன்றாம்பாட்டு. அவனை நேர்கொடுநேரே கிட்டிப் பரிமாறுகைக்கு அதிகாரிகள் நித்யஸூரிகளே; இப்படி யிருக்கச் செய்தேயும் ஸம்ஸாரிகளான நம்போல்வார்க்கும் ஆஸ்ரயிக்கலாம்படி தன்னை ஸுலபனாக்கி வைக்குமென்கிறார்.

மூ.—இயல்வாகவீன்றுழா யானடிக்கேசெல்ல
முயல்வார்;இயலமரர் முன்னம், - இயல்வாக
நீதியாலோதி நியமங்களாற்பரவ,
ஆதியாய்நின்றார்; அவர்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஐஸ்வர்யஸூசகமான,	துழா யான் அடிக் கே செல்ல	திருத்துழாயையுடையனானஸர்வேஸ்வரன்திருவடிகளிலேகிட்ட,
ஈன்	அழகிய,		

கீழ்-கீழிற்பாட்டில். "அவியாத ஞானம்'' என்கைக்கு, இப்படிப்பட்ட ஜ்ஞானம்பிறக்கை அருமையோ வென்ன அருளிச்செய்கிறார் (ஜ్ఞాలం హి-சஞ்சலம்ஹி என்று.)இயல்வு ஏனமாய் நின்றார்க்கு. இவற்றை உபாயமென்பாரோ - க்ஷேபம். ௧௨

பதம்.	உரை.
இயல்வாக	ஸத்ருஶமாக,
முயல்வார்	உத்யோகிப்பார்,
முன்னம்	முந்துறமுன்னம்,
இயல்	அநுக்கிடானயோக்யதையை யுடையரான,
அமரர்	நித்யஸூரிகள்; அல்லாத நம்போல்வாரும் ஸ்வரவர்ணாதிகளுக்கு நழுவுதல்வாராதபடி,
இயல்வாக	அழகிதாகக் கொண்டு,
நீதியால்	ஶாஸ்த்ரோக்தமான வ்ரதநியமாதிக்ரமங்களோடே,
ஓதி	அத்யயநத்தைப்பண்ணி, அதீதமானவேதத்தினர்த்தத்தைஆசார்யன்பக்கலிலே கேட்டுமநநம் பண்ணி அர்ச்சநப்ரணாமகீர்த்தநாதிகளோடேகூட அநவரதபாவனை பண்ணுகையாகிற,
நியமங்களால்	நியமங்களாலே,
பரவ	பக்திபரவஶராய்ப் பரவும்படிக்கீடாக,
அவர்	அப்படிப்பட்டபெருமையை யுடைய ரானவர், "ஶ்ரூஜ்ஞ" "பூர்வஜ" என்கிறபடியே ருச்யுத்பாதராய்க்கொண்டு,
ஆதியாய்நி	முற்பாடராய்நின்றார்.
ன்றார்	ஆகையாலேநமக்கெல்லாம் ஆஶ்ரயிக்கக் குறையில்லையென்று கருத்து.

(இயலமரர்) இயற்றியையுடையரான - யோக்யதையையுடையரானநித்யஸூரிகளென்றபடி. ௧௫

அ.—பதின்மூன்றும்பாட்டு. (இயல்வாக)"வாயவனையல்லது வாழ்த்தாது" என்னும்படியாயிருந்தது உம்மது, அல்லாதார்க்கு அவனை ஆஶ்ரயிக்கும்போது அவதாநம்வேணும்;எங்ஙனே கூடும்படியென்னில்; ப்ரக்ருத்யா ஆஶ்ரயித்திருப்பர்கள் நித்யஸூரிகள்; அல்லாதாரும் ஆஶ்ரயிக்கும்படி தானே ப்ரதமபாவியாமென்கிறார்.

வ்யா.—(இயல்வாக) ஸத்ருஶமாக. (ஈன்றுழாயானடிக்கேசெல்ல) ஆகமுதலியாகத்தோள்மாலையிட்டிருக்கிறவதுக்குப்பொருந்தும்படியாக

பதின்மூன்றும்பாட்டு. உமக்கு அவதாநம்வேண்டாதபடிஇந்த்ரியங்கள்தானே பற்றிற்று, அல்லாதார்க்கு அவதாநம் கூடும்படியென்னென்று ஶங்காபிப்ராயம். ப்ரதமபாவி - ப்ரதமஸுஹ்ருத்து.

ஆக-ஸத்ருஶமாக என்றவித்தால் என்று பலிதம். இத்தையருளிச்செய்கிறார் (முதலியாகத் தோண்மாலையித்யாதி.)

(முயல்வாரியலமரர்முன்னம்) இயற்றியையுடையரான நித்ய ஸூரிகள் முன்னே மஹாயத்நம்பண்ணுவர்கள். விஷயப்ரவணரா ய் அவனை யறியாதவர்களும். இயல்வாக-ஸத்ர்மமாக. (நீதியாலோதி) முறையாலே திருநாமங்களைச்சொல்லி. நியமங்களால்,ப்ரவ - பரவும்படிக்கிடாக.ஶாஸ்த்ரங்களிற்சொல்லுகிற நியமங்களாலேபரவஶ ராய்ப்பரவும்படிக்கிடாக. (அவர்-ஆதியாய்நின்றார்) அவர்தாமே ப்ரதமஸுக்ர்தமானார்.

அ.—உபகரணங்களையுங்கொடுத்து, ருசியையும் ஜநிப்பித்து, உபாயமுமாய், தானே பலப்ரதாநம்பண்ணுமென்கிறார்.

வ்யா.—(இயலமரர்) இயற்றியையுடைய அமரர். (முன்னம்) முந்துற முன்னம். (இயல்வாக) அதுவே யாத்ரையாக. (ஈன்றுழாயான்) பரிபூர்ணன். (அடிக்கேசெல்ல) திருவடிகளுக்கே சேர. (முயல்வார்) யத்நம்பண்ணுவார். (இயல்வாக) ஸத்ர்மமாக. (நீதியாலோதி) ஶாஸ்த்ரோக்தமானபடியே. (நியமங்கள்) ஶ்ரவணாதிகள். (பரவ) ஆஶ்ரயித்து. (ஆதியாய்நின்றார்) அவர்களுக்கு உபேயத்துக்கு அடியானாப்போலே, வேண்டினவிடத்துக்கு இவர்களுக்கு உபாயத்துக்கு அடியாய்நின்றால் ஆஶ்ரயிக்க வொண்ணாதோ. அவனே இதுக்கும்வேண்டினபின்பு அவனையே பற்றவமை யாதோ வென்றுமாம். ... ... (௧௩)

அ.—பதினாலாம்பாட்டு. இப்படி ருச்யுத்பாதகனாய்க்கொண்டு முற்பாடனாய் நிற்கிறவனைவிட்டு, ஸம்ஸாரிகள், க்ஷுத்ரதேவதா ஸமாஶ்ரயணம் பண்ணாநின்றார்களே யென்னில்; அவர்கள் அப்படி செய்தார்களேயாகிலும் அந்த ஆஶ்ரயணீயரான தேவதைகளுக்கும் ஆஶ்ரயணீயனவனே யென்கிறார்.

மூ.—அவரவர்தாந்தா மறிந்தவாறேத்தி,
இவரிவரெம்பெருமா னென்று, - சுவர்மிசைச்
சாத்தியும்வைத்துந் தொழுவர்; உலகளந்த
மூர்த்தியுருவே முதல்.

(அடிக்கேசெல்ல) திருவடிகளுக்கே, சேரவென்றது-தகுதியாக. திருமேனிக்குப் பாங்கானஅடிமைகளைப் பண்ணியென்றபடி. அப்போது, ஸத்ர்மமாக என்றது-தங்கள் ஸ்வரூபத்துக்குஸத்ர்மமாக. "நீதியாலோதி" என்கையாலே - ஓதுகிறஸம்ஸாரிகள் அத்யாஹார்யம்.

மேல்யோஜநைக்கு அவதாரிகையருளிச்செய்கிறார் (உபகரணங்களையுமித்யாதி.) அவர்களுக்கு - நித்யஸூரிகளுக்கு. "நீதியாலோதி" என்கிற உபாஸநத்துக்கு அவனைக்கொண்டுஸாதிக்கவேண்டினால் அத்தைவிட்டு அவன்றன்னையே பற்றவமையாதோவென்கிறார் (அவனேயிதுக்கு மித்யாதி.) ௧௩

பதம்.	உரை.
அவரவர்	ரஜஸ்தமஃப்ரசுரராய் பிந்நருசிகளான அவ்வவ்வதிகாரிகள், ஶாஸ்த்ரமுகத்தாலன்றிக்கே குணாநுகுணமாக,
தாந்தாமறிந்தவாறு	தாந்தாமறிந்த ப்ரகாரங்களாலே,
ஏத்தி	வாய்விட்டுப் புகழ்ந்து,
இவரிவர்	தாங்களுகந்த குணங்களையுடைய ஐயன் துர்க்கை தொடக்கமாக ருத்ரன் முடிவாக வுண்டான இவர்கள்,
எம்	நமக்கு,
பெருமானென்று	ஆஶ்ரயணீயரான ஸ்வாமிகளென்று ஆதரித்துக்கொண்டு, ஒவ்வொருதேவதைகளை,
சுவர்மிசை	ஓரோபித்திகளிலே,

பதம்.	உரை.
சாத்தியும்	சித்ரரூபேண எழுதியும்,
வைத்தும்	க்ர்ஹந்தொடக்கமான வோரோவிடங்களிலே ப்ரதிமாரூபேண ப்ரதிஷ்டித்துவைத்தும்,
தொழுவர்	ஆஶ்ரயியா நிற்பார்கள்; இவர்கள் இப்படி செய்தாலும் ஆஶ்ரயிக்கிறவர்களோடு ஆஶ்ரயணீயராக இவர்கள்விரும்புகிற அத்தேவதைகளோடு வாசியற எல்லாரும் தன்காற்கீழே துகை யுண்ணும்படி,
உலகு	ஜகத்தையடைய,
அளந்த	அளந்துகொண்ட,
மூர்த்தியுருவே	ஸர்வேஶ்வரன் திருமேனியே,
முதல்	ப்ரதாநம்.

அ.—பதினாலாம்பாட்டு. ப்ராக்ர்த்யா ஆஶ்ரயிக்குமவர்களையுஞ் சொல்லி, ஆஶ்ரயிப்பித்துக்கொள்ளுமவனையுஞ் சொல்லிற்று; இது ஒன்றும் பெறுதாரைச்சொல்லுகிறது.

வ்யா.—(அவரவர்) ரஜஃப்ரசுரரும் தமஃப்ரசுரரும். (தாந்தாமறிந்தவாறேத்தி) குணாநுகுணமாக வெளிச்செறித்தபடி ஏத்தி. (இவரிவரெம்பெருமானென்று) ரஜஸ்தமஸ்ஸுக்கு விஷயமானாரை என்னுடைய ஸ்வாமியென்று. (சுவரித்யாதி) ஸர்வேஶ்வரன்பக்கல் "எவ்வண்ணஞ்சிந்தித்திமையாதிருப்பரோல்" என்கிறசெயலில் பித்தியிலே யெழுதியும் வைத்துந்தொழுவர்.

பதினாலாம்பாட்டு. செயலில் - அநுகூலர் செய்கிற ந்யாயத்திலே, தாங்களும்ருச்யநுகுணமான பிம்பங்களைப் பண்ணித் தொழுவர்களென்றபடி.

(உலகித்யாதி) இவர்களுடையவும் ஆஸ்ரயணீயங்களுடையவும்தலையிலே அடியை வைத்தவனே ப்ரதாநம். (மூர்த்தியுருவே முதல்) ஸர்வேஸ்வரனுடைய திருமேனியே ப்ரதாநம்.

அ.—அவனை வேண்டாதார் படுகிறபாடு பாரீர்.

வ்யா.—அவரவர்-பிந்நருசிகள். தாந்தாமறிந்தவாறு-ஸாஸ்த்ரத்தின்பின்செல்லார். இவரிவர்-ஸகரபுத்ரர்கள், கண்டாரை "என் குதிரை பிடித்தாய்" என்று பிடிக்குமாப்போலே தோற்றினுரை. உலகளந்த-ஸமாஸ்ரயிப்பார்தலையிலும் ஸமாஸ்ரயணீயர் தலையிலும் ஒக்கத்துகைத்த ஸர்வேஸ்வரன். உருவேமுதல்-வடிவேமுதல். கச.

அ.—பதினஞ்சாம்பாட்டு. நீர் அவனையே ப்ரதாநனுகச் சொல்லாநின்றீர், புறம்பே ஆஸ்ரயிப்பார்சிலரும் ஆஸ்ரயித்தார்க்கு பலங்கொடுப்பார் சிலருமாயன்றோ நாட்டில்நடந்து போருகிறதென்ன; அவையடங்கலும் வ்யர்த்தமென்கிறுர்.

மூ.—முதலாவார்மூவரே; அம்மூவருள்ளும்
முதலாவான்மூரிநீர் வண்ணன்; - முதலாய
நல்லானருளல்லால் நாமநீர்வையகத்துப்
பல்லாரருளும் பழுது.

பதம்.	உரை.
	"இவர்இவர்" என்று இருந்ததே குடியாக ஆஸ்ரய ணீயரொன்றுப்ரமியாதே ஸ்ர்ஷ்ட்யாதி கார்யங்களை அதுக்கடைத்த வடிவெடுத்து நடத்திக்கொண்டு போருகிற,
மூவரே	ப்ரஹ்மவிஷ்ணுருத்ரர்களாகிற மூவருமே,
முதலாவார்	ஜகத்துக்கு ப்ரதாநராவார்;
அம்மூவருள்ளும்	அம்மூவர் தம்மில், ஸமரொன்றும்மூவருங்கூட ஒன்றென்றும் மூவர்க்கு மவ்வருகேஒருவன்ப்ரதாநனென்றும்ப்ரமியாதே அந்த மூவரிலும் வைத்துக் கொண்டு,
முதலாவான்	ப்ரதாநனுவான், ப்ரஹ்மாதிகளை யிடுக்கி ஸ்ர்ஷ்ட்யாதிகளை நிர்வஹித்தும் தானான நிலையிலே நின்று பாலநதர்மத்தைநிர்வஹித்தும்போருமவனுய்,

---

மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறுர் (அவனைவேண்டாதாரித்யாதி)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மூரி	ஸஞ்சரியா நின்றுள்ள,		முடையவ னானவனுடைய,
நீர்	கடல்போலேயிருக்கிற,	அருளல்லால்	க்ர்பையொழிய,
வண்ணன்	வடிவையு முடையனானவன்,	நாமம்	ப்ரஸித்தமான,
		நீர்	நீரையுடைத்தான,
முதலாய	ஜகத்காரண பூதனுமாய்,	வையகத்து	ஜகத்திலுள்ள,
		பல்லார்	பலருடைய,
நல்லான்	ஸர்வ விஷயமான வாத்ஸல்யத்தையு	அருளும்	ப்ரஸாதமும்,
		பழுது	வ்யர்த்தம்.

இவனையொழிந்த மற்ற விருவருடைய அருளோடுகீழ்ச்சொன்னவர்களருளோடு வாசியற ஸர்வமும் வ்யர்த்தம். அன்றிக்கே, நீர் சூழ்ந்தபூமியில் நாமமாத்ரமான (பல்லாரருளும் பழுது) என்னவுமாம். தான்பலியாதவளவன்றிக்கே பகவத் ப்ரஸாதத்தையும் விலக்குகையாலே (பழுது) என்கிறார். ௧௫

அ.—பதினஞ்சாம்பாட்டு.(முதலாவார்) அவ்வோதேவதைகளும் ஆஶ்ரயணீயராய்ச் செல்லாநிற்கச்செய்தே அவர்கள் அப்ரதாநர், இவன் ப்ரதாநனென்று சொல்லுகிறது உம்முடைய பக்ஷத்தாலேயிறேயென்ன; அர்த்ததத்வமிருந்தபடியைப் பார்க்கலாகாதோவென்கிறார்.

வ்யா.—(முதலாவார்மூவரே) இருந்ததேகுடியாக ஆஶ்ரயணீயரன்றிறே, மூவரிறே ப்ரதாநர். (அம்மூவரித்யாதி) ப்ரஹ்மருத்ராதிகளுக்கு ஜீவவ்யவதாநத்தாலே அந்தர்யாமியாயும் தன்பக்கலிலே ஸ்வேநரூபேணநின்றும்காரணமாவான். (மூரிநீர்வண்ணன்) பொன்னுருவும் தீயுருவுமானவர்களன்று, பரப்பையுடைத்தான கடல் வண்ணன். (முதலாய) காரணமான. (நல்லானருளல்லால்) * அறவனானவனருளல்லால். (நாமமித்யாதி) அவனுடைய அருளொழிய, அல்லாதாரொல்லாருடைய வருளும்பழுது. அதிகாரிகளாகையாலே அவர்களை முற்படச்சொன்னவித்தனை, பழுதாமிடத்தில் அவர்களோடு அல்லாதாரோடு வாசியில்லை. அவனுக்கு வஶராய்க்கொண்டு பலந்தரிலோ வென்னில்; இரண்டும் வ்யர்த்தம். (முதலாயநல்லான்) பெற்றதாயாகையாலே பரிவன். [ಧರ್ಮಜ್ಞಃ ಶರಣಾಗತವತ್ಸಲಃ - தர்மஜ்ஞ

பதினைந்தாம்பாட்டு. (வஶராய்) ஶரீரபூதராய்க் கொண்டும் கேவலஸ்வதந்த்ரராயும், அந்தர்யாமியாகையாலே ஶரீரவத்பரதந்த்ரராயும் இரண்டுமென்றபடி. ௧௫

ஸ்ஶரணாகதவத்ஸல:] முலைப்பாலிருக்க விஷபாநம் பண்ணுவரோ. (நாமம்) நாமமாத்ரமானபல்லாரென்னுதல்; ப்ரஸித்தமானநீர்மையமென்னுதல். (பல்லார்) கீழ்ச்சொன்ன ப்ரஹ்மருத்ராதிகளகப்படத் தனித்தனியும் திரளவும். பழுது-வ்யர்த்தம். ... ... (௧௫)

அ.—பதினாறாம்பாட்டு. இதரதேவதைகளைப் பற்றிஇவ்விஷயத்தையிழந்தநாட்டாரிழவை பரத்வநிஷ்கர்ஷமுகத்தாலே பரிஹரித்தவர், அநாதிகாலம் இதரதேவதைகளையும் இதர ஸாதநங்களையும் பற்றி இவ்விஷயத்தை அகன்று திரிந்த தம்மிழவைநினைத்து ஶோகிக்கிறார்.

மூ.—"பழுதேபலபகலும்போயின" என்றஞ்சி
அழுதேன்;அரவணைமேற்கண்டு - தொழுதேன்;
கடலோதங்காலலைப்பக்கண்வளருஞ்செங்
கணடலோதவண்ணரடி.

பதம்.	உரை.
	ஸௌகுமார்யாநுரூபமாக,
கடலோதம்	கடலின்சிறுதிவலைகளானவை,
	துடைகுத்துவாரைப்போலே அநுகூலமாக,
காலலைப்ப	திருவடிகளைஸ்பர்ஶிக்க,
	அத்தாலே,
கண்வளரும்	பள்ளி கொண்டருளுமவனுமாய்,
	வாத்ஸல்யத்தாலும் ஐஶ்வர்யத்தாலும்,
செம்	குதறிச்சிவந்த,
கண்	திருக்கண்களையுடையனுமாய்,
அடல்	அநுபவிக்கப்புக்கவர்களை அபிபவித்து எழவீசுகிற,
ஓதம்	ஸௌந்தர்யதரங்கங்களோடுகூடின,

பதம்.	உரை.
வண்ணர்	வடிவை யுடையனுமானவனுடைய,
அடி	திருவடிகளை,
	வெளுத்த நிறத்தையுடையனை,
அரவு	திருவநந்தாழ்வானாகிற,
அணைமேல்	படுக்கையின்மேலே ஜ்ஞாநஸாக்ஷாத்காரமுகேந,
கண்டு	கண்டநுபவித்து,
தொழுதேன்	ததநந்தரபாவியான தொழுகையிலுமந்வயிக்கப்பெற்றேன்;
	இப்படி அநுபவத்தோடே அடிக்கழஞ்சுபெற்றுச்செல்லுகைக்குறுப்பான,
பலபகலும்	கீழ்க்கழிந்த காலமெல்லாம்,
	ஒன்றொழியாதபடி,

பதம்.	உரை.	பதம்.	உரை.
பழுதே	வ்யர்த்தமே,	அஞ்சி	கண்ணநீர் வெள்ளமிடவிருந்து,
போயினவென்று	போய்விட்டதே! என்று,	அழுதேன்	ஶோகித்தேன்.

கீழ் இழவுக்கடியான நம்முடைய கர்மம் இப்போதும் குறியழியாதேகிடக்கையாலேமேலுள்ளகாலத்திலும் இவ்வநுபவத்துக்குக் குறைத்தல்வரிற் செய்வதென்னென்று பயப்பட்டு அழுதேன்.

அ—. பதினாறும்பாட்டு. (பழுதே) * நல்லானருள்பெற்ற வெனக்கு ஶோகமுண்டாய்த்தென்கிறார்.

வ்யா.—(பழுதேபலபகலும் போயினவென்றஞ்சி யழுதேன்) போனகாலம் அநாதி, வருங்காலம் அநந்தம்; இத்தோடொத்தகாலமிறே போய்த்தென்றழுதேன். இழவுக்கு அழுதாராகில் அச்சமாவதென்? வருமத்தைக்குறித்தன்றோ அஞ்சிற்றென்னில்; அதிகாரிநாஞகில்போனகாலம்போலேயாகிறதோ வருங்காலமு மென்கிறார். "యశ్చరామంనపశ్యేత్తు యఞ్చరామోనపశ్యతి। నిన్దితస్సవసేల్లోకే స్వాత్మాప్యేనంవిగర్హతే" "யஶ்சராமம் நபஶ்யேத்துயஞ்சராமோ நபஶ்யதி। நிந்திதஸ்ஸவஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம்விகர்ஹதே" என்று சொல்லுகிறது பெருமாளுடைய ஒருநாளையிழவுக்கிறே. (கடலோதங்காலலைப்ப) திருவடிகளை, கடலோதமானது துடைகுத்துமாப்போலே அலைப்ப. (கண்வளருமித்யாதி) (அரவணைமேல் கண்டு தொழுதேன்) தகட்டிலழுத்தினமாணிக்கம்போலே.—பண்டு உபாயாந்தரங்களிலும் தேவதாந்தரங்களிலும் ப்ரவணனாயிழந்தேனென்று சொல்லுகிறார். (பழுதே!) பழுதும் பழுதல்லாததுங் கூடப்பெற்றேனே. (பலபகல்) இழந்தஅநாதிகாலம்பலவாய், அதுக்கநந்தரம் அநந்தகாலமானபடி. (போயின) போனநீர்களைக் கோலவோ. வருங்காலமும் பழையகாலமும் ஒன்று; பழையனானே இன்னம்அப்படியாகிற் செய்வதென்னென்கிறார். "కాలేష్వపిచ" "காலேஷ்வபிச." (அரவணைமேல் கண்டு) பர்யங்கவித்யையிற்படியே பூர்ணமாகக் கண்டேன். (கண்டு தொழுதேன்) கண்டால் செய்யும்

பதினாறும்பாட்டு. இழந்தநாளைக்கு துக்கப்பட்டபேருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (యశ్చరామమ్-யஶ்சராமமித்யாதி.) மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (பண்டித்யாதி.) இது கீழ்ப்பாட்டின் தாத்பர்யத்தையுட்கொண்டு (உபாயாந்தரம்தேவதாந்தரம்) என்கிறது. அஞ்சுகைக்கு ஹேதுவேதென்ன அருளிச்செய்கிறார் (வருங்காலமித்யாதி.) காலத்தையும் தன்னையும்பார்த்தால் பயமநுவர்த்திக்குமென்கிறார் (కాలేష్వపిచ-காலேஷ்வபிச) என்று.

தொழில். (காலலேப்ப) சிறுதிவலேதுடைகுத்த. (செங்கண்)வாத்ஸல்யந்தோற்றுகை. (அடலோதம்) நெருங்கின ஓதம். கசு.

அ.—பதினேழாம்பாட்டு. திருப்பாற்கடலிலே சென்று கிட்ட வேண்டும்படி தூரமாய்நானிழந்தேனே, அவன்றானே எல்லார் தலையிலும் திருவடிகளைவைத்து தூளிதானம் பண்ணுகிற்கச்செய்தே கிடீர்நானிழந்தேனென்கிறுர்.

மூ.—அடியும்படிகடப்பத் தோள்திசைமேற்செல்ல,
முடியும்விசும்பளந்த தென்பர்; – வடியுகிரா
லீர்ந்தான், இரணியன தாகமிருஞ்சிறைப்புள்
ளூர்ந்தான்உலகளந்த நான்று.

பதம்.	உரை.
வடி	கூரிய,
உகிரால்	திருவுகிராலே,
இரணியனது	ஹிரண்யாஸுரனுடைய, தேவர்கள் வரபலத்தாலேமிடியற்வளர்ந்த,
ஆகம்	முரட்டுடலே,
ஈர்ந்தான்	அநாயாஸேநக் கிழித்துப்பொகட்டவனாய்,
இரு	பெரிய,
சிறை	சிறகையுடையவனான,
புள்ளூர்ந்தான்	பெரிய திருவடியை மேற்கொண்டு ஸ்வைரமாக நடத்தியருளினவன், ஆஸ்ரிதனானஇந்த்ரன்கார்யம்செய்கைக்காக,
உலகளந்த நான்று	திருவுலகளந்தருளினகாலத்திலே, "கோலமாமென்சென்னிக்கு" என்கிற

பதம்.	உரை.
	படியே என்தலைக்கு அலங்காரமாக நானுசைப்பட்டிருக்கும்,
அடி	திருவடிகள்,
படி	காடும் ஓடையுமானபூமியை,
கடப்ப	அளந்துகொள்ள,
தோள்	பிராட்டியை பரிஷ்வங்கிக்கக்கடவ திருத்தோள்களானவை, இடமடையும்படி,
திசை மேல்	திக்குகளின் மேலே
செல்ல	வளர்ந்து செல்ல,
முடியும்	திருவபிஷேகமும், அபரிச்சேத்யமான,
விசும்பு	ஆகாஶத்தை, முசிவறநிமிர்ந்து,
அளந்தது	அளவுபடுத்திக்கொண்டது,
என்பர்	என்று தத்வவித்துக்களான ரிஷிகள் சொல்லா நிற்பர்கள்.

தானேவந்து தலையிலேயிருந்தவன்று இழந்து, இன்று கேட்டார்வாய் கேட்பதே நான்!என்று வெறுக்கிறார். கள

அ.—பதினெட்டாம்பாட்டு-கடலிற்கிடையிலும், அங்கு நின்றும் வந்து * ஞாலத்தூடேநடந்தவிடத்திலும் இழந்தவளவோ, இடக்கை வலக்கை யறியாதாரும் வாழும்படி இடைக்குலத்திலே வந்து பிறந்தவிடத்திலும் இழந்தேனிறே! என்று ஸோகிக்கிறார்.

மூ.—நான்றமுலைத்தலைநஞ்சுண்டு,உறிவெண்ணெய்
தோன்றவுண்டான்;வென்றிசூழ்களிற்றை-யூன்றிப்
பொருதுடைவுகண்டானும்புள்ளின்வாய்கீண்டானும்
மருதிடைபோய்மண்ணளந்தமால்.

அ.—பதினேழாம்பாட்டு. ஸம்ஸாரத்தில் நினைத்தபடியெல்லாம் அநுபவிக்கப்போமோ, பரமபதத்திலேபோனாலன்றோ அநுபவிக்கலாவதென்ன; இங்கே வெள்ளமிட்டவன்றுதான் பெற்றேனோவென்கிறார்.

வ்யா.—(அடியும்படிகடப்ப) "கோலமா மென்சென்னிக்கு" என்னும் திருவடிகளைக்கொண்டு காடுமோடையுமளப்ப. (தோள் திசைமேல்செல்ல) திருத்தோள்கள் திக்குக்களிலேசெல்ல. (முடியுமித்யாதி) திருவபிஷேகமும் அண்டபித்தியளவும்கிமிர்ந்தது. (வடியித்யாதி) கூரியவுகிராலே ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்தான். (இருஞ்சிறையித்யாதி) பெரியதிருவடிமுதுகி லிருக்கப்பெறாதம்ர்துவான திருவடிகளைக்கொண்டு உலகளந்தவன்று, அடியும்படிகடப்பத் தோள்திசைமேற்செல்ல முடியும் விசும்பளந்ததென்கிறார். நான் கேட்டார்வாய்கேட்டுப்போமத்தனை யென்கிறார்.—பழுதென்னென்னில்; இன்று கதைகேட்கவிருந்தேனென்பாரிறே. (அடியும்படிகடப்ப) சென்றுகாணவேண்டும் திருவடிகள், தானேவந்துபூமியை யகப்படுத்திக்கொண்டது; தோள் திக்குக்களையெல்லைகண்டது; முடியும், அபரிச்சேத்யமான ஆகாஸத்தை அளவு படுத்திற்று. நின்றார் நின்றபடியே வெற்றிகொள்ளுமாப்போலே. (வடியித்யாதி) ஓரிடத்திலே விரோதி நிரஸநம்பண்ணி ஓரிடத்திலே சென்று முகங்காட்டுமளவன்றியே ஜகத்துக்கெல்லாம் ஏககாலத்திலே உதவினவிது. ... ... (கள)

பதினேழாம்பாட்டு. "என்பரோ" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (நான்கேட்டார்வாயித்யாதி.) மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (பழுதென்னென்னிலித்யாதி.) என்பாரிறே-என்கிறாரிறே. இருஞ்சிறைப்புள்ளூருகை-கஜேந்த்ராழ்வானுக்கு. கள

பதம்.	உரை.
	பேய்வடிவை மறைத்துத் தாய்வடிவு கொண்டுவந்தபூதனையினுடைய,
நான்ற	பாலின் கனத்தாலே சரிந்து நாலுகிற,
முலைத்தலை	முலையிலுண்டான,
நஞ்சு	நஞ்சை,
	அவள் பிணமாய் விழும்படி,
உண்டு	அமுதுசெய்து,
உறி	உறிகளிலே சேமித்துவைத்த,
வெண்ணெய்	வெண்ணெயை,
	ஶிஶுபாலாதிகள் கோஷ்டியிலும்,
தோன்ற	ப்ரஸித்தமாம்படி,
உண்டான்	அமுது செய்தருளினவனாய்,
வென்றி	வெற்றியையுடைத்தாய்,
சூழ்	எதிர்த்தவர்களைத் தப்பாமல் சூழ்த்துக் கொள்ளவல்ல,

பதம்.	உரை.
களிற்றை	குவலயாபீடத்தை,
	கஜயுத்தத்துக்குதேசிகரானவர்களைப் போலே,
ஊன்றிப் பொருது	உறைக்கநின்றுபொருது,
உடைவுகண்டானும்	தலையெடுக்க மாட்டாமல் உருவழிந்து உளுக்காம்படி பண்ணினவனும்,
புள்ளின்வாய்	தன்னை விழுங்கவந்த பகாஸுரனைவாயை,
கீண்டானும்	கிழித்துப்பொகட்டவனும்,
மருதுஇடை	யமளார்ஜுநங்களின்நடுவே,
	அவை வேர் பறிந்து விழும்படி,
போய்	தவழ்ந்துபோய்,
மண்	பூமிமுதலான லோகங்களை,
அளந்த	அளந்து கொண்ட,
மால்	ஸர்வாதிகன்கிடீர்.

வளையாதே திண்டுகையும், அழகும், ஆனைத்தொழில் முதலான ஸ்வபாவ ஸாதர்ம்யத்தாலே க்ர்ஷ்ணனோடே த்ரிவிக்ரமனைச் சேர்க்கிறார். இவள்முலையைப்பற்றி அமுதுசெய்தவாறே, பழைய பேய்வடிவோடே நான்றமுலையுந் தானுமாய் விழுந்தாளென்னவுமாம். "பொருதிடைவுகண்டானும்" என்று பாடமாய் - திடைந்துளுக்காம்படி கண்டவனென்றுமாம். கஅ

அ.—பதினெட்டாம்பாட்டு. (நான்ற) திருவுலகளந்ததிலேயோ இழந்தது, அத்தோடொக்க, வளையாதே திண்டிப்பரிமாறின க்ர்ஷ்ணாவதாரத்திலும் இழந்திலேனோ வென்கிறார்.

வ்யா.—(நான்றவித்யாதி) இவன் தன்னுடைய வாயை முலையிலே வைக்க ஸ்வரூபாபத்தியைப் பெற்றாள் அவள். ஆரேனுமாக இவனை ஸ்பர்ஶித்தார்க்கு ஸ்வரூபாபத்தி தப்பாது. எல்லார்க்கும் வந்தேறி போம். "ஸ்வேநரூபேணாபி நிஷ்பத்யதே" "ஸ்வேநரூபேணாபி நிஷ்பத்யதே" என்கிறபடியே. (உறிவெண்ணெய்தோன்றவுண்டான்) உறியிலே சேமித்துவைத்த வெண்ணெயைக்கண்டு எட்டியுண்டு. களவுதோற்றும்படி உண்டான். வென்றிமிக்ககளிற்றை. வெற்றியையுமுடைத்தாய் இவனைச் சூழ்க்கநினைத்த களிற்றை யென்றுமாம். (ஊன்றி) "ஆனைப்பூசல்" என்றிராதே கிட்டி. "மருப்பொசித்தபாகன்" என்னும்படியே. (பொருதுடைவுகண்டானும்) பசளைக்கலம் போலே உடையும்படி கண்டவன். "இடைவுகண்டான்" என்றுமாம். (புள்ளினித்யாதி) "மண்ணளந்தமால்" என்று-திருவுலகளந்தருளின நீர்மை பின்னாட்டுகிறது. க்ர்ஷ்ணாவதாரத்துக்கும் திருவுலகளந்தருளின விடத்துக்கும் அழகும் மௌக்த்யமும் ஆஶ்ரிதபக்ஷபாதமு முள்ளிட்டவை இரண்டிடத்து மொத்திருக்கும்.

(நான்றவித்யாதி) தன்க்ர்த்ரிமமானபால் போனவாறே அந்த முலை, பையானபடி. (தோன்றவுண்டான்) ஶிஶுபாலாதிகளும் ஏசும்படி. (வென்றியித்யாதி) வெற்றியையும் சூழ்ச்சியையுமுடைய. (ஊன்றி) தரித்துநின்று. (உடைவு) கருவிப்பைபோலேஆக்கினபடி. (மண்ணளந்தமால்) பின்னாட்டினபடி.　　　　கஅ

அ.—பத்தொன்பதாம்பாட்டு. காதாசித்கமான அநுபவமும் கிடையாமல் நான் கண்ணநீர் விழவிடாநிற்க, அவனை மடியிலே சாயவிட்டு முழுநோக்குச்செய்து நித்யாநுபவம்பண்ணிவாழுகிறநீ என்ன பாக்யம்பண்ணினாயென்கிறார்.

மூ.—மாலுங்கருங்கடலே! என்னோற்றாய்; வையகமுண்
டாலினிலைத்துயின்ற வாழியான் - கோலக்
கருமேனிச்செங்கண்மால் கண்படையுளென்றுந்
திருமேனிநீதீண்டப் பெற்று.

பதினெட்டாம்பாட்டு. ஸ்வரூபாபத்தி-சாடு; தாய்வடிவுபோய் பேய்வடிவானாள்-அர்த்தம்; மோக்ஷம்பெற்றாளென்று-த்வநி. இவளுக்கு மோக்ஷம் கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (ஆரேனுமாகவித்யாதி.) உறிவெண்ணெய், தோன்ற-கண்ணுக்குத் தோன்றவென்னுதல்; களவுதோன்றவென்னுதல். இடைவு-இடிஞ்சுபோம்படி. கருவிப்பை-ஆயுதமிருக்கிறவுறை. ஆயுதம்வாங்கினால் பை சுருங்குமாப்போலே கொம்பைப்பிடுங்கவே ஆனை சுருங்கினபடி.　　கஅ

பதம்.	உரை.
வையகம்	ஜகத்தையுடைய, ப்ரளயத்திலழியாதபடி,
உண்டு	திருவயிற்றிலே எடுத்துவைத்து,
ஆலினிலை	ஓராலந்தளிரிலே,
துயின்ற	கண்வளர்ந்தருளினவனாய், ப்ரளயம்வரில் இருதுண்டமாக விடுகைக்கு பரிகரமான,
ஆழியான்	திருவாழியையுடையனுமாய்,
கோலம்	அழகிய,
கரு	கறுத்த நிறத்தை யுடைய,
மேனி	திருமேனியையும், அதுக்குப் பகைத்தொடையாம்படி,
செம்	வாத்ஸல்யத் தாலே குதறிச்சிவந்த,
கண்	திருக்கண்களையு முடையனாய்,

பதம்.	உரை.
மால்	ஆஸ்ரித வ்யாமுக்தனானவன்,
கண்படையுள்	கண்வளர்ந்தருளுகிறவிடத்தில்,
என்றும்	ஸர்வகாலத்திலும்,
திருமேனி	அவன் திருமேனியை,
நீ தீண்டப்பெற்று	நீஅநுபவிக்கப்பெற்று, அந்தஸ்பர்ஶஸுகத்தாலே,
மாலும்	மயங்காநிற்பதாய், அவன்வடிவின் நிழலீட்டாலே,
கருங்கடலே	கறுத்த நிறத்தை யுடையகடலே, இப்பேறுபெறுகைக்கு,
என் நோற்றாய்	என்ன ஸாதநாநுஷ்டாநம் பண்ணினாய். அத்தைச் சொல்ல மாட்டாயோ நானுமநுஷ்டித்துப்பார்க்கைக்குஎன்றுகருத்து.

“மால்” என்று-பெருமையைச்சொல்லுகிறதென்னவுமாம்.()

அ.—பத்தொன்பதாம்பாட்டு. (மாலும்) அவதாரமொழியப் பெற்றாருமுண்டுகிடீரென்கிறார்.

வ்யா.—(மாலும்) மதுபாநமத்தரைப்போலே பிச்சேறாநின்ற. (கருங்கடலே) பெற்றபேறு உன்னுடம்பே கோட்சொல்லுகிறதில்லையோ; இல்லையாகில் உடம்புவெளுத்திராதோ. (என்நோற்றாய்) ஆசையைவிட்டு நானும் நோற்கும்படி சொல்லாய். (வையகமித்யாதி) சிறுவயிற்றிலே பூமியை யெல்லாவற்றையும் அடக்கிப் பவனை

பத்தொன்பதாம்பாட்டு. அவதரித்தவிடத்திலே யஶோதாதிகள் மடியிலேவைத்து ஸ்பர்ஶிக்கப்பெற்றார்கள். ஆசரியாதேயிருக்க க்ஷீராப்தி மடியிலேவைத்து ஸ்பர்ஶிக்கப்பெற்றதென்றபடி.

ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய திருமேனியைத் தீண்டப்பெற்று (மாலுங்கருங்கடலே) நான்தீண்டப்பெறாதே மயங்காநின்றேன்; நீ தீண்டப்பெற்று பரவஶமாகா நின்றாய். பூமியைப்போலே ஒருக்காலன்றியே நித்யஸம்ஶ்லேஷம் பெறுவதே கடல்! என்று கொண்டாடுகிறார்.

(மாலும்) மதுபாந மத்தனைப்போலே பிச்சேறுகிற கடலே. (கருங்கடலே) உடம்பு வெளுக்கவேண்டாவே. (ஆழியான்) ஏகார்ணவத்திலும், திருப்பாற்கடலிலும் துயின்றதாதல். ஆசிலேகையை வைத்து ப்ரளயத்தை இருதுண்டமாக விடுவேனென்றிருக்குமென்றுமாம். பிராட்டிமாரோடு ஊடினபோதும் உனக்குப்பிரிவில்லை. கடலும் எம்பெருமானும் ஸ்ரீபரதாழ்வானும் பெருமாளும்போலே நிறம். ப்ரஹ்மப்ராப்தி பலமாய், கைங்கர்யம் ஆநுஷங்கிகமானாப்போலே, திருமேனி திண்டுகைப்ராப்யம்; கைங்கர்யம், அவகாதத்தில் ஸ்வேதம்போலே; உபாயத்திலும் ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தால் வ்யவஸாயம் ஆநுஷங்கிகம். ௧௯.

அ.—இருபதாம்பாட்டு. கடல் அவனைப்பெற்றுக்களித்தவளவேயோ, அப்படுக்கையைவிட்டு இங்கேவந்து அவதரித்தவிடத்திலும் சிலபாக்யாதிகர்கிட்டி அநுபவிக்கப்பெற்றார்களிடீரென்கிறார்.

மூ.—பெற்றார்தளைகழலப் பேர்ந்தோர்குறளுருவாய்ச்
செற்றார்படிகடந்த செங்கண்மால் - நற்றா
மரைமலரசேவடியை வானவர்கைகூப்பி
நிரைமலர்கொண்டேத்துவராம் நின்று.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பெற்றார்	தன்னைப்பிள்ளையாகப்பெற்ற ஸ்ரீவஸுதேவர்தேவகியாருடைய காலிலிட்ட,	கழல	நீங்கும்படியாக,
தளை	விலங்கு,	பேர்ந்து	பரமபதத்தினின்றும் போந்து இங்கே க்ர்ஷ்ணனாய் வந்தவதரித்து,

---

கீழ்ப்பாட்டிலே, "மண்ணளந்த" என்றத்தைப்பற்றமேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார். (பூமியைப்போலேயித்யாதி.) "என்றும் நீ தீண்டப்பெற்று" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (பிராட்டிமாரோடித்யாதி.) "கருங்கடல், கோலக்கருமேனி" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (கடலும்எம்பெருமானுமித்யாதி.) "தீண்டப்பெற்று" என்கைக்கு. திண்டுகை பலமோ, கைங்கர்யமன்றோ பலமென்ன அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மப்ராப்தீத்யாதி.) ப்ரஸங்காத் அருளிச்செய்கிறார் (உபாயத்திலுமித்யாதி.) ஜ்ஞாநம் - ப்ரதாநம். கண்படையுள் - கண்வளர்ந்தருளுகிற அவஸ்தையிலே. ௧௯

பதம்.	உரை.
	அவ்வளவில் நில்லாமல்,
ஓர்	அழகுக்கு அத்விதீயமாய், கண்ணாலே முகந்தநுபவிக்கலாம்படியான,
குறளுருவாய்	வாமநவேஷத்தையுடையனாய், ஆஸ்ரிதனான இந்த்ரனை நெருக்குகையாலே,
செற்றார்	தனக்கு ஶத்ருவான மஹாபலி போல்வார், என்னதென்று அபிமாநித்திருந்த,
படி	பூமியை,
கடந்த	அநாயாஸேந அளந்துகொண்டவனாய், அத்தால்வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே,
செம்	சிவந்த,
கண்	திருக்கண்களையுடையனாய்,

பதம்.	உரை.
மால்	ஆஸ்ரித வ்யாமுக்தனானவனுடைய,
நல்	அழகிய,
தாமரை மலர்	தாமரைப் பூப்போலேயிருக்கிற,
சே	சிவந்த,
அடியை	திருவடிகளை, இந்நீர்மையேறிப்பாயாத,
வானவர்	ஸ்வர்க்கத்திலே வர்த்திக்கிற இந்த்ராதி தேவதைகள், இச் செயலுக்குத் தோற்று,
கைகூப்பி நின்று	அஞ்சலிபந்தத்தைப்பண்ணி,
நிறை	தொடைவாய்த்திருந்துள்ள,
மலர்கொண்டு	செவ்விப்பூக்களைப்பணிமாறிக்கொண்டு,
ஏத்துவராம்	ஸ்தோத்ரம் பண்ணி ஆஸ்ரயிக்கப்பெறுவர்களாம்.

பாவியேன் நாமே! இழப்போமென்றுவெறுக்கிறார். ... ௨௦

அ.—இருபதாம்பாட்டு. "பெற்றார்தளைகழல" என்கிற வித்தால்-க்ர்ஷ்ணாவதாரம் சொல்லவுமாம்; வாமநாவதாரந் தன்னையே சொல்லுகிறதாகவுமாம்.

வ்யா.—(பெற்றார்தளைகழலப்பேர்ந்து) "பிறந்து" என்றுமாம். ஆரோணுமாக,ஸ்பர்ஶிக்கப்பெற்றார் தளைகழல.(பேர்ந்தோர்குறளுருவாய்ச்செற்றார்படிகடந்த) இந்த்ரனுக்கன்றகதே ஶத்ரு, தனக்ககதே. "ద్విషదన్నం న భోక్తవ్యం" "యస్త్వాం ద్వేష్టి స మాం ద్వేష్టి" "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" "யஸ்த்வாம் த்வேஷ்டி ஸமாம் த்வேஷ்டி." (செற்றாரித்யாதி)

இருபதாம்பாட்டு. க்ர்ஷ்ணவிஷயத்திலே பிறந்தென்றுமாமென்கிறது. வாமநபக்ஷத்தை யருளிச்செய்கிறார் (ஆரோணுமாக வித்யாதி. (ஸ்பர்ஶிக்கப்பெற்றார்) ஸம்ஸாரஸம்பந்தம் கழல என்றபடி.

மஹாபலி "என்னது" என்று அபிமாநித்த பூமியையளந்த ஸர்வேஶ்வரன். (நற்றாமரைமலரசேவடியை)செவ்வியமாறாதேயிருந்துள்ள திருவடிகளை. (வானவர்கைகூப்பி-நின்று - நிரைமலர்கொண்டேத்து வரால்) திரள நின்று பூவைக்கொண்டேத்துவரென்னவுமாம்; தொடுத்தமாலைகொண் டேத்துவ ரென்னவுமாம்.

படுக்கையாய்க்கிடந்தகடலுக்குத்தன்னைக்கொடுக்கச்சொல்லவேணுமோ தேவதாந்தரங்களுக்குத்தன்னைக்கொடாநிற்க வென்கிறார்.

(பெற்றார்) நிதியெடுக்கப் பெற்றாரொன்னு மாப்போலே. "என் பிள்ளை" என்று அபிமாநித்தார்தளை கழலாநின்றால், "அடியோம்" என்றார்தளை கழலச்சொல்லவேணுமோ. (பேர்ந்து) ஸ்ரீவைகுண்டத்தினின்று மென்னவுமாம்; திருப்பாற்கடல்நின்றும் வந்தானாகவுமாம். (ஓர்குறள்) நாட்டில் வாமநர்கள் இவன் வளர்ந்தருளினவிடத்தோடொக்கும். (செற்றார்) தன்னைச்செற்றார். "மமப்ராணாஹி" "மமப்ராணாஹி." (படிகடந்த)இக்காடு மோடையுமளந்து பிறாது பெற்றாப்போலேயிருப்பதே!. (செங்கண்) அபேக்ஷிதம்முடிக்கப்பெறுகை. (மால்)செய்ததுபோராதென்றிருக்கை. (நற்றாமரை) செவ்விக்கும் அழகுக்கும் குளிர்த்திக்கும் ஸத்ர்ஶமானதாமரைதேடுகிறார். (வானவர்) எட்டாதபடி பரணிட்டுக்கொண்டிருக்கிற. (கைகூப்பி) "அவஸாநேப்ரதிபேதிரே" "அவஸாநேப்ரதிபேதிரே." (நிரைமலர்) ஏற்கவே * தொடையொத்த துளபங்கொண்டிருந்தார்களோ. (ஏத்துவரால்) இப்படி பிறந்தார் பெறுதொழிவதே!. (நின்று) கிண்ணகத்தெதிர்த்து நின்று. உ௦.

அ.—இருபத்தோராம்பாட்டு. அவன்பெருமையைப்பார்த்துப் பிற்காலியாதே, "ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவன்" என்றறிந்து அவன்திருவடிகளைக் கிட்டப்பார்கிடாய் நெஞ்சேயென்கிறார்.

மூ.—நின்றுநிலமங்கை நீரேற்றுமூவடியால்
சென்றுதிசையளந்த செங்கண்மாற்கு, - என்றும்
படையாழி; புள்ளூர்தி; பாம்பணையான்பாதம்
அடை; யாழிநெஞ்சே! அறி.

(நிரைமலர்) * நிரை, வானவருக்காதல்மலருக்காதல் விசேஷணம். ஆல்-அசை.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (படுக்கையாயித்யாதி.) "வானவர்" என்கையாலே-தேவதாந்தரம். இப்படி-சாடு. இப்படி-இப்படி இவர்களைப்போலே இந்தபூமியிலே பிறந்தார் அவனை ஏத்தப்பெறுதொழிவதே! என்றுவிஷாதம். ஆல் * விஷாதஸூசகம். உ௦

---

* விஷாதம்-துக்கம்.

பதம்.	உரை.
சென்று	மஹாபலி யஜ்ஞவாடத்தளவும் நடந்து சென்று, அவன் முன்னே "அபிமதம் பெற்றன்றிப் போகேன்" என்று மலையாளர் வளைப்புப்போலே,
நின்று	அர்த்தித்வந் தோற்ற நின்று, எல்லார்க்கும் குறைவறக் கொடுத்துப் போந்த,
அம்கை	அழகிய திருக்கையிலே,
நிலம்	பூமியை,
நீரேற்று	நீரேற்று வாங்கிக்கொண்டு, ஓரடிக்கு அவனைச்சிறையிட்டு வைப்பதாக,
மூவடியால்	மூன்றுதிருவடிகளாலே,
திசை	திக்குக்களோடேகூடின ஸகலலோகங்களையும்,
அளந்த	அளந்து கொண்டவனாய்,

பதம்.	உரை.
	அத்தால் வந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே,
செம்	சிவந்த,
கண்	திருக்கண்களையுடையனுமான,
மாற்கு	ஸர்வாதிகனுக்கு,
என்றும்	ஸர்வகாலத்திலும்,
படை	ரக்ஷண பரிகரமான திவ்யாயுதம்,
ஆழி	திருவாழி;
ஊர்தி	மேற்கொண்டுநடத்துகிறவாஹநம்,
புள்	பெரியதிருவடி;
பாம்பு	திருவநந்தாழ்வானை,
அணையான்	படுக்கையாகவுடையவனுகையாலே ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைக ஸ்வபாவனானவனுடைய,
பாதம்	திருவடிகளை,
அடை	கிட்டி யநுபவிக்கப்பார்;
ஆழி நெஞ்சே	கம்பீர ஸ்வபாவமானநெஞ்சே,
	இத்தைஓலக்கவார்த்தையென்றிராதே,
அறி	நன்றாக புத்திபண்ணு. ... ௨௧

வ்யா.—இருபத்தோராம்பாட்டு. (நின்று) ஸர்வேஶ்வரனானவன் அர்த்தித்வம் தோற்றும்படிக்கிடாகநின்று. (நிலமங்கைநீரேற்று) கொடுத்துவளர்ந்த அழகியகையிலே பூமியைநீரேற்று. (மூவடியித்யாதி) திக்குக்கள்தோறும் சென்றளந்து, அத்தாலே அலப்யலாபம் பெற்றானாயிருக்கிறவனுக்கு. (என்றுமித்யாதி) எல்லாவற்றையுமுடையவன்கிடீர் இரந்தான். கையிலே திருவாழியைப்பேராதே பிடிக்கவல்லவனும், திருவடிமுதுகிலே நற்றரிக்க இருக்கவல்லவனும், திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே சாயவல்லவனும் ஸர்

வேஶ்வரனுகிறான். (பாதமடையாழிநெஞ்சேயறி) மஹாபலியைப் போலே யாகாதே அவன்திருவடிகளையடை; (ஆழிநெஞ்சேயறி, அளவுடைய நெஞ்சேயறி. ஓலக்கவார்த்தையென்றிராதே இத்தை புத்திபண்ணியிரு.

இரண்டுபாட்டாலும்-ஸர்வேஶ்வரன்கிடீர் ஆஶ்ரிதார்த்தமாக இப்படி எளியனானானென்று சொல்லிற்றாய் ஈடுபடுகிறார்.

(நின்றித்யாதி) பிராட்டியை ஸ்ரீஜநகராஜன் நீர்வார்க்கப் பெற்றாப்போலே சென்று நின்றென்னுதல். (சென்று) நடந்தபடி. சென்றளந்தவென்னுதல். (செங்கண்மால்) தந்தாமது பெற்றாலும் இனியராகவேணுமோ. (என்றும்) பரிபூர்ணன்கிடீர். (பாதமடை ஆழிநெஞ்சே) என்னை ஓதுவிக்கவல்லநீ, என்செல்லாமை அறி. அல்லாத வார்த்தைபோலல்ல; இத்தைபுத்திபண்ணு. [சீரால்பிறந்து] அன்று அறுபதினாயிரம் ஸம்வத்ஸரம் தபஸ்ஸூபண்ணினவன் வயிற்றிலே, "పితరం రోచయామాస" "பிதரம்ரோசயாமாஸ" என்று ஆசைப்பட வந்து பிறக்கை. [சிறப்பால்வளராது]வெண்ணெயையும் பெண்களையும் களவுகண்டு மூலையடியே வளருகை. [பேர்வாமனாகாக்கால்] நாராயணனா லாகாதோ. [பேராளா] ஐஶ்வர்யத்திலே இளைப்பாறவேணுமோ. [மார்வித்யாதி] பருத்திபட்ட பன்னிரண்டும் பட்டபூமி. ௨௧

அ.—இருபத்திரண்டாம்பாட்டு. நீர் நம்மை "ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைக ஸ்வபாவன்" என்றறிந்தபடி யெங்ஙனேயென்ன; நானொருவனுமேயோ, லோகமடையவறியாதோவென்கிறார்.

மூ.—அறியுமுலகெல்லாம்; யானேயுமல்லேன்;
பொறிகொள்சிறையுவணமூர்ந்தாய்! - வெறிகமழும்,
காம்பேய்மென்தோளிகடைவெண்ணெயுண்டாயைத்
தாம்பேகொண்டார்த்ததழும்பு.

இருபத்தோராம்பாட்டு. மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (இரண்டுபாட்டாலுமித்யாதி.) இங்கு "நிலமங்கை" என்று-பூமிப்பிராட்டியாக்கி அருளிச்செய்கிறார் (பிராட்டியையித்யாதி.) யஜ்ஞவாடத்தளவும்சென்றுநின்றென்னுதல்; நின்றவிடத்திலேநின்றுதிசையெங்கும் சென்றளந்தென்னுதல். தமக்கு உபதேஶிக்கிற நெஞ்சுக்குச்சொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (என்செல்லாமையென்று.) இப்படி வாமநனிடத்திலே ஈடுபட்டபேருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (சீரால்பிறந்தித்யாதி.) (இளைப்பாறவேணும்) நீர்மையில் இளைப்பாறப்போகாமையாலே மேன்மையிலே இளைப்பாறவேணுமென்றபடி. உன்கையிலே பன்னிரண்டும் பட்டபூமி. இப்படி வாமநனாகாதபோது ஏற்கவருமையோ என்றபடி. ௨௧

பதம்.	உரை.
	சித்ரபடம்போலே,
பொறிகொள்	நாநாவர்ணமான,
சிறை	சிறகையுடைய,
உவணம்	பெரியதிருவடியை,
ஊர்ந்தாய்	நடத்தும் ஸ்வபாவனாய்,
	பிள்ளை அநுங்காதபடி ஸுகந்த த்ரவ்யத்தாலே அலங்கரித்துக்கொண்டிருக்கையாலே,
வெறி	பரிமளம்,
கமழும்	அலையெறியா நிற்பாளாய்,
	பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் ஒழுகுநீட்சிக்கும்,
காம்பு ஏய்	வேய்போலேயாய்,
மெல்	அதில் வ்யாவர்த்தமான மார்த்தவத்தையுடைய,

பதம்.	உரை.
தோளி	தோளை யுடையளுமான யஶோதைப் பிராட்டி,
கடை	உடம்பு நோவக் கடைந்து திரட்டிவைத்த,
வெண்ணெய்	வெண்ணெயை,
உண்டாயை	அமுதுசெய் தருளினவுன்னை,
தாம்பு கொண்டு	கைக்கெட்டிற்றொரு அறுதற்றாம்பையேகொண்டு,
ஆர்த்த	உறைக்கக்கட்டுகையால்வந்த,
தழும்பு	தழும்பு,
யானேயுமல்லேன்	நானொருவனுமேயல்லேன்,
உலகெல்லாம்	நாடடங்க,
அறியும்	அறியுங்காண்.

உவணமென்று - பருந்துக்குப்பேர். ... ... (௨௨)

வ்யா.—இருபத்திரண்டாம்பாட்டு. (அறியும்) ஆஶ்ரிதார்த்தமாக எளியனானென்னும்படி நீரறிந்தபடி யெங்ஙனே யென்னில் (உலகெல்லாம் - அறியும் - யானேயுமல்லேன்) ஶிஶுபாலன்கூட அறியானோ. (பொறியித்யாதி) பொறிகொண் டிருந்துள்ள சிறகையுடைத்தான திருவடியை ஊர்ந்தவுன்னை. (வெறிகமழும்) பிள்ளை முகம்வாடவொண்ணாதென்று எப்போதும் ஒப்பித்தபடியே யிருக்கையாலே பரிமளம்கமழாநின்ற. (காம்பேய் மென்தோளி) மூங்கிலோடொத்து ம்ருதுவான தோளையுடையவள். (கடை வெண்ணெயுண்டாயை) அவள், மார்த்தவம் பாராதே கடைந்த வெண்ணெயுண்டாயை. (தாம்பித்யாதி) கைக்கெட்டிற்றொருதாம்பாலே கட்டினதழும்பு.

(அறியுமுலகெல்லாம்) கயிற்றை நீட்டவொண்ணாது, உரலைச் சிறுக்கவொண்ணாது, இவனுடம்பிலே இடங்காணுமித்தனைபிறே.

இருபத்திரண்டாம்பாட்டு. ஆர்த்த - ஆர்க்கட்ட என்று அர்த்தமாக்கி அருளிச்செய்கிறார் (கயிற்றைநீட்டவித்யாதி.)

ஆஶ்ரித பக்ஷபாதம்போலே ஆஶ்ரிதபவ்யதையும். (உலகெல்லாம்) ஶிஶுபாலனையிட்டுச் சொல்லவேணுமோ. (யானித்யாதி) (ஆக்ராஹ) - முடைய நானே யல்லேன். (பொறியித்யாதி) நிரபேக்ஷனுய் அர்த்திக்கப் பிறந்தநீ. (வெறி) ஸ்வாபாவிகமென்னுதல்; பிள்ளை முசியாமைக்கென்னுதல். (காம்பு) பசுமையும், திரட்சியும், செவ்வையும். (மென்தோளி கடைவெண்ணெயித்யாதி) இருவர்க்கு தாரகம், அபலை கட்டிலே கட்டுண்பதே!. (தாம்பேகொண்டு) குறுங்கயிற்றைக்கொண்டு. ௨௨

அ.—இருபத்துமூன்றும்பாட்டு. நாம் சிலர்க்குஅஞ்சுகையாவதென், கட்டுண்கையாவதென், அத்தைப் பின்னாடறிகையாவதென்னென்று அத்தை மறைக்கப்புக்கான்; ஒரு தழும்பாகிலன்றோ மறைக்கலாவது, உன்னுடம்படங்கலும் ஆஶ்ரிதர்கார்யம் செய்கையால்வந்த தழும்பன்றோவென்கிறார்.

மூ.—தழும்பிருந்த; சார்ங்கநாண்தோய்ந்தவாமங்கை;
தழும்பிருந்த;தாள்சகடஞ் சாடி, - தழும்பிருந்த;
பூங்கோங்தையாள்வெருவப்பொன்பெயரோன்மார்விடந்த
வீங்கோதவண்ணர்விரல்.

பதம்.	உரை.
அம்	அழகிய,
கை	திருக்கையானது,
சார்ங்கம்	ஸ்ரீஶார்ங்கத்தினுடைய,
நாண்தோய்ந்தஆம்	நாணறைவால்வந்த,
தழும்பிருந்த	தழும்பைச் சுமந்தன;
தாள்	அதிஸுகுமாரமான திருவடிகளானவை,
சகடம்	அஸுரா விஷ்டமான ஶகடத்தை,
சாடி	முறிந்து விழும்படி உதைத்து,
தழும்பிருந்த	அத்தாலெழுந்த தழும்பைச்சுமந்தன;
வீங்கு	கிளர்ந்து,
ஓதம்	அலையெறிகிற கடல்போலேயிருந்துள்ள,
வண்ணர்	வடிவையுடையவருடைய,
விரல்	திருவிரல்களானவை,
பூ	அழகிய,
கோதையாள்	மயிர்முடியையுடையபிராட்டி,
	"என்னைகத்தேடுகிறதோ!" என்று,

மேலுக்கு அவதாரிகை யருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதபக்ஷபாதமித்யாதி.) அவிட்டு - வன்மாத்ரமல்லவென்றபடி. இருவர்க்கும்-தாய்க்கும் மகனுக்கும்.அவளுக்கு ஜீவநஹேது, இவனுக்கு ஆஶ்ரிதஸ்பர்ஶமென்றபடி. (௨௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெருவ	நடுங்கும்படியாக,	தழும் பிருந்த	தழும்பைச் சுமந்தன.
பொன்பெயரோன் மார்வு	ஹிரண்யன் மார்வை,		விரல்தழும்பு, கால் தழும்பு, கைத்தழும்பு, இவற்றை எங்ஙனே உன்னால் மறைக்கும்படி யென்கை.
இடந்த	பிளந்துபோகட்டத் தால்வந்த,		

அ.—இருபத்துமூன்றாம்பாட்டு. ஒருசெயலைக்கொண்டுசொல்லும்படி யென்னென்னில்; ஒருசெயலிலேயோ, ஒரு அவதாரத்திலேயோ தழும்பு சுமந்த தென்கிறார்.

வ்யா.—(தழும்பிருந்தவித்யாதி) பிராட்டியுங்கூடக்கூசி ஸ்பர்ஶிக்கவேண்டும் அழகியகை, சார்ங்கநாண் தோய்ந்த தழும்பிருந்தவாம். ஜ்யாகிணத்தாலே கர்க்கஶமாயிருக்கும். (தாள்சகடஞ்சாடித்தழும்பிருந்த பூங்கோதையாள் வெருவப் பொன்பெயரோன்மார்விடந்த) "அடலரியாய்ப்பெருகினானை" என்கிறபடியே. (விரல்தழும்பிருந்த) கால் தழும்பு, கைத்தழும்பு, அவாந்தராவயவமானவிரல் தழும்பு, ஒன்றேயோ தழும்பாய்த்தென்கிறார். (பூங்கோதையாள் வெருவ) "ஆஶ்ரிதருடையகார்யம்" என்றால் உகக்குமவளும் பயப்படும்படி உடம்படையத் தழும்பு. (சாடி) அவன்மூரி நிமிர்ந்தான், இவர்க்குக்குவாலாயிருக்கிறபடி. (பூங்கோதையாள்வெருவப்)பொறாதென்றிருக்குமவள். வீரவாசியறியுமவள். ரிஷிவேஷத்தோடே திரியவேணுமென்னுமவள். (வீங்கோதவண்ணர்விரல்) வளர்த்தியும் குளிர்த்தியும். [మహావిష్ణుమ్ - மஹாவிஷ்ணும்.] விக்ரஹவ்யாப்தியாய்த்து. ... ... உங

அ.—இருபத்துநாலாம்பாட்டு. நாம்வெண்ணெய்களவுகாணப் புக்குக் கட்டுண்டோமாகவேணுமோவென்ன; களவு கண்டு கட்டுண்டிருக்கும்படி அறியாயோவென்கிறார்.

மூ.—விரலொடுவாய்தோய்ந்தவெண்ணெய்கண்டு, ஆய்ச்சி
உரலொடுறப்பிணித்தநான்று, – குரலோவா
தேங்கிநினைந்தயலார்காணவிருந்திலையே?
ஓங்கோதவண்ணா! உரை.

இருபத்துமூன்றாம்பாட்டு. மேலுக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (பூங்கோதையாளித்யாதி.) பூங்கோதையாளை ராமாவதாரத்தோடே சேர்த்து அருளிச்செய்கிறார் (பொறாதென்றித்யாதி.) பொறாது என்று - ஆஶ்ரிதரக்ஷணம் பொறாதென்ன வேணுமென்றிருக்குமவளென்றபடி. இப்படிப்பட்டவளும் வெருவும்படி சார்ங்கநாண்தோய்ந்த என்று இங்கும்கூட்டி யோஜிப்பது. ... உங

பதம்.	உரை.
விரலொடு	திருக்கையாலேஅள்ளி,
வாய்தோய்ந்த	திருப்பவளத்திலே வைத்த,
வெண்ணெய்	வெண்ணெயை, அமுதுசெய்தருளுவதுக்கு முன்னே,
கண்டு	வாயது கையதாகக் கண்டு,
ஆய்ச்சி	இடைச்சியானவள், களவுக்குப்பெருநிலை நின்ற,
உரலொடு	உரலோடே யெடுத்து,
உறப்பிணித்தநான்று	உறைக்கக் கட்டினவன்று,
குரல்	கூப்பிடுகிறகூப்பீடு,
ஓவாது	உச்சிவீடுவிடாதபடி, வாய்விட்டழ மாட்டாமல்,
ஏங்கி	விம்மல் பொருமலாயேங்கிக்கொண்டு, அவ்வளவிலும் வெண்ணெயெங்கேயிருக்கிறது, அதுகளவுகாணும்படியெங்ஙனேயென்று இத்தையே,
நினைந்து	உருவ நினைத்துக்கொண்டு,
அயலார்	உன்னாலே புண்பட்ட இடைப்பெண்களெல்லாரும், "கள்ளனுக்கித்தனையும்வேணும்" என்று,
காண	சிரித்துக் கொண்டு வந்து காணும்படியாக, க்ர்தார்த்தனாய்க்கொண்டு,
இருந்திலையே	இருந்திலையோ;]
	கட்டுண்ணப்பெற்ற ஹர்ஷத்தாலே,
ஓதம்ஒங்கு	ஓதங்கிளர்ந்த கடல்போன்ற,
வண்ணா	வடிவை யுடையவனே!
உரை	நீ இத்தை உண்மையாகச்சொல்லிக்காண். ... ௨௪

இவர்க்கு இவன் வடிவு காணவேணுமென்றும், வார்த்தை கேட்க வேணுமென்றும் போலேகாணும் ஆசை.

வ்யா.—இருபத்துநாலாம்பாட்டு. (விரலித்யாதி)விரல் வாயிலே தோய்ந்தவளவிலே, "'வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தைவெற்பிடையிட்டு' என்றும்சொல்லாநின்றது, 'விரலொடுவாய்தோய்ந்த' என்றும் சொல்லாநின்றது, இவையெங்ஙனே சேரும்படி" என்று பிள்ளை திருநறையூரரையர் பட்டரைக்கேட்க; "இவனுக்கு என்றும் திருப்பணி இதுவன்றோ, ஒருநாள் அங்ஙனுமாகிறது, ஒருநாள் இங்ஙனுமாகிறது,, என்றருளிச்செய்தார்.

இருபத்துநாலாம்பாட்டு. "இவை-மௌக்த்யவைதத்யங்கள்சேரும்படி" என்று அரையர்.

"வைகலும் வெண்ணெய்கைகலந் துண்டான்" என்கிற படியே. (உரலித்யாதி) உரலென்றும் அவனென்றும் பிரித்துக் காணப் போகாதபடி கட்டினவன்று. (குரலோவாதேங்கி) அழப் புக்கத்வநிமாறாதே ஏங்கின ஏக்கம் கிழவிழாதே நினைந்து. இப் படி அழாநிற்கச் செய்தேயும் பெரியதிருப்பணிகளாய்த்து நினை ப்பது; - வெண்ணெய் களவுகாணும்படி நினைந்து. (அயலார் காண இருந்திலையே) அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களில் காணாதாருண்டோ. இவனாலே நெஞ்சு புண்பட்டா ரெல்லாம் இவன் பட்டபாடு காண வருவர்களிறே. * 𑌅𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑌟𑍈𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍈𑌃 𑌇𑌹𑍈𑌵 𑌫𑌲𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 - அத்யுத்கடைபுண்யபாபைரிஹைவ பலமஶ்நுதேயிறே. (ஒங்கோதவண்ணாவுரை) இவனைக் கட்டிவைத்தது ஒரு கடலைத்தேக்கிவைத்தாப்போலேகாணும். (உரை) இவ்வடிவுகாண வேணும்; இவ்வடிவோடேகூட வார்த்தையுங் கேட்கவேணும். பொய்யாகில் உரலோடேகூட இழுத்துக்கொண்டு புறப்படுவேனே.

(விரலித்யாதி) வயிறுவளர்த்து அகப்படப்பெற்றோமோ; மிடற்றுக்குக்கி ழிழியப்பெற்றோமோ. (உரலொடு) உரலோடுதன்னோடு வாசியில்லாமை. (குரலோவாது) அழப்புக்கவாறே "இக்கோலுண்டு, பார்" என்னஏங்குகின்றான். (நினைந்து) வெண்ணெயைநினைத்திருக்கை. (அயலார்காண) பஞ்சலக்ஷம் குடியிற் பெண்களுடைய அவர்களை பந்தித்துத் தான் அகப்படாதிருக்கும்; அவர்கள் இவன் அகப்படவல்லனே! என்றிருப்பர்கள். (இருந்திலையே)ராமஶரத்தை ராவணன் மறக்கில் மறக்கலாம். (ஒங்கோதவண்ணா) நெருக்குண்கையாலே வந்தபூர்த்தி. (உரை) "𑌨 𑌮𑍇 𑌮𑍋𑌘𑌂" "நமேமோகம்" என்னும்நீ சொல்லிக்காண். அவாப்தஸமஸ்தகாமன் குறையாயழுவதே!; ஸர்வஶக்தி மிடுக்கின்றி யொழிவதே!, ஸர்வஜ்ஞன் புரையறிவதே!. ... ... உச

விரலாலே தொட்டு வாய்தோய்ந்தானே என்ன அருளிச் செய்கிறார் (வைகலுமித்யாதி.) அவ்விடத்துக்கு இதுவுமொரு அர்த்தம். காணாதே துக்கப்பட்டவர்கள் காணக்கூடுமோ வென்ன அருளிச்செய்கிறார் (𑌅𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑌟𑍈𑌃-அதியுத்கடை-இத்யாதி.) புண்ய பலம் - நாளாகை. "உரை" என்றத்தால் பலித்தத்தை யருளிச்செய் கிறார் (பொய்யாகிலித்யாதி.) பொய்யென்றாயாகில், கையும் களவுமாகக் கட்டுண்டத்தை அவன் நினைத்திருக்குமோவென்ன அருளிச் செய்கிறார் (ராமசரத்தையித்யாதி.) ஆஶ்ரிதவிஷயத்தில் உகந்து கட்டுண்கையாலே மறவாமல் நினைத்திருக்குமென்றபடி. புரையறுகை - அவிழ்க்கைக்கு உபாயமறியாதிருக்கை. ... உச

அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. அவன் ஓவாதே அழுதபடியைக்கண்டு, இவரும் ஓவாதே யேத்தத் தொடங்கினர்.

மூ.—உரைமேற்கொண்டென்னுள்ளமோவாதெப்போதும்
வரைமேல்மரதகமேபோலத் - திரைமேல்
கிடந்தானைக்கீண்டானைக்கேழலாய்ப்பூமி
இடந்தானையேத்தியெழும்.

பதம்.	உரை.
வரைமேல்	ஒருமலையின்மேலே,
மரதகமே போல	ஒரு மரதககிரி படிந்தாப்போலே,
திரைமேல்	ஸ்வ ஸந்நிதாநத்தாலே அலையெறிகிற திருப்பாற்கடலிலே,
கிடந்தானை	கண்வளர்ந்தருளினவனாய்,
	சிறுக்கனுர்த்தி தீர்க்கைக்காக நரஸிம்ஹமாய்த் தூணிலேவந்துதோற்றி,
கீண்டானை	ஹிரண்யனைப்பிளந்துபொகட்டவனாய்,
கேழலாய்	மஹாவராஹமாய்,
	ப்ரளயத்திலே கரைந்து அண்டபித்தியிலே யொட்டின,
பூமி	பூமியை,
இடந்தானை	இடந்தெடுத்துக்கொண்டேறினவனை,
என்	என்னுடைய,
உள்ளம்	ஹ்ர்தயமானது,
உரைமேற் கொண்டு	உரைக்கையிலே தத்பரமாய்க்கொண்டு,
ஓவாது	உச்சிவீடு விடாதே,
எப்போதும்	ஸர்வகாலத்திலும்,
ஏத்தி	இவ்வபதாநங்களைச் சொல்லிப்புகழ்ந்து,
எழும்	உஜ்ஜீவியாநிற்கும்.

"உரைமேல் கொண்டு" என்று-மேலான வுரையைக்கொண்டு-உத்க்ர்ஷ்டமான ஶப்தங்களைக்கொண் டென்னவுமாம். "கேழலாய்க்கீண்டானைப் பூமியிடந்தானை" என்று - இரண்டையு மிங்கேயாக்கி - அண்ட பித்தியிலே யொட்டின இத்தை முதல்கீண்டு, பின்னை இடந்தெடுத்துக்கொண்டேறினபடியைச் சொல்லிற்றாகவுமாம்.

அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. இவனுடைய இந்நீர்மை அநுபவித்தால் வேறொன்றால் போதுபோக்கவொண்ணாதென்கிறார்.

வ்யா.—(உரைமேல்கொண்டு) மேலான வுரையைக்கொண்டு. அதாவது - வாக்குக்கு விஷயமானத்தைக் கொண்டு. அன்றிக்கே, உரைக்கையிலே மேற்கொண்டு. அதாகிறது - சொல்லிச்செல்லுகையிலே கிளர்ந்து. (என்னுள்ளமோவாதெப்போதும்) என்னுடைய ஹ்ர்தயமானது உச்சிவீடு விடக்கடவதன்றிக்கே. ஸ்வரூபம் ஒருக்காலாக அழியுமோ. ஒருமலையிலே ஒருமரதககிரியானது பரப்புமாறப்படிந்தாப்போலேயாய்த்துத் திருப்பாற்கடலிலேகண் வளர்ந்தருளினபோதிருக்கும்படி. ஸர்வேஶ்வரனாய் ஸர்வஶக்தியானவனுடைய ஸௌலப்யசரிதங்களைச் சொல்லுகைக்கு (என்னுள்ள மித்யாதி) தாஸவர்த்திகனான வென்னுடைய மநஸ்ஸானது இடைவிடாது.

(எப்போதுமித்யாதி) ஒருபர்வதஶிகரத்திலே இந்த்ரநீலமணியிருந்தாப்போலே விளங்குகிற ஸமுத்ரஶாயியானவனை. (கிடந்தானைக் கண்டானை) ஆர்த்தனைக்கண்டால் படுக்கை அடிக்கொதிக்கும்படி. (ஏத்திஎழும்) ஸ்துதித்து உஜ்ஜீவிக்கும்.

(உரைமேல்கொண்டு) அவனுக்கு நினைவும் பேச்சும் வெண்ணெயிலே யானாப்போலே, ஆழ்வார்க்கு நினைவும் பேச்சும் இவன் பக்கலிலே யானபடிசொல்லுகிறது.

(உரைமேல்கொண்டு) வாக்குக்கு விஷயமாகக்கொண்டு. வாக்வ்ர்த்தியை மேற்கொண்டென்னவுமாம். (என்னுள்ள மித்யாதி) ஒருமலைமேலே மரதகம்கிடந்தாப்போலே திரைமேலே கண்வளர்ந்தருளுகிறவனை. (கீண்டானையித்யாதி) வராஹ ரூபியாய்ப்புக்கு அண்டபித்தியில்நின்றும் ஒட்டுவிடுத்து பூமியையிடந்தவனை. (ஏத்தியெழும்) ஏத்தி உஜ்ஜீவியாநின்றது. ௨௫

அ.—இருபத்தாறும்பாட்டு. அவ்வவதாரங்களுக்குப் பிற்பாடரானாரிழவை பரிஹரிக்கைக்காகத் திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானானென்கிறார்.

மூ.—எழுவார்விடைகொள்வாரீன்றுழாயானை
வழுவாவகைநினைந்துவைகல் – தொழுவார்
வினைச்சுடரைநந்துவிக்கும்வேங்கடமேவானோர்
மனச்சுடரைத்தூண்டும்மலை.

பதம்.	உரை.	பதம்.	உரை.
	"போற்றி யென்றேற்றெழுவர்" என்கிறபடியே - எங்களுக்கு அபிமதமான த்ர்ஷ்டைஶ்வர்யத்தைத் தரலாகாதோவென்றுப்ரயோஜநத்துக்குக் கையேற்றுக் கிளர்ந்து அது கைப்பட்டவாறே,		"உன் அநுபவம்வேண்டா, எங்களாத்மாவை அநுபவித்துக்கொண்டு ஒருநாளும் உன்முகத்திலேவிழியாதேயிருக்கும்படி விடைகொள்ளுகைக்குத் திருக்கைச் சிறப்பிட்டருள வேணும்" என்று,
எழுவார்	விட்டகன்றுபோம் ஐஶ்வர்யார்த்திகளும்,	விடைகொள்வார்	விடைகொண்டுபோம் கைவல்யார்த்திகளும்,

---

இருபத்தஞ்சாம்பாட்டு. (உரைமேல்) மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அவனுக்கித்யாதி.) கேழலாய்க் கீண்டிடந்தானையென்றபடி. சேதநஸமாதியாலே உள்ளம் ஏத்தி எழும் என்றுகிரியை. வாக்வ்ர்த்தியை மேற்கொள்ளுகை - வாக்வ்ர்த்தியை யுடைத்தாகை யென்றபடி. ௨௫

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஈன்	நிரதிஶயபோக்யமான,		தத்தத் புருஷார்த்த ப்ரதி பந்தகமான,
துழாயானை	திருத்துழா யாலே அலங்க்ர்தனாய் பரமப்ராப்யபூதனானவனை,	வினைச்சுடரை	பாபாக்நியை,
வழுவா வகை	ஒருநாளும்விட்டு நீங்காதே கிட்டிநின்று அநுபவிக்கும் ப்ரகாரத்தை,	நந்துவிக்கும்	உருத்தெரியாதபடி நஶிப்பிக்கும்,
நினைந்து	அநுஸந்தித்து,	வேங்கடமே	திருமலையேகாணும்,
வைகல் தொழுவார்	ஸர்வகாலமும் அநுபவிக்கக் கடவர்களாயிருக்கும் பகவச் சரணார்த்திகளுமான இவ்வதிகாரிகளுடைய,	வானோர்	அஸ்ப்ர்ஷ்டபாபகந்தரான நித்யஸூரிகளுடைய,
		மநச்சுடரை	திருவுள்ளமாகிற விளக்கை,
			அவன்ஶீலாதிகுணாநுபவத்தின் ஶ்ரத்தையை வர்த்திப்பித்துக்கொண்டு,
		தூண்டும் மலை	ப்ரேரியாநிற்கும் மலை. ... உசு

அ.—இருபத்தாறும்பாட்டு. (எழுவார்) எல்லார்க்கும் நினைவும் செயலும் ஒக்கப் பரிமாறலாவது'பரமபதத்திலேயன்றோவென்னில்; நித்யஸூரிகளுங்கூட அவனுடைய ஸௌலப்யங்காண வருகிறது திருமலையிலேயன்றோவென்கிறார்.

வ்யா.—(எழுவார்) ஐஶ்வர்யம் வேணுமென்று மேலேமேலே ப்ரார்த்திக்குமவர்கள். (விடைகொள்வார்) ஆத்மப்ராப்தியே யமையும், நீவேண்டாவென்று இவன்பக்கலில்நின்றும் அகலுமவர்கள். (ஈன்றுழாயானையித்யாதி) இவனை நாங்கள் பிரியாதொழிய வேணுமென்றுநினைத்துகாலமெல்லாம்தொழுவார்கள். (வினையித்யாதி) பகவத்ப்ராப்தி விரோதி, ஆத்மப்ராப்தி விரோதி, ஐஶ்வர்ய ப்ராப்தி விரோதியான பாபங்களை, எரிகிற நெருப்பை அவித்தாப்போலே நஶிப்பிக்கும் வேங்கடமே. (வானோரித்யாதி) நித்யஸூரிகளுடைய கிளர்ந்த மநஸ்ஸை அவனுடைய ஸௌலப்யம்காணப் போரிரோ ளென்று கிளர்த்தாநிற்கும் திருமலை. காலாந்தரமன்று, ஸந்நிஹிதம்.

(எழுவார்) ப்ரயோஜநம் கைபுகுந்தவாறே போவார் ஐஶ்வர்யார்த்திகள்.

இருபத்தாறும்பாட்டு. (எழுவார்)மேலேஎன்கையாலே-ஸந்நிதிஹி இது ப்ரத்யக்ஷமன்றோ வென்றபடி.

(விடைகொள்வார்) பலம் நித்யமாகையாலே மீட்சியில்லை கேவலர்க்கு. (வினையித்யாதி) இம்மூவர்க்கும் உத்தேஶ்யவிரோதிகளைப்போக்கும். நந்துவிக்கை - அவிக்கை. (வானோரித்யாதி) இங்குள்ளார் * ஒழிவில் காலமென்ன, அங்குள்ளார் * அகலகில்லேன் என்னச்சொல்லும். ... ... உசு

அ.—இருபத்தேழாம்பாட்டு. இங்கே யெழுந்தருளிநிற்கிற திருவேங்கடமுடையானுடைய தோளின்துடிப்பைக் கண்டபோதே, அவதாரங்களில் விரோதிவர்க்கத்தைப் பொடிபடுத்தின வீரப்பாடடங்களும் காணலாமென்கிறார்.

மூ.—மலையாற்குடைகவித்து,மாவாய்பிளந்து,
சிலையால்மராமரமேழ்செற்றுக், - கொலையானைப்
போர்க்கோடொசித்தனவும்,பூங்குருந்தம்சாய்த்தனவும்,
கார்க்கோடுபற்றியான்கை.

பதம்.	உரை.
	இந்த்ரன் ப்ரவர்த்திப்பித்த கல்வர்ஷத்தில் ரக்ஷ்யவர்க்கமழியாதபடி,
மலையால்	கைக்கெட்டிற்றொரு மலையாலே,
குடை	குடைபிடிப்பாரைப் போலே,
கவித்து	கீழதுமேலதாகமறித்துரக்ஷித்து,
	தன்னை விழுங்குவதாகவந்த,
மாவாய்	கேஶியாகிறகுதிரையினுடைய வாயை
பிளந்து	இருபிளவாகக் கிழித்துப்பொகட்டு,
	க்ஷத்ரியத்வத்துக்கு ஏகாந்தமாக வெடுத்த,
சிலையால்	திருவில்லாலே,
	ஓராஶ்ரிதனைவிஶ்வஸிப்பிக்கைக்காக,
மராமரமேழ்	மராமரங்களேழையும்,
செற்று	அழியச்செய்து,
கொலை	எதிர்த்தவர்களைக் கொன்றுவிழவிடும்,
யானை	குவலயாபீடத்தினுடைய,
போர்	பொருகைக்குபரிகரமான,
கோடு	கொம்பை,
ஒசித்தனவும்	பிடுங்கிப் பொகட்டவும்,
	கண்டார்க்குஆசர்ஷகமாம்படி,
பூங்குருந்தம்	முட்டாக்கிடப்பூத்துக்கிடக்கிற குருந்தை,
சாய்த்தனவும்	வேர்பறியும்படிதள்ளிவிழவிட்டனவும்,

மீட்சியில்லாமையாலே இவனைவிட்டு விடைகொண்டகன்று போகிறதே அவர்களுக்கு ஸ்வபாவமென்றபடி. ... உ.சு

	குளிர்ந்து முழங்குகிற ஸ்வபாவத்தாலே,	கோடு	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை,
கார்	மேகத்தோ டொத்திருந்துள்ள,	பற்றியான்	தரித்தருளினவனுடைய,
		கை	திருக்கைகள்கிடீர்.

அன்றிக்கே, திருக்கையிலே ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தைப் பிடித்த போது; மேகத்தைப் பற்றியிருந்த சங்கம்போலே யிருந்ததென்னவுமாம்.

அ.—இருபத்தேழாம்பாட்டு. (மலையித்யாதி) திருவேங்கட முடையானுடைய திருக்கையைப் பார்த்தார்போலே.

வ்யா.—(மலையால்குடைகவித்து) வர்ஷத்துக்குக்குடை அபேக்ஷிதமிறே. இந்த்ரன் ஆஸுரப்ரக்ருதியல்லாமையாலே பசிக்ராஹத்தாலே செய்தானாகில், மலையை யெடுத்து நம்மை நோக்கிக்கொள்வோமென்று மலையைக்குடையாகக் கவித்து. (மாவாய் பிளந்து) பண்ணின ப்ராதிகூல்யத்தின் கனத்தாலே கேசியைக் கொன்று. (சிலையித்யாதி) அவதாரத்துக்கடுத்த ஆயுதத்தாலே மராமரமேழையும்செற்று. (கொலையித்யாதி) கொல்லக்கடவதாக நிறுத்தின குவலயாபீடத்தினுடைய பொராநின்றகோட்டை அநாயாஸேநமுறித்ததுவும். (பூங்குருந்தம் சாய்த்தனவும்) பூப்பறித்தனவும். (கார்க்கோடித்யாதி) ஶ்ரமஹரமாய் முழக்கத்தை யுடைத்தா யிருக்குமென்கை. அன்றிக்கே, திருக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்ய மிருந்தபோது மேகத்தைப் பற்றியிருந்தசங்குபோலே யிருந்ததென்கை. இடையர் செய்வதெல்லாம் முன்கை உரத்தாலே; க்ஷத்ரியர், என்றும் வில்லாலே யென்னு மிடம் தோற்றுகிறது. ஸ்ரீபாஞ்சஜந்யம்பிடிக்கவும் பொறாத ம்ருதுவானகையைக்கொண்டுகிடீர் இதெல்லாம்செய்தது. சேஷ்டிதங்களிலே உருகுகிறார். ஸுகுமாரமான கையைக் கொண்டே இப்பெரிய செயல்களைச் செய்வதே!; செய்யாநின்றால் அநாயாஸேநச்செய்வதே!.

(மலையித்யாதி) மலையாக விநியோகங்கொண்டானே. (மாவாய் பிளந்து) நாரதாதிகள் கூப்பிடும்படிவந்தகேசியை நெட்டிக்கோரை

இருபத்தேழாம்பாட்டு. (மலையால்) கோடு - ஶங்கம். மேகஸ்வபாவத்தையுடைய சங்கென்னுதல்; மேகத்தோடேகூடின சங்கென்னுதல். க்ருஷ்ணன்கையாலே செய்கையும், பெருமாள்வில்லாலே செய்கையும்பற்ற தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இடையரித்யாதி.) "பற்றி" என்று - ப்ரயாஸம் தோற்றுகையாலே (பொறாதம்ருது) என்கிறது. மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (சேஷ்டிதங்களித்யாதி.) நெட்டி - வாடின. ... ... உஎ

கிண்டாப்போலே கிண்ட. (சிலையித்யாதி) எய்யவொண்ணாதபடி திரளநின்ற மராமரங்களை. (கொலையித்யாதி) கொலையிலே உற்ற ஆனை. (பூங்குருந்தம்) தழைத்துப்பூத்துநின்ற. (கார்க்கோடு) குளிர்ந்து ஶ்ரமஹரமாய். பெருத்து முழங்குகை. ஸ்ரீபாஞ்சஜந்யம் தொடப் பெறாத கைகிடீர். ௨௭

அ.—இருபத்தெட்டாம்பாட்டு. திருமலையிலே யெழுந்தருளி நிற்கிற திருவேங்கடமுடையான்திருமேனியிலே அழகும் ஐஶ்வர்யமும் ஶீலாதிகுணங்களும் நிழலிட்டுத் தோற்றா நின்றதுகிடீ ரென்கிறார்.

மூ.—கைய; வலம்புரியும்நேமியும், கார்வண்ணத்
தைய! மலர்மகள்நின்னாகத்தாள்; - செய்ய
மறையான்நின்னுந்தியான்; மாமதிள்மூன்றெய்த
இறையான்நின்னாகத்திறை.

பதம்.	உரை.
கார்	மேகம்போலே ஶ்ரமஹரமான,
வண்ணத்து	வடிவையுடைய,
ஐய	நிருபாதிக பந்துவானவனே,
வலம்புரியும்	ஸ்ரீபாஞ்சஜந்யமும்,
நேமியும்	திருவாழியும்,
கைய	திருக்கைகளிலே உளவாயிராநின்றன;
மலர்மகள்	* அலர்மேல்மங்கையானவள்,
நின்	உன்னுடைய,
ஆகத்தாள்	திருமார்விலே "இறையும் - அகலகில்லேன்" என்று உறையா நின்றாள்;
செய்ய	உன்னை உள்ளபடி காட்டும் செவ்வையையுடைய,
மறையான்	வேதத்தைத் தனக்கு நிரூபகமாக வுடையப்ரஹ்மாவானவன்,
நின் உந்தியான்	உன்னுடைய திருமேனியைப் பற்றி லப்த ஸத்தாகனாயிராநின்றான்;
மாமதிள்மூன்று	பெரிய மதிளையுடைய த்ரிபுரத்தைதக்தமாம்படி,
எய்த	எய்துவிழவிட்ட,
இறையான்	ஈஶ்வராபிமாநியான ருத்ரன்,
நின் ஆகத்து	உன்திருமேனியில்,
இறை	ஏக தேஶத்தைப்பற்றி லப்த ஸ்வரூபனாகாநின்றான்.

அ.—இருபத்தெட்டாம்பாட்டு. (கையித்யாதி) ஐஶ்வர்யம் சொல்லுகிறதென்னவுமாம்; நீர்மை சொல்லுகிறதென்னவுமாம்.

வ்யா.—(கையவலம்புரியும் நேமியும்) கைய-கையிலேயுள. (கார்வண்ணத்தைய) ஶ்ரமஹரமானவடிவையுடைய ஸ்வாமியான

வனே. (மலர்மகள் நின்னாகத்தாள்) * கோலமலர்ப்பாவை நின்திரு மார்விலாள். (செய்யவித்யாதி) நேரேஉன்னைக்காட்டவற்றானவேதத்தை யுடைய ப்ர்ஹ்மா உன்திருநாபீகமலத்திலான். (மாமதிளித்யாதி) த்ரிபுரதஹநம்பண்ணி ஈஸ்வராபிமாநியாயிருக்கிற ருத்ரன் உன்திருமேனியைப்பற்றி இறையாய்த்து. அன்றியே, "நின்னாகத்திறை" என்று - திருமேனியில் ஏகதேஸத்திலேஎன்னவுமாம்.

(கையித்யாதி) ஐஸ்வர்யமாதல்; அழகாதல். (கார்வண்ணம்) வேறுவேணுமோ, வடிவேயமையாதோ. (ஐய) என்னது என்னலாயிருக்கை. (மலர்மகள் நின்னாகத்தாள்) * அலர்மேல்மங்கையுறைமார்வன். (மாமதிளித்யாதி) ஊரைச்சுட்டுப்போனாப்படைத்தான். கோள்சொல்லி ப்ரஸித்தராமாப்போலே, ஆகத்தில் ஏகதேஸத்தைப்பற்றினனென்னுதல்; ஆகத்தைப்பற்றிஇறையானனென்னுதல். ()

அ.—இருபத்தொன்பதாம்பாட்டு. நெஞ்சே! உபயவிபூதிநாதனாயிருக்கிறவவன்பெருமையை நினைத்துப் பிற்காலியாதே, அவன் ஆஸ்ரித பரதந்த்ரன் கிடாய், இத்தை நன்றாக புத்தி பண்ணென்கிறார்.

மூ.—இறையும்நிலனுமிருவிசும்புங்காற்றும்
அறைபுனலுஞ்செந்தீயுமாவான் - பிறைமருப்பில்
பைங்கண்மால்யானைபடுதுயரங்காத்தளித்த
செங்கண்மால்கண்டாய்தெளி. (உகூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	பரமபதத்திலே ஸர்வ ஸ்வாமித்வந் தோற்ற வெழுந்தருளியிருக்கிற,	செந்தீயும்	சிவந்த நிறத்தையுடைய தேஜஸ்தத்வமாகிற பஞ்சபூதாரப்தமானலீலா விபூதியை,
இறையும்	ஸ்ரீ வைகுண்டநாதனுமாய்;	ஆவான்	ப்ரகாரதயா ஶேஷமாகவுடையனுமாயிருக்கிறபெருமையை யுடையவன்,
நிலனும்	பூமியும்,		
இருவிசும்பும்	பரப்பை யுடைத்தான் ஆகாஸமும்,		
காற்றும்	வாயுவும்,	பிறை	பிறைபோலேயிருக்கிற,
அறைபுனலும்	அலையெறிகிறஜலமும்,	மருப்பு	கொம்பையும்,

இருபத்தெட்டாம்பாட்டு. (கையவலம்புரி) திவ்யா யுதங்கள் அழகுக்கும் உடல். ... ... உஅ

பதம்.	உரை.
பை	ஜாத்யுசிதமான பசுமையையுடைய,
கண்	கண்ணையுமுடையனாய்,
மால்	அடிமை செய்கையிலேபெரும்பிச்சனுமாயிருக்கிற,
யானை	ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய,
படு	முதலையின்கையிலே அகப்பட்டுப்பட்ட,
துயரங்காத்து	துக்கத்தைப் பரிஹரித்து, கையில் பறித்த பூச்செவி யழிவதற்கு முன்னே திருவடிகளிலே பணிமாறுவித்துக்கொண்டு,
அளித்த	ரக்ஷித்தருளின,
செம்	வாத்ஸல்ய ஸூசகமானசிவந்த,
கண்	திருக்கண்களையுடைய,
மால்கண்டாய்	வ்யாமுக்தன் கிடாய்;
தெளி	இத்தை அழகிதாக புத்திபண்ணு.

"மால்" என்று-அரைகுலையத்தலைகுலையவந்துதோற்றினபடி.

அ.—இருபத்தொன்பதாம்பாட்டு. (இறையும்) ஐஶ்வர்யம் கண்டு அஞ்சவேண்டா, ஆஶ்ரிதபாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்கிறார்.

வ்யா.—(இறையும்) பரமபதத்திலிருப்பைச் சொல்லுகிறது. (நிலனுமித்யாதி) ஜகதாகாரனாய் லீலாவிபூதியுக்தனானபடி சொல்லுகிறது. (பிறைமருப்பிலித்யாதி) பிறைபோலும் கொம்பையுடைத்தாய், ஜாத்யுசிதமான கண்ணையுடைத்தாய், பெருத்த ஆனையினுடைய. (படுதுயரங்காத்தளித்த) ஆனைக்குப் போரும்படியான துயரைப்போக்கி ரக்ஷித்த. (செங்கண்மால் கண்டாய் தெளி) வாத்ஸல்யாம்ர்தத்தை வர்ஷியாநின்ற கண்ணையுடையனான ஸர்வேஶ்வரன். (தெளி) இவனுக்கு ஆஶ்ரிதபாரதந்த்ர்யமேஸ்வரூப மென்னுமிடத்தைபுத்திபண்ணு.

அ.—ஐஶ்வர்யங்கண்டு வெருவாதே ஶீலத்தை அநுஸந்தியென்கிறார்.

(இறையும்) நியாமகனாய்க்கொண்டு பரமபதத்திலிருக்கும். (நிலனுமித்யாதி) இந்த விபூதியையுடையனாயிருக்கிற விருப்பு. (மால்யானை) உடம்பில்பெருமை பாடாற்ற வொண்ணுமை. (அளித்த) புண்பட்டத்தை ஸ்பர்ஶித்தருளினபடி. (செங்கண்) வாத்ஸல்யம். (மால்) அரைகுலையத் தலைகுலையவந்து தோற்றினபடி.

இருபத்தொன்பதாம்பாட்டு. (இறையும்) மேலுக் கவதாரிகை அருளிச்செய்கிறார் (ஐஶ்வர்யங்கண்டித்யாதி.)

அவன், தம்மை, “ஸாஶுச:” “மாஶுச:” என்றதிருவுள்ளத்தை, தாம் “மாஶுச:” என்கிறார். வாசலைத்திறந்துவைப்பாரைப்போலே பெறுகைக்கு அங்குப்போகவேண்டா, இசைவேவேண்டுவது, ஆர்த்தியேவேண்டுவது. அவனே வாராவிடில் ஸமாப்யதிக தரித்ரனே அவன். மற்றவனைப்பெற உபாயமுண்டோ. வாஸனையாலே, “அம்மே” என்பாரைப்போலே அழைத்ததித்தனை. ... ... (௨௯)

அ.—முப்பதாம்பாட்டு. வ்யதிரிக்தங்களில் போகாதபடி மநஸ்ஸை நியமித்துத் திருவடிகளினுறவை அறிந்திருப்பார்க்கு அம்மநஸ்ஸுத்தானே க்ரமப்ராப்தி பற்றாதபடி பதறிக்கொண்டு அத்யபிநிவிஷ்டமாய் அவனைக்கிட்டுமென்கிறார்.

மூ.—தெளிதாகவுள்ளத்தைச்செந்நிறீஇஞாநத்
தெளிதாகநன்குணர்வார்சிந்தை - எளிதாகத்
தாய்நாடுகன்றேபோல்தண்டுழாயானடிக்கே
போய்நாடிக்கொள்ளும்புரிந்து. (௩0)

பதம்.	உரை.
	விஷயராகங்களாலுள்ள காலுஷ்யம் போய்,
தெளிதாக	தெளிவையுடைத்தாம்படிக்கீடாக,
உள்ளத்தை	ஹ்ர்தயத்தை, பகவத்ப்ரவணமாம்படி,
செந்நிறீஇ	செவ்வேநிறுத்தி,
ஞாநம்	தத்விஷயபக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தாலே, “அவன்ஶேஷி, நாம்ஶேஷம்” என்கிற,
தெளிது ஆக	தெளிவுண்டாம்படியாக,
	ஸாக்ஷாத்கார பர்யந்தம்,
நன்குஉணர்வார்	நன்றாகஉணர்ந்திருக்குமவர்களுடைய,
சிந்தை	மநஸ்ஸானது,
எளிதாக	வருத்தமற, கூடநிற்கிறபசுக்களையும்கணிசியாதே,
தாய்நாடு	தன்தாயைத்தேடிக்கொண்டுகிட்டும்,
கன்றுபோல்	கன்றுபோலே,
தண் துழாயான்	ஶ்ரமஹரமானதிருத்துழாயாலே அலங்க்ர்தனுகையாலே வருத்த ஶேஷியுமாய்நிரதிஶயபோக்யனுமான எம்பெருமானுடைய,

---

தெளிவு போருமோவென்ன; அருளிச்செய்கிறார் (வாசலைத்திறந்தித்யாதி.) இசைவுமாத்ரத்திலே வரக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (அவனேவாராவிடிலித்யாதி.) ஸமாப்யதிகதரித்ரனுகப்பொறுனென்றபடி. ஸ்ரீகஜேந்த்ராழ்வான் அழைத்தானேயென்ன; அருளிச்செய்கிறார் (வாஸனையாலேயித்யாதி.) ... (௨௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அடிக்கே	திருவடிகளையே,	புரிந்துபோய்	அங்கே அபிமுகமாய்க்கொண்டுபோய்,
	வ்யக்த் யந்த்ரங்களைக் கணிசியாதே,	நாடிக்கொள்ளும்	தேடிக்கொள்ளாநிற்கும்.
			இது நிஶ்சயம். (ந0)

அ.—முப்பதாம்பாட்டு. (தெளிதாக) ஸம்ஸாரத்திலே ஸமாஶ்ரயணீயர் பலருண்டென்று ப்ரமிக்கவேண்டா, ஸம்பந்தஜ்ஞாநமுண்டாகவே நெஞ்சுதானே அவனை ஆராய்ந்து பற்றும்.

வ்யா.—(உள்ளத்தை – தெளிதாக) விஷயப்ராவண்யத்தாலே கலுஷமான ஹ்ர்தயத்தினுடைய காலுஷ்யம்போக. (செந்நிறீஇ) செவ்விதாகநிறுத்தி.(ஞாநத்தித்யாதி) ஜ்ஞாநத்தாலே எளிதாம்படி, " அவன்ஸ்வாமி நாம்ஶேஷபூதர் " என்று அவனை உணர்வாருடைய சிந்தை. அநேகம் பசுக்கள் நின்றால் தாயைத்தேடும் கன்றுபோலே தண்டுழாயானடியே புரிந்துபோய்நாடிக்கொள்ளும்.(செந்நிறீஇ) இந்த்ரியங்களைத்தான் வெல்லப்பாராதே, எம்பெருமான்பக்கலிலேமூட்டி விஷயங்களை ஜயிக்கப்பார்க்கை.=(தெளிதாக) ஜ்ஞாநத்தாலே விஶதமான பக்தியாலே. (எளிதாக) விஷயங்களில் பழக்கம்போலே தானே மூளும்படியா யிருக்கை. தாயாரிருக்கிறபடி. (அடியே) அல்லாதஸ்தலங்களைக் கடந்து. (புரிந்து) விரும்பி. (ந0)

முப்பத்தோராம்பாட்டு. ஆஶ்ரிதவிஷயத்தில் அவனுக்குண்டான பாரதந்த்ர்ய வாத்ஸல்யங்களை அநுஸந்தித்தால் வேறேயொருவிஷயத்தை க்ஷணகாலமும் நினைக்கப்போமோவென்கிறார்.

மூ.—புரியொருகைபற்றியோர்மபன்னாழியேந்தி
யரியுருவுமாளுருவுமாகி—யெரியுருவ
வண்ணத்தான் மார்பிடந்தமாலயேயல்லான்மற்
றெண்ணத்தானுமோருமை. (நக)

பதம்.	உரை.	பதம்.	உரை.
புரி	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை,	ஆழி	திருவாழியை,
ஒருகை	ஒருதிருக்கையிலே,	ஏந்தி	தரித்து,
பற்றி	தரித்து,		இவற்றுக்கு விஷயமில்லாதபடி,
ஒருகை	மற்றைத் திருக்கையிலே,	ஆளுருவுமரி	நரத்வஸிம்ஹத்வங்களிரண்டுக்கும் ஆஶ்ரயமானவடிவை
ஓர்	அத்விதீயமாய்,	யுருவுமாகி	
பொன்	ஸ்பர்ஹணீயமான,		

முப்பதாம்பாட்டு. (தெளிதாக)புரிந்து-பின்னை ஒன்றையும்பாராமல்திரும்பி. "தண்டுழாயான்" என்றத்தைப்பற்ற(தாயாரென்கிறது.)

பதம்.	உரை.
	யுடையனைக்கொண்டு,
எரிஉருவம்	அக்நியினுடைய்வடிவுபோலே ஏறிட்டுப்பார்க்கவொண்ணாத,
வண்ணத்தான்	வடிவை யுடையனான ஹிரண்யனுடைய,
மார்வுஇடந்த	மார்வைப் பிளந்துபொகட்ட ஆஹ்லாதத்தாலே,
மால்	ப்ரஹ்லாதன்பக்கல் வ்யாமுக்தனானவனுடைய,
அடியல்லால்	திருவடிகளையொழிய,
இமை	ஒருக்ஷணகாலமும்,
மற்று	வேறுவிஷயத்தை,
எண்ணத்தான் ஆமோ	நினைக்கத்தான் போமோ.

அன்றிக்கே, நெஞ்சை அத்யாஹரித்து, வேறொன்றை எண்ணப்போமோ, இமை-இத்தையநுஸந்தித்துப்பார் என்றுமாம்()

அ.—முப்பத்தோராம்பாட்டு. (புரியித்யாதி) அவனுடைய ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை அநுஸந்தித்தால் வேறேயொன்றை ஒரு சற்றுப்போது அநுஸந்திக்கலாமோவென்கிறார்.

வ்யா.—(புரியித்யாதி) வலம்புரியில், "வலம்" என்கிற விடத்தைக்குறைத்துக்கிடக்கிறது. (அரியித்யாதி) ஆயுதங்களை யொழியவும் இரண்டு வடிவாலும் பார்ப்பேனென்று வேண்டிக்கொண்டபடியாலே நரத்வஸிம்ஹத்வங்களை ஒரு வடிவாகக்கொண்டான். (எரியித்யாதி) அநபிபவநீயனான ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்த. (மாலித்யாதி) இமைகொட்டிவிழிக்கும்போது வேறொன்றையெண்ணலாமே. அன்றிக்கே, நெஞ்சையநாதரித்து வேறொன்றையெண்ணப்போமோ. இமை-பார் என்றுமாம்.

இவ்விஷயத்தை ஒரு க்ஷணகாலம் விட்டிருக்கை ஸாஹஸிகமென்கிறார்.—(புரியித்யாதி) ஹிரண்யன்மேலே விழுகிறவனை விலக்கினாப்போலே. (பொன்னாழியேந்தி) ஹிரண்யன் திருவுருக்கிளையாய்ப்போனான், திருவாழி அழகுக்குப்பிடித்த வித்தனை. (அரியித்யாதி)விசாரியாநிற்கப்பற்றாமே இரண்டுவடிவையுங்கொண்டு தோற்றினபடி.

முப்பத்தோராம்பாட்டு. (புரி) (இரண்டுவடிவாலும்) கேவலஸிம்ஹத்தாலும் கேவலமநுஷ்யனாலும். இமை - இமைகொட்டுதல் - பார்த்தல்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (இவ்விஷயத்தை யித்யாதி.) பற்றி - ஹிரண்யன்மேலே போகிற சங்கைப்பற்றி வாங்கியென்றபடி... ... ... (௩௧)

(எரியுருவவண்ணத்தான்) அணுகவொண்ணாதபடி அநபிபவநீயனாயிருந்தபடி. (மால்) காரியப் பாட்டாலன்றியே பிள்ளைபக்கல் வ்யாமோஹத்தால் கீண்டான். (இமை) பாரொன்னவுமாம். (௩௧)

அ.—முப்பத்திரண்டாம்பாட்டு. ஶாஸ்த்ரங்களிற்சொல்லுகிற ஸாதநாநுஷ்டாநங்களில் அந்வயமில்லையேயாகிலும், ஶேஷஶேஷி த்வரூபமான உறவை யறிந்தவர்களுக்கும் பரமபதத்தை ப்ராபிக்கலாங்கிடீரென்கிறார்.

மூ.—இமையாதகண்ணாலிருளகலநோக்கி
யமையாப்பொறிபுலன்களைந்தும்—நமையாமல்
ஆகத்தணைப்பாரணைவரேயாயிரவாய்
நாகத்தணையான் நகர். (௩௨)

பதம்.	உரை.
இமையாத	ஜ்ஞாந ஸங்கோச ரஹிதமான,
கண்ணால்	* நெஞ்சென்னு முட்கண்ணாலே,
இருள்	அஜ்ஞாநமாகிற வல்லிருள்,
அகல	விட்டுநீங்கும்படியாக,
நோக்கி	ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை உள்ளபடி தர்ஶித்து,
அமையா	பெற்றவிஷயங்களாற்பர்யாப்திபிறக்கக்கடவதன்றிக்கேயிருக்கிற,
பொறியைந்தும்	யந்த்ரகல்பமான ஶ்ரோத்ராதிகளைந்தையும்,
புலன்களைந்தும்	தத்விஷயமான ஶப்தாதிகளைந்தையும்,
நமையாமல்	நியமியாமல், ஸம்பந்தஜ்ஞாநமாத்ரயுக்தராய்க்கொண்டு,
ஆகத்து	ஹ்ருதயத்திலே,
அணைப்பார்	அவனைவைத்து அநுஸந்திக்குமவர்கள்,
ஆயிரவாய்	அவனைப்புகழுகைக்குஆயிரம்வாயையுடைய,
நாகத்தணையான்	திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரனுடைய,
நகர்	* கலங்காப் பெருநகரை,
அணைவர்	சென்று கிட்டப்பெறுவர்.

அந்த ஸாதநாநுஷ்டாநம் பண்ணாதார்க்குபரமபதத்தை ப்ராபிக்கப் போமோ வென்றுமாம். "அமையாப்பொறிபுலன்கள்" என்று-நியமிக்கவரிதான விஷயேந்த்ரியங்களென்றுமாம். (௩௨)

முப்பத்திரண்டாம்பாட்டு. (இமையாத) "தெளிதாக" என்கிறபாட்டிலே, "செந்நிறீஇ" என்று - இந்த்ரிய ஜயத்தைச்சொன்னார்;

அ.—முப்பத்திரண்டாம்பாட்டு. (இமையாதவித்யாதி) அவன் மேல்விழ விலக்காதார்க்கு இந்த்ரியஜயம்பண்ண ஶக்தரன்றாகிலும் கிட்டலாமென்கிறார்.

வ்யா.—(இமையாதகண்ணால்) "கண்" என்றும், "உட்கண்" என்றும் சொல்லக்கடவது. அதில் உட்கண்ணாலே "మనసాతువిశుద్ధేన" "மநஸாதுவிஶுத்தேந" என்னும்படி, (இருளகலநோக்கி) அஜ்ஞாநாந்தகாரம் போம்படியாகநோக்கி. (அமையாவித்யாதி) அமைக்கப்போகாத இந்த்ரியங்களைந்தும். (நமையாமல்) ஜயித்திருக்கச்செய்தே. (ஆகத்தணைப்பார்) அவன்மேல்விழ விலக்காதவர்களணையவரும். "அணைவரோ ஆயிரவாய் நாகத்தணையான் நகர்" என்கிற வித்தால்-ஒருவனே யெல்லாவடிமைகளும் செய்யுமென்னுமிடமும், எல்லாம் ஈஶ்வரனுக்கு போக்யவஸ்துக்களென்னு மிடமும், ஒருதேஶ விஶேஷமுண்டென்னுமிடமும், அத்தேஶமே ப்ராப்யமென்னுமிடமும்சொல்லுகிறது.

ஸர்வேஶ்வரனுடைய பரமபதம் ஆஶ்ரயியாதார்க்குக் கிடைக்குமோ, ஆஶ்ரயித்தால் பெற விரகுண்டோ, ருசிமாத்ரமுடையார் அவனாலே பெறுமித்தனை யென்றும், அவனல்லதில்லையென்றும்.= இமையாதகண்-நெஞ்சென்னுமுட்கண். திருவாசலைநீக்கி அவனையும் தன்னையும் உள்ளபடியறிகை. (அமையா) திரிய விடுவிக்கவொண்ணாத பொறியைந்தும் புலனைந்தும், நமையாமல்-நியமியாமல், ஆகத்தணைப்பார் - மூலையடியென்னுதல்; அவன்மேல் விழாநின்றால் இறாயாமலென்னுதல். நாகத்தணை - பர்யங்கவித்யை.

அ.—முப்பத்துமூன்றாம்பாட்டு. எம்பெருமானை உள்ளீடாகக் கொள்ளாதேபண்ணும் ஸந்த்யாவந்தநாதி கர்மாநுஷ்டாநம் நிஷ்ப்ரயோஜந மென்கிறார்.

இப்பாட்டில் அதில்லாவிட்டாலு மென்கிறார் (அவன்மேலவிழ வித்யாதி) ஆகம் - மநஸ்ஸு.

அர்த்தஶிக்ஷாபூர்வகமாக மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனுடைய வித்யாதி.) ஆஶ்ரயியாதார் - ஸம்ஸாரிகள். ஆஶ்ரயித்தார் - உபாஸகர். ருசியுடையார் - ப்ரபந்நர். "அணைவரோ"என்றது பிரிநிலையாய்-அணையார் என்றாய், ஆகத்தை-ஸ்த்ரீகள் தேஹகத்தை அணைத்து மூலையடியேதிரியும் ஸம்ஸாரிகள் பரமபதத்தைக்கிட்டாரென்னுதல். அன்றியே"அணைவரோ''என்றது தேற்றமாய்-இந்த்ரியஜயம் பண்ணவிட்டாலும் அவனை ஹ்ருதயத்திலேவைக்குமவர்கள் பரமபதத்தைக்கிட்டுவரென்னுதல். (ஙஉ)

மூ.—நகரமருள்புரிந்துநான்முகற்குப்பூமேல்
பகரமறைபயந்தபண்பன்—பெயரினையே
புந்தியாற்சிந்தியாதோதியுருவெண்ணும்
அந்திராலாம்பயனங்கென். (௩௩)

பதம்.	உரை.
	அந்தரங்கர்க்குக் கிட்டமாளிகைகட்டுமாப்போலே,
பூமேல்	ஜந்மபூமியான திருநாபிகமலத்திலே,
நான்முகற்கு	சதுர்முகனுக்கு,
நகரம்	இருப்பிடத்தை,
அருள்புரிந்து	க்ர்பா புரஸ்ஸரமாகப்பண்ணிக் கொடுத்து,
பகர	இவ் வருகுள்ளார்க்கும் ஓதுவிக்கத்தக்கதாக,
மறை	தத்வ ஜ்ஞாபகமான வேதத்தை,
பயந்த	உபகரித்த,

பதம்.	உரை.
பண்பன்	ஸௌசீல்யாதி குணங்களை யுடையனவனுடைய,
பெயரினை	அந்தகுணங்களுக்கு வாசகமானதிருநாமங்களை,
புந்தியால்சிந்தியாது	மநஸ்ஸால் அநுஸந்தியாதே,
ஓதி	வாங்மாத்ரத்தாலே ஜபித்து,
உருவெண்ணும்	இடக்கைபற்றிக்கொண்டுஅநுஷ்டிக்கிற,
அந்தியால்	ஸந்த்யா வந்தநாதி கர்மாநுஷ்டாநங்களால்,
அங்கு ஆம்	அவ்விடத்தி லுண்டான,
பயன்என்	ப்ரயோஜநமேது.()

அ.—முப்பத்துமூன்றும்பாட்டு. (நகரம்) ஸர்வேஶ்வரனை நெஞ்சாலே ஆதரியாதே பண்ணுகிற கர்த்தவ்ய தந்த்ரத்தால் என்னப்ரயோஜநமுண்டென்கிறார்.

வ்யா.—(நான்முகற்குப்பூமேல்-நகரமருள்புரிந்து) (பகரவித்யாதி)பிறர்க்கு ஓதுவிக்கும்படி ப்ரஹ்மாவை ஓதுவித்த நீர்மையையுடையவனுடைய. செல்வப்பிள்ளையை தேவைக்கு ஓதுவிக்குமாப்போலே. (பெயரினையேபுந்தியாற்சிந்தியாது) அவனுடைய திருநாமங்களையே நெஞ்சால் நினையாது. (ஓதியித்யாதி) அல்லாதவற்றையோதிச்சென்று அவ்வுருவையெண்ணும் ஸந்த்யாவந்தநாதிகளால் என்ன ப்ரயோஜநமுண்டு. எம்பெருமானுக்குடலல்லாத கேவல ஸந்த்யை வ்யர்த்தம். (நகரமித்யாதி) திருநாபிகமலத்தைக்கலவிருக்கையாகப்ரஸாதித்தான். ப்ரஹ்மாவுக்கு ஜந்மதேஶத்தையே கொடுத்தான்; அந்தரங்கர்க்குக் கிட்டமாளிகை சமைக்குமாப்போலே. (பகரவித்யாதி) அந்தவேண்டப்பாட்டுக்குமேலே.

முப்பத்து மூன்றும்பாட்டு. (நகர்) வேண்டப்பாடு-மேன்மையாய், அத்தாலே கிட்டவைக்கும்படியான அதிஶயம். (௩௩)

நாட்டாரையோதுவிக்கைக்கு வேதத்தைக்கொடுத்தான். (பண்பன்)அந்நீர்மை மறக்கவொண்ணாமை. (பெயரித்யாதி) ஸ்வாபாவிக ஸம்பந்தத்தை யநுஸந்தித்து அவனை உகப்பியாதே. (ஆம்பயனங்கென்) எம்பெருமானையகலுகையேபலித்துவிடுவது.—பெயரினையே அவன்குணங்களுக்கு வாசகமான திருநாமம். (ஓதியித்யாதி) அஹ்ர்தயமாகப்பண்ணும் ஆயாஸரூபமான கர்மத்தைப்பற்றுவதே. ()

அ.—முப்பத்துநாலாம்பாட்டு. இவ்விஷயத்தில்தலையான பக்தியை யுடையளாய்க்கொண்டு அவனை அநுஸந்திக்கப்பெற்றவள் யஶோதைப்பிராட்டி யொருத்தியுமே யன்றோவென்கிறார்.

மூ.—என்றொருவர்மெய்யென்பரேழுலகுண்டாலிலையில்
முன்னொருவனாயமுகில்வண்ணா—நின்னுருகிப்
பேய்த்தாய்முலைதந்தாள்பேர்ந்திலளால்பேரமர்க்க
ணாய்த்தாய்முலைதந்தவாறு. (௩௪)

பதம்.	உரை.
	ப்ரளயத்தி லழியாதபடி,
ஏழுலகு	ஸப்தலோகங் களையும்,
உண்டு	அமுதுசெய்து,
ஆலிலையில்	முகிழ் விரியாததோராலந்தளிரிலே,
முன்	ஒருபரிவரு மில்லாத ப்ரளயஸமயத்திலே
ஒருவன் ஆய	அஸஹாயனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளின,
முகில்	காளமேகநிபஸ்யாமமான,
வண்ணா	வடிவை யுடையவனே,
	அற்றையிழவுதீர,
நின்	உனக்கு ஸ்நேஹித்து,
உருகி	பரிவுடனே,
முலைதந்தாள்	முலைதந்து உகப்பித்தாளாயிருந்து,
பேய்த்தாய்	பேய்த்தாயான பூதனையானவள்,

பதம்.	உரை.
பேர்ந்திலள்	அவ்விடத்தினின்றும் பேரமாட்டாமல் பிணமாய் விழுந்தாள்;
	அத்தை,
பேர்	பெரிய,
அமர்க்கண்	ஸமரபூமியிலே,
ஆய்த்தாய்	இடைத் தாயான யஶோதைப் பிராட்டி,
	அஞ்சாமல் அந்த விஷத்துக்கு அம்ர்தமாக,
முலை தந்தவாறு	முலைதந்த ப்ரகாரத்தை,
ஒருவர்	அறிவுக்கு அத்விதீயரான வ்யாஸபராஶராதிகளான ரிஷிகள்,
மெய்யென்பர்	பரமார்த்தமென்று சொல்லாநின்றார்கள்;

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்	எங்ஙனே? நாட்டில்கண்டறிவதொரு ஸ்நேஹமாகிலன்றோ மெய்யென்னலாவது, அகடிதகடநாஸாமர்த்தனானவ		னுக்கு அஞ்சுகிறயஶோதைப்பிராட்டி ஸ்நேஹமுமொரு ஸ்நேஹமே! என்று வித்தராகிறார். ()

அ.—முப்பத்துநாலாம்பாட்டு. (என்னொருவர்) ப்ரளயத்தில் லோகத்தையெல்லாம் தன்திருவயிற்றிலே வைத்து ஒருபவனான ஆலிலையிலே தனியே கண்வளராநின்ற ஈஶ்வரனுக்கு அஞ்சுகிற யஶோதைப்பிராயுடையஸ்நேஹமும் ஒருஸ்நேஹமே! என்கிறார்.

வ்யா.—(என்னொருவர் மெய்யென்பர்) இத்தை ஒருவர் மெய்யென்னும்படி யெங்ஙனே யென்னவுமாம். "என்" என்று - "எத்திறம்" என்னும்படியே சொல்லவுமாம். (ஒருவர் மெய்யென்பர்) அறிந்த ரிஷிகளிலே சிலவர், அர்த்தவாதஶங்கையில்லை, இது மெய்யென்பர். (ஏழுலகித்யாதி) ஏழுலகத்தையும் திருவயிற்றிலேவைத்து, ஆலிலையிலே. (முன்) முன்பு தனியேயாய் ஶ்ரமஹரமான வடிவையுடையவனே. (பேயித்யாதி) பேயானதாய் முலையைத்தந்து, திருமேனியினின்றும்பேராதே கிடக்கச்செய்தே (நின்னுருகி-பேரமர்க்கண் ஆய்த்தாய்முலைதந்தவாறு) உனக்கு நல்லவளாய் யஶோதைப்பிராட்டி, விஷத்துக்கு அம்ர்தமாக, முலைதந்தவாறு- இதென்னவாஶ்சர்யம்.

(என்) ஸோபாதிகமாகவன்றிக்கே ஸ்வபாவதஏவ ஸ்நேஹிக்குமவளை நினைக்கிறார். = என்-எத்திறம். (ஒருவர்மெய்யென்பர்) விலக்ஷணர் மெய்யென்பர். இத்தை ஒருவர் மெய்யென்பதே!.

முப்பது நாலாம்பாட்டு. (என்னொருவர்) "ஏழுலகுண்டாலிலையில் முன்னொருவனாய முகில்வண்ணா- பேய்த்தாய் முலைதந்தாள்பேர்ந்திலளால் - நின்னுருகி - பேரமர்க்கண் ஆய்த்தாய் முலைதந்தவாறு-என்னொருவர் மெய்யென்பர்." இத்தை ஒருவர் மெய்யென்னும்படி, என் - எங்ஙனே யென்றுக்ஷேபமாதல்; ஒருவர் மெய்யென்பர், என் - இதென்ன நீர்மைதான் என்று ஈடுபாடாதல். பேரமர்க்கண்- பெரிதாயிருக்கிற யுத்தஸ்தலத்திலே, பேய்ச்சியுண்டு அவள் பிணமாய்க்கிடக்கிற அவஸ்தையிலே யென்னுதல். பெரிய அமர்போலே ஒன்றுக்கொன்று பொராநிற்கிறகண். அந்த அவஸ்தையைக்கண்டு து:கத்தாலே பார்த்த கண்ணையுடைய யஶோதை யென்னுதல்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (ஸோபாதிகேத்யாதி.) க்ஷேபபரம். இத்தை யருளிச்செய்கிறார் (ஒருவரித்யாதி.)

"என்" என்றபோது-ஜகத்தில் நடையாடுவதொரு ஸ்நேஹமாகிலன்றோ மெய்யென்னலாவது. (ஏழித்யாதி) நீசெய்யும்செயலுக்கு அடைவுண்டாகிலிறே உன்னை ஆஸ்ரயித்தார் செயலுக்கு அடைவுண்டாவது. (ஒருவனாய) பரிஹரிக்க தாயும் தமப்பனும் ஒருவருமில்லை. (முகில்வண்ணா) பரிவர்வேண்டி யிருக்கிறபடி. (நின்னுருகி) உன்குணங்களுக்கு உருகி. (பேர்ந்திலளால்) அப்பிணம் கிடக்கச்செய்தே அப்பேயின் கையில் அகப்பட்டதடையப்படுத்திக் கால்நடைதந்து, நெஞ்சுக்குப்பரிகரமாக அம்ர்தமான முலையைக் கொடுத்தபடி. ... ... (௫௪)

அ.—முப்பத்தஞ்சாம்பாட்டு. இவளுடைய ஸ்நேஹத்தைக்கண்டவாறே அல்லாத தம்போல்வார் ஸ்நேஹம் ப்ராதிகூல்ய ஸமமாய்த்தோற்றி, அத்தைப் பொறுத்தருளவேணுமென்று அவனை க்ஷமைகொள்ளுகிறார்.

மூ.—ஆறியவன்பிலடியார்தமார்வத்தால்
கூறியகுற்றமாக்கொள்ளல்நீ—தேறி
நெடியோயடியடைதற்கன்றேயீரைந்து
முடியான்படைத்தமுரண். (௫௫)

பதம்.	உரை.
	உனக்கு என்புகுருகிறதோவென்றுபரிந்து வழிநெரியும்படி,
ஆறிய	எறிமறிந்த,
அன்புஇல்	பக்தியின்றிக்கே,
அடியார்	ஶேஷத்வஜ்ஞாநமாத்ரயுக்தராயிருக்குமவர்கள்,
தம்	தந்தாமுடைய,
ஆர்வத்தால்	ஸ்நேஹத்தாலே, "அநுபவிக்கவேணும், அடிமைசெய்யவேணும்" என்றாப்போலே,
கூறிய	ஸ்வப்ரயோஜநகர்ப்பமாகச்சொன்ன வார்த்தைகளை,
நீ	* குற்றத்தை நற்றமாகக் கொள்ளும் அதிமாத்ர வத்ஸலனான நீ,
குற்றமாக் கொள்ளல்	குற்றமாகக்கொள்ளாதொழியவேணும்; அதெங்ஙனேகூடும்

மெய்யென்னப் போகாமைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (என்னென்றபோதித்யாதி) ஜகத்திலே பிணத்திலே யிருக்கச்செய்தே கண்டால் பயப்படுகையொழிய எடுத்து முலைகொடுக்கப் போமோ, ஆசையாலே இது பொய்யென்றபடி. (அடையப்படுத்தி) அவள் உறுக்கி உண்ணச் சொன்னாப்போலே இவளும் விஷத்துக்கு மாறாகையாலே உறுக்கி உண்ணச்சொல்லி, ... (௫௪)

பதம்.	உரை.
	படி என்று திருவுள்ளமாகில்,
ஈரைந்துமுடியான்	ப்ரதிகூலனான ராவணன்,
படைத்த	புத்திபூர்வகமாகப்பண்ணின,
முரண்	திருவிணைப்பிரித்த மிகைச்செயலானது,
நெடியோயடி	ஆநுகூல்யலேஶயுக்தர்திறத்தில் பண்ணும் ஸ்நேஹபக்ஷபாதங்களுக்கு எல்லைகாண வொண்ணாத பெருமையையுடைய வுன்திருவடிகளை,
தேறி	காலக்ரமத்திலேதெளிந்து,
அடைதற்கன்றே	ஶிஶுபாலனுக்கிட்டுகைக் குடலாய்விட்டதில்லையோ.

அன்றிக்கே, நீ, தேறி-ப்ரஸந்நனாய், செய்த குற்றத்தைக் குற்றமாகக் கொள்ளா தொழியவேணு மென்னவுமாம். ப்ராதிகூல்யம் ஆநுகூல்யமாய் பலித்தால், ஆநுகூல்யாபாஸம் ஆநுகூல்யமாகத்தட்டுண்டோ வென்றபடி. ... ... (௩௫)

அ.—முப்பத்தஞ்சாம்பாட்டு. யஶோதைப்பிராட்டியோபாதி ஸ்நேஹமின்றிக்கே, அவளுடையஸ்நேஹத்தை உடைத்தாக பாவிக்கிறவர்களுடைய குற்றத்தைப்பொறுத்தருளவேணுமென்கிறார்.

வ்யா.—(ஆறியவன்பிலடியார்) எமீமறிந்த பக்தியில்லாதவர்கள்.(தம்மார்வத்தால்கூறிய)தங்களுடைய ஸ்நேஹத்தாலே சொன்னவற்றை. (குற்றமாகக்கொள்ளல்) நீ குற்றமாகக் கொண்டருளாதொழியவேணும். நீர் குற்றத்தைச் செய்துவைத்து "குற்றமாகக் கொள்ளாதொழியவேணும்" என்னப்போமோவென்னில்; (ஈரைந்துமுடியான் படைத்தமுரண்-தேறி-நெடியோய் அடியடைதற்கன்றே)ராவணன்பண்ணின ப்ராதிகூல்யம் க்ரமத்தாலே ஶிஶுபாலனுக்கு உன்னையடைகைக்கு உடலாய்த்தில்லையோ. ப்ராதிகூல்யம் ஆநுகூல்யமாய் பலித்தால், ஆநுகூல்யாபாஸம் ஆநுகூல்யமாகத் தட்டுண்டோ. "தேறி" என்றது - செய்தகுற்றத்தைக் குற்றமாகக் கொள்ளாதொழிய வேணுமென்னவுமாம். அன்றிக்கே, "தேறி" என்றது - ஶிஶுபாலன் கையும் திருவாழியுமா யிருந்தபடி யென்னென்று நினைத்துக்கிடக்க அது அந்திமஸ்ம்ர்தியானுப்போலே யாகவுமாம்.

முப்பத்தஞ்சாம்பாட்டு. தேறி - கலங்கினது தேறுமாப்போலே க்ரமத்திலேயென்றபடி. ராவணனுடைய இரண்டாம் ஜந்மமான சிசுபாலனுக்கும்.

(ஆறியவன்பு) எறிமறந்து தன்னைப்பேணாதே அத்தலைக்குப்பரிகை. யசோதைப் பிராட்டி பரிவு தம்முடைய ப்ராதிகூல்யத்தோடொக்குமென்கை. அவனுடைய ப்ராதிகூல்யம் தேறி அடைகைக்கு உடலாய்த்தில்லையோ. [செய்தகுற்றம் நற்றமாகவேகொள்] பொறுக்கவே அடையநன்று மென்கிறார். (நெடியோய்) ஆநுகூல்யலேசமுடையார்திறத்து நீயிருக்குமிருப்பு எல்லைகாணப்போமோ.

அ.—முப்பத்தாறும்பாட்டு. இப்படி "கூறிய குற்றமாக்கொள்ளல்" என்றுபொறைகொள்ளவேண்டாதபடி நீதானே உன்னையழியமாறிவந்து காரியம்செய்தது, ஸம்ஸாரிகள்கோணையைப்போக்கி உனக்காக்கிக்கொள்ளலாமென்று பார்த்தேயென்கிறார்.

மூ.—முரணவலிதொலைதற்காணமென்றேமுன்னந்
தரணிதனதாகத்தானே—யிரணியனைப்
புண்ணிரந்தவள்ளுகிராற்பொன்னாழிகையால்நீ
மண்ணிரந்துகொண்டவகை. (௩௬)

பதம்.	உரை.
முன்னம்	முன்பே,
தரணி	உன்னதான பூமியை
தனதாகத் தானே	தன்னதாகத் தானே அபிமாநித்திருந்த,
இரணியனை	ஹிரண்யனை,
புண்ணிரந்த	புண்படுத்திப் பிளந்த,
வள்	கூரிய,
உகிரால்	திருவுகிரோடேகூடியிருப்பதாய்,
பொன்	ஸ்பர்ஹணீயமான,
ஆழி	திருவாழியை யுடைத்தான,
கையால்	திருக்கையாலே,
நீ	ஸ்ரியஃபதியானநீ,
மண்	பூமியை,
இரந்து	அர்த்தித்து,
கொண்டவகை	அளந்து கொண்டப்ரகாரம், "நநமேயம்"என்கிறபடியே தலைவணக்கமற்றுத்திரியும் கணங்கரான,
முரணைவலி	ஸம்ஸாரிகள் கோபணைமிடுக்கு,
தொலைதற்காமென்றே	அறுக்கலாமென்றே

இரப்புத்தோற்றநின்றசௌளலப்யத்தையும் வடிவழகையுங்காட்டி, "நான் எனக்கு" என்றிருக்கும் மிறங்குதலைமீட்டு உனக்கேயாளாம்படி சேர்த்துக் கொள்ளுகைக்காகவன்றோவென்றபடி. ()

(அன்பில்) இல் – இல்லாமையாய், தனக்குப் பரிவரில்லையோவென்ன; அருளிச்செய்கிறார் (யசோதைப்பிராட்டியித்யாதி.) இத்தனைப்ராதிகூல்யமுடைய வுமக்குக்கிட்டப் போமோவென்ன; அருளிச்செய்கிறார் (அவனுடையவித்யாதி.) ... ... (௩௫)

வ்யா.—முப்பத்தாறும்பாட்டு. (முரணை) யசோதைப்பிராட்டி ஸ்நேஹமின்றியிலே யிருக்கச்செய்தே அவளுடைய ஸ்நேஹமுண்டாக பாவித்துச்சொன்னவற்றைக் குற்றமாகக்கொள்ளாதொழியவேணுமென்று நீர் இரக்கவேணுமோ, தன்னுடைமையை வேறொருத்தனதாக்கிவந்து இரக்குமவனுக்கு. (முன்னமித்யாதி) முன்பே, பூமியடையத் தன்னதாக அபிமாநித்திருந்த ஹிரண்யனைப் புண்படுத்திப்பிளந்த வுகிரையுடைத்தா யிருந்துள்ள பொன்னாழிக்கையால். (நீயித்யாதி) ப்ரகாரம். (முரணைவலிதொலைதற்காமென்றே) ஸர்வேஶ்வரனாயிருந்துள்ள நம்முடைய அர்த்தித்வம் தோற்றநின்ற ஸௌலப்யத்தைக்காண் நாட்டாருடைய அஹங்கார மமகாரத்தாலேபிறந்ததண்மை நெகிழுமென்றே நீயிப்படிசெய்தது. (முன்னம் தரணிதனதாகத்தானே) முன்னேபூமியடங்கலும் தன்னதாக அபிமாநித்த மஹாபலிபக்கலிலே யென்னவுமாம்.

(முரணையித்யாதி) யசோதைப்பிராட்டியைப்போலே எங்களை உருக்கலாமென்றே. (முன்னமித்யாதி) தன்னதாக வுகக்குமாகில் நாம் இன்று பெற்றோமாக வமையாதோ, வேறு இரந்து கொண்டவகை. ... ... (௩௬)

அ.—முப்பத்தேழாம்பாட்டு. அங்ஙனே தன்னர்த்தித்வம்தோற்றவந்து என்னளவன்றிக்கே, என்றும் தன்னை அர்த்தியாக்கிக்கொண்டு ஸர்வர்க்கும் ஸர்வகாலத்திலும் ஆஶ்ரயிக்கலாம்படி திருமலையிலேவந்து நித்யஸந்நிஹிதனானானென்கிறார்.

மூ.—வகையறுநுண்கேள்விவாய்வார்கள்நாளும்
புகைவிளக்கும்பூம்புனலுமேந்தித்—திசைதிசையில்
வேதியர்கள்சென்றிறைஞ்சும்வேங்கடமேவெண்சங்க
மூதியவாய்மாலுகந்தவூர். (௩௭)

முப்பத்தாறும்பாட்டு. "மண்ணிரந்து கொண்டவகை - முரணைவலி தொலைதற்காமென்றே" என்றந்வயம். ப்ராதிகூல்யத்தினுடைய மிடுக்கைப் போக்குகைக்காக வென்ற என்றபடி.

இத்தை அவதாரிகையிலே யருளிச்செய்கிறார் (யசோதைப்பிராட்டியித்யாதி.) எங்களை உருக்கலாமென்றது - கீழ்ப்பாட்டிலே அவனுடைய சேஷ்டிதத்தைக் கண்டவளாகையாலே எங்களையு முருக்கலாமென்று நீ மண்ணிரந்து கொண்டது, நாங்கள் வன்னெஞ்சராகையாலே உருகமாட்டோ மென்றபடி. இரக்கவேண்டுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (தன்னதாகவுகக்குமாகிலித்யாதி.) ()

பதம்.	உரை.
	ஆயுஃபுத்ரக்ர்ஹக்ஷேத்ரவித்த பஶுவந ஸ்வர்க்காதிரூபேண பலவகைப் பட்டிருக்கிற க்ஷுத்ர புருஷார்த்தங்களையும் பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தையும்,
வகையறு	அலகலாகவகையறுக்கைக்குறுப்பாய்,
நுண்கேள்வி	ஸூக்ஷ்மார்த்தவிஷயமானஶ்ரவணம்,
வாய்வார்கள்	வாய்த்திருக்கும்
வேதியர்கள்	வேததாத்பர்யவித்துக்களடங்கலும்,
நாளும்	ஸர்வகாலமும்,
	ஆராத நோபகரணமான,
புகைவிளக்கும்	தூபதீபங்களையும்,
பூம்புனலும்	பூவோடேகூடினஜலத்தையும்,
ஏந்தி	தரித்துக்கொண்டு,
	பெரிய திருநாளுக்குப்போமாப்போலே,
திசைதிசையில்	ஸர்வதோதிக்கமாக
சென்று	எடுத்துவிட்டுச்சென்று,
இறைஞ்சும்	ஆஶ்ரயிக்கும்,
வேங்கடமே	திருமலையே,
	பாரத ஸமரத்திலே ப்ரதிபக்ஷம் நஶிக்கும்படியாக,
வெண்	வெளுத்தநிறத்தையுடைய,
சங்கமூதிய	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை மடுத்தூதின,
வாய்	திருப்பவளத்தை யுடையனாய்,
மால்	ஆஶ்ரித வ்யாமுக்தனக்ர்ஷ்ணன்,
	ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு ஏகாந்தமான தேஶமென்று,
உகந்தவூர்	உகப்புடனேவர்த்திக்கிறவூர். (ஙஎ)

அ.—முப்பத்தேழாம்பாட்டு. (வகையித்யாதி) நாம் அந்த அவதாரத்துக்குப் பிற்பட்டோமிறே, அது தீர்த்தம் ப்ரஸாதித்துப் போய்த்திறே யென்ன; அவன்றான் ஸம்ஸாரத்திலே திருமலையை யுகந்து வந்துநிற்கவும் அதுக்கு வெறுக்க வேணுமோ வென்கிறது.

வ்யா.—(வகையறும்) "बहुशाखा ह्यनन्ताश्च" "பஹுஶாகா ஹ்யநந்தாஶ்ச" என்னும்படி ப்ரயோஜநாந்தர பரமான தேவதாந்தர ஸ்பர்ஶியான வகையறுகை. (நுண்கேள்வி வாய்வார்கள்) ஸ்தூலமாகவன்றிக்கே ஶ்ரவணவேளையிலே ஸூக்ஷ்மமான கேள்விவாய்த்தவர்களான, வேதியர்கள்-வேததாத்பர்யம் கைப்பட்டவர்கள். (புகையித்யாதி) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு. (திசையித்யாதி) ஸர்வதோதிக்கமாகவந்து தொழப்படும் திருமலை. (வெண்சங்க மித்யாதி)பாரதஸமரத்திலே அர்ஜுநன்தொடுத்துவிட்ட அம்புகளுக்கு

முப்பத்தேழாம்பாட்டு. அதுக்கு - பெறப்பட்டதுக்கு.

எதிரிகள் எட்டுமளவன்றியே யொழிந்தால் ஒருவராலும் இருக்க ப்போகாதபடி நின்ற நிலையிலே முழுக்காயாக அவியும்படிக் கூடாக ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வாயிலே வைத்தூதின க்ர்ஷ்ணனுகந்தவூர்.

(வகையறும்) முழுகுவாரைக் கண்டவாறே முழுகி, ஜபிப்பாரைக் கண்டவாறே ஜபியா. (நுண்கேள்வி) ஸூக்ஷ்மார்த்தம் கேட்டுக்கைபுகுந்தார். "𑌚𑌞𑍍𑌚𑌲𑌂𑌹𑌿𑌮𑌨𑌃𑌕𑍃𑌷𑍍𑌣" "சஞ்சலம் ஹி மநக்ர்ஷ்ண." (திசைதிசையில்) ஸர்வதோதிக்கமாக. (வேதியர்கள்) வேததாத்பர்யம் கைப்பட்டார். (வெண்சங்கம்) ஆஸ்ரித பக்ஷபாதிவர்த்திக்கிறவூர். ... ... (௩எ)

அ.—முப்பத்தெட்டாம்பாட்டு. இப்படி அவன்திருமலையிலே உகந்து நித்யவாஸம் பண்ணுகையாலே, இவரும், தத்ஸம்பந்தத்தாலே அங்குண்டான ஸர்ப்பம், குறவர், ஆனை, அத்தையெறிகைக்குக்கருவியானமணி, புற்றுமுதலான பதார்த்தங்களையெல்லாம் அவனோபாதி ப்ராப்யமாக நினைத்து மண்டியநுபவிக்கிறார்.

மூ.—ஊரும்வரியரவமொண்குறவர்மால்யானை
பேரவெறிந்தபெருமணியைக்—காருடைய
மின்னென்றுபுற்றடையும்வேங்கடமேமேலசுர
ரென்னென்றமாலதிடம். (௩அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஒருகாரியப்பாடற,		புனத்தில்வந்து பட்டிமேய்கிற,
ஊரும்	ஸ்வைரஸஞ்சாரம்பண்ணுநிற்பதாய்,	மால்	பர்வதோபமமான,
வரி அரவம்	தர்ஸநீயமான வரியை யுடைத்தான ஸர்ப்பமானது, திருமலையில்நின்றும் கீழிழியுமது குடிப்பழியாக நினைத்திருக்கும்,	யானை	ஆனையானது, மணிகளின்ஒளியைக் கண்டு சலித்து,
ஒண்குறவர்	விலக்ஷணரான குறவர்,	பேரஎறிந்த	மலைபேர்ந்தாப் போலே பேர்ந்துபோம்படியாக எறிந்த, ஒருமலையிலேஒருமலை

வகையறுகை - ப்ரயோஜநாந்தர தேவதாந்தரங்களை ப்ரதிபாதிக்கிற ஶாஸ்த்ரங்களையும் தத்பரமான புத்திகளையும் அறுகை. இவ்விடத்துக்கு வகை யறுகை-ஸாதநாந்தரங்களை யறுகை. ஸூக்ஷ்மார்த்தம் கைபுகுஸக அருமையோவென்ன; அருளிச்செய்கிறார் (𑌚𑌞𑍍𑌚𑌲𑌂𑌹𑌿𑌮𑌨𑌃- சஞ்சலம் ஹிமந: என்று.) ... ... (௩எ)

பதம்.	உரை.
	தாக்கினாப் போலே யிருக்கும்,
பெரு	பெருமையையுடைய,
மணியை	மாணிக்கத்தை, யானையின் கறுப்பும் மணியின்புகரும் தன்னில்வாசிதோற்றாமையாலே,
காருடையமின்னென்று	மேகத்தோடே கூடினதொருமின்னாக்கருதி, ததநந்தரபாவியான இடிக்குபயப்பட்டு, நிர்ப்பயஸ்தாநமான,
புற்றுஅடையும்	புற்றிலேசென்றுப்ரவேசிக்கும் சிறப்பையுடைய,
வேங்கடமே	திருமலையே, ஆக்கரான தேவர்களன்றியே,
மேல	ஸர்வோத்க்ர்ஷ்டரான,
சூரர்	நித்யஸூரிகள்,
என்னென்ற	எங்களதென்று மேல்விழுந்து,
மாலடம்	அத்யபிநிவிஷ்டராயநுபவிக்கும்தேசம்.

"என்னென்றமாலதிடம்" என்று - எங்களது எங்களது என்று அபிநிவேசிக்கைக்கு விஷயமான ஸ்தாநமென்றபடி.* "எம்" என்கிறவித்தைமாலோடேகூட்டி-எங்களுக்கு ப்ராப்ய மென்னப்பட்ட ஸர்வேஸ்வரனதானவிடமென்றுமாம். முற்பட்ட யோஜநைக்கு "மால்" என்று - அபிநிவேசத்தைச்சொல்லுகிறது. ...(௩௮)

அ.—முப்பத்தெட்டாம்பாட்டு. (ஊரும்) பரமபதத்திலுள்ளாரையுடைய உத்தேஶ்யரானவோபாதி திருமலையில்வர்த்திக்கும் ஸர்ப்பம், குறவர், பட்டிதின்னுமானையுடைய இவர்க்கு உத்தேஶ்யமாயிருக்கிறபடி. "எம்பெருமான்பொன்மலைமேலேதேனுமாவேனே."

வ்யா.—(ஊரும்) ஒருகாரியப் பாடறத்திருமலையிலே ஊர்ந்துதிரிகையே உத்தேஶ்யமாயிருக்கிறபடி. (வரியரவம்) பாம்பினுடைய உடம்பில்வரி திருவேங்கடமுடையானுடைய திருமேனியில் ஓரவயவத்தோபாதி உத்தேஶ்யமாயிருக்கிறபடி. (ஒண்குறவர்) திருவேடுவர்க்கு ஒண்மையாவது - "இவர்கள் பாட்டன் பாட்டனிலேயொருத்தன் பூமியிலே இறங்கினான்" என்னும்பழியின்றிக்கேயிருக்கை. (மால்யானையித்யாதி) மலைபோலேயிருந்துள்ள ஆனை, தன்னை ஒருமலை சலித்தாப்போலே யிருக்கப்போம்படிக்கிடாக. (எறிந்த பெருமணியை) மஹார்க்கமான மணியை. ஆனைமேகம்போலேயிருக்கையாலும் அதிலேபட்டமணி மின்போலே யிருக்கையாலும் பாம்பானது, இடிக்கு அஞ்சுகையாலே மின்னின அநந்தரம் இடிஉண்டாமென்றுகொண்டு அதுக்குமுன்னே புற்றடையாநிற்கும் திருமலை.

* இந்தப்ரதிகத்தால் "எம்மென்ற" என்னும்பாடம்காண்கிறது.

(மேலசுரர் என்னென்றமாலதிடம்) ஆக்கரானதேவர்களன்றியே, மேலான, சுரர்-நித்யஸூரிகள்,என்னென்றமாலதிடம்-*அஹமஹமிகையாவிரும்புமிடம்.

அங்கே புக்காலோவென்னில் ; புகவொட்டா நின்றதோ.— (ஊரும்) * [illegible] - ப்ராதரிகச்சதிபோலே. (வரி) அதுவும்ஸ்ப்ர்ஹணீயம். (மால்யானை) மலைநடந்தாப்போலே. (பேர) ஆமிஷார்த்தமாகவந்து மலைபேர்ந்தாப்போலேபேர. (பெருமணியை) மலைபோலேயிருக்கை. (ஊரும் வரியரவம்) இவை ஸ்வைரஸஞ்சாரத்தாலே ஸௌபாக்யங்கொண்டாடப்புறப்பட்ட. (புற்றடையும்) இடிக்குமுன்னுன மின்னுகையாலே. (௩அ)

அ.—முப்பத்தொன்பதாம்பாட்டு. மற்றுமுள்ள திவ்யதேசங்களிற் காட்டில் திருமலைக்கு இத்தனை யேற்றமென்னென்ன; அவையெல்லா மொருதட்டும் இதுவொருதட்டென்னும்படி அவன் விரும்பின தேசமன்றோ திருமலையென்கிறுர்.

மூ.—இடந்தது பூமி; யெடுத்தது குன்றம்;
கடந்தது கஞ்சனை முன்னஞ்சக்;—கிடந்ததுவும்
நீரோதமாகடலே; நின்றதுவும் வேங்கடமே;
பேரோதவண்ணர்பெரிது. (௩௯)

பதம்.	உரை.
பேர்	பெரிய,
ஓதம்	திரைக்கிளர்த்தியையுடைய கடல்போன்ற,
வண்ணர்	வடிவையுடையவர், வராஹவேஷங்கொண்டுப்ரளயத்திலே முழுகி,
இடந்தது	இடந்தெடுத்துக்கொண்டேறினது,
பூமி	பூமி; க்ர்ஷ்ணவேஷங்கொண்டுவர்ஷாபத்தைப்பரிஹரிக்கைக்காக
எடுத்தது	எடுத்துதரித்துக்கொண்டுநின்றது,
குன்றம்	கோவர்த்தநபர்வதம்;
முன்	உறவிலேயழைத்துநலியநினைத்த முற்காலத்திலே,
அஞ்ச	கண்டகாட்சியிலே நடுங்கும்படியாக,
கஞ்சனை	கம்ஸனை,
கடந்தது	ஆக்ரமித்துமுடித்துவிட்டது;

முப்பத்தெட்டாம்பாட்டு. என்னென்ற - என்னதென்ற. மேனுக்கவதாரிகையருளிச்செய்கிறுர் (அங்கேபுக்காலித்யாதி.) (உள்ளுப்போகவொட்டாது) ஊரில் போக்யதை யென்றபடி. (௩அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	இவ்வவதாரங்களுக்கடியாக,		இங்குஅப்படியன்று, ஸமஸ்தாவதாரங்களிலுமுள்ள குணசேஷ்டிதங்களடங்கலும் ப்ரகாசிக்கும்படி உகப்புடனே என்றுமொக்க,
நீர்	மிக்கநீரையுடைத்தாய்,	பெரிது	மிகவும்,
ஓதம்	அலையெறிகிற,	நின்றது	நின்றருளிற்று,
மா	பெரிய	வேங்கடமே	திருமலையிலேகிடீர்.
கடல்	திருப்பாற்கடலிலே,		
கிடந்தது	கண்வளர்ந் தருளிற்று;		

அ.—நாற்பதாம்பாட்டு. ஆஶ்ரிதவிரோதி நிரஸநம்பண்ணி உகக்குமிதுவேகிடீர், அவன், இங்குத்தை நித்யவாஸத்துக்கு ப்ரயோஜநமாக நினைத்திருப்பதென்கிறார்.

அ.—முப்பத்தொன்பதாம்பாட்டு. (இடந்தது) ஆபத்திலே பூமியைரக்ஷிப்பது, அவதாரங்கள் ஸாதுபரித்ராணார்த்தம் துஷ்க்ர்த்விநாஶார்த்தமாவது, எப்போதும் உகந்து திருமலையிலே நிற்பதென்கிறார்.

வ்யா.—(இடந்தபூமி) ப்ரளயாபத்திலே பூமியை யெடுத்த அழகுகாணலாவது. (எடுத்தது குன்றம்) கோவர்த்தநோத்தரணத்திலே அவ்வழகுகாணலாவது. (கடந்ததித்யாதி) கம்ஸன் அஞ்சும்படி அவனை யழித்தவன்று வெற்றியழகு காணலாவது. (கிடந்ததுவும் நீரோதமாகடலே) கண்வளர்ந்தவழகுகாணலாவது ஆழ்ந்த கடலிலேசாய்ந்தபோது. (பேரோதவண்ணர்பெரிது - நின்றதுவும் வேங்கடமே) கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன், எப்போதும் உகந்துநிற்பது திருமலையிலே. இடந்தது ப்ரளயத்தாலேவந்தநலிவுதீர; எடுத்தது இந்த்ரனால்வந்த நலிவுதீர; கடந்தது கம்ஸனால் வந்த நலிவுதீர. (கிடந்ததுவும்) அவதாரத்துக்கு ஏகாந்தமாம். நம்பெருமானை யுகந்தோமென்று சோற்றை யுகப்புதோம்; சோற்றை யுகந்தோமென்று நாலும்பத்தும்பட்டினி விடுவுதோம்; ஸ்த்ரீகளை உகந்தோமென்று சதுரங்கம் பொருதல், உறங்குதல்செய்வுதோம்; ஒன்றிலும் ஸ்நேஹமில்லை. (௯௰)

முப்பத்தொன்பதாம்பாட்டு. ஆழ்வார்கள் ஈஶ்வரனுடைய குணசேஷ்டிதங்களை வாய்புலத்துகையாலே, இருந்திலை - அஸ்மதாதிகளுக்கு இல்லையென்னு மிழவாலே அருளிச்செய்கிறார் (நம்பெருமானையித்யாதி.) ... ... (௯௧)

மூ.—பெருவிற்பகழிக்குறவர்கைச்செந்தீ
வெருவிப்புனந்துறந்தவேழ—மிருவிசும்பில்
மீன்வீழக்கண்டஞ்சும்வேங்கடமேமேலசுரர்
கோன்வீழக்கண்டுகந்தான்குன்று. (ச0)

பதம்.	உரை.
	"𑌅𑌵𑌷𑍍𑌟𑌭𑍍𑌯 𑌮𑌹𑌾𑌧𑌨𑍁𑌃" "அவஷ்டப்யமஹாத்தநு:" என்கிறபடியே,
கை	ஒருகையிலேயெடுத்துப்பிடித்த,
பெருவில்	பெரியவில்லையும்,
பகழி	வாயம்பு களையு முடையரான,
குறவர்	திருக்குறவர், மற்றக்கையிலேவழியில் வெளிச்செறிப்புக்காகப்பிடித்த,
செம்	சிவந்த நிறத்தையுடைத்தான,
தீ	*சூள்நெருப்பினுடைய வழியே, இவர்கள், கையும்வில்லும்பிடித்தசூளுமாய்க்கொண்டு ஆயத்தப்பட்டு வருகிறபடியைக்கண்டு,
வெருவி	"நம்மைநலியவருகிறார்கள்" என்றுபயப்பட்டு, "ஒருக்காலும் இங்குவரக் கடவோ மல்லோம்" என்று,
புனந்துறந்த	புனத்தைஸந்ந்யஸித்துப்போன,
வேழம்	ஆனையானது, போமிடந்தன்னிலும்,
இரு	பரப்பை யுடைத்தான,
விசும்பில்	ஆகாஶத்தினின்றும்,
மீன்வீழ	நக்ஷத்ரங்கள்விழ,
கண்டு	அத்தைக்கண்டு, "நமக்கு அவ்வருகு ஓடிஇடவொண்ணாதபடிபூமியிலேநெருப்பைவிழவிட்டார்கள்" என்று அவ்வருகுபோக மாட்டாமல்புனத்திலே புகமாட்டாமல் நடுவேநின்று,
அஞ்சும்	நடுங்கும்படியான,
வேங்கடமே	திருமலையே,
மேல்	முன்பொருகாலத்திலே,
அசுரர்கோன்	அஸுரராஜனென்று விருதூதித் திரிந்த ஹிரண்யன்,
வீழக்கண்டு	பிணமாய் விழுந்து போகக்கண்டு, "சிறுக்கன் விரோதி போகப்பெற்றோம்" என்று,
உகந்தான்	உகந்தஸர்வேஶ்வரன், பின்புள்ள ஆஶ்ரித விரோதி களையும் தீர்க்கவேணு மென்றுவர்த்திக்கிற,
குன்று	மலை ... (ச0)

* சூள்-கொள்ளிக்கட்டை.

வ்யா.—நாற்பதாம்பாட்டு. (பெருவில்) திருமலையையுகக்கிறார். "𑌅𑌵𑌷𑍍𑌟𑌭𑍍𑌯𑌮𑌹𑌦𑍍𑌧𑌨𑌃" "அவஷ்டப்யமஹத்தநு:" என்கிறபடியே சக்ரவர்த்தித்திருமகன் கையும் வில்லும்போலே பெரியவில்லையும் தெரிந்த பகழியையுமுடையரான திருவேடுவர். (குறவரித்யாதி) சூளிலேகொளுத்திக் கையிலேகொடுபோகிற நெருப்பொளியிலே வில்லின்பெருமையையுங்கண்டு நெருப்புதனக்கு ஆனை அஞ்சும்படியாகவும் பட்டிமேய்ந்த ஆனை இப்புனம் கொய்தாலும் இங்குவாரோனென்று ஸங்கல்பித்துப்போனது. (இருவிசும்பித்யாதி) வெளியையும் பரப்பையுமுடைத்தான ஆகாசத்தினின்றும் மீன்விழக்கண்டு இனி ஓரிடத்திலும் போக்கில்லையென்று நின்றநிலையிலே நின்று அஞ்சுகிற திருவேங்கடம். மேல்-பண்டு. (அசுரரித்யாதி) ஹிரண்யன்பட்டுவிழ, "சிறுக்கனுடைய விரோதிபோய்த்து" என்று உகந்து, "இன்னமும் ஆஸ்ரிதவிரோதி யேதேனும் வரிலும் பரிஹரிக்கவேணும்" என்று அவன்பற்றிநிற்கும் திருமலை=(பெருவில்லித்யாதி) இதில் உத்தரார்த்தம் மீன்வீழக்கண்டஞ்சும் - நிலத்திலே நெருப்பை விழவிட்டார்களென்று குறவரெறிந்த கொள்ளிக்கு வெருவினதாகையாலே. (வேங்கடம்) நிர்ப்பயமானதேசம்; அஸ்தாநேபயஸங்கை பண்ணுமித்தனை. ... ... (௪0)

அ.—நாற்பத்தோராம்பாட்டு. இப்படி, "அவன் ஆஸ்ரிதவிரோதிநிரஸநசீலனாகிலும், தோஷமேவேஷமான நமக்கு அவனைச்சென்றணுகப் போமோ" என்று திருவுள்ளம் பயப்பட; உனக்கு ஆபிமுக்யமாத்ரமுண்டாகவே அவன் நம்குற்றத்தையடைய நற்றமாகக்கொள்ளும், அஞ்சவேண்டாவென்கிறார்.

மூ.—குன்றனையகுற்றஞ்செயினுங்குணங்கொள்ளு
மின்றுமுதலாகவென்னெஞ்சே—யென்றும்
புறனுரையேயாயினும்பொன்னாழிக்கையான்
றிறனுரையேசிந்தித்திரு. (௪௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	என்வழியே ஒழுகும்படி,	நெஞ்சே	நெஞ்சே,
என்	எனக்குப் பாங்கான	என்றும்	ஸர்வகாலத்திலும்,
			ஸஹ்ருதயமாக வன்

நாற்பதாம்பாட்டு. சூளி - சூளுந்து.

நக்ஷத்ரம் விழுந்தால் பயப்படவேண்டுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (நிலத்திலேநெருப்பையித்யாதி.) குறவர் பரண்களிலே யிருந்து கொள்ளியை எறியுமது கண்டிருக்குமதாகையாலே, மீன் விழுகிறத்தையும் அவர்கள் எறிந்தார்களாக நினைத்துப் பயப்பட்டதென்றபடி. ... ... (௪0)

பதம்.	உரை.
	றிக்கே கேவலம்வாங்மாத்ர ஸித்தமான,
புறனுரையே யாயினும்	புறப்பேச்சாலேயாகிலும்,
	அஹ்ர்தயோக்தியையும் ஸஹ்ர்தயமாம்படி பண்ணவற்றான,
பொன்னாழிக்கையான் திறன்	அழகியதிருவாழியும் கையுமான சேர்த்தியழகையுடைய ஸர்வேஶ்வரனிடையாட்டமாய்,
	*மித்ரபாவமடியாக,
உரையே	"நத்யஜேயம்" என்னும்படியான சொல்லையே,
சிந்தித்து	அநுஸந்தித்துக்கொண்டு,
	"ஸ்த்ரீஸ்நீ" "ஸ்திதோஸ்மி" என்னும்படி,

பதம்.	உரை.
இரு	நிர்ப்பரமாய்க்கொண்டிரு;
இன்றுமுதலாக	இவ்வாநுகூல்ய லேஶமுண்டான இன்றுமுதலாக,
குன்றனைய	மலைபோலே ஸ்வயத்நத்தால் சலிப்பிக்கவொண்ணாத படி பெருத்து உறைந்திருக்கிற,
குற்றம்	குற்றங்களை,
செயினும்	பத்தும்பத்தாகச்செய்தாலும்,
	அதிமாத்ர வத்ஸலனானவன்,
	"செய்தாரேல் நன்று செய்தார்" என்னும்படி,
குணம் கொள்ளும்	குணமாகக்கொள்ளும். ... (சக)

வ்யா.—நாற்பத்தோராம்பாட்டு. (குன்றனைய) அவன்குற்றம் பொறுக்கைக்காகத் திருமலையிலேவந்துநின்றான், ஆபிமுக்யத்தைப் பண்ணினாலும் தோஷாம்ஶத்தைப் பாராதே குணாம்ஶத்தைக்கொள்ளுமவனுள்ளவன்றே இவ்வாத்மா வுண்டென்கிறார். இத்தனைநாளும் இத்தைச்செய்யாதொழிவானென்னென்னில் (இன்றுமுதலாக இவனுக்கேஸ்வபாவ மென்றறிந்த இன்றுதொடக்கமாக. (என்னெஞ்சே) எனக்குஹிதம் பார்க்கும் நெஞ்சே. ஸஹ்ர்தயமாக அவன்குணங்களைப் பேசப்போமோ வென்னில் (புறனுரையேயாயினும்) அஹ்ர்தயமான பேச்சேயாகிலும். ப்ரயோஜநமின்றிக்கே அநர்த்தமாய்த்தாகிலு மென்றுமாம். (பொன்னாழியித்யாதி) ஸர்வேஶ்வரன் திறத்தில்ஶப்தங்களையே யறிந்து (சிந்தித்திரு) க்ர்தார்த்தமாயிரு.

நாற்பத்தோராம்பாட்டு. (குணாம்சத்தக்கொள்ளுமவனுள்ளவன்றே) என்கிறவாக்யம் தெரியாது. குற்றம்பொறுக்கை ஸ்வபாவமென்றறிந்த இன்றென்றபடி.

அவனோடே ஸம்பந்தமுண்டாகிலும் முன்பு அங்ஙன் செய்தருளாவிடுவானென்னென்னில்; "குற்றம், குணம்" என்று நினையாமை. (பொன்னாழி) தானே ஸஹ்ர்தயமாக்கும். ... (சக)

அ.—நாற்பத்திரண்டாம்பாட்டு. இப்படி குற்றத்தை ஸ்வதந்த்ரனானவன் குணமாகக் கொள்ளக்கூடுமோவென்னில்; "𑌨𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿" "நகஶ்சிந்நாபராத்யதி" என்று பிராட்டிமார்மூவரும் அங்கே குடியிருக்கையாலே கூடுமென்கிறார்.

மூ.—திருமகளுமண்மகளுமாய்மகளுஞ்சேர்ந்தால்
திருமகட்கேதீர்ந்தவாறென்கொல்—திருமகள்மேல்
பாலோதஞ்சிந்தப்படநாகணைக்கிடந்த
மாலோதவண்ணர்மனம். (சஉ)

பதம்.	உரை.
பாலோதம்	திருப்பாற்கடலில் சிறு திவலைகளானவை, ஸ்ரமஹர மாம்படி துடை குத்துவாரைப்போலே,
சிந்த	நாலுபாடும் சிதறிவிழ,
படம்	ஸ்வஸ்பர்ஶத்தாலே விகஸிதமானபணங்களையுடைய,
நாகணை	திருவநந்தாழ்வானாகிறபடுக்கையிலே,
கிடந்த	பள்ளிகொண்டருளுகிற,
மால்	பெரிய
ஓதம்	கடல்போலே ஸ்ரமஹரமான,
வண்ணர்	வடிவை யுடையனான ஸர்வேஶ்வரனுடைய,
திரு மகள் மேல்	பெரிய பிராட்டியார் மேலே,
	அத்யபிநிவிஷ்டமாய்ச்செல்லுகிற,
மநம்	திருவுள்ளமானது;
திருமகளும்	குற்றத்தைப்பொறுப்பிக்கும் பெரியபிராட்டியாரும்,
மண்மகளும்	பொறை விளையும் தரையான ஸ்ரீபூமிப்பிராட்டியாரும், குற்றம் கிளராதபடி திருவுள்ளத்தைத் திறைகொள்ளும்,
ஆய்மகளும்	கோபகுலேவதீர்ணையானநப்பின்னைப்பிராட்டியும்,
சேர்ந்தால்	ஸாதரமாகஸம்ஶ்லேஷித்தால், புஷ்பாங்கராகாதிகளோபாதிபோகோபகரணகோடியிலே நின்றுபிராட்டியோடேகலக்குமிடத்தில் ஸாபத்ந்யகந்த

(அவனோடே ஸம்பந்தம்) என்றவாக்யமும் தெரியாது.

பதம்.	உரை.	பதம்.	உரை.
	மற, அல்லாதபிராட்டிமார்எடுத்துக்கை நீட்டுகை யாலும், அவர்களோடே கலக்கு மிடத்தில் தன் முலையிலும் இடையிலும் கலந்தாப்போலேபிராட்டியினைத் திருக்கையாலும்,	திருமகட்கே	பெரிய பிராட்டியார்க்கே,
		தீர்ந்தவாறு	அற்றுத் தீர்ந்ததாயிருக்கிறபடி,
		என்கொல்	எங்ஙனேதான்!
			இத்தால் - மூவர்க்குமுண்டானஐகரஸ்யம்சொன்னபடி. (சஉ)

அ.—நாற்பத்துமூன்றும்பாட்டு. பிராட்டிமார் நித்யஸந்நிஹிதராயிருக்கையாலே தங்கள்குற்றத்தைநினைத்துப் பிற்காலிக்கவேண்டுவதில்லை, இனி ஸ்வருபாநுருபமான வ்ர்த்தியிலே அந்வயிக்கவே விரோதிவர்க்கம் தன்னடையேவிட்டு நீங்குமென்கிறார்.

மூ.—மனமாசுதீருமருவினையுஞ்சாரா
தனமாயதானேகைகூடும்—புனமேய
பூந்துழாயானடிக்கேபோதொடுநீரேந்தித்
தாந்தொழாநிற்பார்தமர். (சங)

அ.—நாற்பத்திரண்டாம் பாட்டு. (திருமகளும்) பாராதே பொறுக்கைக்கடி பிராட்டிமார் அருகேயிருக்கை யென்கிறார்.

வ்யா.—(திருமகளித்யாதி) அநந்தாழ்வான், "திருமகட்கே தீர்ந்தவா றென்சொல், மண்மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய்மகட்கே தீர்ந்தவா றென்கொல்" என்று பணிக்கும். (பாலோதஞ்சிந்த) "திருப்பாற்கடலின் குறுந்திவலை, திருமுகத்திலே படும்படிக்கீடாகத்திருவநந்தாழ்வான்மேலே கிடந்த மாலோதவண்ணருடைய, திருமகள்மேல்வைத்த திருவுள்ளம், திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறென்கொல்" என்று அருளிச்செய்வர் பட்டர். பிராட்டியோடு கலந்தபோது, "ఫుష్పాఙ్గరాగైస్సమమ్" "புஷ்பாங்கராகைஸ்ஸமம்" என்கிறபடியே அல்லாத பிராட்டிமார் உபகரணகோடியிலே நிற்பர்கள்; அல்லாத பிராட்டிமாரோடு பரிமாறும்போது, இவள், தன்னிடையிலும் முலையிலும் கலந்தாப்போலேயிருக்கும். போகந்தான் உத்மஸ்தகமானால் வ்ர்த்தகீர்த்தநாதிகளுக்குக்கூட்டாய் நிற்பர்கள். இத்தால் சொல்லிற்றாய்த்து – இதரவிஷங்கள் இருவர்க்கும் போராமையாலே "சீறுபாறு" என்கைக்குடலாம்; இங்கு போக்யதாதிஶயத்தாலே கிண்ணகத்திலிழிவாரைப்போலே திரண்டு அவகாஹிக்கவேணுமென்றதாய்த்து.

பதம்.	உரை.	பதம்.	உரை.
	திருமேனியின்ஸ்பர்ஶத்தாலே,		இவர்கள்இப்படிவகுத்த அடிமைசெய்யவே,
புனம்மேய	தன்னிலத்தில்நின்றாப்போலே செவ்விபெற்று,	மநம்	அநுஸந்தாந பரிகரமானமநஸ்ஸைப்பற்றிக்கிடக்கிற,
பூ	பூத்த,	மாசு	அஜ்ஞாநம்விஷயராகம்முதலான தோஷங்களடங்கலும்,
துழாயான்	திருத்துழாயாலேஅலங்க்ருதனான ஸர்வேஶ்வரனுடைய,	தீரும்	தன்னடையே விட்டுக்கழலும்;
அடிக்கே	திருவடிகளுக்கே,		அவற்றுக்கடியாய்,
	அடிமைக்குக் கைதொடுமானமான,	அரு	ஸ்வயத்நத்தால்போக்கவரிய,
போதொடு	* சூட்டுநன் மாலைகளோடே,	வினையும்	துஷ்கர்மங்களும்,
	நீராட்டுகைக்கு உபகரணமான,	சாரா	கிட்டவாராது;
நீர்	நன்னீரையும்,		கைங்கர்யோபகரணமாய் ஸ்வரூபாநுரூபமான,
ஏந்தி	ஸாதரமாகதரித்துக்கொண்டுநின்று,	தநமாய	தநமாயிருக்கிறபரபக்த்யாதிகளும்,
	தங்களபிநிவேஶாநுரூபமாக,	தானே கைகூடும்	தனக்குத்தானேவந்துகைபுகுரும். (சஙு
தமர்தாம்	ஆஶ்ரிதரானதாங்கள்,		
தொழாநிற்பார்	அடிமைசெய்யாநிற்பர்கள்;		

அ.—நாற்பத்து மூன்றாம்பாட்டு. (மநமித்யாதி) பிராட்டிமாரடியாக அவனைப்பற்றினார்க்கு, போகத்தில் ப்ரதிபந்தகங்கள் போகவேணுமென்றும் பக்த்யாதிகளுண்டாகவேணுமென்றும் கரையவேண்டாவென்கிறது.

வ்யா.—(மநமாசுதீரும்) மநஸ்ஸுக்கு மாசாகிறது - ருசிவாஸநைகள். (அருவினையும் சாரா) அவித்யாதிகர்மங்கள் அணையா. (தநமித்யாதி) இப்படியான வதிகாரிக்கு தநமான கைங்கர்யபூர்வபாவியான பக்த்யாதிகள் தானேயுண்டாம். (புனமித்யாதி) தமரானவர்கள் ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளிலே தாங்களே தொழாநிற்பர்கள். இவர்களுக்கு அவனுடைய திருவடிகளிலே புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு தொழுவது அவனை அநுபவிக்கையிலே அந்வயம்.

* திறனுரையே சிந்தித்திருக்க வொட்டுமோ இவனுடைய அவித்யாதிக ளென்னில்; (தநமாய) அவித்யாதிகள் போனார்க்கு வரும்தநம். "𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌗𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍" "அந்தரிக்ஷகதஸ்ஸ்ரீமாந்."(பூந்துழாயானடிக்கே) குடிக்கிற வேப்பங்குடிநீர். (தாமித்யாதி) இவன் வகுத்ததுசெய்ய அவன்வகுத்ததுசெய்யா தொழியுமோ....(௪௩)

அ.—நாற்பத்துநாலாம்பாட்டு. ஆஶ்ரிதர் இப்படி அடிமைசெய்யுமளவில், இவர்களுகந்த ரூபநாமாதிகளை யுடையனாய்க்கொண்டு தன்னையமைத்து, அர்ச்சாவதாரரூபேண இங்கே அடிமைகொள்ளுமென்கிறார்.

மூ.—தமருகந்ததெவ்வுருவமவ்வுருவந்தானே;
தமருகந்ததெப்பேர்மற்றப்பேர்;—தமருகந்
தெவ்வண்ணஞ்சிந்தித்திமையாதிருப்பரே
அவ்வண்ணமாழியானும். (௪௪)

பதம்.	உரை.
	தன்கருத்தறிந்துஎடுத்துக்கைநீட்டும்,
ஆழியான்	திருவாழி முதலான திவ்யபரிகரங்களையுடையனான ஸர்வேஶ்வரன்,
	அவர்களைக்காற்கடைக்கொண்டு,
தமர்	இன்று ஸம்ஸாரத்திலே தன்னைப்பற்றியிருக்கும் ஆஶ்ரிதரானவர்கள்,
	ஸ்வர்ண ரஜதாதிகளானத்ரவ்யங்களாலே,
உகந்தது	உகந்து ஏறியருளப்பண்ணினது,

பதம்.	உரை.
எவ்வுருவம்	யாதொருவிக்ரஹம்,
அவ்வுருவம்	அந்தவிக்ரஹத்தை, அஸாதாரண மான விக்ரஹத்தோபாதி,
தானே	தானே ஆதரித்து,
ஆம்	பரிக்ரஹியாநிற்கும்;
மற்று	இப்படிஅவர்களுகந்ததிருமேனியை விரும்புகிற வளவன்றிக்கே,
தமர் உதுகந்த	ஆஶ்ரிதர் உகந்து சாத்தினதிருநாமம்,
எ	யாதொன்று,
அப்பேர்	அந்தத் திருநாமத்தை, நாராயணாதி நாமங்களோபாதி,

நாற்பத்துமூன்றாம்பாட்டு. மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (திறனுரையே யித்யாதி.) அவன்வகுத்தது செய்கை - அநிஷ்டத்தைப்போக்கி இஷ்டத்தைக் கொடுக்கை. ... (௪௩)

பதம்.	உரை.
ஆம்	தனக்கு நாமமாக விரும்பாநிற்கும்;
தமர்	ஆஶ்ரிதரானவர்கள்,
உகந்து	உகந்துகொண்டு,
எவ்வண்ணம்	குணசேஷ்டிதாதிகளான யாதொருப்ரகாரத்தை,
சிந்தித்து	அநுஸந்தித்து,
இமையாது இருப்பர்	அநவரத பாவனைபண்ணியிருப்பர்கள்,
அவ்வண்ணமாம்	அந்தப்ரகாரத்தையுடையனாகாநிற்கும்.

இப்படி தன்பெருமை பாராதே ஆஶ்ரிதருகந்த ரூபநாமகுணசேஷ்டிதாதிகளைத் தானுடையனாய்க்கொண்டு, ஆஶ்ரிதரை யடிமைகொள்ளும் அர்ச்சாவதாரத்தின் நீர்மையி னேற்றத்தை அநுஸந்தித்து வித்தராகிறார். (சச)

அ.—நாற்பத்து நாலாம்பாட்டு. (தமரித்யாதி) "தமர்" என்றுசிலவரும் அவர்களுக்கு ப்ரதிபந்தகம் போகவேண்டா, பேர்கத்திலே அந்வயம் சொல்லுகிறபடி யெங்ஙனே யென்னில்; அவனுடைய ஸ்வரூபம் ஆஶ்ரிதபாரதந்த்ர மாகையாலே சொல்லுகிறது.

வ்யா.— (தமருகந்ததித்யாதி) [యేయథామాంప్రపద్యన్తే తాంస్తథైవ భజామ్యహమ్-யேயதாமாம் ப்ரபத்யந்தே தாந் தஂதவ பஜாம்யஹம்] நமக்கு நல்லவர்கள் இன்னாரென்று மில்லை, இன்னபடி பஜிப்பாரொன்றுமில்லை, அவர்கள் நின்றநிலையிலே அவர்கள் பஜித்தபடியே அவர்களைப்பற்றுவா னென்கிறது. தமரானவர்கள் ப்ராக்ர்தத்ரவ்யங்களிலே ஒன்றை "உனக்குத் திருமேனியாகக் கொள்ளவேணும்" என்றால் அத்தைத் திருமேனியாகக் கொள்ளும். "సువర్ణరజతాదిభిః" "ஸுவர்ணரஜதாதிபி꞉." எம்பெருமானார்,மாதூகரத்துக்கு எழுந்தருளாநிற்க,சிலபிள்ளைகள்காலாலேகீறி, "உம்முடையஎம்பெருமான் திருமேனி" என்றுகாட்ட; பாத்ரத்தைவைத்துத் தெண்டனிட்டருளினார்.இவ்வர்த்தத்திலே;-"கோயிலிலேசிலபிள்ளைகள்விளையாடுகிறவர்கள் திருவீதியிலேயிருந்து பெருமாளும் நாய்ச்சிமாரும் பெரியதிருமண்டபமும் கற்பித்துப்பெருந் திருப்பாவாடையும் அமுதுசெய்வித்து, 'எம்பெருமானார்! ப்ரஸாதப்படும்,' என்று மணலைக் கையாலே முகந்தெடுக்க, தத்காலத்திலே மாதூகரத்துக்கு எழுந்தருளுகிறவுடையவர், அவ்விடத்திலே அதுகேட்டருளித்தெண்ட

நாற்பத்து நாலாம்பாட்டு. அதிகாரிநியமம் த்ரவ்யநியமமின்றிக்கேயொழிந்தாலும் எம்பெருமான் ஸாந்நித்யம் பண்ணுமென்னுமதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச்செய்கிறார் (எம்பெருமானாரித்யாதி.) எவ்வண்ணம்-எந்தப்ரகாரம். ஸ்திதிகமநஶயநாதிகள் என்றபடி.

னிட்டு அவர்களெடுத்த ப்ரஸாதத்தை பாத்ரத்திலே யேற்றார்'' என்று ஜீயர் அருளிச்செய்தார். (தமருகந்ததெப்பேர் மற்றப்பேர்) நல்லவர், ''சதங்கையழகியார்'' என்று திருநாமம் சாத்தினாராகில் நாராயணாதி நாமங்களிற் காட்டிலும் அத்தை விரும்பும். (தமரித்யாதி) நல்லவர்உகந்து ''ஸ்யதா'' ''யேயதா''என்னும்படியாதொரு ப்ரகாரத்தாலே உகந்து ஸாவதாநரா யிருப்பர்கள், அந்த ப்ரகாரத்தாலே அத்தையுடையனும். (ஆழியான்) அப்ராக்ர்தமாயிருந்துள்ள ஸகலபரிகரத்துக்கு முபலக்ஷணம். அவையெல்லாங்கிடக்க, இவர்கள் நினைத்தபடியாகத் தன்னையமைத்துக்கொடுக்கும்.

(தமரித்யாதி) இவன்கண்டு தொழவேண்டாவோ, எங்கே காண்பதென்னில்; (அவ்வுருவந்தானே) '' ஆத்மாநம் மாநுஷம்மந்யே '' ''ஆத்மாநம் மாநுஷம்மந்யே'' ''ஸ்யதா'' ''யேயதா.'' (எப்பேர்மற்றப்பேர்)''எங்களாழ்வார்பாடேஆயர்தேவுசென்று நாவற்பழம்வேண்ட; 'நீயார், என்று அவர்கேட்க, 'ஜீயர்மகனான ஆயர்தேவு' என்ன; ஜீயரைக்கண்டு உம்முடைய பிள்ளை எங்களைக் குடியிருக்கவொட்டுகிறிலன்'' என்றார். (ஆழியானும்) ஸ்ரஷ்டாவாய் நியாமகனாயிருக்கிறவன், ஸ்ர்ஜ்யனுமாய் நியாம்யனுமாய். ... (௪௪)

அ.—நாற்பத்தஞ்சாம்பாட்டு. இப்படி யிருக்கிறவவன்நீர்மை ப்ரஹ்மாதிகளுக்கும் நிலமல்லகிடீரென்கிறார்.

மூ.—ஆமேயமரர்க்கறிய; அதுநிற்க
நாமேயறிகிற்போம்; நன்னெஞ்சே!—பூமேய
மாதவத்தோன்றாள்பணிந்தவாளரக்கன்நீண்முடியைப்
பாதமத்தாலெண்ணினான்பண்பு. (௪௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நல்நெஞ்சே	என்னினைவிலேநடக்கும் நல்லநெஞ்சே,	தாள்பணிந்த	தாநமாக வுடையனாய் ஜகத் ஸ்ர்ஷ்டிக்கு உபகரணமான தபஸ்ஸப்தவாச்யமான ஜ்ஞாநத்
பூமேயமாதவத்தோன்	திருநாபீகமலத்தை த்தனக்கு வாஸஸ்		

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (இவன்கண்டித்யாதி.) ஆஸ்ரிதன் இட்டபேரை உகப்பனென்னுமதுக்கு ஸம்வாதமாக அருளிச்செய்கிறார் (எங்களாழ்வாரித்யாதி.) ஆயர்தேவு - நஞ்சீயர் திருவாராதநம். அவர் ஸ்வப்நத்திலே பழம்முதலானவற்றைக் கேட்க, ரஸோக்தியாக எங்களாழ்வாரருளிச் செய்தாரென்றபடி.(௪௪)

பதம்.	உரை.
	தை யுடையனான ப்ரஹ்மாவினுடைய காற்கீழே தலைமடுத்து "எனக்குவரந்தரவேணும்" என்று ஆஶ்ரயித்த,
வாளரக்கன்	ஸாயுதனானராவணனுடைய,
நீள்	ஓக்கத்தை யுடைத்தான,
முடியை	தலைகளை,
	புதுக் கும்பிடுகண்டு இறுமாந்து மேல்விளைவ தறியாமல் அந்த ப்ரஹ்மா அவனுக்கு வேண்டின வரங்களைக் கொடுப்பதாக ஒருப்படுகிறவளவிலே ஒருபாலனாய்க்கொண்டு அவன்மடியிலே வந்து ஆவிர்ப்பவித்து அவைகள் அறுப்புண்ணும் தலைகளென்னு மிடத்தை,

பதம்.	உரை.
	எனக்கு நிரதிசய போக்யமான,
அப்பாதத்தால்	அந்தத் திருவடிகளாலேகீறி,
எண்ணினான்	எண்ணிக்காட்டி அந்தப்ரஹ்மாவினநர்த்தத்தைப் பரிஹரித்த ஸர்வேஶ்வரனுடைய,
பண்பு	குணங்களை,
	தங்கள் ஹிதமறியாமல் அநர்த்தத்தைச் சூழ்த்துக் கொள்ளக்கடவ,
அமரர்க்கு	ப்ரஹ்மாதி தேவர்களுக்கு,
அறியவாமே	அறியப்போமோ;
அதுநிற்க	அது கிடக்கிடாய்;
நாமே	அவனருளாலேதெளியக் காணவல்ல நாமே,
அறிகிற்போம்	அறிகைக்கு சக்தராகாநின்றோம்.

பேரளவுடைய ப்ரஹ்மாதிகள் மதிகெட்டு நிலம் துழாவாநிற்க, நாமே! அவனை அறியப்புகாநின்றோமென்றுமாம். (சரு)

அ.—நாற்பத்தஞ்சாம்பாட்டு (ஆமே) இது அவன் காட்டக் கண்டவருக் கொழிய அல்லாதார்க்கறியப் போகாதென்கிறார்.

வ்யா.—(ஆமேயமரர்க்கறிய) எத்தனை யேனும் அதிஶயிதஜ்ஞாநரான தேவர்களுக்கும் அறியப்போகாதென்கிறது. (அதுநிற்க நாமேயறிகிற்போம்) அவ்விடையாட்டம் நிற்க, நமக்கறியத் தட்டென்.

நாற்பத்தஞ்சாம்பாட்டு. இது-ஆச்ரிதபாரதந்த்ர்யம்.

(நன்னெஞ்சே) அவன் காட்டக்கண்ட நெஞ்சே. (பூமேய வித்யாதி) ப்ரஹ்மாவின்பக்கலிலே ராவணன் வரம் வேண்டிக் கொள்ளாநிற்க, ப்ரஹ்மாவின்மடியிலே யொரு சிறுப்பிள்ளையாய்க் கண்வளருவாரைப்போலே கிடந்து, "இவனுக்கு வரங்கொடுக்க வேண்டா, இது அநர்த்தமாம்" என்று ராவணன்தலையைத் தன் திருவடிகளாலே எண்ணினவனுடைய நீர்மையை "ஆமேயமரர்க் கறிய" என்கிறது. இத்தால் - ப்ரஹ்மாவினுடைய அறிவுகேடு சொல்லுகிறது.

(ஆமே) அபிமாநிகளானப்ரஹ்மாதிகளுக்கும்எளியனும்.(தாள் பணிந்த வாளரக்கன்) புதுத் தண்டன் கண்டிறுமாந்து விளைவ தறியாதே வரங்கொடுத்தபடி. ... ... (சரு)

அ.—நாற்பத்தாறும்பாட்டு.ப்ரஹ்மாவுக்குவந்தஅநர்த்தத்தைப் பரிஹரித்து ரக்ஷித்தவளவன்றிக்கே, லோககுருவுமாய் பிதாவுமான அந்த பரஹ்மாவின்தலையை யறுத்து சாபோபஹதனுய்க் கையுங் கபாலமுமாய் இரந்து உண்டு திரிந்த ருத்ரனநர்த்தத்தைப் பரிஹரித்து ரக்ஷித்தபடியை யருளிச்செய்கிறார்.

மூ.—பண்புரிந்தநான்மறையோன்சென்னிப்பலியேற்ற
வெண்புரிநூல்மார்பன்வினைதீரப்—புண்புரிந்த
ஆகத்தான்றாள்பணிவார்கண்டீரமரர்தம்
போகத்தால்பூமியாள்வார். (சகூ)

பதம்.	உரை.
பண்புரிந்த	ஸ்வரத்திலே நோக்காய்,
நான்	ரிகாதிபேதத்தாலே நாலுவகைப்பட்டிருக்கிறவேதத்தை தரித்திருந்துள்ள ப்ரஹ்மாவினுடைய,
மறையோன்	
சென்னி	தலையை, "ఛిన్నన్తస్య శిరోమయా" "சிந்நந்தஸ்யசிரோமயா" என்கிறபடியே அறுக்க, அவன் 'కపాలీత్వం భవిష్యసి' "கபாலீத்வம் பவிஷ்யஸி" என்று அநந்தரம் சபிக்க, தச்சாபோபஹதனுய்க்கொண்டு அவன் தலையோட்டிலே,

---

ராவணன்பத்துத்தலையையும் மறைத்துவர,அத்தைச்சிறுபிள்ளைகள் காலையாட்டுமாப்போலே எண்ணிக்காட்டினான்.

(எளியனும்)அவர்களுக்குமெளியனுமவன் நமக்குஎளியனுகச் சொல்லவேணுமோவென்று இரண்டாம் தாத்பர்யம். ... (சரு)

பதம்.	உரை.
பலியேற்ற	நெடுங்காலம் இரந்து திரிந்தவனாய், “ப்ராயஶ்சித்தி” என்னுமிடந்தோற்ற,
வெண்புரி நூல்	வெளுத்த பூணூலையும்,
மார்பன்	மார்விலேயிட்டு விநீத வேஷனுமாயிருக்கிற ருத்ரனுடைய,
வினை	ப்ரஹ்மஹத்யா ரூபமான பாபம்,
தீர	விட்டு நீங்கும்படியாக, “ నఖాగ్రేణవిదారితమ్” “நகாக்ரோண விதாரிதம்” என்கிறபடியே திருவுகிராலேகீறி,
புண்புரிந்த	மாம்ஸளமானரக்தஜலத்தை உபகரித்த,
ஆகத்தான் தாள்	திருமேனியையுடைய ஸர்வேச்வரன் றிருவடிகளை,
பணிவார் கண்டீர்	ஆச்ரயிக்குமவர்கள் கிடீர்,
அமரர்தம் போகத்தால்	நித்யஸூரி போகமான பரமபதைஶ்வர்யத்தோடேகூட,
பூமி	பூம் யுபலக்ஷிதையான லீலாவிபூதியையும்,
ஆள்வார்	ஸ்வாதீநமாக நிர்வஹிக்குமவர்கள். ()

அ—நாற்பத்தாறும்பாட்டு. (பண்ணித்யாதி) ருத்ரனுடைய லஜ்ஜைக்கேடுசொல்லுகிறது.

வ்யா.—(பண்புரிந்த நான்மறையோன்) ஸ்வரயுக்தமாக ஸர்வேஶ்வரனாலே ஓதுவிக்கப்பட்டப்ரஹ்மாவின். (சென்னிப்பலியேற்ற) “ వామాఙ్గుష్ఠనఖాగ్రేణఛిన్నంతస్యశిరోమయా ” “வாமாங்குஷ்டநகாக்ரோணசிந்நந்தஸ்யஶிரோமயா ” என்கிறபடியே ப்ரஹ்மாவின் தலையையறுக்க, அவன், “கபாலியாவாய்” என்றுஶபிக்க, அவனுடைய தலையோட்டிலே பிக்ஷையேற்ற. (வெண்புரிநூல் மார்வன் வினைதீர) விநீதவேஷனாய்ப்ராயஶ்சித்தியானபடி. இவனோடு ஸம்பந்தித்தார்க்கெல்லாம் அதுவேயிறே பணி. அகமுடையவளும் தகப்பனைக்கொன்றாள், இவனையாஶ்ரயித்தவனும் தகப்பனைக் கொன்றான்.

நாற்பத்தாறும்பாட்டு. பலி-பலி-பிக்ஷையென்றபடி. அகமுடையவள்-பார்வதி. தகப்பனைக்கொன்றது;- தக்ஷப்ரஜாபதி பகவத்பரனாகையாலே, யாகத்திலே, பெண்ணான பார்வதியை யழையாதிருக்க, அவள் ருத்ரனைக் கூட்டிக்கொண்டுபோக, அவன்ருத்ரனை உதாஸிக்கையாலே ருத்ரன், ஜடையிலே வீரமுஷ்டிகளை யுண்டாக்கிக் கொல்லுகையாலே “அவள்கொன்றாள்” என்கிறது. இவனை ஆச்ரயித்தவன்-ருத்ரன்; அவன் ப்ரஹ்மாவைத்தலையையறுத்தான்.

"வினைதீர" என்கிறவித்தால் - இவனுடைய கர்மவஸ்யத்வமும், தான் பண்ணின கர்மம் தன்னால் பரிஹரிக்கப் போகாமையும் சொல்லுகிறது. இத்தால்-ஈஸ்வரத்வசங்கையில்லை யென்றபடி. (புண்புரிந்தவித்யாதி) ஈஸ்வராபிமானியாய்ஒருத்தனைத்திரிந்தவன் வாசல்தோறும் இடறித் திரிவதே! என்று திருவுள்ளத்திலே புண்பட்டஸர்வேஸ்வரனுடையதாள்பணிவார்கிடீர். (அமரரித்யாதி) பூமியுமாண்டு பரமபதத்தில்போகமும் அநுபவிப்பார்கள். அன்றியே, போகபூமியிலே யிருக்கச்செய்தே பரமபதத்தில்போகமெல்லாம் அநுபவிப்பார்களென்றுமாம்.

ப்ரஹ்மாவாலே ஒருருத்ரன் அலைந்துகொடுகிடக்கஅதுதீர்த்தார் (பண்ணித்யாதி)ஒத்துச்சொல்லாநிற்கத் தலையறுத்தபடி. மூலையடியேதிரிந்தார் பாதகியானவாறே முழுகித் திரியும்படி. "விண்ணுளாரிலும் சீரியர்" என்றுமாம். ... ... (௬௬)

அ.—நாற்பத்தேழாம்பாட்டு. இந்த்ரியங்களைஜயித்து ஸமக்ஜ்ஞானத்தையுடையவர்களாய் அவனை ஆஸ்ரயிப்பார்க்கல்லது அவன் திருவடிகளைக் கிட்டவொண்ணாதென்கிறார்.

மூ.—வாரிசுருக்கிமதக்களிறைந்தினையும்
சேரிதிரியாமற்செந்நிறீஇக்—கூரிய
மெய்ஞ்ஞானத்தாலுணர்வார்காண்பரோ; மேலொருநாள்
கைந்நாகங்காத்தான்கழல். (௬௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாரி	போக்யங்களானசப்தாதிகளான ஜலத்தைக்கண்டு, கடுகமாற்றுதல் நெடுகவிடுதல்செய்யாதே நடுத்தரமான க்ரமத்திலே,	சுருக்கி	ஸங்கோசிப்பித்து களித்துக் கண்டகண்ட விஷயங்களிலே காடுபாய்ந்துதிரிகிற,
		மதக்களிறைந்தினையும்	ச்ரோத்ராதிகளான மத்தகஜங்களைந்தையும்,

மேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாவாலேயித்யாதி.) ருத்ரனுக்கு ஒத்துச்சொல்லா நிற்க, வெள்ளைப்பூணூலும் என்கையாலே - முழுகினமைதோற்றுகிறது. பூமியிலே யிருக்க அமரர் போகம் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (விண்ணுளாரிலுமித்யாதி.) ... ... (௬௬)

பதம்.	உரை.
சேரி	விஷயங்களாகிற குடியிருப்புகளில், பண்டுபோலே கயிறுருவிவிட்டு,
திரியாமல்	ஸஞ்சரியாதபடியாக, ப்ரத்யக் விஷய ப்ரவணமாம்படி,
செந்நிறீஇ	செவ்வேநிறுத்தி, அநபிஸம்ஹித பலமாக அநுஷ்டித்த ஸத் கர்மத்தாலே தெளிந்தமநஸ்ஸூத்தளமாக மூனேத்து ஸ்வரூபயாதஎத்ம்யத்தை யதாவாகதர்சிக்கும்படி,
கூரிய	அதிஸூக்ஷ்மமாய், த்யேய விஷயத்தை ப்ரத்யக்ஷமாக க்ரஹிக்கையாலே,
மெய்ஞ்ஞாநத்தால்	பரமார்த்தமாயிருக்கிறபக்திருபாபந்ந ஜ்ஞாநத்தாலே,
உணர்வார்	அவனை உள்ளபடியுணர க்ஷமரானவர்கள்,
மேலொருநாள்	பண்டொருநாளிலே "அடிமைசெய்யவேணும்" என்னுமபிநிவேசத்தாலே புஷ்பாசயார்த்த மாகவொருபொய்கையிலே புக்குத்துதிக்கை முழுத்தும்படி முதலேயாலே யிடர்பட்ட,
கைந்நாகம் காத்தான் கழல்	ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் விரோதியைப் போக்கி அடிமை கொண்டு ரக்ஷித்த ஸர்வேச்வரனுடையதிருவடிகளை,
காண்பர்	கண்டநுபவிக்கப் பெறுவர்கள் (சஎ)

அ.—நாற்பத்தேழாம்பாட்டு. (வாரிசுருக்கியித்யாதி)இந்த்ரியங்களுடைய போகத்தைச் செறுத்து–விஷயத்தினுடைய ஸந்நிதியில் நில்லாமல் பரிஹரித்து, மெய்யானபக்தி யுடையவர்கள் அவனைக் காண்பரென்கிறூர். "విషయా వినివర్తన్తే నిరాహారస్య దేహినః। రసవర్జం రసోऽప్యస్య పరం దృష్ట్వా నివర్తతే" "விஷயாவிநிவர்த்தந்தே நிராஹாரஸ்யதேஹிந:। ரஸவர்ஜம்ரஸோப்யஸ்யபரந்த்ர்ஷ்ட்வாநிவர்த்ததே."

நாற்பத்தேழாம்பாட்டு. ஆனைக்கு மதஹேதுவான ஜலத்தைச் செறுக்கவே மதம்போமாப்போலே, முமுக்ஷுவுக்கும் ஆஹாராதிகளைச்செறுக்கவே வீர்யம் போமென்னுமதுக்கு ப்ரமாண மருளிச் செய்கிறூர் (విషయా వినివర్తన్తే-விஷயாவிநிவர்த்தந்தேயித்யாதி.)

வ்யா.—(வாரிசுருக்கி) மதித்த ஆனைகளைத்தண்ணீரிலேசெறுக்குமாப்போலே இந்த்ரியங்களினுடைய போகத்தைக்குறுக்கி. (சேரிதிரியாமல்) தெருவேதிரியில் கொல்லுமிறே ஆனை, அப்படிவிஷயத்தினுடைய ஸந்நிதியில் திரியாமல். (செந்நிறீஇ) செவ்விதாகநிறுத்தி. பதார்த்தங்களில் போகாமல் ப்ரத்யக்வஸ்து விஷயமாக்கி. (சூரியவித்யாதி) விஹித கர்மங்களை பலாபிஸந்திரஹிதமாக அநுஷ்டித்து க்ஷீணபாபராய் ஆத்மயாதாத்ம்யஞ்ஜாநமுண்டாய் ஈஶ்வரபாரதந்த்ர்ய மென்னுமிடம், "ఉపాసనాద్యుపాయస్థితి దర్శనసమానాకారప్రత్యక్షాభివ్యక్తివిశదేతదనన్తరమ్" "உபாஸநாத்யுபாயஸ்தி திதர்ஶநஸமாநாகார ப்ரத்யக்ஷாபிவ்யக்திவிஶதேததநந்தரம்" என்றும் சொல்லுகிற பக்தியாலே காண்பர்கள். (மேலித்யாதி) பண்டொருநாள் ஸ்ரீகஜேந்த்ரமோக்ஷம்பண்ணினவனுடைய திருவடிகளை. இத்தால்-விரோதியான முதலையைப் போக்கித்தன்னைக்காட்டிக்கொடுத்தாப்போலே, இவர்களுடைய ப்ரதிபந்தகங்களைப்போக்கித்தன்னைக்காட்டிக்கொடுக்குமென்கிறது. (சேரி திரியாமல்) ஆள்நடை யாடாத விடத்தே கொண்டுபோய். (சூரியவித்யாதி) சுபாச்ரயமாகவும், நாதனாகவும் உபாயமாகவும், உபேயமாகவும் அநுஸந்திக்கை. (கைந்நாகம்) "పరమంపదమాపన్నః" "பரமாபதமாபந்நஃ." ... ... (சஎ)

அ.—நாற்பத்தெட்டாம்பாட்டு. நமக்கு இவ்வருந்தொழில்களில் இழியவேண்டா, தானே வந்து தன்னைத்தரும்ஸ்வபாவனன்றோவென்று அவன்படியை யநுஸந்தித்து, நெஞ்சே! நீ அவனை ப்ரீதிபூர்வமாக அநுபவிக்கப்பாரென்கிறார்.

மூ.—கழலொன்றெடுத்தொருகைசுற்றியோர்கைமேல்
சுழலுஞ்சுராசுரர்களஞ்ச—அழலுஞ்
செருவாழியேந்தினான்சேவடிக்கேசெல்ல
மருவாழிநெஞ்சேமகிழ். (சஅ)

பதம்.	உரை	பதம்.	உரை
ஒருகழல்	ஒரு திருவடியை,	சுழலும்	வயிறுமறுகி பரிப்ரமிக்கிற,
எடுத்து	ஊர்த்வலோகங்களிலேசெல்லவளர்த்து,	சுராசுரர்கள்	அநுகூலரானதேவர்களும் ப்ரதிகூலரான அஸுரர்களும்,
ஒருகை	ஒருதிருக்கையாலே, ப்ரதிகூலரான நமுசி ப்ரபர்திகளை,	அஞ்ச	நடுங்கும்படிக் கிடாக,
சுற்றி	சுழற்றியெறிந்து,		
ஓர்கைமேல்	மற்றையொருதிருக்கையின்மேலே,		

தண்ணீரிலே செறுக்கை-தண்ணீர்காட்டாதிருக்கை. ... (சஎ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அழலும்	ப்ரதிபக்ஷத்தின்மேலே அழலையுமிழுகிற,	ஆழிநெஞ்சே	அளவுடைய நெஞ்சே,
செரு	யுத்தஸாதநமான,	மருவு	நிரந்தரமாகப் பொருந்தப்பார்; அது தேவையாகாதபடி,
ஆழி	திருவாழியை,	மகிழ்	மகிழ்வதுஞ்செய்.
ஏந்தினான்	தரித்த ஸர்வேஸ்வரனுடைய,		ப்ரீதிபூர்வகமாக வாஸஸநபண்ணென்றபடி. சேவடி - சிவந்தவடியென்றுமாம். (சஅ)
சேவடிக்கே செல்ல	ஆஸ்ரித ரிருந்தவிடமே எல்லையாகவளரும் திருவடிகளிலே கிட்டும்படி,		

அ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. எல்லாம் செய்தாலும் ப்ரக்ர்திப்ராக்ர்தங்களில் விரக்திபிறந்து அவனை ஆச்ரயிப்பார்க்கல்லது அவனைக்காணமுடியாதென்கிறார்.

அ.—நாற்பத்தெட்டாம்பாட்டு. (கழல்) இப்படி "இந்த்ரியஜயம்பண்ணி நாம் பெறுகையாவதென்" என்று தம்முடைய திருவுள்ளம் பயப்பட; எளிதாகப் பற்றலாம், நீபயப்பட வேண்டாவென்கிறார்.

வ்யா.—(கழலித்யாதி) நமுசியுடைய ஒருகாலையெடுத்து கையாலே சுற்றி யென்னவுமாம். அன்றியே, பூமியளக்கவென்று தன்னுடைய ஒருதிருவடிமலரையெடுத்து, அவஸரத்திலே நமுசியை ஒருகையாலே சுற்றியென்னவுமாம். (ஓர்கைமேலித்யாதி) ஒருதிருக்கைமலரிலே அநுகூல ப்ரதிகூலரோடு வாசியற அழலாநின்ற * செருவுடைத்தான திருவாழியை யேந்தினவனுடைய. (சேவடிக்கேசெல்ல-ஆழிநெஞ்சே-மகிழ்ந்து-மருவு) உகந்துகந்து அநுபவி.

(கழலித்யாதி) அளந்தபடி. (ஆழிநெஞ்சே) உனக்கு உபதேஶிக்கவேண்டாவிறே. சேவடி தானேயிருந்த விடத்தே வந்தால் இறாயாமையே வேண்டுவது. ... ... (சஅ)

நாற்பத்தெட்டாம்பாட்டு. ஆழிநெஞ்சு - அன்புடையநெஞ்சு. "மருவு" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (சேவடி தானேயித்யாதி.) ... ... (சஅ)

மூ.—மகிழலகொன்றேபோல்மாறும்பல்யாக்கை
நெகிழமுயல்கிற்பார்க்கல்லால்—முகிழ்விரிந்த
சோதிபோற்றோன்றுஞ்சுடர்பொன்னெடுமுடியெம்
மாதிகாண்பார்க்குமரிது. (௪௯)

பதம்.	உரை.
மகிழலகொன்றேபோல்	கணிதத்தில் நிபுணனாலே வைக்கப்பட்டதொரு மகிழலகு காணிஸ்தாநத்திலும் கோடிஸ்தாநத்திலும் மாறிமாறி நிற்குமாப்போலே, பகவத்ஸங்கல்பத்தாலே கர்மாநுகுணமாக உச்சாவசரூபேண,
மாறும்	மாறிமாறி வரக்கடவ, ப்ரஹ்மாதிபிபீலிகாந்தமாக,
பல்யாக்கை	பலவகைப்பட்டசரீரங்கள்,
நெகிழ	தன்னடையே விட்டு நீங்கும்படியாக, ஜ்ஞாந பக்திவைராக்யஸம்பாதநமுகேந,
முயல்கிற்பார்க்கல்லால்	யத்நம்பண்ணுமவர்களுக்கல்லது,
முகிழ்விரிந்த	விகஸிதஸ்வரூபமான,
சோதிபோல்	தேஜஸ்ஸைப்போலே,
தோன்றும்	தோற்றுகிற,
சுடர்	தேஜஸ்ஸை யுடைத்தாய்,
பொன்	ஸ்பர்ஹணீயமாய்,
நெடு	ஆதிராஜ்ய ஸூசகமான,
முடி	திருவபிஷேகத்தை யுடையனாய்,
எம்	எல்லார்க்கும் என்னுடையவனென்று முறைசொல்லிப்பற்றலாம்படி,
ஆதி	ஸர்வகாரண பூதனான ஸர்வேச்வரன்,
காண்பார்க்கும்	கேவலம் காணவேணுமென்றிருப்பார்க்கும்
அரிது	அரியனாயிருக்கும்()

அ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. (மகிழலகித்யாதி) இப்படி இராதார்க்கு அவனைக் கிடையாதென்று பின்னையும் அதினுடைய அருமைசொல்லுகிறது.

நாற்பத்தொன்பதாம்பாட்டு. "முயல்கிற்பார்க்கல்லால்" என்றத்தைப்பற்ற அவதாரிகை யருளிச்செய்கிறார் (இப்படியிராதார்க்கித்யாதி.)

வ்யா.—(மகிழலகித்யாதி) அலகானது கோடிஸ்தாநத்திலும் நின்று காணிஸ்தாநத்திலும் நிற்குமாப்போலே, இவ்வாத்மாவானது தேவசரீரத்திலேபுகுவது திர்யக்சரீரத்திலே புகுவதாய் மாறி மாறி வருகிற பலயாக்கையை நெகிழ்ந்துபோம்படியாகப்பண்ணுவார்க்கல்லால். (முகிழித்யாதி) விகஸிதமாயிருந்த தேஜஸ்ஸைப் போலே தோன்றுமதாய், ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தையுடையனாய், எனக்குக் காரணமாயிருக்கிறவனைக் காணுமவர்களுக் கரிது.

ப்ரக்ர்திப்ராக்ர்தங்களில் அருசியும் எம்பெருமானைக் காண்கையில் ருசியுமுடையார்க்கு எளிதாகக் காணலாமென்கிறது. "பொய்ந்நின்ற" இத்யாதி.—(மகிழித்யாதி) கர்மாநுகுணமாக ஶரீரங்கள் தோறும் நுழைகை. "யாதானுமோராக்கை." (முகிழ்விரிந்தசோதி) "செவ்விப்படிக்கோலம்." (எம்மாதி) ப்ராபகனை. (காண்பார்க்கும்) கேட்பார்க்குமரிது. இப்படியாச்ரயிப்பார்க் கல்லது ப்ரக்ர்தியையுகப்பார்க்கு முகங்கொடுக்கும் இதரபுருஷனல்லன். ... (சகூ)

அ.—ஐம்பதாம்பாட்டு. இதரவிஷய ஸங்கமற்று ஸ்நேஹபுரஸ்ஸரமாக ஆச்ரயிக்குமவர்களுக்கு அவனைக்காணச் சாலவெளிதென்கிறார்.

மூ.—அரியபுலனைந்தடக்கியாய்மலர்கொண்டார்வம்
புரியபரிசினாற்புல்கில்—பெரியனாய்
மாற்றாதுவீற்றிருந்தமாவலிபால்வண்கைநீ
ரேற்றானைக்காண்பதெளிது. (ரு௦)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அரிய	நியமிக்கவரிதான,	அடக்கி	நியமித்து, அங்குத்தைக்குயோக்யமாம்படி,
புலனைந்து	ச்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தையும், இதரவிஷயங்களில் போகாதபடி,	ஆய்	மயிர் புழுவறசோதித்த,
		மலர்	செவ்விப்பூக்களை,

பண்ணுவார்க்கு-கர்மாத்யுபாயங்களைப்பண்ணுவார்க்கு.

மேலுக்கு ப்ரபத்தி பரமாக அவதாரிகையருளிச்செய்கிறார்(ப்ரக்ர்திப்ராக்ர்தங்களிலித்யாதி) சகாரத்தாலே – கேட்பார்க்குமென்கிறது. மகிழலகு-மகிழம்விதை. ... ... (சகூ)

பதம்.	உரை.
கொண்டு	ஸம்பாதித்துக்கொண்டு,
ஆர்வம்புரிய	ஸ்நேஹோத்தரமான,
பரிசினால்	ப்ரகாரத்தாலே, அபிமதவிஷயத்தையணைக்குமாப்போலே,
புல்கில்	போகரூபமாக ஆச்ரயிக்கில்,
பெரியனாய்	ஈச்வரனிலுங் காட்டில் தன்னைப்பெருக்க நினைத்திருக்குமவனாய்,
மாற்றாது	அர்த்திகளுக்குக் கொடுக்கும் கொடையிலொன்றும் மாறாமல்,
	"ஸர்வஸ்வதானம் பண்ணக் கடவன்" என்று,
வீற்றிருந்த	தன்வேறுபாடுதோற்ற வீற்றிருந்த,
மாவலிபால்	மஹாபலிபக்கலிலே, கொடுக்கக்கொடுக்கப்பூரிக்கிற,
வண்கை	அழகியதிருக்கையிலே, தான் அர்த்தியாய்ச் சென்று,
நீரேற்றானை	நீரையேற்று மண்கொண்டவனை,
காண்பது	கண்டநுபவிக்கை,
எளிது	சாலவெளிதாயிருக்கும். (ருo)

அ.—ஐம்பதாம்பாட்டு.இந்த்ரியங்களைவிஷயங்களில்போகாமல் காத்து அவன்பக்கலிலே ஸ்நேஹிக்கில் காண எளிதென்கிறார்.

வ்யா.—(அரியவித்யாதி) ஒருசெய்யிலேபாயும்நீர் இரண்டு செய்யிலே பாய்ந்தால் இரண்டுசெய்க்கும் போராதொழியுமிறே; ஸர்வேஶ்வரனை யிச்சிக்கக்கடவவன், இந்த்ரியங்களை விஷயங்களில் போகாதபடி யடக்கி. "அரிய" என்றது-"తస్యాహంనిగ్రహంమన్యే వాయోరివసుదుష్కరమ్" "தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுது ஷ்கரம்" - ப்ரதிகூலமான வாயுவை நியமிக்க வரிதானாப்போலே மநஸ்ஸை நியமிக்கவரிதென்று அர்ஜுநன் சொன்னபடியே யிருக்கை. (ஆய்மலர்கொண்டு) செவ்விப் பூக்களைக்கொண்டு. (ஆர்வம் புரியபரிசினால்) ஸ்நேஹம்மிக்க ப்ரகாரத்தாலே. (புல்கில்) அணையில். (பெரியனாயித்யாதி) உதாரமான கையைக்கொண்டு நீரேற்றவனைக் காண்கையெளிது.

ஐம்பதாம்பாட்டு. "அடக்கி" என்று-விஷயங்களைவிட்டேபற்றவேணுமோ, அவற்றையுங்கூட விரும்பினாலாகாதோ வென்ன; அருளிச்செய்கிறார் (ஒருசெய்யித்யாதி.) மாற்றாதேவீற்றிருந்த ஔதார்யம் மாறாதே வீற்றிருந்த.

(புல்கில்) - புல்கப்பெறில். (பெரியனாய்) ஐஶ்வர்யமும். (வண்கை) கொடுத்துவளர்ந்த கை. (நீரேற்றானைக் காண்பதெளிது) அப்ரதிஷேதமுடையார்க்கு அர்த்தியாய் வருமென்றவாறு. (ரு0)

அ.—ஐம்பத்தோராம்பாட்டு. இனிதாகத் திருநாமத்தை வாயாலே சொல்லவே, ப்ரஹ்லாதனுக்கு விரோதியைப்போக்கித் தன்னைக் கொடுத்தாப்போலே, நமக்கு விரோதியைப்போக்கித் தன்னை நமக்குத்தந்தருளுமென்கிறார்.

மூ.—எளிதிலிரண்டடியுங்காண்பதற்கென்னுள்ளந்
தெளியத்தெளிந்தொழியுஞ்செவ்வே;—களியில்
பொருந்ாதவனைப்பொரலுற்றரியா
யிருந்தான்திருநாமமெண். (ருக)

பதம்.	உரை.
என்னுள்ளம்	எனக்குவிதேயமான நெஞ்சே,
	காணவேணுமென்னுமபிஸந்தியுடையார்க்கு,
எளிது	அதிஸுலபமான,
இரண்டடியும்	திருவடிகளிரண்டையும்,
காண்பதற்கு	கண்டநுபவிக்கைக்கு,
	நீ அழகிதாக விஷயகாலுஷ்யமற்று,
தெளிய	நிர்மலமாக,
	அவன்மேலெழவன்றிக்கே திருவுள்ளத்தோடே,
செவ்வே	செவ்விதாக,
	நான்முன்புபண்ணினப்ராதிகூல்யபரம்பரைகளில்,
தெளிந்தொழியும்,	அதிப்ரஸந்நனாய் விடும்;
	ஆனபின்புநீ,
களியில்	வரபலாதிகளால்வந்தசெருக்கையுடையனாய்,
	“𑌨𑌨𑌮𑍇𑌯𑌮𑍍” “நநமேயம்” என்று,
பொருந்ாதவனை	தன்னைக் கிட்டோமென்றிருந்த ஹிரண்யனை,
பொரல் உற்று	பொருது முடிக்கையிலேஒருப்பட்டு,
	அவன் வரத்துக்குள்ளடங்காத,
அரியாய்	நரஸிம்ஹ வேஷத்தை யுடையனாய்க் கொண்டு,
	ப்ரஹ்லாதவிரோதியைக் கைதொட்டழித்த ஆஹ்லாதத்தாலே,
இருந்தான்	ஸுப்ரதிஷ்டிதனாயிருந்தஸர்வேச்வரனுடைய,
	ஆச்ரித வாத்ஸல்யாதி குணங்களுக்கு வாசகமான,
திருநாமம்	திருநாமங்களை,
	ரஸ்யதையாலே

“ஏற்றானை” என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (அப்ரதிஷேதமித்யாதி.) ... ... (ரு0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	நெஞ்சிலே யூற்றிருக்கும்படி,		னென்று கருத்து.
என்	அநுஸந்தி.	எளிதில்	எளிதல்லாத - ஸுலபமல்லாதவிரண்டுதிருவடிகளென்னுதல்.
	பின்னே, நம்கையிலும் பிறர்கையிலும்நம்மைவிட்டுக்கொடா	என்னுள்ளம்	என்னுள்ளமே! என்று ஸம்புத்தி. (ருக)

அ.— ஐம்பத்திரண்டாம்பாட்டு. நமக்கு அவன்பேர் செல்லாவிடில் ஜீவிக்கவரிதோவென்ன; தூர்மாநிகளான அதிகாரிபுருஷர்களடங்கலும் அவனையாச்ரயித்தன்றோ தங்களதிகாரங்களைப் பூண்கட்டிக்கொள்ளுகிறது, நமக்குப் பின்னைசொல்லவேணுமோ வென்கிறார்.

மூ.—எண்மர்பதினொருவரீராறுவரோரிருவர்
வண்ணமலரோந்திவைகலும்—நண்ணி
யொருமாலையாற்பரவியோவாதெப்போதுந்
திருமாலைக்கைதொழுவர்சென்று. (ருஉ)

அ.—ஐம்பத்தோராம்பாட்டு. (எளிதில்) தம்முடைய திருவுள்ளத்தை ஸம்போதித்து, நீ விஷயகாலுஷ்யத்தைத் தவிர், அவன் ப்ரஸந்நனுமென்கிறார்.

வ்யா.—(எளிதிலித்யாதி) எளிதின்றிக்கே யிருந்துள்ள இரண்டுதிருவடிகளுங் காண்பதற்கு. எளிதானவென்னவுமாம். (என்னுள்ளம்)என்னெஞ்சேயென்றபடி. (தெளிய)விஷயகாலுஷ்யத்தைத் தவிர. (செவ்வே - தெளிந்தொழியும்) அவன் நேரே ப்ரஸந்நனும். (களியித்யாதி) செருக்காலே பொருந்தேனென் றிருந்த ஹிரண்யனை. (பொரலுற்று அரியாயிருந்தான் திருநாமமெண்) சிறுப்பிள்ளையாகப் பொருத ஹிரண்யனை முடித்தவனுடைய திருநாமத்தை யெண்ணு.

என்னுள்ளம் – உள்ளமே!. நீதெளியில் அவன்செவ்வே நம்திறத்துத் தெளிந்தொழியும் ப்ரமாணமென்?; ப்ரஹ்லாதன்தெளிய அவன்விஷயத்துத் தெளிந்துநின்று காரியம்பார்த்தபடி கண்டிலையோ. பொரலுற்று-பொருது. சிற்றத்துக்கு இரைபோராமல்சோம்பியிருந்தான். (திருநாமம்) வாக்காலே. (தெளி) எண்ணவொட்டாதவன் பட்டபாடறிவுதியிறே. (ருக)

ஐம்பத்தோராம்பாட்டு. என்னுள்ளம்-அண்ணிமைவிளி. பொரலுற்று – பொருகையிலேயுற்று. காணத்தகுதி திருநாமமென்றந்வயம். ... ... (ருக)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எண்மர்	அஷ்ட வஸுக்களும்,	பரவி	அடைவுகெடப் புகழ்ந்து,
பதினொருவர்	ஏகாதச ருத்ரர்களும்,	எப்போதும்	எல்லாக் காலத்திலும்,
ஈராறுவர்	த்வாதசாதித்யர்களும்,	ஓவாது	உச்சிவீடு விடாதே, அபிமதங்களை கடிப்பிக்கும் கடகையான,
ஓர்	அத்விதீயரான,	திரு	பெரியபிராட்டியாரோடே கூடியிருக்கிற,
இருவர்	அச்விநிகளிருவரும்,	மாலை	ஸர்வேச்வரனை,
வண்ணம்	நாநாவர்ணமான,	சென்று	துர்மாநத்தைத் துறந்துசென்று,
மலர்	புஷ்பங்களை,	கைதொழுவர்	கிட்டி ஆஶ்ரயிப்பர்கள். ... (௫௨)
ஏந்தி	தரித்துக்கொண்டு,		
வைகலும்	ஸர்வகாலங்களிலும்,		
நண்ணி	வந்துகிட்டி,		
ஒரு	அத்விதீயமான,		
மாலையால்	ஸ்ரீபுருஷஸூக்தாதி ஸந்தர்பங்களைக் கொண்டு,		

அ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு. (எண்மரித்யாதி) கீழ்-தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து,ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு உதவினவனுடைய திருநாமத்தைஎண்ணு, அவன் ப்ரஸந்நனுமென்றது; மற்றும் துர்மாநிகளான தேவாதிகளும் அவனை ஆஶ்ரயிக்கத் தக்க கரணங்கள் அதிகாரம் பெற்றதென்கிறார்.

வ்யா.—(எண்மரித்யாதி) அஷ்டவஸுக்கள், ஏகாதசருத்ரர்கள், த்வாதசாதித்யர்கள், அச்விநிகள். (வண்ணமலரேந்தி) நாநாவர்ணமான புஷ்பங்களைக்கொண்டு. (வைகலும்நண்ணி ஒருமாலையால்) புருஷஸூக்தத்தாலே. (ஓவாதெப்போதும்) விச்சேதமின்றிக்கே. (திருமாலித்யாதி) ஸ்ரீயப்பதியைச் சென்று ஆச்ரயிப்பர்கள். [తదుపర్యపి బాదరాయణస్సంభవాత్ - ததுபர்யபி பாதராயணஸ்ஸம்பவாத்] தேவர்களுக்கும், பவிஷ்யத்தில் பெறவிருந்துள்ள அதிகாரார்த்தமாக ஆதித்யாந்தர்யாமியாயிருந்துள்ள பரமாத்மோபாஸநம் விதியாநின்றதே.

ஐம்பத்திரண்டாம்பாட்டு. வகுத்தவிஷயமாகையாலே, அதிகாரம்பெற்றது- தேவர்களும்பெற்றார்கள், கரணங்களும்பெற்றதென்றபடி.

தேவர்களுக்கு ஆச்ரயமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (తదుపర్య-ததுபர்யபீத்யாதி.)

வியாபாரயோக்யரான ப்ரயோஜநாந்தர பரர், ஒருமாலையால் பரவியோவுகை யன்றிக்கே, எல்லாக்காலமும், எப்போதுமென்று மாம். (திருமால்) வேண்டுவதெல்லாம் பெறுகைக்கடி. (௫௨)

அ.— ஐம்பத்துமூன்றாம்பாட்டு. ஸ்வப்ரயோஜநத்துக்கு மடியேற்கும் துர்மாநிகள் ஆச்ரயிக்கும்படியை யநுஸந்தித்து உள்வெதுப்படங்கும்படி அநந்யப்ரயோஜநராய் அபிமாநகந்தரஹிதராய் தத்ததவஸ்தோசிதமானவடிவெடுத்துக்கொண்டு அடிமைசெய்யக்கடவ நித்யஸூரிகளுக்குத்தலைவனான திருவநந்தாழ்வான் அங்குத்தைக்கு அடிமைசெய்யும்படியை யநுபவிக்கிறார்.

மூ.—சென்றாற்குடையாமிருந்தாற்சிங்காசநமாம்
நின்றால்மரவடியாம்நீள்கடலுள்—என்றும்
புணையாம்மணிவிளக்காம்பூம்பட்டாம்புல்கு
மணையாந்திருமாற்கரவு. (௫௩)

பதம்.	உரை.
திரு	பெரிய பிராட்டியாரோடே நித்யஸம்யுக்தனாயிருக்கிற,
மாற்கு	ஸர்வேச்வரனுக்கு, அவனு மவளுங்கூடக்கண்ணற்றுத்துகைத்துப் பரிமாறுகைக்கு யோக்யமானவடிவையுடைய,
அரவு	திருவநந்தாழ்வான், உகப்புக்குப் போக்குவீடாக,
சென்றால்	அவன்உலாவியருளப்புக்கால், மழை வெய்யில் படாதபடி,
குடையாம்	குடையாம்;
இருந்தால்	தன்னிச்சையாலே யெழுந்தருளி யிருந்தால்,

பதம்.	உரை.
சிங்காசன மாம்	திவ்ய ஸிம்ஹாஸநமாம்;
நின்றால்	ஸ்வேச்சை யாலே எழுந்தருளிநின்றால்,
மரவடியாம்	திருவடிநிலைகளாம்;
நீள்	பரப்பை யுடைத்தான,
கடலுள்	கடலிலேகண்வளர்ந்தருளும்போதைக்கு;
என்றும்	ஸர்வகாலத்திலும்,
புணையாம்	திருப்பள்ளி மெத்தையாம்; ஏதேனுமொன்றை விளக்கிட்டுக்காண அபேக்ஷித மான போது,
மணிவிளக்காம்	மங்களதீபமாம்;

எண்மர்-வ்யாபாரயோக்யரானதிக்பாலர்கள். எப்போதும்-எல்லாக்காலமாதல்; எல்லாப்புஷ்பமாதல்.... ... ... (௫௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	சாத்தியருளத் திருப்பரியட்டமபேக்ஷிதமானஸமயத்தில்,		சாய்ந்தருளினபோதைக்குப் பிராட்டிமார் “சிறுபாறு” என்னும்படி,
பூம்பட்டாம்	பும்ஸ்த்வாவஹமான அழகிய திருப்பரியட்டமாம்;	புல்குமணையாம்	தழுவணையாம். ()

அ.—ஐம்பத்துமூன்றாம்பாட்டு. (சென்றால்) கீழே - எல்லா நேர்த்தியும் நேர்ந்து தங்களுக்குறுப்பாக ஆச்ரயிக்குமவர்களைச் சொல்லிற்று; இதில்-தங்களை எல்லாமழிய அங்குத்தைக்குஉறுப்பாமவர்களைச் சொல்லுகிறது.

வ்யா.—(சென்றால்குடையாம்)கைங்கர்யம் ஸ்வபுத்த்யதீநமன்றென்கிறது. நான்குடையாய்நின்றேன், நீ இங்கேவா வென்கையன்றி,அவன்உலாவப்புகால் குடை அபேக்ஷிதமானபோது குடையாகை.(இருந்தால் சிங்காசனமாம்)இருக்கை திருவுள்ளமானபோது திவ்யஸிம்ஹாஸநமாம்; நிற்கை திருவுள்ளமானபோது மரவடியாம்; கண்வளர அபேக்ஷிதமானபோது கடலிலே எல்லாக்காலத்திலும் படுக்கையாம். (அணிவிளக்காம்) ஒருவிளக்காலே ஒருபதார்த்தத்தைக் காணவேணுமென்றபோது மங்களதீபமா யிருக்கும். (பூம்பட்டாம்) திருப்பரியட்டமபேக்ஷிதமானபோது அழகியபட்டாம். (புல்குமணையாம்) தழுவணை அபேக்ஷிதமானபோது தழுவணையாம். (திருமாலுக்கு) ச்ரியஃபதிக்கு. (அரவு) கட்டிப்பொன்போலே எல்லாவடிவையும் ஆக்கிக்கொள்ளலாம்படியிருக்கிறபடி.

சென்றால் - “குடையானேன், செல்” என்று சேஷியைநியமியாதே. இருந்தால்-அபேக்ஷயுள்ளபோது. நின்றால்-நின்றபிறபு. புணை-தெப்பம். மணிவிளக்கு-மங்களதீபம். பூம்பட்டு - பும்ஸ்த்வாவஹமானபரியட்டம். புல்குமணை - பிராட்டிமார் ஊடினால் வ்யஸநம்மறப்பிக்கவற்றாகை. ஊடலுக்கு ஹேதுவாகவுமாம்.

ஐம்பத்துமூன்றாம்பாட்டு. திருவநந்தாழ்வானைச் சொன்னது உபலக்ஷணமாய், தங்களையெல்லாமென்று - நித்யஸூரிகளைச்சொல்லுகிறது.

க்ஷீராப்தியிலே அழுந்தாமைக்குத் தெப்பமாய். வ்யஸநம் மறப்பிக்கை-தன்னுடைய ஸ்பர்சத்தாலே அவர்களைப் பிரிந்தவ்யஸநம் தோற்றாதபடி பண்ணுகை.தன்னுடைய ஸ்பர்சம்பாக்யமாம்படி உடம்புகொடுக்கையாலே பிராட்டிமார்ஊடுகைக்கும்ஹேதுவென்றபடி.

திருமாலுக்கு-இளையபெருமாளுக்குஅந்தரங்கஸேவை. அரவு-தான் ஒருசேதநனென்று கூசவேண்டாதபடி தன்னையமைத்தபடி. ராஜ நிவேசநங்களில் கூனர்குறளரைப்போலே. ... (ருரு)

அ.—ஐம்பத்துநாலாம்பாட்டு. இப்படி தன்ஈளிவுக் கீடாக அடிமைசெய்யும் திருவநந்தாழ்வானுகிற படுக்கையைவிட்டு இங்கே வந்தவதரித்துக் களைபிடுங்கித் தன்விபூதியை நோக்கும்படியையநுபவிக்கிறூர்.

மூ.—அரவமடல்வேழமான்குருந்தம்புள்வாய்
குரவைகுடம்முலைமற்குன்றம்—கரவின்றி
விட்டிறுத்துமேய்த்தொசித்துக்கீண்டுகோத்தாடியுண்
டட்டெடுத்தசெங்கணவன். (ருச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செங்கண்	புண்டரீகாக்ஷனை,	குரவைகோத்து	திருக்குரவைகோத்து,
அவன்	அந்த ஸர்வேஶ்வரன்,		ஐச்வர்யச்செருக்குக்குப் போக்குவிட்டு,
கரவின்றி	மறைக்கை யின்றிக்கே,		
	ஸர்வலோகப்ரஸித்தமாம்படி,	குடமாடி	குடமெடுத்தாடி,
அரவு	காளியனுகிற ஸர்ப்பத்தை,	முலையுண்டு	நலியவந்தபூதனைமுலையைப்ராணஸஹிதமாகவுண்டு,
விட்டு	விட்டடித்து,		
அடல்	யுத்தோந்முகமான,	மல்	கம்ஸன் * ஏவிற்றுச் செய்வானேன் றெதிர்ந்துவந்த மல்லரை,
வேழம்	குவலயாபீடத்தை,		
இறுத்து	முறித்துவிழவிட்டு,		
ஆன்	பசுக்களை,		
மேய்த்து	குறைவறமேய்த்து,	அட்டு	முடித்து,
குருந்தம்	குருந்தத்தை		வர்ஷாபத்தைப் பரிஹரிக்கைக்காக,
ஒசித்து	இணுங்கிப்பொகட்டு,		
புள்வாய்	பகாஸுரனுடைய வாயை,	குன்றம்	கோவர்த்தந பர்வதத்தை,
கீண்டு	கிழித்து,	எடுத்த	எடுத்ததுமுதலான
	இடைப்பெண்களோடே,		இச்செயல்களானவை யிருந்த படி

" திருமாற்கரவு " என்றசேர்த்தி எப்படியிருக்கிறதென்ன; "రమమాణావనేత్రయః" "ரமமாணுவநேத்ரயஃ" என்று-ரமித்த இளைய பெருமாளைப்போலே யென்கிறூர் (இளையபெருமாளுக்கித்யாதி.)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	என்னென்றுவித்தராயநுபவிக்கிறார்.		இது "நிரைநிரை" என்றுதமிழர்சொல்லும் லக்ஷணம். (ருச)

அ.—ஐம்பத்தஞ்சாம்பாட்டு. அவன் இப்படி ஆச்ரிதரைக் கண்ணிலேவெண்ணெயிட்டுநோக்கி தத்விரோதிகளையும்போக்கும் ஸ்வபாவனாயிருக்க, ஆர்தான் இவர்களைக்கண்கொண்டு சிவக்கப்பார்க்கவல்லாரென்கிறார்.

மூ.—அவன்றமரெவ்வினையராகிலுமெங்கோ
னவன்றமரேயென்றொழிவதல்லால்—நமன்றமரா
லாராயப்பட்டறியார்கண்டீரரவணைமேல்
பேராயற்காட்பட்டார்பேர். (ருரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அவன்	அந்த ஸர்வேச்வரனுக்கு அநுகூலராய்ப்போரும்,	எங்கோனவன்தமரே	எங்களுக்கு ஸ்வாமியான அந்தஸர்வேச்வரனைஆச்ரயித்த மஹாபுருஷர்களிறே,
தமர்	ஆச்ரிதரானவர்கள்,		
எவ்வினையராகினும்	அக்ர்த்யகரண க்ர்த்யாகரண ரூபமான எந்தத்தொழிலை யுடையரானார்களாகிலும்,	என்று	என்று அவர்களைக் கொண்டாடி,

அ.—ஐம்பத்துநாலாம்பாட்டு. (அரவம்) ஆச்ரிதர்க்குச் சிலவிரோதம் வந்து போக்கவேண்டில் படுக்கையும் பொருந்தாமல் வந்துநிற்குமென்கிறது. இப்பாட்டு-நிரைநிரை.

வ்யா.—(அரவமித்யாதி) காளியனைவிட்டு, குவலயாபீடத்தின் கொம்பைமுறித்து, ஆனைமேய்த்து, குருந்தமொசித்து, புள்வாய்கீண்டு - பகாஸுரனைக்கொன்று, குரவைகோத்து, குடமாடி, பேய்முலையுண்டு, மல்லரைஅட்டு, குன்றமெடுத்த ஸர்வேஸ்வரன். எடுத்த இச்செயல்கள் எம்பெருமான் ஸௌஷவிஷயத்தில் குறைந்து பரிமாறும்படியவன் ஸ்வரூபம். "செங்கணவன்-விட்டிறுத்து மேய்த்தொசித்துக் கீண்டு கோத்தாடி உண்டு அட்டு எடுத்தவை - அரவமித்யாதி. ... ... (ருச)

ஐம்பத்துநாலாம்பாட்டு. எடுத்த – இப்பாட்டிலெடுத்த. இந்த வ்யாபாரங்கள்-தாழ்ந்து பரிமாறின சேஷ்டியுடைய ஸ்வரூயம் சொல்லுகிறது. அந்வயம் காட்டுகிறார் (செங்கணவனித்யாதி.) (ருச)

பதம்.	உரை.
ஒழிவதல்லால்	தங்களைக் கொண்டு கடக்கப்போமித்தனையொழிய,
அரவணைமேல்	திருவரவணையிலே வர்த்திக்கக்கடவனாய்,
பேராயற்கு	"இடைத்தனத்தில் தனக்கொத்தாரில்லை" என்னும்படி அதில்ப்ரதாநனான க்ர்ஷ்ணனுக்கு,
ஆட்பட்டார்	அடிமைபுக்கிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களை, தங்களளவன்றிக்கே,
பேர்	தங்கள்பேருங்கூட, நாட்டார் காரியமாராய்கைக்கு,
நமன்	அவனுடைய ஆளாயிருக்கிறயமனுக்கு,
தமரால்	அந்தரங்கபடராயிருக்கிறவர்களால்,
ஆராயப்பட்டறியார்கண்டீர்	ஆராயப்பட்டறியார்கிடீர். (ருரு)

அ.—ஐம்பத்தஞ்சாம்பாட்டு. (அவன்தமர்) இப்படி அவன் ஆச்ரித விரோதிநிரஸநஸ்வரூபனானபின்பு, அவனுடையதமரை, யம்படர் ஆராய்வதெங்ஙனேயென்கிறார்.

வ்யா.—(அவனித்யாதி) அவனுக் கநுகூலரானவர்கள், எத்தொழிலராகிலென்-விஹிதத்தைச்செய்யிலென், நிஷித்தத்தைச்செய்யிலென். (எங்கோனித்யாதி) "ప్రభవతిసంయమనేమమాపివిష్ణుః" "ப்ரபவதிஸம்யமநேமமாபிவிஷ்ணுః" என்னும்படியே. (நமன்தமரித்யாதி) நமன்தமராலாராயப் படாதொழிகிறார், அரவணைமேல் பேராயற்காள் பட்டார்பேர். இவர்கள் தாங்களோ வென்னில்; அன்று, ஒரு பாகவதனுடைய பேரை ஒரு அபாகவதன் தரித்தால்அவனுடைய பேரும் யமஸதஸ்ஸிலே வாசிக்கப் பெறுதென்கிறது. பேராராயில், குவலயாபீடந் தொடக்கமானவை பட்டது படுமத்தனை. "మధుసూదనప్రపన్నాన్" "மதுஸூதநப்ரபந்நாந்."

(எங்கோனவன் தமரோ) என்னுயனானவடியார். (எவ்வினையாராகில் - என்னென்று ஒழிவதல்லால்) அவர்கள்புண்யம் பண்ணிலென்,பாபம் பண்ணிலென்,அத்துறைநாம் ஆராயுந்துறையல்லவென்று கைவிடுமதொழிய. "త్యజభటదూరతరేణతానపాపాన్" "த்யஜபடதூரதரேணதாநபாபாந்."

ஐம்பத்தஞ்சாம்பாட்டு. ஆட்பட்டார்பேர் – ஆட்பட்டாருடைய மநுஷ்யரென்றாய், "பேர்" என்கிற ஸமாதியாலே-திருநாமமும் ஆராயப்படாதென்றபடி.

(அரவணைமேல் பேராயற்காள்பட்டார்) படுக்கை பாராட்டிலிறே ஆராய்வது. "நன்று செய்தாரென்பர் போலும்" என்று பிராட்டிக்கு மகப்படநிலமல்லாத விடத்தேயமனோ ஆராயப் புகுகிறான். அவனுடைய ஒருபேரான ஸம்ஸாரிபேருந் தீட்டிவாட்டான். ... ... (௫௫)

அ.—ஐம்பத்தாறாம்பாட்டு. அவன்திருநாமங்களை யடைவுகெடச்சொல்லிப்போ மத்தனையல்லது ஸர்வேச்வரன் ப்ரபாவம் ஆர்க்கும் பரிச்சேதிக்கவரிதென்கிறார்.

மூ.—பேரேவரப்பிதற்றலல்லாலெம்பெம்மானை
யாரோயறிவாரதுநிற்க—நேரோ
கடிக்கமலத்துள்ளிருந்துங்காண்கிலான்கண்ண
னடிக்கமலந்தன்னையயன். (௫௬)

பதம்.	உரை.
	ஏதேனுமொன்றைச்சொல்லினும்,
பேர்வர	திருநாமம்வாயிலேவரும்படி,
பிதற்றலல்லால்	அக்ரமமாகச்சொல்லிக்கூப்பிடு மித்தனையல்லது,
எம்பெம்மானை	தன்படிகளை யெனக்குத்தானே காட்டித்தந்த என்னாயனானவனை,
ஆர்அறிவார்	ஆர்தான் அறியவல்லார்;
அதுநிற்க	அவ்விடையாட்டம் கிடக்கிடீர்;
கடி	பரிமளப்ரசுரமான,
கமலத்துள்	திருநாபீ கமலத்திலேஅவ்ய வதானேநப்பிறந்து,
நேரோயிருந்தும்	அங்கே நிரந்தரவாஸம்பண்ணா நிற்கச்செய்தேயும், அவன் பக்கலிலேயோதிஇவ்வருகுள்ளார்க்கும் அறிவுகொடுக்கும்படி அறிவில்தலைநின்ற,
அயன்	சதுர்முகனானவன்,
கண்ணனடிக்கமலந்தன்னை	ஸர்வ நிர்வாஹகனானஸர்வேச்வரன்திருவடித்தாமரைகளை
காண்கிலான்	இவ்வளவென்று அளவிட்டு தர்சிக்கைக்குசக்தனல்லன்.

பேரே வரப்பிதற்றுகை யாவது-அவன்தானே வரும்படி திருநாமங்களை,அக்ரமமாகச்சொல்லுமத்தனை போக்கியென்றுமாம். ()

பாராட்டிபடுக்கை - ஸமுத்ரம் பார்த்து கேவலம்நித்ரை பண்ணினாலன்றோயமன் ஆராய,இது அப்படியன்றியேஅவன்ஏறிட்டுக்கொண்டபின்பு இவனால்ஆராயப்போகாதென்றபடி. பாகவதனுடைய பேரன்றியே அவனுடையதிருநாமம் சுமந்த ஸம்ஸாரிபேரையும் எழுத்தாணியைத்தீட்டி ஓலையிலே வாட்ட எழுதமாட்டானென்றபடி.

ஐம்பத்தாறும்பாட்டு. (பேரோ) பேராயற்காள் படுகையாவது, அவன் விஷயீகரிக்கப் புக்கால் தன்செல்லாமை தோற்ற நிற்கை யல்லது இவன் அவனைபரிச்சேதித்தறிகையாவ தென்னென்கிறது.

வ்யா.—(பேரித்யாதி) பேராலே அவன் வரும்படி. (பிதற்ற லல்லால்) திருநாமத்தைச் சொல்லலல்லாலென்றுமாம். அன்றிக்கே, ஏதேனும் சொல்லப்புக்காலும் திருநாமம்வாயிலே வரும்படி பிதற் றலல்லால். இதுக்கீடாகச்சொல்லுகையென்றுமாம். (எம்பெம்மானி த்யாதி)என்னுடையஸ்வாமியை ஆரேயறிவார்; அவ்விடையாட்டம் நிற்க. (நேரித்யாதி) அறிவார் கிடக்கிடீர், அறியாதாரைக்கேட்கலா காதோ. ஸர்வேச்வரனுடைய, பரிமளத்தையுடைத்தான திருநாபீ கமலத்திலே அவ்யவதாநேநப் பிறந்து, அவன் றன்னாலே ஓதுவிக் கப்பட்டு அங்கேயிருக்கிற ப்ரஹ்மா, ஸர்வேச்வரனை, காண்கிறிலன்- அறிகிறிலன்.

நம்மாலறியவொண்ணுமோவென்னில் (பேரோவரப்பிதற்றல்) கன்று நின்றவிடத்தே தாய்வருமாப்போலெ வாஸிதமாகவென்று மாம். (எம்பெம்மானை) நமக்குநேரேகாட்டினபடி உள்ளிருந்துங் காண்கிலான். கடற்கரையிலே குடில்கட்டிக்கொண்டிருக்குங்காட்டி ல்கடலைப்பரிச்சேதிக்க வொண்ணுமோ, அபரிச்சேத்யமென்றறியில் அறியலாம்;பெரியகிழாயார். "ப்ரஹ்மவிதாம்வர:" "ப்ரஹ்மவிதாம்வர:."

அ.—ஐம்பத்தேழாம்பாட்டு. ப்ரஹ்மாவுக் கறியவொண்ணாத விஷயத்தை நீரறிந்தபடி யெங்ஙனே யென்ன;திருநாமமாச்ரயித்து அவன்றானேதன்னைக்கொண்டுவந்துகாட்டக்கண்டேனென்கிறார்.

மூ.—அயல்நின்றவல்வினையையஞ்சினேனஞ்சி
யுயநின்றிருவடியேசேர்வான்—நயநின்ற
நன்மாலைகொண்டுநமோநாரணவென்னுஞ்
சொன்மாலைகற்றேன்றொழுது. (ருஎ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அயல் நின்ற	அருகுவிட்டுப்போராதே இடை விடாமல் நலிந்தபடியே நிற்கிற,	வினையை	பாபத்தைக்குறித்து, "முன்புபோலே இன்னமும்வந்துமேலிடில் செய்வதென்" என்று,
வல்	அதிப்ரபலமான,		

ஐம்பத்தாறும்பாட்டு. மேலுக்கவதாரிகை (நம்மாலித்யாதி.) திருநாமம் வாயிலே வாஸிதமாக. பெரியகிழாயார்-பெரியவன். ப்ர ஹ்மாபெரியவனோவென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மவிதாம்வர: - ப்ர ஹ்மவிதாம்வர: என்று.) ... ... (ருசு)

பதம்.	உரை.
அஞ்சினேன்	பயப்பட்டேன்;
அஞ்சி	இப்படிபயப்பட்டு, இந்த பாபஸம்பந்த மற்று,
உய	உஜ்ஜீவிக்கைக்கு, நிர்ப்பயஸ்தாநமான,
நின் திருவடி	உன்திருவடிகளிலே,
சேர்வான்	வந்து கிட்டுகைக்காக,
நயம்நின்ற	நயப்புடைத்தாய்,
நல்	அதிவிலக்ஷணமான,
மாலைகொண்டு	சப்தங்களாலேதொடுக்கப்பட்ட இப் ப்ரபந்தரூபமான மாலையைக்கொண்டு,

பதம்.	உரை.
தொழுது	உன்னை ஆச்ரயித்து,
நமோநாராணவென்னும்	உனக்கு வாசகமாய் திருமந்த்ர மென்றுப்ரஸித்தமான,
சொன்மாலை	சொல்தொடையை,
கற்றேன்	அப்யஸித்தேன்.

அன்றிக்கே, திருமந்த்ரார்த்தத்தை நயிப்பிக்கையிலே தத்பரமாய்க்கொண்டுநின்ற விலக்ஷண ஸந்தர்ப்பரூபமான இப்ப்ரபந்தத்தைக்கொண் டென்னவு மாம். "அயல்நின்ற" என்றது-ஜ்ஞாநம்பிறந்தபின்பு பாபங்கள் தம்மை விட்டுக் கடக்க நின்றபடியைச் சொல்லிற்றாகவுமாம். "அயல் நின்ற வல்வினை" என்று-திருநாமம் சொல்லாதபோது தமக்குள்ள வ்யஸநமாகவுமாம். (ருள)

அ.—ஐம்பத்தேழாம்பாட்டு. (அயல்நின்ற)நீர் பகவத்விஷயத்தில்செய்தததென்னென்னில்; ஸம்ஸாரம்பயஸ்தாநமென்னுமிடமும் உஜ்ஜீவிப்பார் அவனைப்பற்றி யென்னுமிடமும் அறிந்தே னென்கிறார்.

வ்யா.—(அயலித்யாதி) நானிட்டவடியிலேயிட்டு வாராநின்றமஹாபாபங்களை யஞ்சினேன். (அஞ்சிஉய) அவற்றையஞ்சி உஜ்ஜீவிக்கைக்காக. (நின்திருவடியே சேர்வான் நயம் நின்ற நன்மாலை கொண்டு) நிர்வசநரூபமாக நின்றநல்லமாலை கொண்டு. அநுரூபமானமாலைகொண்டு. (நமோநாராணவென்னுஞ் சொன்மாலை கற்றேன்)சொல்தொடைகற்றேன். (தொழுது)வணங்கி. (சொன்மாலை கற்றேன்)வல்லேனாய்ப்பேசினேனல்லேன், ஆற்றாமையாலே நாறுகைக்குப் பேசினேன்.

ஐம்பத்தேழாம்பாட்டு. அயல்நின்ற - அண்டையிலே யென்றபடி. நயம் நின்ற-சாஸ்த்ரரூபமாய்நின்ற. அதாவது-திருமந்த்ரார்த்தை நிர்வஹிக்கிற தமிழ்த்தொடை என்றபடி. "கற்றேன்" என்று-வருத்தம் தோற்றுகையாலே ஆற்றாமைசொல்லுவிக்கச் சொன்னேனென்றபடி. நாறுகை - ஸத்தை பெறுகைக்கு.

15

(அயல்நின்ற) விச்லேஷத்தாலே வரும் வ்யஸநத்துக்கஞ்சி திருநாமம் சொல்லுந்தனையுங் கடக்கசாபலத்தாலேநின்ற. (ருஎ)

அ.—ஐம்பத்தெட்டாம்பாட்டு. ஆனபின்பு, நெஞ்சே! இவ்விஷயத்தைவிட்டு நமக்கு ஒருக்ஷணம் ஆறியிருக்க விரகில்லை, அவன் திருவடிகளை ஆச்ரயியென்கிறார்.

மூ.—தொழுதுமலர்கொண்டுதூபங்கையேந்தி
யெழுதுமெழுவாழிநெஞ்சே—பழுதின்றி
மந்திரங்கள்கற்பனவுமாலடியேகைதொழுவான்
அந்தரமொன்றில்லையடை. (ருஅ)

பதம்.	உரை.
நெஞ்சே	நெஞ்சே,
மலர்	செவ்விப்பூக்களை,
கொண்டு	ஸம்பாதித்துக் கொண்டு,
தூபம்	தூபத்தை,
கையேந்தி	கையிலேதரித்து, ஸ்வரூபாநுரூபமாக,
தொழுது	அவனைத்தொழுது,
எழுதும்	உஜ்ஜீவிப்போம்,
எழு	கடுகவெழுந்திரு;
வாழி	உனக்கு இந்தஸம்ர்த்தி நித்யமாய்ச்செல்ல;
பழுதின்றி	கிடந்தானைகண்டேறுதே ஆசார்யனைப் பழுக்க ஸேவித்து,
மந்திரங்கள்	திருவஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்களை,
கற்பனவும்	பழுதற நாம்அப்யஸிக்கிறவையும்,
மாலடியே	ஸர்வேச்வரன் திருவடிகளிலே, இடைவிடாமல்,
கைதொழுவான்	அஞ்சலிபந்தம் முதலான வ்ர்த்தி விசேஷங்களைப் பண்ணுகைக்காக; ஆனபின்பு நமக்கு ஆறியிருக்கைக்கு,
அந்தரம்	அவகாசம்,
ஒன்றில்லை	ஏகதேசமுமில்லை;
அடை	கடுகச்சென்று கிட்டு. (ருஅ)

வல்வினையானது தூரப்போகாமல் கிட்டநிற்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (விச்லேஷத்தாலே யித்யாதி.) இத்தனைநாளும் கூடியிருந்த நாம் இவனைப்பிரிந்து போகிறோமென்றஞ்சி துக்கப்பட்டு சிரபலத்தாலே நின்றதென்றபடி.... ... ... (ருஎ)

வயா.—ஐம்பத்தெட்டாம்பாட்டு. (தொழுது) கையாலே தொழுது. புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டுதொழுது. (எழுதும்)எழுவோம் - போவோம். எழு - போகு. (வாழிநெஞ்சே) நெஞ்சே! உனக்கு நன்மையுண்டாக. (பழுதின்றி யித்யாதி) விச்சேதமின்றிக்கே எல்லாத் திருமந்த்ரங்கள் கற்கிறதும் கைதொழுகை. ஆனபின்பு, (அந்தரமொன்றில்லையடை) ஒருக்ஷணமாத்ரம் போகாதே அவன் திருவடிகளிலே அடை. எழுதும் – உஜ்ஜீவிப்போம். எழு-ஒருப்படு. வாழி-ஒருப்பட்டபடிக்கு மங்களாஶாஸநம். இது உனக்கு நித்யமாயிடுக. பழுதின்றி-குருகுல வாஸம்பண்ணிப் பழுத்து விழக்காண்கை. முதலிலே சொல் என்னில் உத்பத்தி தோஷமாமிறே. (கற்பனவும்) கிடந்தானைகண்டேறுதே சந்தையிட்டுக் கற்கை. ... ... (௫அ)

அ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு. போகத்துக்கு வேணுமாகில் இத்தைச்செய்கிறோம், இதுக்கு இடைச்சுவரான விரோதியை இருதுண்டமாக விடுகைக்கு ஸாதநமேதென்ன; அதுக்குவேணுமாகில் தசரதாத்மஜனைச் சரணம்புகுவென்கிறார்.

மூ.—அடைந்தவருவினையோடல்லல்நோய்பாவம்
மிடைந்தவைமீண்டொழியவேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கைவைத்தான்முரணழியமுன்னொருநாள்
தன்விலங்கைவைத்தான்சரண். (௫௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஜ்ஞாநாநந்தங்களோபாதிஆத்மாவுக்கு நிரூபகமென்னலாம்படி,	அல்லல்	அநாதியாக வருகிற மாநஸமான துக்கங்கள்,
அடைந்த	அடியேபிடித்துப்பற்றிக்கிடக்கிற,	நோய்	சாரீரமான வ்யாதி,
அரு	போக்கவரிதான,	பாவம்	வர்த்தமாந சரீரங்கொண்டு பண்ணுகிற நிஷித்தாசாரம் என்றாப்போலே
வினை	ப்ராசீநபாபம்,		

ஐம்பத்தெட்டாம்பாட்டு. கைதொழுகை-தொழுகைக்காகவென்று சதுமின். அந்தரமொன்றில்லை - ரந்த்ரமின்றிக்கே. சீக்ரமாகவென்றபடி. மந்த்ரத்துக்குப் பழுதில்லாமை யேதென்ன; அருளிச்செய்கிறார் (குருகுலவாஸமித்யாதி.) பழுத்துவிழுகை - அடியிலேயிருக்க மடியிலேவிழுகை. அநுவர்த்தநபூர்வகமாகக் கேளாவிட்டால் விரோதமேதென்ன; அருளிச்செய்கிறார் (முதலிலேயித்யாதி.) ஆசார்ய ப்ரதிபத்திபண்ணுமல் சொல்லென்று கேட்கிலென்றபடி. உத்பத்திதோஷம்-மந்த்ரத்துக்கு வீர்யமின்றிக்கேயொழிகை (௫அ)

பதம்.	உரை
	பஹுவிதமாய்க் கொண்டு,
மிடைந்தவை	பரணிகூடுவரிந்தாப்போலே ஆத்மாவைத் தெரியாதபடி மூடிக்கிடக்கிற வினை,
மீண்டொழியவேண்டில்	வாஸநையோடே விட்டுப்போக வேண்டில்,
	க்ஷணகாலமும் விச்லேஷிக்கத் தகாதபடி,
நுடங்கிடையை	நேரியஇடையழகையுடைய பிராட்டியை,
முன்	முன்பொருகாலத்திலே,
இலங்கை	லங்கையிலே கொண்டுபோய்,
வைத்தான்	சிறைவைத்தராவணனுடைய,
முரண் அழிய	மிடுக்கு அழியும்படிக்கீடாக,
முன்னொருநாள்	பண்டொரு நாளிலே,
தன்	தன்னுடைய,
வில்	ஸ்ரீசார்ங்கத் திருவில்லை,
அம்கை	அழகிய திருக்கையிலே,
வைத்தான்	வைத்த தசரதாத்மஜனே,
சரண்	உபாயம்.

இத்தால் - பிராட்டி விஷயத்தில்போலே ஆச்ரிதவிஷயத்தில் ஈச்வரன் உகந்து காரியம் செய்யுமென்னு மிடமும், அவன் ஸ்வரக்ஷணத்திலே யிரங்குமன்று இவனுக்கு க்ர்த்யாம்ச ¦முள்ளதென்னுமிடமும், அவன் அபேக்ஷிதம் செய்யுமென்னுமிடத்தில் இவள் புருஷகாரமென்னுமிடமும், அவன் வஸ்துவை எனக்கு என்பார் ராவணாதிகள் பட்டதுபடுவாரென்னுமிடமும் சொல்லிற்றாய்த்து. இந்த்ரியஜயத்தைப் பண்ணு, அவனைத்தொழு, அவன்திருநாமத்தைச்சொல்லு, அவனைநினை என்றாப்போலே கீழ்பலபடியாகச் சொல்லிற்றெல்லாம் ஷட்கத்ரயத்தில் வார்த்தைபோலே ஸ்வரூபம் விசதமாகச் சொன்னநிலை. இது சரமச்லோகத்தில் நிலைபோலே உணர்ந்தவன்று அவனல்லது உபாயமில்லையென்கை.

அ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு. (அடைந்த) காலக்ஷேபம் பண்ணும்படி சொல்லுகிறது.

வ்யா.—(அடைந்தவருவினை) ஆத்மஸ்வரூபத்திலன்றியே அசித்ப்ரத்யாஸத்தியாலே வந்தேறியான அஜ்ஞாநாதிகள். (அல்லல்) மாநஸவ்யாதி. (நோய்) சரீரவ்யாதி, ஆதிவ்யாதிகளென்றபடி.

ஐம்பத்தொன்பதாம்பாட்டு. இதில் உபாயஸ்வீகாரம் சொல்லுகிறதென்று கண்டுகொள்வது.

பாவம்-பரிக்ரஹித்த ஶரீரத்தாலே பண்ணினநிஷித்தாநுஷ்டாநம். (மிடைந்தவை) சரீராரம்பகஹேதுவான பாபங்களுமாக நெருங்கினவை. (மீண்டொழியவேண்டில்)"అహంత్వాసర్వపాపేభ్యోమోక్షయిష్యామి" "அஹந்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷ இஷ்யாமி" என்னும்படி ஒருராஜகுல ஸம்பந்தத்தாலே மீளாதபடி போகவேண்டில். (நுடங்கிடையை)பிரியத்தகாதவளை.(முன்னித்யாதி)பண்டுலங்கையிலே வைத்தவனுடைய மிடுக்கொழிய. (தன்வில் அங்கை வைத்தான்) தன்னுடையதிருவில்லை அழகிய திருக்கையிலேவைத்தவன் உபாயம். இத்தால்-ஸர்வேச்வரனுக்கு போக்யமாயிருந்துள்ள ஆத்மாவை "என்னது" என்றிருக்குமவன், பிராட்டியைப் பிரித்தராவணனோடொக்கும் என்னு மிடமும், இவ்வாத்மா அவனுடையது என்றநுகூலித்தவனுக்குப் பிராட்டி யிருந்தமார்விலே அம்பேற்று பரிஹரித்தாப்போலே பரிஹரிக்குமென்னு மிடமும், அவளோடு கூடினவன் உபாய மென்கையாலே-பற்றுவார்கள் அவள் முன்னாகப்பற்ற வேணுமென்னு மிடமும் சொல்லுகிறது.

திருவுள்ளம் இந்த்ரியஜயம் பண்ணென்றது. தொழு என்றது, திருநாமம் சொல்லென்றது, நினையென்றது. பலபடிகள் சொன்ன இவற்றுக்குத் தாத்பர்யமென்னென்னில்; இதுக்குக்கீழெல்லாம் ஷட்கத்ரயத்தில் சொன்ன வார்த்தைபோலே ஸ்வரூபம் விசதமாகைக்குச் சொன்னநிலை; இது, சரமச்லோகத்தில் நிலைபோலே உணர்ந்தவன்று அவனல்லதில்லை.

அடைந்தவருவினை—அவித்யாதிகள். ஆத்மா ஹேய ஸம்ஸர்க்கத்துக்கு அநர்ஹனுகையாலே "அடைந்த" என்றது. பரமாத்மாவுக்கும் ப்ரவேசமொக்குமிறே. "అనశ్నన్" "அநச்நந்." அல்லல் நோய்-ஆதிவ்யாதி. பாவம்-சரீரத்துடன் பண்ணும்பாவம்.

மீண்டொழிய - மீளுகையொழிய. போனது திரியவும் இவனிடத்திலே மீளாதபடி.

மேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார் (திருள்ளமித்யாதி.) திருவுள்ளமானது "எழுதும் எழு" என்று இங்கேசொன்னீர், இப்படி பலபடியாகச் சொல்லுகிறதுக்குக்கருத்தென்னென்று ஆழ்வானைக் கேட்கவென்று சங்காபிப்ராயம். ஸ்வரூபம்விசதமானால் அவனே உபாயமாகவேணுமோவென்ன; (உணர்ந்தவன்றித்யாதி.) வந்தேறியானது பரமாத்மாவுக்கு மொவ்வாதோவென்று சங்கை. "இறை" என்று - சங்காஸூசகம். அதுக்கு உத்தரம் (அநச்நந்என்று.)

(மிடைந்தவை) ஸமிதையிடாமாணிபோலே;பரணிக்கூடுவரிந் தாப்போலே. (மீண்டொழியவேண்டில்) தொடருகிற பாம்பைத்தி ரிய விடுத்தாப்போலே * "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" - "ஸர்வபாபே ப்யோமோக்ஷயிஷ்யாமிறே."

ஸர்வசக்தியைக்கொண்டுகாரியங்கொள்ளவேண்டாவோ.(நுடங் கிடையை) ஏகத்ரவ்யத்தை பிந்நமாக்கின. (இலங்கை வைத்தான்) தாயையும் தமப்பனையும் பிரித்தபையல்மிடுக்கழிய. பிராட்டி அம் பெய்யுமன்று இவனால் போக்கலாவது. "தத்தஸ்யஸத்ருசம்பவேத்" "தத் தஸ்யஸத்ர்ஶம்பவேத். "கூர்மையை விச்வஸித்திருக்கு மத்தனை அவளுக்குப்பரியுமாப்போலே பரியும். அவதார ஸௌலப்யம். பிறந் து முன்னே உன்னைப் பெறுகைக்கு யத்நம் பண்ணுகின்றான், இனி ப்ரதிபத்தியே உள்ளது ... ... (௫௯)

அ.—அறுபதாம்பாட்டு. இவன் பலபோக்தாவாயிருக்க அவன் ஸாதநமாக வேண்டுகிறதென்னென்ன; ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்த னாயிருப்பானொருவன் உபாயமாமித்தனைபோக்கி,அஜ்ஞனாய் அசக்த னான விவனால் செய்யலாவதுண்டோவென்கிறார்.

மூ.—சரணமறைபயந்ததாமரையானோடு
மரணாயமன்னுயிர்கட்கெல்லா—மரணாய
பேராழிகொண்டபிரானன்றிமற்றறியாது
ஓராழிசூழ்ந்தவுலகு. (௬௦)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	அபிமத ஸித்திக்கு அநுரூபமானஉபா யங்களையறிகைக்கு,	தாமரையா னோடு	ப்ரஹ்மா வோடே கூட,
சரண	ஸாதநமான,	மரண் ஆய	மரணதர்மாக்க ளா கையாலே அறிவு கேடராய்,
மறை	வேதத்தை,	மன்	நித்யமான ஸ்வரூப த்தையுடையரான,
பயந்த	நாட்டுக்கு உபதேச முகேநஉண்டாக்கி னஜ்ஞாநமாஹாத் ம்யத்தையுடையோ மென் றபிமாநித்தி ருக்கிற,	உயிர்கட் கெல்லாம்	ஆத்மாக்களுக் கெல் லாம்,
		அரணாய பேர்	ரக்ஷையானவத்தை, ரக்ஷண பரிகரமான பெரிய,

ஸமிதையிடாமணி-சுப்பிலேமேலேசூழ்த்துக் கொள்ளுகிறபூச்சி. பற் றுகைக்குஸௌலப்யமென்னென்ன; அருளிச்செய்கிறார் (அவதாரம் ஸௌலப்யமென்று.) அது இப்போது இல்லையேயென்ன; அருளிச் செய்கிறார் (பிறந்துமுன்னேயித்யாதி.) (௫௯)

பதம்.	உரை.
ஆழிகொண்ட	திருவாழியை யுடையனான,
பிரானன்றி	உபகாரகனையல்லது,
மற்று	வேறு,
ஓர்	அத்விதீயமான,
ஆழி	கடலாலே,
சூழ்ந்த	சூழப்பட்ட,
உலகு	பூலோகத்தி லுள்ள ப்ராணியானது,
அறியாது	அறியாது.

இத்தால்-சிறியாரோடுபெரியாரோடு வாசியறத் தந்தாமுடைய ரக்ஷணம் தாங்களறிய மாட்டார்கள், அவனே ஸர்வர்க்கும் ரக்ஷணப்ரகார மறியுமவன் என்றதாய்த்து. ... ...(௬0)

அ.—அறுபதாம்பாட்டு. (சரணித்யாதி) கீழ்-அவனையே உபாயமென்றது; பேறு இவர்களதே யானபின்பு இவ்வாத்மாக்கள் உபாயமானாலாகாதோவென்னில்;கீழ்-போக்கறியார்; இப்போது-தாங்கள் படுகிறது இன்னத்தாலே என்றறியார்கள். வரக்கடவதறியார்கள். ஈஸ்வரன் இவையெல்லா மறிந்து பரிஹரிக்கவல்ல ஜ்ஞாநசக்த்யாதிகளையுடையவன். "பழகியான் தாளே" என்னுமாப்போலே. ஆகையாலே அவனே உபாயமாமித்தனை, இத்தை லோகமறியாதென்கிறது.

வ்யா.—(சரணவித்யாதி) எல்லார்க்கும் ஹிதத்தைச்சொல்லக் கடவதான வேதத்தை ஓதுவிக்கப் பட்ட ப்ரஹ்மாவோடு. "சரணமறைபயந்த"என்றத்தை"அரணாய" என்றத்தோடேகூட்டி ஈச்வரனுக்கு விசேஷணமாகவுமாம். (மரணாயமன்னுயிர்கட்கெல்லாம்) கல்பாதியிலே உண்டாய் கல்பாந்தத்திலே யில்லையாகிற ப்ரஹ்மாவோடேகூட."ஜாயதேம்ர்யதே" "ஜாயஸ்வம்ர்யஸ்வ" "நஜாயதேம்ர்யதேவா" "ஜாயஸ்வம்ர்யஸ்வ" என்று – ஜநநமரண தர்மாக்களான உயிர்க்கெல்லாம். (அரணாய) ரக்ஷகமான. (பேராழியித்யாதி) கீழ் பெருமாள் ப்ரஸ்துதராகையாலே கடலை வெதுப்பித்தமக்குவசமாக்கிக்கொண்ட சக்ரவர்த்தித் திருமகனென்னவுமாம். கையிலே திருவாழியையுடையனாய் உபகாரகனான ஸர்வேஶ்வரனுடைய உபாயபாவத்தை யறிவர். (மற்றறியாதோராழி சூழ்ந்தவுலகு) மற்றுமிருந்துள்ள கடல்சூழ்ந்தலோகமானது உபாயமாக வறியாது.

அறுபதாம்பாட்டு. உபாயமானால் - உபாயயத்நம்பண்ணினால். அறிவான் - தன்னுடைய உபாயபாவத்தைத்தானே யொழிய வேறொருவம் அறிவாரில்லையென்றபடி. ஈச்வரனைஉபாயமாகவறியாது.

(சரணமறைபயந்த) அபிமதஸித்திகளுக்கடைத்த உபாயபேதங்களையுடையவேதங்களை ஜகத்துக்கோதுவிக்கும் * ப்ரஹ்மவிதாம்வரனான ப்ரஹ்மா. மந்த்ரக்ர்த்தென்பது-மந்த்ரத்ரஷ்டாவையிறே. (மரணாய) சாவதுபிறப்பதாகிற சரீரதர்மம். (மன்னுயிர்) ஆத்மதர்மம். மரணதர்மங்களுடைய. அஜ்ஞனாய் அஶக்தனாய். அரணானவை. இவற்றைவிநாசகன் அறியுமத்தனை "மூடோயம் நாபிஜாநாதி" "வேதாஹம்" "மூடோயந்நாபிஜாநாதி" "வேதாஹம்." ஆப்பான், ஜீயர்க்கு "ஜீயரோ! இவ்வுலகுஎம்பெருமானையல்லதறியாதிருந்ததோ" என்ன; "அதுக்குப் பொருளென்" என்ன; "உயர்ந்தோர் எம்பெருமானையல்லதறியார்" என்ன; இத்தை பட்டரைக்கேட்க; "அதுக்கொரு குற்றமுண்டு, 'ஓராழிசூழ்ந்த' என்று விஶேஷிக்கவொண்ணாது" என்ன; இதுக்குப் பொருளோவென்ன; "ஜீயரோ நான்சொல்லும் பொருளென்" என்ன; "உலகறியாது" என்ன; "அதுவே பொருள்" என்றார்; இத்தை பிள்ளையும் ஜீயருக்குரைக்கத்திருக்கலிகன்றிதாஸர்மறந்தத்தை உணர்த்தினாரென் றருளிச்செய்தார். ... (சுய0)

அ.—அறுபத்தோராம்பாட்டு. அவனையொழிய இவை தந்தாமுக்கு ஹிதமறியாதென்றீர், அவன்றான் இவைதன்னை நோக்கவேண்டுகிற ஹேதுவென்னென்னில்; பெற்றவனையொழிய வளர்ப்பாருண்டோ வென்கிறார்.

மூ.—உல்குமுலகிறந்தவூழியுமொண்கேழ்
விலகுகருங்கடலும்வெற்பும்—உலகினிற்
செந்தீயும்மாருதமும்வானுந்திருமால்தன்
புந்தியிலாயபுணர்ப்பு. (சுக)

நித்யமானவேதத்தைஉண்டாக்குகையாவதென்னென்ன; அருளிச்செய்கிறார் (மந்த்ரக்ர்த்தித்யாதி.) மந்த்ரத்ரஷ்டாவை "மந்த்ரக்ர்த்" என்னக்கடவது. இவற்றை-அரணானஉபாயத்தை. விநாசகன்—ஜந்மாதிகளைப்போக்குகிற ஈச்வரன். லோகமறியாது, ஈச்வரன் அறியுமென்னுமதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (மூடோயம்—மூடோயமித்யாதி.) "பிரானன்றிமற்றறியாது-உலகு" என்று-உலகாலனது ஈச்வரனையொழிய வேறொரு உபாயத்தை அறியாதென்னும் சப்தம் தோற்றாநிற்க, சப்தத்தை நெருக்கி உபாயம் ஈச்வரனறியுமொழிய உலகறியாதென்னுமதுக்கு ஸம்வாதமாக அருளிச்செய்கிறார் (ஆப்பானித்யாதி.) பொருளோ - பொருளேது. பொருளென் என்று வெறுத்தாப்போலே சொல்ல, ஆனாலும்கேட்டவுமக்குச்சொல்லவேணுமே, உபாயம் ஈச்வரன் அறியுமத்தனை, உலகறியாது என்று பட்டர் ஜீயர்க்கருளிச்செய்தாரென்றபடி. (சுய0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உலகும்	பூம்யாதிக ளான லோகங்களும்,	உலகினில்	லோகத்தி லுண்டான,
உலகு	லோகங்களெல்லாம், காலசேஷ மாம்படி,	செம்	சிவந்த நிறத்தையுடைய,
		தீயும்	தேஜஃபதார்த்தங்களும்,
இறந்த	அழிந்துகிடக்கிற,		
ஊழியும்	ஸம்ஹாரகாலமும்,		
ஒண்	அழகிய,	மாருதமும்	வாயுவும்,
கேழ்	நிறத்தையுடைத்தாய்,	வானும்	ஆகாசமும் இவையெல்லாம்,
விலகு	அலையெறியாநின்றுள்ள,		பிராட்டிக்குகப்பாக,
கருங்கடலும்	ச்ரமஹரமானகடலும்,	புந்தியில்ஆய	ஜகத் ஸ்ர்ஷ்டியிலே ஒருப்பட்ட,
	பூமிக்குஆணி யடித்தாப்போ லிருக்கிற,	திருமால்தன்	ச்ரியஃபதி யுடைய,
வெற்பும்	குலபர்வதங்களும்,	புணர்ப்பு	ஸங்கல்ப கல்பிதமானவகுப்பை யுடைத்து. ... (கூக)
	பின்னையும்,		

அ.—அறுபத்திரண்டாம்பாட்டு. இவற்றையுண்டாக்கித் தான் கடக்கவிருக்கையன்றிக்கே இவற்றைக் களைபிடுங்கி நோக்குவானும் அவனே யென்கிறார்.

அ.—அறுபத்தோராம்பாட்டு. (உலகும்) ஹிதத்திலே அறியாததுக்கு தந்தாமுடைய உத்பத்தியிலேவைத்து அறிவுணர்த்துகிறார்.

வ்யா.—(உலகும்) லோகமடங்க நோவுபடாநின்றன வென்று அதுக்குப்பிராட்டிக்குப்ரியமாகத் தன்ஸங்கல்பஜ்ஞாநத்தாலே ஸ்ர்ஷ்டித்துத் தெளிந்து அழகியதாய்ச்சலிக்கின்றகடலும். (வெற்பும்) பூமிக்கு ஆணியடித்தாப்போலே யிருக்கும். (திருமாலித்யாதி)தாய்க்குப்ரியமாகப்ரஜைகளை நோக்குமித்தனையிறே.இத்தலை யறிந்தோம், ஸ்ர்ஷ்த்தது விலக்காமையே உள்ளது. ... ... (கூக)

அறுபத்தோராம்பாட்டு. வைத்து - தொடங்கி.

புந்தி-புத்தியாய், அத்தால் - ஸங்கல்பஜ்ஞாநமென்கிறது. புணர்ப்பு -ஸ்ர்ஷ்டி. இவை அறியாதகாலத்திலும் அவனே ஸ்ர்ஷ்டிக்கையாலே இப்போது உபாயமறிவானும் அவனென்றபடி. (கூக)

மூ.—புணர்மருதினூடுபோய்ப்பூங்குருந்தஞ்சாய்த்து
மணமருவமால்விடையேழ்செற்றுக்—கணம்வெருவ
வேழுலகந்தாயினவுமெண்டிசையும்போயினவுஞ்
சூழரவப்பொங்கணையான்றோள். (கூஉ)

பதம்.	உரை.
புணர்	இடை வெளியறப் பொருந்திநின்ற,
மருதினூடு	யமளார்ஜுநங்களின் நடுவே, ஊடறுத்துக்கொண்டு,
போய்	தவழ்ந்துபோய், இலையும் கொம்பும் தெரியாதபடி,
பூ	பூத்துக்கிடந்த,
குருந்தம்	குருந்தத்தை,
சாய்த்து	தள்ளிப்பொகட்டு, பிராட்டியைக் கைப்பிடிக்கையாகிற,
மணம்மருவ	கல்யாணம்தலைக்கட்டுகைக்காக,
மால்	பெரிய வடிவையுடைய,
விடையேழ்	ரிஷபங்களேழையும்,
செற்று	முடித்து, "ஸர்வாஸுராணாம்" "ஸங்கைஸ்ஸூராணும்" என்கிறபடியே அநுகூலப்ரதிகூல விபாகமற,
கணம்	ஸர்வப்ராணிகணமும், "என்னுகத்தேடுகிறதோ!" என்று,
வெருவ	நடுங்கும்படி,
ஏழுலகம்	ஸப்தலோகங்களையும்
தாயினவும்	வருத்தமற அளந்துகொண்டனவும்,
எண்டிசையும்	எட்டுதிக்குக்களிலும்,
போயினவும்	போய் வ்யாபித்தனவும்,
சூழ்	விஸ்தர்தனாய், மென்மை குளிர்த்தி நாற்றங்களையுடைய,
அரவம்	திருவநந்தாழ்வானாகிற,
பொங்கு	ஓங்கிய,
அணையான்	திருப்படுக்கையிலே கண்வளர்ந்தருளின ஸர்வேச்வரனுடைய,
தோள்	திருத்தோள்கள்கிடீர்.

அந்தப் படுக்கையும் பொறாத ஸௌகுமார்யத்தை யுடையவன் கிடீர் இச்செயல்களைச்செய்தான். அப்படுக்கையில் கண்வளரப்பொறாமல் இப்படி அலமர்ந்து திரிவதே! என்று வயிறுபிடிக்கிறார். ()

அ.—அறுபத்திரண்டாம்பாட்டு. (புணர்) உத்பந்நமான பின் இவரதோதங்காரியத்துக்குக் கடவராயிருக்கிற தென்கிறது.

அறுபத்திரண்டாம்பாட்டு. இவரதோ-இவருடையயத்நமோ.

வ்யா.—(புணரித்யாதி) ஒன்றென்னலாம்படி நிர்விவரமாயிருந்த மருதினிடைபோய். (பூங்குருந்தம் சாய்த்து) தர்ஶநீயமான குருந்தைச்சாய்த்தும். (மணமித்யாதி) நப்பின்னைப் பிராட்டியுடையபாணிக்ரஹணமங்களமானது தலைக்கட்டும்படிக்கீடாகப்பெரிய எருதுகளேழையுஞ் செற்று. (கணமித்யாதி) "సజ్జైస్సురాణామ్" "ஸங்கைஸ்ஸுராணாம்" என்கிறபடியே அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற "இது வென்னாகப் புகுகிறதோ!" என்றுவெருவும்படிக்கீடாக ஏழுலகையும் அநாயாஸேநக்கடந்தனவும், எட்டு திக்குக்களிலும் போய் வ்யாபித்தனவும். (சூழித்யாதி)பரந்து, மென்மை குளிர்த்தி நாற்றங்களையுடைத்தா யிருந்துள்ள திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவன்.

களைபிடுங்கும்படி (பூங்குருந்தம்) பூவைக்காட்டி அந்யபரதைபண்ணி வஞ்சிக்கப்பார்க்கை. (மணமித்யாதி) தனக்குவந்த கர்மத்தைத் தீர்த்தபடி. (ஏழுலகித்யாதி) பிராட்டிக்குச்செய்யும்செயலை இந்த்ரனுக்குச் செய்கை. (எண்டிசையும் போயினவும்) திக்குக்களை வெளியடைக்கை. (சூழரவித்யாதி) இப்படிபடுக்கையில் கண்வளரப்பெறாதே அலமர்ந்து திரிவதே!. [పాణ్డరస్యాతపత్రస్యచ్ఛాయాయాంజరితంమయా-பாண்டரஸ்யாதபத்ரஸ்யச்சாயாயாம் ஜரிதம்மயா] ஸிம்ஹாஸநத்திலிருக்க அவஸரம்பெற்றிலன், இக்காலத்திலேயிறே நிழலிலேமுத்துக்குடையிடுவது ... ... (௬௨)

அ.—அறுபத்துமூன்றாம்பாட்டு. இப்படியிருக்கிற வவன்பக்கலிலே என்னுடைய ஸர்வேந்த்ரியங்களும் ப்ரவணமாய்த்து, நானும் ப்ரவணனானே னென்கிறார்.

மூ.—தோளவணையல்லாற்றொழாவென்செவியிரண்டுங்
கேளவனதின்மொழியேகேட்டிருக்கும்—நாநாளுங்
கோணாகணையான்குரைகழலேகூறுவதே
நாணாமைநள்ளேன்நயம். (௬௩)

பொங்கணை—கிளர்ந்தவணை.

மேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார் (களைபிடுங்கும்படியென்று.) தோளே இவையெல்லாம் செய்ததென்றபடி. படுக்கைவிட்டு ரக்ஷணார்த்தமாகத் திரிந்தவிடமுண்டோ வென்ன; அருளிச்செய்கிறார் (పాణ్డరస్యాతపత్ర - பாண்டரஸ்யாதபத்ரேத்யாதி.) இக்காலத்திலே - வர்த்தனான இக்காலத்திலே. ராஜசிஹ்நார்த்தமாக ஸிம்ஹாஸநத்திலே யிருக்கிறபோது நிழலிலே குடையிடுவது, இதுக்குமுன்பெல்லாம் ரக்ஷணார்த்தமாக வெய்யிலிலே குடையிட்டுத் திரிந்தே னென்றபடி. ... ... (௬௨)

பதம்.	உரை.
தோள்	என்னுடைய தோள்களானவை, “நான்வேறு சிலரைத்தொழு” என்னினும்;
அவனையல்லால்	அந்த ஸர்வேச்வரனையல்லது,
தொழா	தொழுகிறனவில்லை;
என்	என்னுடைய,
செவியிரண்டும்	செவிகளிரண்டும்,
கேள்	நிருபாதிக பந்துவான,
அவனது	அவனுடைய,
இன்	* ஸம்ச்ரவே மதுரமான,
மொழிகேட்டு	பேச்சைக்கேட்டு,
	அத்தாலே,
இருக்கும்	தரித்திருக்கும்;
நா	நாவானது,
நாளும்	ஸர்வகாலமும்,
கோள்	மிடுக்கையுடைய,

பதம்.	உரை.
நாகம்	திருவநந்தாழ்வானை,
அணையான்	படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய,
குரைகழலே	ஆபரணத்வநியையுடைத்தான திருவடிகளையே,
கூறுவது	சொல்லாநிற்கும்; நாட்டார் விரும்பி மேல்விழுகிற விஷயங்களை அவர்களில் வ்யாவ்ர்த்தனான நான்,
நாணாமை	நிர்லஜ்ஜனாய்க் கொண்டு,
நள்ளேன்	செறியேன்;
நயம்	ஜ்ஞாநம் பிறந்த பின்பு லஜ்ஜித்து மீளவேண்டும்படிகாணும் விஷயப்ராவண்யத்தின் பொல்லாங்கிருப்பது. ()

அ.—அறுபத்துமூன்றும்பாட்டு. (தோள்) இப்படி அவன் ஸுலபனென்று அநுஸந்தித்தபின்பு என்னுடைய இந்த்ரியங்கள் அவனையல்லதறிகிறதில்லை.

வ்யா.—(தோளித்யாதி) நான்வேறே யொன்றைதொழச்சொன்னாலும் என்தோளானது அவனையல்லது தொழுகிறதில்லை. (என்செவியித்யாதி) என்செவிகள் உறவானவனுடைய இனிய மொழியைக் கேட்டிராநின்றது. (நாநாளும்) என்னுடைய நாக்கானது எப்போதும். (கோள்நாகணையித்யாதி) “கோள்” என்று - ஒளிக்கும்,மிடுக்குக்கும்பேர். “ప్రకృష్టవిజ్ఞానబలైకధామని” “ப்ரகர்ஷ்டவிஜ்ஞாநபலைகதாமநி” என்னும்படியே அநந்தசாயியான ஸர்வேச்வரனையே கூறுமத்தனை.

அ.— அறுபத்துமூன்றும்பாட்டு. கேள் - உறவு. சப்தாதிகள் ஆசைக்கும் ஹாஸ்யத்துக்கும் விஷயம். நம்மை விரும்புகை.

(நயம்-நாணமைநள்ளேன்) ஆசைப்படப்படுவதான சப்தாதிகளை லஜ்ஜியாதே கிட்டேன். ஹாஸ்யமான விஷயமென்றுமாம். அவன் ரக்ஷகனாகவுமாம், தவிரவுமாம்.

(தோளவனை) அவன்தான் தனக்குப் பகையென்னலாம்படியிருந்தாலும் என்செவிதானும் கேட்பது. ஆசைப்படும்விஷயங்கள். (நாணமைநள்ளேன்) ஆண்பிள்ளைச் சோராள்வியை ஆசைப்பட்டவனைப்போலே, உணர்ந்தவனுக்கு லஜ்ஜிக்கவேணும். (கோள்) பிராட்டிக்கும் தனக்கும் கிடைக்கைக்குண்டாகை. ... (சுங)

அ.—அறுபத்துநாலாம்பாட்டு. உமக்கும் உம்முடைய கரணங்களுக்கும் பகவத்விஷயத்திலே, இதரவிஷயங்களைக் கடைக்கணியாதபடி ப்ராவண்யமுறைத்தாலும், துர்வாஸநையாலே அவைவந்து மேலிடில்செய்வதென்னென்ன; நான்நின்றநிலை யிதுவானபின்பு எங்ஙனே அவைவந்து மேலிடும்படி யென்கிறார்.

மூ.—நயவேன்பிறர்பொருளைநள்ளேன்கீழாரோடு
உயவேனுயர்ந்தவரோடல்லால்—வியவேன்
திருமாலையல்லதுதெய்வமென்றேத்தேன்
வருமாறென்நம்மேல்வினை. (சுச)

பதம்.	உரை.
	"𑌉𑌤𑍍𑌤𑌮𑌃𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃" "உத்தம: புருஷஸ்த்வந்ய:" என்கிறபடியே,
பிறர்	ஸர்வவிஸஜாதீயனான ஸர்வேச்வரனுடைய,
பொருளை	ஆத்மத்ரவ்யத்தை,
நயவேன்	என்னதென்று விரும்பேன்; பிறரதான ஆத்மாவை "என்னது" என்றிருக்கும்,

பதம்.	உரை.
கீழாரோடு	தாழ்ந்த ஸம்ஸாரிகளோடு,
நள்ளேன்	செறியேன்; "உத்துங்கமான ஆத்மவஸ்து ஸர்வோத்தமனான ஸர்வேச்வரனுடையது" என்றிருக்கும்,
உயர்ந்தவரோடல்லால்	மஹாப்ரபாவரான ஸ்ரீவைஷ்ணவர்களையொழிய,
உயவேன்	ஏதேனுமொன்றை உசாவேன்;

மேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார் (அவன்றானித்யாதி.) "நயம்" என்றத்தை யருளிச்செய்கிறார் (ஆசைப்படுமித்யாதி.) விஷயங்களைக்கண்டால் நாணவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஆண்பிள்ளையித்யாதி.) ஆண்பிள்ளைச்சோராள்வி - பெண்வடிவுகொண்ட புருஷன். கோள் - மிடுக்கு. கிடக்கைக்குண்டாகை- இருவருங்கிடக்கைக்கு இடம்போருகை. (சுங)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திருமாலை யல்லது	ஸர்வாதிகனான ச்ரியஃபதியையொழிய, புறம்பே சிலரை,	வியவேன்	ஆச்சர்யப்படேன்; இப்படியானபின்பு, பகவதநுக்ரஹபாத்ரரான;
தெய்வமென்று	ஆச்ரயணீய தேவதைகளென்றுபுத்தி பண்ணி,	நம்மேல் வினை	நம்முடையமேலே, தந்நிக்ரஹரூபமான பாபம்,
ஏத்தேன்	வாய்விட்டுப்புகழேன்; இவ்வாகாரங்கள் நமக்குண்டாய்த்தேயென்று	வருமாறு என்	வந்துமேலிடும்படி, எங்ஙனே.

திருமாலை யல்லது வியவேன், அவனையல்லது தெய்வமென்றேத்தேன் என்னவுமாம். (சுச)

அ.—அறுபத்துநாலாம்பாட்டு. (நயவேன்) ப்ராப்தத்தைச் செய்து அப்ராப்தத்தைச்செய்யேனென்றிருக்கிறஎன்பக்கல் பாபத்துக்கு வரப்போமோவென்கிறார்.

வ்யா.—(நயவேன் பிறர்பொருளை) பிறர்பொருளை ஆசைப்படேன். த்ரவ்யத்துக்கு உத்கர்ஷமாவது - த்ரவ்யந் தன்னுடைய நன்மையாலும், உடையவனுடைய நன்மையாலும். த்ரவ்யம் பரிணாமியான அசித்தன்றிக்கே ஆத்ம த்ரவ்யமாயிருந்தது. "యస్యాత్మాశరీరమ్" "పతింవిశ్వస్య" "யஸ்யாத்மாஶரீரம்," "பதிம்விஶ்வஸ்ய" என்று ஓதப்படுகிறவன் உடையவன். உத்க்ருஷ்டமான ஆத்மாவை "என்னது" என்று இரேன். (நள்ளேன் கீழாரோடு) ஆத்மாவை "என்னது" என்றிருக்குமவர்களாய்த்துக் கீழாராகிறார், அவர்களோடு கிட்டேன். தங்கள் படியாக்கிக் கொள்வரொன்று. (உயவேனுயர்ந்தவரோடல்லால்) உத்தமரொன்னுமவர்களோடல்லது உசாவேன். (வியவேன் திருமாலையல்லது) ஸ்ரீயஃபதியைக்கண்டல்லது விஸ்மயப்படேன். (தெய்வமென்றேத்தேன்) அவனை யல்லது வேறுசிலரைத் தெய்வமென்று ஸ்துதியேன். (வியவேன்திருமாலை) ஸ்ரீயஃபதியினுடைய ஐச்வர்யத்தை அர்த்தவாதமென்றிரேன். (வருமாறென் என்மேல்வினை) "అవశ్యమనుభోక్తవ్యమ్" "அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற வசநத்தைக் கொண்டு என்பக்கலிலே வரப்போமோ பாபத்துக்கென்கிறார்.

(நயவேன்) வாக்யார்த்தம்க்ர்தக்ர்த்ய னென்கிறார். எம்பெருமான் விரும்பும் ஆத்மாவை அபஹரியேன்.

அ.— அறுபத்துநாலாம்பாட்டு. உயவுகை-உசாவுகை.

ராவணன்செயல் செய்யேன். கீழோர்-அவனுக்குக்கூட்டுப்படும் மாரீசப்ரப்ருதிகள். (உயர்ந்தவர்) விச்வாமித்ராதிகள். [महात्मानस्तु- மஹாத்மாநஸ்து] பெரியோரை. (வியவேன்) [तृणीकृतविरिञ्चादि निरङ्कुशविभूतयः - த்ர்ணீக்ர்தவிரிஞ்சாதி நிரங்குசவிபூதய:] ப்ரஹ்மாதிகளைக்கண்டால் அடிப்படைக்கல்லாகநினைத்திருக்குமத்தனை. திருமாலையல்லது - வியவேன்; தெய்வமென்றேத்தேன். (வருமாறென்னென்மேல்வினை) "अवश्यमनुभोक्तव्यम्" "அவஶ்யமநு போக்தவ்யம்" என்கிறவை என்னை நலியவோ. ... (௨௪)

அ.—அறுபத்தஞ்சாம்பாட்டு. இது எனக்கொருவனுக்குமேயன்று, அவனை ஆச்ரயித்தார்க்கெல்லாம் ஒக்குங்கிடீரென்கிறார்.

மூ.—வினையாலடர்ப்படார்வெந்நரகிற்சேரார்
தினையேனுந்தீக்கதிக்கள்செல்லார்—நினைதற்
கரியானைச்சேயானையாயிரம்பேர்ச்செங்கட்
கரியானைக்கைதொழுதக்கால். (௨௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நினைதற்கு	ஸ்வயத்நத்தால்இவ்வளவென்று அளவிட்டு நினைக்கைக்கு,	கண்	திருக்கண்களையும், அதுக்குப் பகைத்தொடையான,
அரியானை	மிகவும் அரியனாய், மநோரத பதத்துக் கெட்டாதபடி,	கரியானை	கறுத்தவடிவையுமுடையனான ஸர்வேச்வரனை,
சேயானை	அதிதூரஸ்தனாய், தன்னருளாலே யறிந்து அநுபவிக்கவிழிந்தார்க்கு இழிந்தவிடமெங்கும் துறையாம்படி, குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான,	கைதொழுதக்கால்	அஞ்சலிப்ரணாமாத்யநுவர்த்தநங்களைப்பண்ணி ஆச்ரயித்தால்,
		வினையால்	புண்யபாபரூப கர்மங்களாலே,
		அடர்ப்படார்	நெருக்குப்படார்; அதுக்குபலமாகவரக்கடவதாய்,
ஆயிரம்பேர்	ஆயிரம் திருநாமங்களையுடையனாய்,	வெம்	அதிக்ரூரமான,
செம்	வாத்ஸல்ய ஸூசகமாய்ச்சிவந்த,	நரகில்	ஸம்ஸாரமாகிற நரகத்திலே,

"பொருள்" என்றது உதாரத்துக்கு உபலக்ஷணமாக்கி அருளிச்செய்கிறார் (ராவணனித்யாதி.) உயர்ந்தவர் - மஹாத்மாக்களாய், பெரியோராயிருக்கிற விச்வாமித்ராதிகள். (௨௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சேரார்	சென்றுகிட்டார்;	திக்கதிக்கள்	துர்மார்க்கங்களில்,
தினையேனும்	ஏகதேசமும்,	செல்லார்	போகார். (சுரு)

அ.—அறுபத்தாறும்பாட்டு. அறிவுடையராயிருப்பார்களாகில் பஜநீயனவனே கிடீரென்கிறார்.

மூ.—காலையெழுந்துலகங்கற்பனவுங்கற்றுணர்ந்த
மேலைத்தலைமறையோர்வேட்பனவும்—வேலைக்க
ணோராழியானடியேயோதுவதுமோர்ப்பனவும்
பேராழிகொண்டான்பெயர். (சுசு)

வ்யா.—அறுபத்தஞ்சாம்பாட்டு. (வினையித்யாதி) பாபத்தாலடர்க்கப்படார். (வெந்நரகில் சேரார்.) பாபபலமான நரகிலும் சேரார். (தினையித்யாதி) தர்மபுத்ரன் நரகதர்சநம் பண்ணினவோபாதியுங் கூடாது இவர்களுக்கு. (நினைதற்கரியானை) ஸ்வயத்நத்தாலே அறியப்போகாதவனை. (சேயானை) அதுக்கடி தூரஸ்தனுகை. (ஆயிரமித்யாதி) தான் கொடுத்த அறிவையுடையவர்களுக்கு ஏத்துகைக்கு ஆயிரம் திருநாமத்தையும், கண்டு அநுபவிக்கைக்கு ச்ரமஹரமான வடிவையுமுடையவனை. (கைதொழுதக்கால்) அஞ்சலிபண்ணினல்.

(வினையாலடர்ப்படார்) என்னைப்போலே விதேயகரணமன்றியே பாவநமென்று ஆச்ரயித்தார்க்கு பாவம்போம். (வினை) இங்கு அநுபவிக்கும் பாபபலம் அநுபவியார். (வெந்நரகு) போய் அநுபவிக்கும் பாபபலம். (தினை) அஸத்யாபாவத்தாலே. (நினைதற்கரியானை) ஸ்வயத்நத்தாலே நினைப்பார்க்கு அரியானை. (சேயானை) இவன் குற்றமன்று, வஸ்துஸ்வபாவம். (ஆயிரமித்யாதி) தானேகாட்டுவார்க்கு இழிந்தவிடமெல்லாம் துறை. (கைதொழுதக்கால்)பாலைக்குடிக்க நோய்போம்; வகுத்தது செய்யவமையும். ... (சுரு)

அ.— அறுபத்தஞ்சாம்பாட்டு. மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (என்னைப்போலேயித்யாதி.) விதேயகரணம், "தோளவனையல்லால்தொழா" என்கிறபடியே ப்ராப்யமாகப்பற்றுகை. "செங்கட்கரியான்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (பாலைக்குடிக்க நோய்போமென்று.) "கைதொழுத" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (வகுத்ததியாதி.) (சுரு)

பதம்.	உரை.
	"கிளரொளி யிளமை" என்கிறபடியேபஜநாநுரூபமான சரண பாடவமுள்ள,
காலை	பால்யாவஸ்தையிலே,
எழுந்து	ஆச்ரயணோந்முகராய்க்கொண்டு கிளர்ந்து,
உலகம்	லோகமடங்க,
கற்பனவும்	அப்யஸிக்குமவையும்,
	ஜ்ஞாதவ்யார்த்தங்களை,
கற்று	ஓராசார்யன் பக்கலிலே கேட்டு,
உணர்ந்த	அவற்றையலகலகாக அறிந்திருப்பார்களாய்,
	அத்தால்வந்த,
மேலை	மிக்கவுயர்த்தியை யுடையரான
தலைமறையோர்	பரமவைதிகரடங்கலும்,
	அறிவின் பலமாக ஸாக்ஷாத்கரிக்க,

பதம்.	உரை.
வேட்பனவும்	ஆசைப்படுவனவும்,
வேலை	கரையோடே கூடி,
கண்	இடமுடைத்தாய்,
ஓர்	அத்விதீயமான,
ஆழியான் அடியே	கடலிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரன் திருவடிகளே,
	அதுக்குஸாதநமாக,
ஓதுவதும்	ச்ரவணம்பண்ணுவதும்,
ஓர்ப்பனவும்	மநநம்பண்ணுவதும்,
பேர்	ரக்ஷண பரிகரமான பெரிய,
ஆழிகொண்டான்	திருவாழியையுடையனான ஸர்வேச்வரனுடைய,
	குணசேஷ்டிதாதிகளுக்குவாசகமான,
பெயர்	திருநாமங்கள்.

பேராழிகொண்டான் - பெரிய கடல்போலே ச்ரமஹரமான வடிவை யெடுத்துக்கொண்டிருக்கிறவனென்னவுமாம். அப்போது, "ஓராழியான்" என்றது-அத்விதீயமான திருவாழியை யுடையவனென்றுகொள்வது. (௬௬)

வ்யா.—அறுபத்தாறும்பாட்டு. (காலையெழுந்து) ஸத்வோத்தரமான காலத்திலே எழுந்திருந்து. (உலகம்) மோக்ஷேச்சை யுடையவர்கள் கற்பனவும். (கற்றுணர்ந்த வித்யாதி) அறிவுதலைக்கட்டினவர்கள் பாவநாப்ரகர்ஷத்தாலே ஸாக்ஷாத்கரிப்பனவும். (வேலையித்யாதி) இவற்றினுடைய ரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலே கையும் திருவாழியுமாய்க்கிடக்கிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளையே.

(பேராழிகொண்டான் பெயர் - ஓதுவதும் ஓர்ப்பனவும்) ஸர்வேச்வரனுடைய திருநாமங்களே இவர்களுடைய ச்ரவணத்துக்கும் ஆநந்தத்துக்கும் விஷயமாவது.

(காலை) ஸத்வோத்தரமான காலம். (வேலைக்கணோராழியானடியே) கரையை யுடைத்தாய் ஒப்பில்லாக் கடல். (பேராழிகொண்டான்) இவர்களை ரக்ஷிக்கைக்கு உருவின பத்திரமும் தானுமாயிருக்கை. "கைகழலா நேமியான்." ... ... (௬௬)

அ.—அறுபத்தேழாம்பாட்டு. இப்படி அறிவில் தலைநின்றவர்கள் அவனை ஆசைப்படுகைக்கடி, அறிவுக்கு கந்தவ்யபூமி ச்ரியஃபதியல்லதில்லாமையாலே யென்கிறார்.

மூ.—பெயருங்கருங்கடலேநோக்குமாறொண்பூ
வுயருங்கதிரவனேநோக்கும்—உயிரும்
தருமனையேநோக்குமொண்டாமரையாள்கேள்வ
னொருவனையேநோக்குமுணர்வு. (௬௭)

பதம்.	உரை.
பெயரும்	காற்று வளத்திலே கொந்தளித்துக் கிளரக்கடவதாய்,
கரும்	பரப்பை யுடைத்தான,
கடல்	கடலை,
ஆய	ஆறானது,
நோக்கும்	நோக்காநிற்கும்;
ஒண்	அழகிய,
பூ	தாமரைப்பூவானது,
உயரும்	உச்சஸ்தல வர்த்தியான,
கதிரவனே	ஆதித்யனையே,
நோக்கும்	நோக்காநிற்கும்;
உயிரும்	பகவத்பர ரல்லாத நாட்டில் ப்ராணிகளடங்கலும், சரீரவிச்லேஷா நந்தரத்தில்,
தருமனையே	தர்மராஜாவான யமனையே,
நோக்கும்	சென்று கிட்டாநிற்கும்; இவையிவைநியதமானாப்போலே,
உணர்வு	ஜ்ஞாநமானது,
ஒள்	அழகிய,
தாமரையாள்	தாமரைப்பூவையிருப்பிடமாக வுடைய பெரிய பிராட்டியார்க்கு,
கேள்வன்	வல்லபனான,
ஒருவனை	ஸர்வேச்வர னொருவனையுமே,

அ.— அறுபத்தாறும்பாட்டு. மேலைத்தலை மறையோர் - உத்தரபாகத்தில் உபநிஷத்தாத்பர்யம் கைப்பட்ட ஜ்ஞாநாதிகர். (வேலைக்கண்) வேலை-ஸமுத்ரமாதல்; கரையாதல். கண்-இடம், ஆழி-ஆயுதமாதல்; ஸமுத்ரமாதல். பேராழிமுந்தினது நிரூபகம்; இரண்டாது ஆயுதம். பத்திரம் - ஆயுதம். ... ... (௬௬)

பதம்.	உரை.
நோக்கும்	சென்று பற்றாநிற்கும்.

ஜ்ஞாநமாகில் ச்ரியஃபதியைப் பற்றியல்லது நில்லாதென்கை. பகவத் வ்யதிரிக்த விஷயங்களைப்பற்றிப்பிறக்கும் ஜ்ஞாநமெல்லாம் அஜ்ஞாநகல்பம். "తజ్జ్ఞానమజ్ఞానమతో౽న్యదుక్తమ్" "విద్యాన్యా శిల్పనైపుణమ్" "தத்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம்" "வித்யாந்யா சில்பநைபுணம்" என்னக்கடவதிறே. (சுஎ)

அ.—அறுபத்தெட்டாம்பாட்டு. இப்படி அறிவுக்கு பர்யவஸாநபூமி அவனல்லதுஇல்லையாயிருக்க அவன்றன்மை யறிவார்தான் இல்லையென்கிறார்.

மூ.—உணர்வாராருன்பெருமையூழிதோறூழி
உணர்வாராருன்னுருவந்தன்னை—யுணர்வாரார்
விண்ணகத்தாய்மண்ணகத்தாய்வேங்கடத்தாய்நால்வேதப்
பண்ணகத்தாய்நீகிடந்தபால். (சுஅ)

பதம்.	உரை.
விண்ணகத்தாய்	பரமபதத்திலே மேன்மைதோற்ற வெழுந்தருளி யிருக்குமவனாய்,
மண்ணகத்தாய்	பூம்யுபலக்ஷிதையான லீலாவிபூதியிலே நீர்மைதோற்ற வந்தவதரிக்கும் ஸ்வபாவனாய்,
	இரண்டிடத்துக்கும் பொதுவாய்க்கொண்டுமேன்மை நீர்மைகளிரண்டும் கரைபுரளும்படி,
வேங்கடத்தாய்	திருமலையிலேவந்து நின்றருளினவனாய்,

அ.—அறுபத்தேழாம்பாட்டு. (பெயரும்) மோக்ஷேச்சையுடையவர்களுக்கும் அறிவுதலைநின்றவர்களுக்கும் அவனுடைய திருவடிகளை யேத்துவது, அவனுடைய திருநாமங்களையே ஏத்துவது என்று சொல்லிற்று, ஜ்ஞாநத்துக்கு அவனே விஷய மாகையாலேயென்கிறது.

வ்யா.—(பெயருமித்யாதி) ஆறானது, பூர்ணமாய்ச்சலியாநின்ற கடலையே நோக்கா நின்றது. ஆறுகடலை நிறைக்கைக்கன்றுபுகுகிறது, புக்கல்லது தான் தரிக்கமாட்டாமை. தாமரைப்பூவானது, தூரஸ்தனாகிலும் ஆதித்யனுக்கு அலருமத்தனை, அக்ந்யாதிகளுக்கு அலராது. (உயிரும் தருமனையே நோக்கும்) யமனைக்கிட்டியல்லது வேறோரிடத்தில் புகவொண்ணாது. (ஒண்தாமரையித்யாதி) ஜ்ஞாநமாகில் ச்ரியஃபதியை யறியுமத்தனை, மற்றொன்றறியாது. "తజ్జ్ఞానమజ్ఞానమతో౽న్యదుక్తమ్" "தத்ஜ்ஞாந மஜ்ஞாநமதோந்யதுக்தம்" என்னும்படியே. "విద్యాన్యా శిల్పనైపుణమ్" "வித்யாந்யாஶில்பநைபுணம்".

பதம்.	உரை.
நால்வேதப் பண்ணகத் தாய்	ஸ்வர ப்ரதாநமான நாலு வேதத்தாலும் உக்தவைபவயுக்தனாக ப்ரதிபாதிக்கப்படும் ஸ்வபாவனானவனே,
உன்	இப்படியிருக்கிற வுன்னுடைய,
பெருமை	குணவைலக்ஷண்யத்தால்வந்தபெருமையை,
ஊழிதோறூழி	காலதத்வமெல்லாம் கூடினாலும்,
உணர்வாரார்	அறியவல்லாரார்;

பதம்.	உரை.
	அந்த குணங்களுக்கு ஆச்ரயமாயிருக்கிற,
உன்னுருவந்தன்னை	உன்னுடைய திவ்யாத்மஸ்வரூபவைலக்ஷண்யத்தைத்தான்,
உணர்வாரார்	அறியவல்லாரார்;
நீ	நீ,
கிடந்த	ஆர்த்த ரக்ஷணத்துக்காகப் பள்ளிகொண்டருளுகிற,
பால்	திருப்பாற்கடலை,
உணர்வாரார்	அறியவல்லாரார். ()

அ.—அறுபத்தெட்டாம்பாட்டு. (உணர்வாரார்) கீழ்-ஜ்ஞாநத்துக்கு விஷயம்அவனென்றது; உணரவரிதென்கிறது-இப்பாட்டில்.

வ்யா.—(உணர்வாராருன்பெருமை) "జుష్టంయదాపశ్యత్యన్యమీశమ్" "ஜுஷ்டம்யதாபஶ்யத்யந்யமீஶம்" என்கிறபடியே- குணங்களோடே கூடியிருக்கிற வுன்னை உணர்வாராரென்கிறது. (ஊழியித்யாதி) காலத்தையெல்லா மொருபோகியாக்கி, உன்னுடைய ஸ்வரூபரூபகுணங்களை உணரப்புக்காலுணரவரிதென்கிறது. (விண்ணகத்தாய் மண்ணகத்தாய்) ஸ்ரீவைகுண்டத்திலே யிருந்த நீஅவதாரரூபேண பூமியிலே வந்தவதரித்துஅத்தாலேஸௌலப்யத்தையுடையவனே. கடல் கிட்டிற்றென்னா பரிச்சேதிக்கப் போகாதிறே. (வேங்கடத்தாய்) ஸம்ஸாரிகளுடைய ஸகலதுரிதங்களும் போம்படி திருமலையிலே வந்து நிற்கிறவனே. (நால்வேதப்பண்ணகத்தாய்) ஸ்வரத்துக்குள்ளீடாய் நின்று ப்ரதிபாதிக்கிற வேதங்களுக்கு ப்ரவர்த்தகனானவனே!. (நீகிடந்தபால் உணர்வாரார்.)

(உணர்வாராரித்யாதி)உன்னாலுமறியவொண்ணாதுஉன்னைச்வர்யம். (ஊழிதோறூழியித்யாதி) காலமெல்லாங் கூடினாலும் ஸௌலப்ய மறியவொண்ணாது. விண்ணகம், அவதாரம், இவையெல்லை.

அறுபத்தெட்டாம்பாட்டு. நீகிடந்தபால்-பாலிலேநீகிடந்தது. ஏவமாதியெல்லாமுணர்வாராரொன்றபடி. "உரு" என்று-கண்ணுக்கு விஷயமாய் ஸௌலப்யம். கீழ்ச்சொன்ன பரத்வ ஸௌலப்யங்களுக்கு எல்லையேதென்ன; அருளிச்செய்கிறார் (விண்ணகம் அவதாரமென்று.)

விண்ணகத்தானாய், பாற்கடலானாய், மண்ணகத்தானாய், வேங்கடத்தானாய் நின்றான். (நால்வேதப்பண்ணகம்)ஐச்வர்யம் ப்ரதிபாதிக்கிறது கண்ணுக்கு விஷயமிறே. மற்றையதிங்குச்சொல்லிற்று அநுவாதம். காண்கையால். 𑌤𑌸𑍍𑌯 - 𑌯𑍋𑌨𑌿𑌮𑍍 - தஸ்ய - யோநிம் = அவனுடைய பிறப்பு. * உயர்வற வுயர்நலமுடையவன்பிறப்பிறே. 𑌧𑍀𑌰𑌾𑌃- 𑌧𑍀𑌮𑌤𑌾𑌮𑌗𑍍𑌰𑌸𑌰𑌾𑌃 - தீராஃ-தீமதாமக்ரேஸராஃ- * மயர்வறமதிநலம் பெற்றார். [𑌪𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿-பரிஜாநந்தி] க்ஷணந்தோறும் * எத்திறமென்பர்.

அ.— அறுபத்தொன்பதாம்பாட்டு. வேறொருவரால் அறியவொண்ணாமை கிடக்கிடீர், ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனானவுன்னாலேதான் உன்னை யறியப்போமோ வென்கிறார்.

மூ.—பாலன்றனதுருவாயேழுலகுண்டாலிலையின்
மேலன்றுநீவளர்ந்தமெய்யென்பர்—ஆலன்று
வேலைநீருள்ளதோவிண்ணதோமண்ணதோ
சோலைசூழ்குன்றெடுத்தாய்சொல்லு. (௬௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஒருகுறட்டைத்தெறித்தால் ஒருகுறட்டிலேபால்பெருகும்படி,	நீ	ஸர்வசக்தியானநீ,
பாலன்றனதுருவாய்	* முக்தச் சிசுவான விக்ரஹத்தை யுடையனாய்,	வளர்ந்த	கண் வளர்ந்தருளினவித்தை,
எழுலகு	ஸப்தலோகங் களையும்,	மெய்யென்பர்	பரமார்த்தமென்று கொண்டு பரமாப்தரான ரிஷிகளடங்கலும் சொல்லா நின்றார்கள்;
உண்டு	திருவயிற்றிலேவைத்து,	ஆல்	அந்த ஆலானது,
ஆலிலையின் மேல்	ஒருபவனான ஆலந்தளிரிலே,	அன்று	ஸர்வமும் அழிந்தவன்று,
அன்று	அந்த ப்ரளயஸமயத்திலே,	வேலைநீர் உள்ளதோ	வெள்ளங்கோத்துக் கிடக்கிற ஸமுத்ரஜலத்திலே உள்ளதோ; அன்றிக்கே,

---

பரத்வஸௌலப்யத்துக்கு ஜ்ஞாபகமேதென்ன; அருளிச்செய்கிறார் (மற்றையதிங்கித்யாதி.) இவைஎல்லார்க்கும் தோற்றவில்லையேயென்ன; ஜ்ஞாநிகர்க்குத்தோற்றுமென்கிறார் (காண்கையாலென்று.) அப்படி கண்டார்களோவென்ன; அருளிச்செய்கிறார் (𑌤𑌸𑍍𑌯- 𑌯𑍋𑌨𑌿𑌮𑍍-தஸ்ய-யோநிமித்யாதி.) "தஸ்ய" என்கை-பரத்வம். 'யோநிம்' என்கை-ஸௌலப்யம். ... ... ௬௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விண்ணதோ	நிராலம்பநமான ஆகாசத்திலே யுள்ளதோ;	சோலைசூழ்	சோலைகளாலே சூழப்பட்ட,
	இல்லையாகில், ப்ரளயஜலத்திலே கரைந்துபோன,	குன்று	கோவர்த்தந பர்வதத்தை,
மண்ணதோ	பூமியிலேயுள்ளதோ	எடுத்தாய்	எடுத்து தரித்துக் கொண்டு நின்றவனே,
	ஏழு திருநக்ஷத்ரத்திலே ஏழுநாள் ஒருபடிப்பட,	சொல்லு	இத்தை யருளிச்செய்யவேணும்.

உன்னுடைய உன்படிசொல்லமுடியாதென்று கருத்து. (சுகூ)

அ.—அறுபத்தொன்பதாம்பாட்டு. (பாலன்) எல்லாமொழிய ஓரோவொன்றை யறியப்போமோ வென்கிறது.

வ்யா.—(பாலனித்யாதி)ரக்ஷகாபேக்ஷமானவடிவையுடையையாய். (ஏழுலகுண்டு) ஸ்வவ்யதிரிக்தஸகலபதார்த்தத்தையும்ரக்ஷித்து (ஆலிலையின்மேல்) ஸர்வர்க்கும் ஆதாரமான ஸர்வரக்ஷகனுக்குக் கண்வளரப்போகாத ஆலிலையின்மேலே. (அன்றித்யாதி) அன்று வளர்ந்தத்தை ஆப்ததமரானவர்கள் மெய்யென்பர்கள். வேதமர்யாதை யில்லையாகில் சூந்யமாதல்;உண்டாகில் ஸத்யமாதலேஉள்ளது. (சோலையித்யாதி) ஏழுவயஸ்ஸிலே மலை கீழ்மேலாகவெடுத்த நீ அத்தையும் சொல்லவேணும். (அன்று) திக்கெல்லா மழிந்தவன்று. (வேலையித்யாதி) நீ கண்வளர்ந்த பாற்கடலுள்ளதோ, நிராலம்பநமான வாகாஶத்ததோ, கரைந்துபோன பூமியிலதோ, சொல்லவேணும். பின்பு மலையெடுத்த ஆஶ்சர்யம் இதுக்கு ஸத்ருசமோ. இத்தால் - அவன்றன்படியை அவன்றானே சொல்லுகையும் அரிதென்றபடி.

(பாலன்றன துருவாய்) பாலனுடைய ரூபத்தை யுடையையாய். அப்ராக்ருதமாய் மஹத்தரமான திருமேனியைச்சிறுக்கி ஸஜாதீயமாக்குகை மெய்யென்பர் ரிஷிகள்."எத்திறம்!" என்ன, "பொய்" என்னவொண்ணாது. (மெய்) நீயே ஸர்வத்துக்கும் தாரகனானமையும் மெய். இருந்தபடியென். (சோலையித்யாதி) ஏழுபிராயத்திலே பெரியமலையை யெடுத்த ஆச்சர்யமும் சொல்லவேணும்.

அறுபத்தொன்பதாம்பாட்டு. இவர்கள் "மெய்"என்கிறது என் கொண்டென்ன; அருளிச்செய்கிறார் (வேதமர்யாதையித்யாதி.) வளர்ந்த - கண்வளர்ந்ததை.

இது ஆழ்வார் வந்தால் கேட்கவிருந்தோமோ வென்றான் எம்பெருமான்; இது அத்யந்தம் விஸ்மயமென்கிறார். ... (௬௯)

அ.—எழுபதாம்பாட்டு. இப்படியானபின்பு ஜகத்திலுள்ளாரடங்கலும் அநந்ய பரராய்க் கொண்டு அவனை யாச்ரயியுங்கோளென்கிறார்.

மூ.—சொல்லுந்தனையுந்தொழுமின்விழுமுடம்பு
செல்லுந்தனையுந்திருமாலை—நல்லிதழ்த்
தாமத்தால்வேள்வியால்தந்திரத்தால்மந்திரத்தால்
நாமத்தாலேத்துதிரேல்நன்று. (௭௦)

பதம்.	உரை.
திரு	புருஷகாரபூதையானபிராட்டியோடே நித்ய ஸம்யுக்தனான,
மாலை	ஸர்வேச்வரனை,
விழும்	"இப்போது விழுந்தது, இப்போதுவிழுந்தது" என்னும்படி அஸ்திரமான,
உடம்பு	சரீரமானது,
செல்லுந் தனையும்	விழுமளவும்,
நல்	அழகிய,
இதழ்	பூக்களாலேயுண்டான,
தாமத்தால்	திருமாலையாலும்,
வேள்வியால்	யாகாதி ஸத்கர்மங்களாலும்,
தந்திரத்தால்	மந்த்ர விதுரமான கேவல க்ரியைகளாலும்,
மந்திரத்தால்	க்ரியாவிதுரமான மந்த்ரங்களாலும்,
தொழுமின்	ஆச்ரயியுங்கோள்; இதுக்குசக்தமின்றிக்கேயிருக்கில் உங்கள் வாக்கு உக்தி ஸாமர்த்யத்தை யுடைத்தாய்க் கொண்டு,
சொல்லுந் தனையும்	சொல்லுமளவும்,
	குணாதிகளுக்கு வாசகமான,
நாமத்தால்	திருநாமங்களாலே,
ஏத்துதிரேல்	ச்ரிய:பதியைப் புகழ்வுதிகோளாகில்,
நன்று	அது மிகவும் நல்லது. ... ... (௭௦)

அ.—எழுபத்தோராம்பாட்டு. நாட்டாரைக்கொண்டு காரியமென், நெஞ்சே!, நீ இவ்விஷயத்தை விடாதேகிடாயென்கிறார்.

இவர்"சொல்" என்கைக்கு அவன்றான் இவர்வார்த்தைகேட்க ஆசைப்பட்டிருக்குமோவென்ன; அருளிச்செய்கிறார் (இது ஆழ்வாரித்யாதி.) கேட்க விருந்தான்போலே யென்றுவ்யாக்யாதா. (௬௯)

அ.—எழுபதாம்பாட்டு. இப்படி அபரிச்சிந்ந சக்தியானபின்பு அவனை யெல்லாரும் ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

வ்யா.—(சொல்லுமித்யாதி) நாக்குச் சொல்லப்பாங்கானபோதெல்லாம்சொல்லிஆச்ரயியுங்கோள்.(விழுமுடம்பு செல்லுந் தன்னையும்) உடம்பு பாங்கானபோதெல்லாம் ஆச்ரயியுங்கோள். (திருமாலை) பாங்கானபோது ஆச்ரயிக்க யாவதாத்மபாவி யாச்ரயித்தானாகச் சொல்லும் பித்தனைச்சொல்லுகிறது. (நல்லிதழ்த்தாமத்தால்) நல்லசெவ்விப்பூவையுடைய மாலையால். (வேள்வியால்)செவ்விமாலை கிடையாதாகில் கர்த்தவ்யமான கர்மத்தாலே; அதுகிடையாதாகில் அதுக்கடியான தந்த்ரத்தாலே; அடையப்போகாதாகில் மந்த்ரத்தைக்கொண்டு செய்வது; க்ரியாரூபமான தந்த்ரமறியாதாகில்,வாக்வ்ர்த்தியான மந்த்ரத்தாலே செய்வது; மந்த்ரத்துக்கு தேசகாலநியதியும் அதிகாரிநியதியும் வேணுமென்றிருந்திகோளாகில் நாமத்தாலே ஏத்துவது. தாய்பேர்சொல்லக் குளித்து வரவேண்டாவிறே. (திருமாலை) நியதியுண்டென்னில் "அம்மே!" என்னுமோபாதி சொல்லவமையும். ... ... (எ0)

மூ.—நன்றுபிணிமூப்புக்கையகற்றிநான்கூழி
நின்றுநிலமுழுதுமாண்டாலும்—என்றும்
விடலாழிநெஞ்சமேவேண்டினேன்கண்டாய்
அடலாழிகொண்டான்மாட்டன்பு. (எக)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிணி	கேவலாத்மாநுபவத்துக்கு விலக்கான வ்யாதி,	நான்கூழி	காலதத்வமுள்ளதனையும்,
மூப்பு	ஜராதொடக்கமான வற்றை,	நின்று	நெடுகிநின்று,
நன்று	நன்றாக,	நிலமுழுதும்	பூமி தொடக்கமாக ப்ரஹ்மலோக பர்யந்தமாக வுண்டான இவ்வண்டைச்வர்ய மெல்லாவற்றையும்,
கையகற்றி	கைகழலவிட்டு, இப்படிப்ரக்ருதிவிநிர்முக்தனான ஆத்மாவை யநுபவிக்கையாகிற கைவல்ய புருஷார்த்தத்தோடே,	ஆண்டாலும்	ஸ்வாதீநமாக நிர்வஹிக்கப் பெற்றாலும்,

எழுபதாம்பாட்டு. விழுமுடம்பு-திருவடிகளிலேவிழுந்து ஆச்ரயியுங்கோள். வேள்வி-ஸ்வயமேவப்பண்ணுகை. மந்த்ரம்-சங்க்யையாய்ப்பண்ணுவிக்கை. க்ரியாரூபமானமந்த்ரம்-வேதமந்த்ரம். வாக்வ்ர்த்தியானமந்த்ரம்-பகவந்மந்த்ரம். நியதி-விஷயநியதி. மிதுநமென்றபடி. ... ... (எ0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆழிநெஞ்சமே	அளவுடைய நெஞ்சே,	அன்பு	ஸ்நேஹத்தை,
அடல்	யுத்தோந்முகமான,	என்றும்	ஸர்வ காலத்திலும்
ஆழி	திருவாழியை,	விடல்	விடாதேகொள்; இவ் வேப்பங்குடி நீரைக்குடிக் கைக்கு, உன் காலைப்பிடித்து
கொண்டான்மாடு	திருக்கையிலே தரித்துக்கொண் டிருக்கிற ஸர்வேச்வரன் விஷயத்திலுண்டான,	வேண்டினேன்	வேண்டிக் கொள்ளுகிறேன்கிடாயென்கிறார். ... (எக)

எழுபத்திரண்டாம்பாட்டு. இவர்கரணங்கள் இவர்க்குமுன்னே அங்கே ப்ரவணமாய் குருசிஷ்யக்ரமம் மாறாடி எதிரே நின்று, ஆழ்வீர்!, "நீர் இவ்விஷயத்தை விடாதேகிடீர்" என்று அவைதான் தமக்குமுன்னே உபதேசிக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

மூ.—அன்பாழியானையணுகென்னும்நாவவன்றன்
பண்பாழித்தோள்பரவியேத்தென்னும்—முன்பூழி
காணானைக்காணென்னுங்கண்செவிகேளென்னும்
பூணாரம்பூண்டான்புகழ். (எஉ)

அ.—எழுபத்தோராம்பாட்டு. (நன்று) ஐச்வர்ய கைவல்யங்களில் புகாதே அவன்றன்னையே ஆசைப்படப்பாரென்கிறார்.

வ்யா.—(நன்றித்யாதி) இத்தால் - கைவல்யத்தைச் சொல்லுகிறது. (நான்கூழியித்யாதி) ப்ரஹ்மாவினுடைய ஐச்வர்யத்தைப் பெற்றாலும். (ஆழிநெஞ்சமே) அளவுடைய நெஞ்சே. நீயே முற்பட்டிருக்கிற வுன்னை இரக்கிறேனிறே. அடலாழிகொண்டான் மாட்டன்பு, விடல்- விடாதேகொள். (வேண்டினேன்கண்டாய்) பால் குடிக்க இரக்கிறேனிறே. ஐச்வர்யம் நிலை நில்லாது, கைவல்யம் பகவத்கைங்கர்யத்தைப்பார்க்க அல்பமென்கை. அன்றியே, இரண்டையும் சேர்த்துத்தரிலும், விடல்-இவை நன்றானவன்றும் விடுகைக்கு அவனல்லாமையையும் பற்றுகைக்கு அவனாகவமையும். (வேண்டினேன்) இவ்வர்த்தம். (அடலாழியித்யாதி) எனக்குக் கைக்கூலிதந்து பற்றும் விஷயம். ... ... (எக)

அ.—எழுபத்தோராம்பாட்டு. நன்றாக - ஸவாஸநமாக.பிணியையும் மூப்பையும், கையற்றி-கைவிட்டு. நான்கூழி – நாலுயுகஸஹிதமாயிருக்கிறகாலம். "நின்று" என்கையாலே - ஐச்வர்யஸ்தைர்யத்தையும், "நன்று" என்று - கைவல்யவைலக்ஷண்யத்தையும் சொல்லி, இவற்றையென்றும் ஆண்டாலும் அவனிடத்தில் அன்பு விடல்என்கிறார் (ஐச்வர்யமித்யாதி.) (எக)

பதம்.	உரை.
	அன்பென்றும் அன்புக்காச்ரய மென்றும் தெரியாதபடி,
அன்பு	அன்புதானே ஒருவடிவு கொண்டாப்போ லிருக்கிற நெஞ்சானது,
ஆழியானை	திருவாழியை யுடையனானவனை,
அணுகு	கிட்டியநுபவி,
என்னும்	என்று உபதேசியாநிற்கும்;
நா	வாகிந்த்ரியமானது,
பண்	நீர்மையையும்,
பாழி	மிடுக்கையு முடைத்தான,
அவன்றன்	அவனுடைய,
தோள்	தோளை
பரவி	அடைவுகெடப் பேசிக்கொண்டு,
ஏத்து	ஸ்தோத்ரம் பண்ணு,
என்னும்	என்னு நிற்கும்;
கண்	கண்களானவை,

பதம்.	உரை.
	நம்மபராதம் காணாதவளவன்றிக்கே,
முன்பு ஊழி	அபராதம் பண்ணின முன்புள்ள காலத்தையும்,
காணானை	காணாதவனை,
காண் என்னும்	கண்டநுபவி யென்னும்;
செவி	செவிகளானவை,
	ஆபரணமான திருமேனிக்கு,
பூண்	ஆபரணமாகப் பூணப்படும்,
ஆரம்	ஹாரம் முதலான திவ்யாபரணங்களை,
பூண்டான்	அழகுபெறப் பூண்டிருக்கு மவனுடைய,
புகழ்	கல்யாணகுணங்களை
கேள் என்னும்	கேளாயென்று தூண்டாநிற்கும்.

"பண்பு ஆழித்தோள்" என்று-ஸௌந்தர்ய ஸாகரமான திருத்தோளென்னவுமாம். (எஉ)

அ.— எழுபத்திரண்டாம்பாட்டு. (அன்பு) ஶிஷ்யர்கள் ஆசார்யர்களானார்கள்.

வ்யா.— "அன்பு" என்று - நெஞ்சைச் சொல்லிற்று. "அடலாழி கொண்டான் மாட்டன்பு விடாதே" என்று திருவுள்ளத்தை யிரக்க, அதுவும், நீர் ஆழியானைவிடாதே கொள்ளும் என்கிறது. (நாவித்யாதி) நாவானது அவனுடைய ஸௌந்தர்ய ஸாகரமான தோள்களை அக்ரமமாக ஏத்தென்னா நின்றது; முடியும்படியாதொன்றறியாது காணும். (முன்பித்யாதி) ஸாபராதரா யிருந்துள்ள நம்மால் அவனைக்கிட்டப்போமோவென்னில்; ஓரடிவரநின்றால் குற்றமேயன்றியே குற்றங்கிடக்கும் நாளுங்காணவரியா

அ.—எழுபத்திரண்டாம்பாட்டு. காணங்கள்கரணிக்கு உபதேசிக்கையாலே (ஆசார்யர்களானார்களென்கிறது.)

னென்கிறது. (முன்பூழிகாணுனே) அவனைக்காணும் என்னுநின்றதுகண்.(செவியித்யாதி) குற்றம்பார்த்துப்போகிறானாகிலும்விடப்போகாத ஆபரண சோபையையுடையனானவ னுடையபுகழைக் கேளென்னுநின்றது செவி.

(ஆழியானை) ராஜபுத்ரர்கள் இடைச்சேரிக்கு மகப்படுமாப்போலே. (பண்பாழித்தோள்) ஸௌந்தர்யஸாகரமான. (பரவியேத்து) நீ ஏத்தும்க்ரமம் தப்பாமே. (முன்பித்யாதி) நாம் பண்ணிவைத்த பாபங்களை நினைத்துச் சீறிலோவென்னில்;பாபமும் கிழ்க்கிடந்த காலமும்மறக்கும். கண்கண்டவாறே தெரியுமிறே சீறிநோக்கும் நோக்கும், வாத்ஸல்யத்தாலே நோக்கும்நோக்கும். (செவி கேளென்னும்) செவிக்கு விக்ர்திசொல்ல வவஸரமில்லை. (பூணாரம்)ஆபரணமானஉடம்புக்குஆபரணம்."సర్వభూషణభూషార్హః" "ஸர்வபூஷண பூஷார்ஹ:." மற்றை ஆபரணங்களுக்கு ஆபரணமென்றும். (பூண்டான்) பூணவல்லவழகு. (புகழ்) ப்ரஹ்ம பூஷணம். ... ... (எஉ)

அ.—எழுபத்துமூன்றாம்பாட்டு. அந்தக்கரணங்கள்தானும் கீழ்ப்படும்படி தாம் அவ்விஷயத்திலே ப்ரவணமானபடியை யருளிச்செய்கிறார்.

மூ.—புகழ்வாய்பழிப்பாய்நீபூந்துழாயானை
யிகழ்வாய்கருதுவாயென்னெஞ்சே—திகழ்நீர்க்
கடலுமலையுமிருவிசும்புங்காற்று
முடலுமுயிருமேற்றான். (எரு)

காண்கைக்குப்ரயோஜநமேதென்ன; அருளிச்செய்கிறார் (கண்கண்டவாறேயித்யாதி.)கீழில்இந்த்ரியங்களைப்போலே அவனைச்சொல்லி, பின்னை இன்னபடி செய்யென்னுமல், கேவலம் "கேள் என்னும்" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (செவிக்கித்யாதி.) விக்ர்திசொல்ல - தன்னுடைய பக்திக்கு விஷயம்சொல்ல அவஸரமில்லையென்றபடி. முன்பு அவஸரமில்லாமைபாலே பின்பு "பூணாரம் பூண்டான்" என்று விஷயத்தைச்சொல்லிற்றென்றபடி. அன்றிக்கே, தன்னுடையபக்தியாலே விஷயம்சொல்ல அவஸரமன்றியே "கேள் என்னும்" என்னவுமாம். பூண்-திருமேனியாதல், மற்றையாபணமாதல். ஆரம் – விக்ரஹ பூஷணம். புகழ் – ஸ்வரூபபூஷணமென்றபடி. ப்ரஹ்மம் - ஸ்வரூபம். (எஉ)

பதம்.	உரை.
என்னெஞ்சே	நல்லது இன்னதென்று வகையிட்டறிய வல்லநெஞ்சே,
நீ	இப்படி நல்லது காணவல்லநீ,
	புகழ்ந்தல்லது நிற்கவொண்ணுதபடி,
பூ	அழகிய,
துழாயானை	திருத்துழாயாலே அலங்க்ருதனானவனை,
புகழ்வாய்	வாய்விட்டுப் புகழ்வாய்;
	அன்றிக்கே,
பழிப்பாய்	பழிப்பாய்;
	செய்தபடிசெய் இப்புகடு சரக்சான விஷயத்தை,
இகழ்வாய்	அநாதரிப்பாய்;
	அன்றிக்கே,
கருதுவாய்	ஆதரிப்பாய்;
	செய்தபடிசெய்;
திகழ்	விளங்கா நின்றுள்ள,
நீர்	ஜல ஸம்ருத்தியை யுடைத்தான,
கடலும்	கடலும்,

பதம்.	உரை.
மலையும்	பர்வதமும்,
இரு	பரப்பை யுடைத்தான,
விசும்பும்	ஆகாசமும்,
காற்றும்	வாயுவும்,
உடலும்	தேவாதி சரீரங்களும்,
உயிரும்	தத்தத்சரீரஸ்தங்களான ஆத்மவர்க்கமுமாகிற இவ்வஸ்துக்களெல்லாம்,
	தான் என்கிறசொல்லுக்குள்ளே ப்ரகாரமாய் அந்வயிக்கும்படி,
ஏற்றான்	ஸர்வப்ரகாரியா யிருப்பானொருத்தன்.

இப்படி ஸர்வப்ரகாரியாய் நிற்கிறவனைப்பற்றிலும்பற்று; அன்றிக்கே ப்ரகாரத்திலே ஒன்றைப்பற்றிலும் பற்றென்றபடி. அன்றிக்கே, உடலும் உயிருமான இப்பதார்த்தங்களை, ஏற்றான் - தரித்தானென்னவுமாம். (எங)

அ.— எழுபத்துமூன்றாம்பாட்டு(புகழ்வாய்) கீழ்-தம்முடைய இந்த்ரியம் ப்ரவணமானபடி சொல்லிற்று; அவ்விஷயந்தான் இனியறிய ப்ராப்தமாயிருந்தது, நீ அத்தைப்பற்றிலும்பற்று, விடிலும் விடுஎன்கிறது.

வ்யா.— (புகழ்வாய் பழிப்பாய்) புகழிலும் புகழ், பழிக்கிலும் பழி. (இகழ்வாய்கருதுவாய்) இகழிலும் இகழ், கருதிலும் கருது. (பூந்துழாயானை) பழித்தல், இகழ்தல் செய்யப்போமோ வென்கிறது. (என்நெஞ்ச) நாட்டுக்குச் சொல்லுகிறேனே, உனக்கன்றோ. (திகழ் நீர்க்கடலும் மலையும்) இரண்டாலுமாகக் காரியத்தைச்சொல்லுகிறது.(இருவிசும்பும் காற்றும்) காரண பூதங்களுக்கு முபலக்ஷணம்.(உடலுமுயிரும்)காரணமானசிதசித்துக்களைச்சொல்லுகிறது.

(உடலுமுயிருமேற்றுன்) இத்தால்-இவையெல்லாம் அவனுக்கு கார்யதயா ஶேஷம்; அவன் ஶேஷி யென்கிறது.

அவைமத்யஸ்தம் என்னும்படி தம்முடைய ப்ராவண்யம். (புகழித்யாதி) வாசகத்துக்கு. (இகழ்வாய்கருதுவாய்) மநஸ்ஸூ. (என்னெஞ்சே) புகழ்ந்து பழகினநெஞ்சே. பூந்துழாயானைப் புகழ்ந்தல்லது நிற்கவொட்டாது. (ஏற்றுன்) ஆதாரத்தைப்பற்றி லும் பற்று, ஆதேயத்தைப் பற்றிலும்பற்று,இது இருந்தபடி. (எங)

அ.—எழுபத்துநாலாம்பாட்டு. அவனே ஆச்ரயணீயனென்பானென், ருத்ரனை ஆச்ரயணீயனாகக் கொண்டாலோ வென்ன; அவனும் அவனுக்கு சரீரபூதனாகையாலே அவனே ரக்ஷகனென்கிறார். (எச)

மூ.—ஏற்றுன்புள்ளூர்ந்தானெயிலெரித்தான்மார்விடந்தான்
நீற்றுன்நிழன்மணிவண்ணத்தான்—கூற்றொருபான்
மங்கையான்பூமகளான்வார்சடையான்நீண்முடியான்
கங்கையான்நீள்கழலான்காப்பு. (எச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	தமஃப்ரக்ர்தியான தனக்குச் சேரும்படி,	கூற்றொரு பால்	சரீரத்தில் ஒருபார்ச்வப்ரதேசத்திலே,
ஏற்றுன்	அஜ்ஞமான ரிஷபத்தை வாஹநமாகவுடையனாய்,	மங்கையான்	பார்வதியை தரிக்குமவனாய்,
	தன்னை ஆச்ரயித்தவர்கள்குடியிருப்பான,		ஸாதகத்வ ஸூசகமான,
		வார்	தாழ்ந்த,
		சடையான்	ஜடையையுடையனாய்,
எயில்	த்ரிபுரத்தை,		
எரித்தான்	மஞ்சாட்டமாகச் சுட்டுப் பொகட்டவனாய், "ப்ராயச்சித்தி" என்றுதோற்றும்படி,		பாவநார்த்தமாகஜடாமத்யத்திலே தரிக்கப்பட்ட,
		கங்கையான்	கங்கையை யுடையனான ருத்ரன்;
நீற்றுன்	பஸ்மோத்தூளித ஸர்வாங்கனாய்,	புள்	*த்ரயீமயனான பெரியதிருவடியை,

---

அ.—எழுபத்துமூன்றாம்பாட்டு. மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அவையித்யாதி.) மத்யஸ்தமென்றது-தம்முடைய கரணங்கள் இகழுகைக்கும் கருதுகைக்கும் பொதுவாயிருக்கும். தமக்குக்கருதுகைப்ரயோஜநம். ஏற்றுன் என்று-சேஷித்வம் சொல்லுகையாலே-ப்ராப்யம். ஏற்றுன்-சரீரவத் தரித்தான். ஏற்றுன்-ஆதாரபூதனென்றபடி. ... ... (எங)

பதம்.	உரை.
ஊர்ந்தான்	வாஹநமாக வுடையனாய்,
மார்வு	ஆச்ரித விரோதியான ஹிரண்யன் மார்வை,
இடந்தான்	பிளந்துபொகட்டவனாய்,
நிழல்	ச்ரமஹரமான,
மணி	நீலரத்நம்போன்ற,
வண்ணத்தான்	வடிவை யுடையனாய்,
பூமகளான்	புஷ்பநிவாஸிநியான பெரியபிராட்டியாரை திவ்யமஹிஷியாக வுடையனாய்,
நீள்	*ஆதிராஜ்ய ஸூசகமான,
முடியான்	திருவபிஷேகத்தையுடையனாய், சங்கோத்பத்திஸ்தாநமான,
நீள்	நீண்ட,
கழலான்	திருவடிகளையுடையனான ஸர்வேச்வரனுடைய,
காப்பு	ரக்ஷையாயிருக்கும்.

அ.—எழுபத்துநாலாம்பாட்டு. (ஏற்றான்) இது இவனுக்கு ஏற்றமாகச்சொல்லுவானென், அல்லாதருத்ரனும் இப்படி ஶேஷியாயன்றோ விருப்பதென்னில்; அவனுடைய ப்ரகாரங்களைப் பார்த்தால் ரக்ஷ்யமாய்த் தோற்றும், இவனைப் பார்த்தால் ரக்ஷகனாயிருக்குமென்கிறது.

வ்யா.—(ஏற்றான் புள்ளூர்ந்தான்) * வேதாத்மாவான திருவடியைத்தனக்கு வாஹநமாகவுடையனாயிருக்குமாகில், அவன் அப்ரஸித்தமாயிருப்பதொரு எருத்தைவாஹநமாகவுடையனாயிருக்கும். (எயிலெரித்தான்) ஆச்ரிதரை ஒருவ்யாஜத்தாலே அழிக்கும் அவன். (மார்விடந்தான்) ஆச்ரிதனுக்காகத்தன்னையழியமாறும்இவன். (நீற்றான்) "𑌭𑌸𑍍𑌮𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌃" "பஸ்மச்சந்நः" என்று ப்ராயஶ்சித்தம் பண்ணும் அவன். (நிழல்மணி வண்ணத்தான்) கண்டால் ச்ரமஹரமானவடிவு இவனது. (கூற்றொருபால் மங்கையான்) ஒருஸ்த்ரீயைத் தனக்கே வைத்துக்கொண்டிருக்கும் அவன். (பூமகளான்) "𑌅𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌾 𑌜𑌗𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌤𑍍𑌨𑍀" "அஸ்யேஶாநாஜகதோவிஷ்ணு பத்நீ" என்னுமவளைத் தனக்காகவுடையவன் இவன். (வார்சடையான்) ஸாதகவேஷன் அவன். (நீண்முடியான்) ஆதிராஜ்யஸூசகமான திருமுடியை

அ.—எழுபத்துநாலாம்பாட்டு. எயில்-மதிளாய், த்ரிபுரம். நீற்றான்-நீற்றையுடையவன். கூற்றொருபால் - லோகரக்ஷணார்த்தமாகவன்றியே தனக்கேகூறாகவென்றபடி. (எச)

யுடையவன் இவன். (கங்கையான்) பாவநார்த்தமாக கங்கையை தரித்துக்கொண்டிருக்கும் அவன். (நீள்கழலான்) அந்ததீர்த்தபூதையான கங்கைக்கு உத்பாதகமான திருவடியையுடையவன். "ஏற்றான்-எயிலெரித்தான்-கூற்றொருபால் மங்கையான் - வார்சடையான்-கங்கையானான அவன்; புள்ளூர்ந்தான் - மார்விடந்தான்-நிழல்மணி வண்ணத்தான் - பூமகளான் நீண்முடியான் - நீள்கழலான்காப்பு." அவனுடைய ரக்ஷை இவன். "உடலுமுயிரும்" என்றத்தோடு இவனோடுவாசியில்லை அவனுக்கு ஶேஷமாமிடத்தில். ... (எச)

அ.—எழுபத்தஞ்சாம்பாட்டு. இப்படி ஈச்வராபிமாநிக்கு ரக்ஷகனானவுன்னை ஆச்ரயித்தவர்களுக்கு விரோதிகளும் விட்டு நீங்கும், நல்வழியே போகலுமாமென்கிறார்.

மூ.—காப்புன்னையுன்னக்கழியுமருவினைக
ளாப்புன்னையுன்னவவிழ்ந்தொழியும்—மூப்புன்னைச்
சிந்திப்பார்க்கில்லைதிருமாலேநின்னடியை
வந்திப்பார்காண்பர்வழி. (எரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உன்னை	ஸர்வாதிகனானவுன்னை,	அவிழ்ந்தொழியும்	கழன்றுபோம்;
உன்ன	அநுஸந்திக்க,	திரு	ஆச்ரிதர் குற்றத்தை நற்றமாகக்கொண்டு ஏற்றும் பிராட்டி பக்கல்,
காப்பு	பாபங்களுக்குஸாக்ஷியாக காத்துக்கொண்டிருக்கும்படி நீகற்பித்து வைத்த யமாதிகளான பதினாலுவஸ்துக்களும், "நமக்கு இவ்விடம் அடைவில்லை" என்று,	மாலே	பெரும்பிச்சனானவனே,
		உன்னைச்சிந்திப்பார்க்கு	உன்னை அநுஸந்திப்பார்க்கு,
		மூப்பு	ஜராதிகளான ஷட்பாவவிகாரங்களும்,
		இல்லை	முதலிலேயில்லை;
கழியும்	விட்டு நீங்கும்; அந்தக் காப்புக் கடியாய்,	நின்னடியை	தேவரீர்திருவடிகளை,
		வந்திப்பார்	ஆச்ரயித்திருக்குமவர்கள், "போம்வழி" என்னும்படி நிரதிசய போக்யமான,
அருவினைகளாப்பு	அவித்யாஸஞ்சிதமான கர்மபந்தங்கள்,		
உன்னைஉன்ன	உன்னை அநுஸந்திக்க,	வழி	அர்ச்சிராதிமார்க்கத்தை,

பதம்.	உரை.
காண்பர்	கண்டநுபவிக்கப்பெறுவர்கள்.

நல்லவழியே போகப்பெறுவர்களென்றுமாம். "மூப்புன்னைச் சிந்திப் பார்க்கில்லை" என்றது - *காப்பும் அருவினைகளும்கழிந்த அதிகாரிகளுக்குவரும், மூப்பாவது-கைவல்யமாய், அதுமுதலிலே உன்னை அநுஸந்திப்பார்க்கில்லை யென்றபடி. ... ... (எரு)

அ.—எழுபத்தாறும்பாட்டு. உன்னைத்தொழுவார் பிழைப்பாரென்று சொல்லவேணுமோ, உன்னோடு ஸம்பந்தமுடைய திருமலையாழ்வார் தம்மைப்பற்றினார்க்குத் தப்பாமல்ப்ராப்யத்தைக் கொடாநின்ற பின்பென்கிறார். (எசு)

மூ.—வழிநின்றுநின்னைத்தொழுவார்வழுவா
மொழிநின்றமூர்த்தியரேயாவர்—பழுதொன்றும்
வாராதவண்ணமேவிண்கொடுக்குமண்ணளந்த
சீரான்றிருவேங்கடம். (எசு)

அ.—எழுபத்தஞ்சாம்பாட்டு. (காப்பு) சேஷியாயிருந்துள்ள உன்னையுணரப்ரதிபந்தகமெல்லாம் போமென்கிறது.= உன்னையுணரக்காப்புக்கழியும். "காப்பு" என்கிறது - ஈஸ்வரனுக்குப் புரவாபோலே. இவ்வாத்மாக்கள் செய்த கர்மங்களை ஆராயக்கடவரானசந்த்ராதித்யர்கள் தொடக்கமான பதினாலுபேருடைய சிறைகள். கர்மவஶ்யனுகையிறே இவர்கள் காக்கைக்கடி. (உன்னையுன்ன-அருவினைகளாப்பு - அவிழ்ந்தொழியும்) அக்காப்புக்கடியான அவித்யாதிகளாலுண்டான பந்தகம் உன்னை நினைக்கநெகிழும். (மூப்பித்யாதி) காப்பும் அருவினைகளும்போன அதிகாரிகளுக்கு,மூப்பாவது - கைவல்யம். அன்றியே, ஷட்பாவவிகாரங்களுக்கு முபலக்ஷண மாகவுமாம். (திருமாலே) ஈஶ்வரன் ஸ்வாதந்த்ரயத்தாலேஆராயப் புக்காலும் ப்ராயச்சித்த ஸாத்யமல்லாத பாபம் நாம்பொறுக்கு மத்தனையன்றோ வென்று ஆற்றுவாளொருத்தி அருகே உண்டென்கிறது. "దాసీనాం రావణస్యాహం మర్షయామీహ దుర్బలా" "రాజసంశ్రయవశ్యానాం కుర్వన్తీనాం పరాజ్ఞయా" "தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்ப்பலா" "ராஜஸம்ச்ரயவஶ்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா" என்னும்படியே. (நின்னடியை வந்திப்பார்காண்பர்வழி) உன் திருவடிகளிலே விழுவார்கள் நல்லவழிகாண்பர். "வழி"என்று - அர்ச்சிராதியாகவுமாம். பரமபதம்போலே பரமபதத்துக்குப் போம்வழி; நரகம்போலே பொல்லாதா யிருக்கும் நரகத்துக்குப் போம்வழி.

(காப்பித்யாதி) "ప్రభురహమన్యనృణామ్ నవైష్ణవానామ్" "ப்ரபுரஹமந்யந்ருணாம் நவைஷ்ணவாநாம்" "దేవర్షి" "தேவர்ஷி" யித்யாதி. அருவினை-அவித்யாதிகளால் பிறக்கும் புண்யபாபங்கள்

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ச்ருதிஸ்ம்ருதிஸித்தமாய் ச்ரவணமநநத்யாநோபாஸநதர்சநாத்யவஸ்தா யுக்தமான,	மூர்த்தியராவர்	ஸ்வரூபாவிர்ப்பாவத்தை யுடையராகப் பெறுவர்கள்;
வழி	பக்திமார்க்கத்திலே,	மண்அளந்த	பூமியைஅளந்துகொண்ட,
நின்று	சலியாமல் உறைக்க நின்று,	சீரான்	சீலஸௌலப்யாதிகல்யாண குணங்களையுடையவனே,
நின்னை	ஸர்வாதிகனான வுன்னை,	திருவேங்கடம்	நீஎழுந்தருளி நிற்கிற திருமலை,
தொழுவார்	ஆச்ரயிக்குமவர்கள், யதாபூதவாதியாகையாலே,		தன்னை ஆச்ரயித்தார்க்கு, ப்ராப்யப்ராபகங்களில் ருசி விச்வாஸங்களுக்கு,
வழுவாமொழி	ஒருநழுவுதலற்றிருக்கிற உபநிஷத்பாகங்களிலே, "స్వేనరూపేణాభినిష్పద్యతే" "ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்று,	பழுதொன்றும்	ஒருகுறையும்,
		வாராதவண்ணம்	வாராதபடியாக,
நின்ற	ப்ராப்யதயா ப்ரதிபாதிக்கப் படாநின்றுள்ள,	விண்	பரமாகாசசப்தவாச்யமான பரம பதத்தை,
		கொடுக்கும்	கொடாநிற்கும் (எசு)

சாரீரமானமூப்பு. (திருமாலே) "యువాకుమారః" "யுவாகுமார:" "యువతిశ్చకుమారిణీ" "யுவதிஶ்சகுமாரிணீ" என்கிற உங்களை ஆச்ரயித்தால் உங்களைப்போலே పరమంసామ్యముపైతి * பரமஸாம்ய - முபைதியிறே. வந்தியாதார்க்குமுள்ளும்முடுக்குமானவழி. (எசு)

அ.—எழுபத்தாறும்பாட்டு. (வழிநின்று) உன்னைத்தொழுவார் பிழைப்பொன்று சொல்லவேணுமோ, உன்னோடுஸம்பந்தித்ததேசமே எல்லாநன்மையும் கொடுப்பதாக விருக்கவென்கிறது.

வ்யா.—(வழிநின்றுநின்னைத்தொழுவார்) "ఆత్మావాఅరేద్రష్టవ్యశ్శ్రోతవ్యోమన్తవ్యోనిదిధ్యాసితవ్యః" "విజ్ఞాయప్రజ్ఞాంకుర్వీత" "ఉపాసనంధ్రువానుస్మృతిః" "దర్శనసమానాకారతాప్రత్యక్షాపత్తిః" "విశతేతదనన్తరమ్" "ஆத்மாவா அரேத்ரஷ்டவ்யஶ்ரோதவ்யோமந்தவ்யோநிதித்யாஸிதவ்ய:" விஜ்ஞாயப்ரஜ்ஞாம்குர்வீத" "உபஸநந்த்ருவாஸ்ம்ருதி:" "தர்ஶநஸமாநாகாரதாப்ரத்யக்ஷாபத்தி:" "விஶதேததநந்தரம்" என்னுமளவும்சொல்லுகிறது. (வழுவாமொழிநின்றமூர்த்தியரேயாவர்) யதாபூதவாதியான

வேதத்தில்சொன்னவடிவையுடையராவர். "పరంజ్యోతిరుపసంపద్య స్వేనరూపేణాభినిష్పద్యతే" "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்யஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்கிறபடியே. (பழுதித்யாதி)ப்ராப்யப்ராபகங்களொன்றும்குறையாதபடிபரமபதத்தைக்கொடுக்கும், திருவுலகளந்தநீர்மையையுடையவனுடைய திருமலை. "மண்ணளந்தசீரான்" என்று - ஸம்புத்தியாகவுமாம். வழுவாமொழி - ஒருவர்க்கொருவர் ஓதுவித்துப்போருகை. மூர்த்தியரேயாவர் - அதுக்கீடான ஸ்வரூபத்தையுடையராவர். (மண்ணளந்தசீரான்) அந்தஸ்வபாவமுண்டு திருமலைக்கு. எம்பார்விடிவோறெ அநுஸந்திக்கும்பாட்டு. ... (எசு)

அ.—எழுபத்தேழாம்பாட்டு. திருமலையொன்றுமே யல்லகிடீர், உகந்தருளின தேசங்களடங்க இப்படியே கிடிகோளென்கிறார்.

மூ.—வேங்கடமும்விண்ணகரும்வெஃகாவுமஃகாத
பூங்கிடங்கினீள்கோவற்பொன்னகரும்—நான்கிடத்தும்
நின்றானிருந்தான்கிடந்தானடந்தானே
யென்றாற்கெடுமாமிடர். (எஎ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேங்கடம்	திருமலையிலே,	பொன்	ஸ்ப்ர்ஹணீயமான,
நின்றான்	நின்றருளினான்;	நகர்	திவ்யநகரத்திலே
விண்ணகர்	வைகுந்தமா நகரிலே,	நடந்தான்	நடந்தருளினான்;
இருந்தான்	எழுந்தருளியிருந்தான்;	நான்கிடத்தும்	என்று இந்த நாலு திருப்பதிகளிலும்,
வெஃகா	திருவெஃகாவிலே,	என்றால்	ஆச்ரிதார்த்த மாக அவன் நிற்பது இருப்பது கிடப்பது நடப்பதான வ்யாபாரங்களை யநுஸந்தித்தால்,
கிடந்தான்	கண்வளர்ந் தருளினான்;		தாங்களே சூழ்ந்து கொண்ட,
அஃகாத	ஒன்றோடொன்றுவிச்சேதியாதேசெறிந்து,	இடர்	ஸாம்ஸாரிகதுக்கங்கள்,
பூ	அழகிதாய்,		போனவழி தெரியாதபடி,
கிடங்கின்	ஜலபரிபூர்ண மான அழகை யுடைத்தாய்,	போம்	தாந்தாமேவிட்டோடிப்போம். (எஎ)
நீள்	போக்யதை அளவிறந்திருந்துள்ள,		
கோவல்	திருக்கோவலூராகிற,		

அ.—எழுபத்தேழாம்பாட்டு.(வேங்கடமுமித்யாதி)உகந்தருளினதேசங்கள் பூமியிலே உண்டாயிருக்க ஸம்ஸாரமுண்டோவென்கிறது.

வ்யா.—(வேங்கடமுமித்யாதி)பூமாறாதேயிருந்துள்ளஅழகையுடைத்தான திருக்கோவலூரும்.(விண்ணகரும்) என்று-பரமபதத்தைச்சொல்லுகிறது.(நான்கிடத்துமித்யாதி)நான்கிடத்தும் நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தபடியையும் சொல்ல, நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் செய்த பாபபலம்போமென்கிறது. (என்றால் கெடுமாமிடர்) தாய்பேர்சொல்லக்லேஶம் போமாப்போலே. நம்முடைய இடரானவை திருமலையை ஆச்ரயிக்கப்போமோ வென்னில்; அநாதிகாலம் நம்மைப்பெறுகைக்கு அவன் படுகிறபாட்டை அநுஸந்தியா. (நடந்தானே.)

(வேங்கடமும் விண்ணகரும்) இவர்களுக்கெல்லாம் ஒருபோகியாயிருக்கிறபடி. பொன்னகர்தானேவந்துநோக்கினவிடம். (எஎ)

அ.—எழுபத்தெட்டாம்பாட்டு. அவன் நமக்காகச்செய்த செயல்களை அநுஸந்தித்தால், அவன்றிருவடிகளில் அடிமையிலே அந்வயித்தல்லது நிற்கவொண்ணாது கிடீரென்கிறார்.

மூ.—இடரார்படுவாரெழுநெஞ்சேவேழந்
தொடர்வான்கொடுமுதலைசூழ்ந்த—படமுடைய
பைந்நாகப்பள்ளியான்பாதமேகைதொழுதுங்
கொய்ந்நாகப்பூம்போதுகொண்டு. (எஅ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேழம் தொடர்	ஸ்ரீகஜேந்த்ராழ்வானை வடிம்பிட்டு நலியக்கடவதாய்,		டு பரிமாறுகைக்குத் தக்க,
வான்	அதிப்ரபலமாய்,	பை	பரப்பை யுடையவனான,
	நெஞ்சிரக்கமில்லாதபடி,	நாகம்	திருவநந்தாழ்வானை,
கொடு	அதிக்ரூரமான,	பள்ளியான் பாதம்	படுக்கையாக வுடையனான ஸர்வேச்வரன் திருவடிகளை,
முதலை	முதலையை, தப்பாதபடி,	கொய்	கொய்துகொள்ளவேண்டும்படி ஸம்ர்த்தமாய்,
சூழ்ந்த	சூழ்த்து அழித்துப்பொகட்டவனாய்,		
படமுடைய	ஸ்வஸ்பர்சத்தாலே	பூ	போக்யமான,
	விகஸித பணனாய்,	நாகப்போ	நாக புஷ்பங்களைக்
	இடம் வலங்கொண்	துகொண்டு	கொண்டு,

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொழும்	ஆச்ரயிப்போம்;	நெஞ்சே	நெஞ்சே,
	அவனுக்கு அடிமை செய்யாமல்கிடந்து,	எழு	சடக்கென எழுந்திரு. (எஅ)
இடர்படுவாரார்	துக்கப்பட வல்லாரார்;		

அ.—எழுபத்தொன்பதாம்பாட்டு. ஆச்ரிதர்க்காகத்தன்னை யழியமாறிக்கார்யம்செய்ய எங்கே கண்டோமென்னில்; ஆச்ரிதனான இந்த்ரனுக்காகத் தன்னை யிரப்பாளனுக்கிக் கார்யம் செய்திலனோ வென்கிறார்.

மூ.—கொண்டானையல்லாற்கொடுத்தாரையார்பழிப்பார்
மண்டாவெனவிரந்துமாவலியை—யொண்டாரை
நீரங்கைதோயநிமிர்ந்திலையேநீள்விசும்பி
லாரங்கைதோயவடுத்து.

பதம்.	உரை.	பதம்.	உரை.
	உன் விபூதியில் ஏகதேசமான,	இரந்து	அர்த்தித்து, அவன் மறுக்கமாட்டாமல் "உனக்குத் தந்தேன்" என்று தாரைசாய்க்க,
மண்	பூமியை,	ஒண்	அழகிய,
தாவென	எனக்குத் தரவேணுமென்று,	தாரைநீர்	அந்த உதகதாரையின்நீரானது,
மாவலியை	மஹாபலியைச் சென்று,		கொடுத்து வளர்ந்த,

வ்யா.—எழுபத்தெட்டாம்பாட்டு. (இடரித்யாதி)இனிதுக்கப்படுகைக்கு சங்கை யுண்டோவென்னில்; போராய்நெஞ்சே! இனி நம்பக்கல்இடர்வந்ததாகில் முதலைபட்டது படுமித்தனை.(வேழமித்யாதி) ஆனையைத்தொடருவதானகொடியமுதலையை முடித்த. "சூழ்ச்சி" என்று-வஞ்சித்தலாய் - முடித்தலென்றபடி. (படமித்யாதி) இத்தால்-அநாச்ரிதர்வந்தாலும் ஆச்ரிதர்வந்தாலும் அவனிருக்கும்படி சொல்லுகிறது. (கொய்ந்நாகமித்யாதி)கொய்யப்பட்டுச் செவ்வியையுடையநாகப்பூவைக்கொண்டு."பைந்நாகப்பள்ளியான்பாதமே கைதொழுதும் - இடரார்படுவார் - எழுநெஞ்சே" என்றந்வயம். எழு-போது. "நாகப்பூ" என்கையாலே-அப்ராக்ர்தபுஷ்பம்தேடிப் போகவேண்டா, காட்டில் ஒருபூவமையு மென்கிறது. இவர்கள் என்றும் காட்டிலேயிறே பழகிற்று. ... ... (எஅ)

பதம்.	உரை.
அம்கை	அழகிய திருக்கையிலே,
தோய	வந்துவிழுங் காட்டில், அவன் மறுமநஸ்ஸுப்படில் செய்வதென்னென்று நினைத்து,
நீள்	பரப்பை யுடைத்தான,
விசும்பிலார்	அந்தரிக்ஷாதிலோகங்களில் வர்த்திக்கிற, ப்ரஹ்மாதிகளுடைய,
அம்கை	அழகிய கையானது,
தோய	ஸ்பர்சித்துத்திருவடிகள் விளக்கும்படிக்கீடாக,
அடுத்து	கடுகச்சென்றுகிட்டி, உதகஜலமும் திருவடிவிளக்கின ஜலமும்ஏகோதகமாம்படி
நிமிர்ந்திலையே	வளர்ந்திலையோ; தன்னை யழிய மாறி ஔதார்ய குணம் பற்றாசாகத் தன் விபூதியை "என்னது" என்று அபிமாநித்திருந்தவன் குற்றம் பாராதேதானேசென்றிரந்து,

பதம்.	உரை.
கொண்டானை	நீரேற்றுவாங்கிக்கொண்ட குணாதிகனானவனை, வஞ்சகன், ஸர்வஸ்வாபஹாரி, தன்னக் கபேக்ஷிதம் செய்தவனைப் பாதாளத்திலே தள்ளினவன் என்றாப்போலே,
பழிப்பாரல்லால்	பழி சொல்லு மித்தனையொழிய,
கொடுத்தாரை	கொடுத்த மஹாபலியை,
பழிப்பாரார்	பக்வத் விபூத்யபஹாரி, அஹங்காரக்ரந்தஸ்தன், ஆஸுரப்ரக்ர்தி என்றாப்போலே யுண்டான அவன் குற்றங்களை ஆர்தான் சொல்லுவார்.

ஸம்ஸாரிகள் ஸ்வபாவம் குணத்தைக் குற்றமாக்கியும் குற்றத்தை குணமாக்கிம் செய்யும்படியன்றோ விருப்பதென்று வெறுக்கிறார். நீள்விசும்பிலே ஆரமும்கையும் சென்று ஸ்பர்சிக்கும்படிகிட்டியென்னுதல். அன்றிக்கே, நீள்விசும்பிலாருடைய கையெடுத்து ஆச்ரயிக்கும்படியாக வென்னவுமாம். ... ... (எகூ)

வ்யா.—எழுபத்தொன்பதாம்பாட்டு.(கொண்டானை) குணமே குற்றமாம், குற்றம்குணமாங்கிடீர் ஸம்ஸாரம். ராவணனோபாதிவத்யனாயிருக்க, ஔதார்யகுணம் இவன்பக்கலிலே கிடக்கையாலேதன்னதானபூமியை அவனுக்காகமேலெழுத்திட்டு அவன்கொடுத்ததாகை. இவன்கொண்டத்தை, தன்கையிலேநீர்வார்த்தவனைபாதாளத்திலேதள்ளினானென்றுபழிசொல்லாநிற்பர்கள். தன்னதல்லாத பூமி

யைத்தன்னதென்று கொடுத்தவனையிறே நெல்வாயிலே வைத்துத் தெறிக்கவேண்டுவது, அவனைப்பழிசொல்லுவாரில்லை. (கொண்டானையித்யாதி) ஆர்த்தையிரக்கிறானிவன். (ஒண்டாரையித்யாதி) அலப்யலாபம் பெற்றாரைப்போலே "𑌵𑌰𑍍𑌷𑍇𑌣 𑌬𑍀𑌜𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌂𑌜𑌹𑌰𑍍𑌷" "வர்ஷேணபீஜம்ப்ரதிஸஞ்ஜஹர்ஷ" என்னுமாப்போலே, அழகிய கையிலே நீர் விழுங்காட்டில் வளர்ந்திலேயோ.(நீள்விசும்பித்யாதி) பரந்த விசும்பிலே ஆரமும்கையுமடுத்துத்தோயும்படிக்கிடாக. அன்றிக்கே, நீள்விசும்பிலார் - விசும்பிலுள்ளார் அழகியதோளிலே அணையவென்றுமாம். நாம் ஆச்ரயிக்கவேணுமோ, தானே அர்த்தியாய். நானர்த்தியோவென்ன; (நிமிர்ந்திலேயே.)

(கொண்டானையல்லால்) தன்னதென்று கொடுக்கப்புகுமாகில் நமக்கு இதில் ப்ராப்தியில்லை என்றிருந்தாலாகாதோ என்றிரக்க, அதுகுணமாகை தவிர்ந்துநிற்கைக் குடலாவதே. பையலை நெல்லிலேவைத்துத் தெறிக்கவேணுமென்பாருண்டாய்த்தோ. ஆரியப்பட்டான். (மண்தாவென) தன்னதில் ஏகதேசத்தை. மாவலியை-அஸுரனைக்கிடீர். (நீர்தோயநிமிர்ந்திலேயே) மறுமநஸ்ஸுப்படுமென்று அப்போதே. (நீள்விசுபிலாரங்கைதோயவடுத்து) ஆச்ரயிக்க நிமிர்ந்தில்லையேயென்றுமாம். ... ... (எகூ)

அ.—எண்பதாம்பாட்டு. மஹாபலிபக்கல்நின்றும்பூமியைமீட்டு நோக்கினவளவன்றிக்கே, அஸாதாரண பரிகரத்தோடே விரோதித்து வந்து ஒருவன் சரணம்புக்கால் "𑌨 𑌕𑍍𑌷𑌮𑌾𑌮𑌿" "நக்ஷமாமி" என்றதுக்கும், "𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌮𑍍" "நத்யஜேயம்" என்றதுக்கும் விரோதம் வாராதபடி அவன்கையிலே காட்டிக்கொடுத்து அவனைக்கொண்டே நோக்குவானொருவனென்கிறார்.

மூ.—அடுத்தகடும்பகைஞற்காற்றேனென்றோடிப்
படுத்தபெரும்பாழிசூழ்ந்த—விடத்தரவை
வல்லாளன்கைக்கொடுத்தமாமேனிமாயவனுக்
கல்லாதுமாவரோவாள். (அ0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	பிறப்பே பிடித்து உண்டான தொன்றுகையாலே,	பகைஞற்கு	சாத்ரவத்தை யுடையனான பெரியதிருவடிக்கு,
அடுத்த	ப்ரத்யாஸந்நமாய், பேர்சொல்லவே முடியும்படி,	ஆற்றேனென்று	நேர்நின்றுபொறுக்கமாட்டேனென்று,
கடும்	கொடிதான,	ஓடி	பெரிய வேகத்தோடே ஓடிச்சென்று,

பதம்.	உரை.
படுத்த	அங்குத்தைக்கு அநுரூபமாம்படி விரித்த,
பெரும்பாழி	திவ்யஸிம்ஹாஸநத்தை,
சூழ்ந்த	சுற்றிக்கொடுகிடந்த, பயத்தாலே உமிழுகிற,
விடத்து	விஷத்தையுடைய,
அரவை	ஸுமுகனென்கிற ஸர்ப்பத்தை, “[illegible]” “நக்ஷமாமி” என்றத்தையும் “[illegible]” “நத்யஜேயம்” என்றத்தையும் ஒக்க நோக்குகைக்காக,
வல்லாளன் கை	சரணாகத பரித்ராணத்துக்கு அநுகுணமான மிடுக்கையுடைய பெரியதிருவடி கையிலே,

பதம்.	உரை.
	கடித்தவாயாலேயிரும்படி,
கொடுத்த	காட்டிக் கொடுத்து ரக்ஷித்தவனாய், ஆச்ரிதஸம்ரக்ஷணம் பண்ணப்பெற்ற ஹர்ஷப்ரகர்ஷமடங்கலும் நிழலிட்டுத் தோற்றுகிற,
மா	ச்லாக்யமான,
மேனி	திருமேனியையுடையனாய், ஆச்ரித விஷயத்தில் ஓரத்துக்கு எல்லை காணவொண்ணாத,
மாயவனுக்கல்லாது	ஆஸ்சர்ய பூதனுக்கொழியவும் ஸ்வபரஸம்ரக்ஷணக்ஷமரல்லாத வேறுக்ஷுத்ர தேவதைகளுக்கு,
ஆளாவரோ	அடிமை யாவர்களோ. (அ0)

அ.—எண்பதாம்பாட்டு. (அடுத்த) பரிஹாரமில்லாத ஆச்ரித விரோதம் பிறக்கிலும் அவர்களைப் பொறுப்பித்து புருஷகாரமாக அவர்களைக்கைக்கொண்டு ரக்ஷிக்குமென்கிறது. “அபயம்” என்று புகுந்த ஸ்ரீவிபீஷணப்பெருமாளை “புகுரவிடோம்” என்றவரைப் பொறுப்பித்து, “[illegible]” “ஆநயைநம் ஹரிஸ்ரேஷ்ட” என்றவரைக்கொண் டழைப்பித்தாப்போலே, பாதாளத்திலே ஸுமுகனென்றொருஸர்ப்பத்தைப்பெரியதிருவடியமுதுசெய்ய நினைத்தவத்தை அறிந்து, ஸ்வர்க்கத்திலே உபேந்த்ரமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கிற விடத்திலே திருப்பள்ளிக்கட்டிலைக் கட்டிக்கொண்டுகிடக்க; திருவடிபாதாளத்திலேசென்று தேடிக்காணமல் திருவடிகளிலேவந்து இவன்கிடக்கிறபடியைக்கண்டுசிவிகையார்சொல்லும் வார்த்தையை விண்ணப்பம்செய்ய; திருவாழியை இவன்கையிலே கொடுத்து பலத்தைக்ஷயிப்பிக்க; பின்திருவடிஸ்தோத்ரம்பண்ண; க்ருபை பண்ணித் திருவடிகையிலே அடைக்கலமாகக் காட்டிக்கொடுத்து ரக்ஷித்தானென்கிற உபாக்யாநத்தை யநுஸந்தித்தருளிச்செய்கிறார்.

வ்யா.—(அடுத்தவித்யாதி)அடுத்த-ஸஹஜஶத்ரு. (கடும்பகைஞன்) திருவடியோடு விரோதம்சொண்டால் பிழைக்கப்போகாதென்கை. (ஆற்றேனென்றேடி) "பாழி" என்று - படுக்கைக்குப்பேர். சூழ்ந்த - சுற்றின. விடத்தரவை - ஶரண்யனுக்கு க்ர்பாவிஷமென்கிறது. (வல்லாளன்கைக்கொடுத்த) ப்ரஸந்நனானபோது அவனைப்பொறுக்கமாட்டானென்னுதொரக்ஷிக்கவல்லனானவன்கையிலே காட்டிக்கொடுத்த. (மாமேனி) காட்டிக்கொடுத்தபின்பு வடிவில் பிறந்தபௌஷ்கல்யம். (மாயவனுக்கித்யாதி) எல்லாவவஸ்தையிலும் விட்டுக்கொடாத ஆஶ்சர்யபூதனுக்கொழிய வேறொருவருக்காளாவரோ. "ந ஶ்ஸூ" "நக்ஷமாமி" என்னும் தப்புக்குப் போக்கடிகாண வல்லனென்கிறார். (வல்லாளன்) நலியநினைக்கில் அத்தைவெல்லவல்லாருமில்லை; ரக்ஷிக்கநினைக்கிறது தடுக்கவல்லாருமில்லை. (அல்லாதுமாவரோவாள்) ஆச்ரிதவிரோதியென்று கைவிடவேண்டும் விஷயத்தையும் பொருத்திவிடவல்லவனை யொழிய. கடித்தவாயாலே தீர்க்கை என்று அவனையே "ஶஸ்த்ரைர்ஸுஹ்ருத்யோபவது" "அஸ்மாபிஸ்துல்யோபவது" என்னப்பண்ணுகை. ... (அ0)

அ.—எண்பத்தோராம்பாட்டு. ப்ரயோஜநாந்தர பரர்க்குமுட்பட உடம்புநோவக்கடல்கடைந்து அபேக்ஷிதஸம்விதாநம் பண்ணுமவன்றிருநாமமேகிடிகோள் ஸம்ஸாரத்தைக் கடக்கைக்கு உபாயமென்கிறார்.

மூ.—ஆளமர்வென்றியடுகளத்துளஞ்ஞான்று
வாளமர்வேண்டிவரைநாட்டு—நீளரவைச்
சுற்றிக்கடைந்தான்பெயரன்றேதொன்னரகைப்
பற்றிக்கடத்தும்படை. (அக)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆளமர்	ஆளோடாள் மிடைந்து கிடப்பதாய்,		அநுகூலரான தேவர்களுக்கு ஜயமுண்டாம்படி.
வென்றி	வென்றியையுடைத்தாய்,	வாளமர்	ஒளியையுடைத்தாயிருப்பதொருயுத்தம்,
அடுகளத்துள்	எதிர்த்தவர்களை முடித்துவிழவிடுகிறயுத்தபூமியிலே,	வேண்டி	வேணுமென்றபேக்ஷித்து,
அஞ்ஞான்று	அஸுரர்கள் தேவர்களை மேலிட்டு நலிகிறவன்று,	வரை	நீரைக்கண்டா லாழக்கடவ மந்தரபர்வதத்தை,

பதம்.	உரை.	பதம்.	உரை.
நட்டு	கடலுக்குள்ளே மத்தாகநாட்டி,	பெயரன்றே	திருநாமமன்றே,
நீள்	ம்ர்துஸ்வபாவ மாய் ஒழுகுநீட்சியை யுடைத்தான,	தொல்	பழையதாய் வருகிற,
அரவை	வாஸுகியாகிற பாம்பை,	நரகை	ஸம்ஸாரமாகிற நரகத்தை,
சுற்றி	கடைகயிருகச் சுற்றி	பற்றி	அள்ளியெடுத்துகொடுபோய்,
கடைந்தான்	மஹத்தத்வமான கடலைக்கடைந்தருளினவனுடைய,	கடத்தும் படை	கடத்திவிடும் ஸாதநம்.

அ.—எண்பத்திரண்டாம்பாட்டு. தேவர்கள் ஆச்ரயிக்கும்படி கடலிலே கிடந்தவளவன்றிக்கே, பெண்பிறந்தாரும் ஆச்ரயிக்கலாம்படி திருமலையிலேவந்து ஸந்நிஹிதனானென்கிறார். (அஉ)

மூ.—படையாரும்வாட்கண்ணார்பாரசிநாள்பைம்பூந்
தொடையலோடேந்தியதூயம்—இடையிடையின்
மீன்மாயமாசுணும்வேங்கடமேமேலொருநாள்
மான்மாயவெய்தான்வரை. (அஉ)

அ.—எண்பத்தோராம்பாட்டு. (ஆளமர்) ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட உடம்புநோவக் கடலைக்கடைந்து அம்ர்தம்கொடுத்து அவர்களைச்சாவாமல் காத்தவனுடையபேரன்றே,அநாதியான நரகத்தினின்றுங் கைப்பிடித்தேறவிடும் பரிகரமென்கிறார்.

வ்யா.—(ஆளமரித்யாதி) ஆள்நிறைந்து வென்றியையுடைத்தாய் முடிப்பதான யுத்தஸ்தலத்திலே. (வாளமர்வேண்டி)மதிப்புடைத்தான பூசலைவேண்டி மந்தரத்தைநட்டு. (அந்நான்று) அஸுரர் தேவர்களைமுறித்து வாயிலிட்டுச்செல்லுகிறவன்று. (வாளித்யாதி) தேவர்களுக்கு மதிப்பும் ஆயுஸ்ஸுமுண்டாம்படி. (நீளரவை) சேதநத்தை.(பற்றிக்கடத்தும்படை)அள்ளியெடுத்துக்கொடுபோய் பரமபதத்திலே வைக்கும். (பற்றி) "அல்லேன்" என்றாலும் விடாது. ... ... (அக)

எண்பத்தோராம்பாட்டு. "வாள்" என்று-ஒளியாய், அத்தால்-மதிப்பையுடைத்தாகை. தேவர்களுக்கு வெற்றியையுடைய பூசலென்றபடி. அமர் - பூசலாதல்; ஆயுஸ்ஸாதல். படை - ஸாதநம்.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
படை	வேலாகிற ஆயுதத்தோடு,	மீன்	ஓமோ நக்ஷத்ரங்களையுடைத்தான ஆகாசமானது,
ஆரும்	ஒத்திருப்பதாய்,	மாய	மறையும்படி, அத்தைச்சென்று,
வாள்	ஒளியை யுடைத்தான,	மாசூணும்	மாசேறும்படி பண்ணுகிற்கும்,
கண்ணார்	கண்களையுடைய பெண்களானவர்கள்,	வேங்கடமே	திருமலையே,
பாரசிநாள்	த்வாதசிநாளிலே,	மேலொரு நாள்	முன்பொருநாளிலே,
பை	அழகிய,		பிராட்டிவசநபாரதந்த்ரனாய்க்கொண்டு,
பூ	பூக்களாலே தொடுத்த,	மான்	மாயாம்ர்கம்,
தொடையலோடு	மாலைகளோடுகூட,	மாய	முடியும்படி,
ஏந்திய	தரித்த,	எய்தான்	எய்துவிழவிட்ட சக்ரவர்த்தித் திருமகன் வர்த்திக்கிற,
தூபம்	தூபமானது,		
இடையிடையில்	நடுநடுவே,	வரை	மலை. ... (அஉ)

வ்யா.—எண்பத்திரண்டாம்பாட்டு. (படையித்யாதி) வாள் போன்று ஒளியையுடைத்தான கண்களையுடையரான ஸ்த்ரீகள். (பாரசிநள்) த்வாதசிநாள். (பைம்பூமித்யாதி) அழகியதாகத்தொடுத்த மாலையோடே யேந்தின தூபம், (இடையிடையிலித்யாதி) பூக்களோடே கூடின புகையானது, ஆகாசத்திலே கலக்கத்தோற்றின நக்ஷத்ரங்களை மாசூணப்பண்ணுநின்றது. (மேலொருநாளித்யாதி) பண்டொருநாள் ராக்ஷஸன் மாயாம்ர்கமாய்வர, "இத்தைப்பிடித்துத் தரவேணும்" என்று பிராட்டி யருளிச்செய்தது மறுக்கமாட்டாமே அத்தைமுடித்தவனுடைய மலை. இப்பாட்டாலே - ஸர்வஸமாச்ரயணீயத்வமும் ஆச்ரிதபாரதந்த்ர்யமும் சொல்லுகிறது. (வாள்கண்ணார்) தங்களைச் சிலர் ஆச்ரயிக்க விருக்குமவர்கள். (மீன்மாய) ஆகாசம் தோற்றாதபடி பூக்களும் புகையுமாகத் தோற்றுகை. (மானித்யாதி) பிராட்டிக்கு நியாம்யனாய்ப்போலே நியாம்யனாய்ப் புக்கு, தன்னநர்த்தமென்று மீளாது கார்யம்செய்யுமவன். ... ... (அஉ)

எண்பத்திரண்டாம்பாட்டு. பார் - பூமி. அசிநாள் என்கையாலே (த்வாதசிநாள்) என்கிறது. ... ...(அஉ)

அ.—எண்பத்துமூன்றாம்பாட்டு. நாம் ஆச்ரிதபரதந்த்ரராய் அவர்கள்கார்யம்செய்வோ மென்னுமிடம் நீர் என்கொண்டறிந்திரென்ன ;மதுகைடபர்களைப் பொடிபடுத்தும் பரிகரமுடையநீ, அத்தைவிட்டு மலையையெடுப்பது ஏறடர்ப்பதாய்த்து வெறுமனேயோ வென்கிறார்.

மூ.—வரைகுடைதோள்காம்பாகவாநிரைகாத்தாயர்
நிரைவிடையேழ்செற்றவாறென்னே—உரவுடைய
நீராழியுட்கிடந்துநேராநிசாசரர்மேல்
பேராழிகொண்டபிரான். (௮௩)

பதம்.	உரை.
உரவுடைய	மிடுக்குடைத்தான,
நீர்	நீரையுடைய,
ஆழியுள்	திருப்பாற்கடலிலே,
கிடந்து	கண்வளர்ந்து,
நேரா	எதிரிட்ட,
நிசாசரர்மேல்	ராக்ஷஸப்ரக்ருதிகளான மதுகைடபர்கள் மேலே, அவர்கள் பொடிபடும்படி,
பேர்	மிடுக்கால் பெரிய,
ஆழிகொண்ட	திருவாழியையெடுத்துக்கொண்ட,
பிரான்	உபகாரகனே, இப்படி * கருதுமிடம்பொருதுகைநிற்கவல்ல சக்கரமுண்டாயிருக்க அத்தைவிட்டு, ஒருவரால் சலிப்பிக்கவொண்ணாத,

பதம்.	உரை.
வரைகுடை	மலைகுடை
யாக	யாகவும்,
தோள்	திருத்தோள்,
காம்பாக	அதுக்குக் காம்பாகவும்,
ஆநிரை	பசுத்திரள்களை,
காத்து	ரக்ஷித்து நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ச்லேஷத்துக்கு ப்ரதிபந்தகமாக,
ஆயர்	இடையர், முன்னிட்ட,
நிரைவிடை	திரண்ட ரிஷபங்க
யேழ்	ளேழையும்,
செற்றவாறு	முடித்தப்ரகாரம்,
என்னே	எங்ஙனே.

இத்தால் - ஆச்ரிதவிரோதியுண்டானாலும் உன்ஸங்கல்பத்தாலன்றிக்கே உடம்புநோவக் காரியம்செய்யும் ஸ்வபாவனன்றோ நீயென்றபடி. ... (௮௩)

வ்யா.—எண்பத்துமூன்றாம்பாட்டு. (வரையித்யாதி) மலைகுடையாகவும் தோள்காம்பாகவும் பசுக்களைக்காக்க.(ஆயரித்யாதி) நப்பின்னைப்பிராட்டிக்கு ப்ரதிபந்தகமான ஏழுரிஷபத்தையும் முடித்தபடி எங்ஙனே. (உரவிடையித்யாதி)"உரவு" என்று-மிடுக்குக்குப்பேர். ஸர்ப்பமென்றுமாம். திருப்பாற்கடலிலே கிடந்து.

(நேரவித்யாதி) எதிரான மதுகைடபர்மேலே திருவாழியை வாங்கின உபகாரகன். இத்தால் - ஆச்ரிதர்க்கு விரோதம் வந்தபோது தன்னுடம்புநோவக் காரியம்செய்யுமென்றபடி.

ஒருசெயலேயோ (வரையித்யாதி) வந்ததுக்குத் தக்கதுகொண்டு காரியம்செய்வதே!.(உரவுடையநீர்) முதுநீர். (பேராழியித்* யாதி)கையில் திருவாழியைக்கொண்டு இந்த்ரன் நோவாதபடி உன்தோள்நோவ ரக்ஷிப்பதே!. ... ... (அங)

அ.—எண்பத்துநாலாம்பாட்டு. உன்னுடைய ரக்ஷ்யத்தளவல்லாத ரக்ஷகத்வப்பாரிப்பு ஒருவரால் பரிச்சேதிக்கலா யிருந்ததோ வென்கிறார். (அச)

மூ.—பிரானுன்பெருமைபிறராரறிவார்
உராயுலகளந்தநான்று—வராகத்
தெயிற்றளவுபோதாவாறென்கொலோவெந்தை
யடிக்களவுபோந்தபடி. (அச)

பதம்.	உரை.
பிரான்	உபகாரகனே,
உராய்	எங்குமொக்க ஸஞ்சரித்துக்கொண்டு,
உலகளந்த	நீ லோகத்தையளந்
நான்று	துகொண்டவன்று,
எந்தை	என்ஸ்வாமியான வுன்னுடைய,
அடிக்களவு போந்த	திருவடிகளுக்கு அளவுபோந்த,
படி	பூமியானது,
வராகம்	வராஹரூபியான வுன்னுடைய,
எயிற்றளவு	திருவெயிற்றில் ஏகதேசத்தளவும்,
போதாவாறு	போதாததா யிருக்கிறப்ரகாரம்,
என்கொலோ	எங்ஙனேயோ;

பதம்.	உரை.
	ஆனபின்பு,
	ஏவம் விதனான,
உன்பெருமை	உன்னுடைய பெருமையை,
	ஸர்வஜ்ஞனான நீ அறிவுதியோ அறியாயோவென்று ஸந்தேஹிக்குமத்தனை போக்கி,
பிறர் ஆர் அறிவார்	வேறுசிலர் ஆர்தான் அறிவார்.

உராய் உலகளந்த - உலாவிக்கொண்டு உலகளந்தவென்றபடி. "ரலயோரபேதः" "ரலயோரபேதஃ" என்னக்கடவதிறே. அன்றிக்கே, உரோசிக்கொண்டுஉலகளந்தவென்றாக்கி-எல்லாரோடும் தீண்டிக்கொண்டென்றுமாம். (அச)

எண்பத்துமூன்றாம்பாட்டு. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (ஒருசெயலேயோ வென்று.) ... (அங)

வ்யா.—எண்பத்துநாலாம்பாட்டு. (பிரானித்யாதி) உபகாரகஞானவனுடைய பெருமையை வேறுசிலராலறியப்போமோ. (உராயித்யாதி) "உராய், என்று-பட்டர், அநாயாஸேந அளந்தவன்று" என்று அருளிச்செய்தார். உலாவியென்றுமாம். பூமியிலே பொருந்தவிட்டென்னிலுமாம். (எந்தையடிக்களவு போந்தபடி-வாராகத்தெயிற்றளவும் போதாவாறென்கொலோ) ஒருநாள் திருவடிக்குள்ளே அடங்கினது திருவெயிற்றுக்குப் போந்ததில்லை என்கிறது. ரக்ஷ்யத்தினளவன்று ரக்ஷகன்பாரிப்பு. நானொருவனுமே உன்குணங்களிலே குமிழ்நீருண்ணுகின்றேன். ... ... (அச)

அ.—எண்பத்தஞ்சாம்பாட்டு. இந்த்ரிய ஜயம்பண்ணி அவனை ஆச்ரயிக்கிற நீதான், அவன்படிகளிலேயொன்றைக் கண்டநுபவிக்கப்பெற்றாயோ, பெற்றாயாகில் நெஞ்சே! சொல்லிக்காணென்கிறார்.

மூ.—படிகண்டறிதியேபாம்பணையினான்புட்
கொடிகண்டறிதியேகூறாய்—வடிவிற்
பொறியைந்துமுள்ளடக்கிப்போதொடுநீரேந்தி
நெறிநின்றநெஞ்சமேநீ. (அரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நெஞ்சமே.	நெஞ்சே,	பாம்பணையினான்	திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையனான ஸர்வேச்வரனுடைய,
பொறியைந்தும்	யந்த்ரகல்பமான இந்த்ரியங்களைந்தையும்,		
	பாஹ்ய விஷயங்களில் போகாதபடி,		தூரத்திலே ஆச்ரிதர் கண்டுவாழும்படி எடுத்துக்கொண்டு வருகிற,
வடிவில்	சரீரத்துக்குள்ளே		
உள் அடக்கி	நியமித்து,		
போதொடு	ஆச்ரயணோப கரணங்களான புஷ்பங்களோடேகூட,	புள்கொடி கண்டு	பெரியதிருவடியாகிற த்வஜத்தைக் கண்டு,
நீர் ஏந்தி	ஜலத்தை தரித்துக்கொண்டு,	அறிதியே	அநுபவித்தறி வுதியோ;
நெறி	ஸமாச்ரயண மார்க்கத்திலே,	படிகண்டு	அவன் திருமேனியைக்கண்டு,
நின்றநீ	நிலைநின்று ஆச்ரயித்தாயாயிருக்கிற நீ,	அறிதியே	அநுபவித்தறி வுதியோ;

எண்பத்துநாலாம்பாட்டு. உராய்.— அநாயாஸமாதல்; உரோசியென்றாய்-பூமியிலே பொருந்தவிட்டென்னுதல். "என்கொலோ பிறராரறிவார்" என்கையாலே (நானொருவனுமே யென்கிறது.)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	அவன் திருவநந்தாழ்வானுக்குஉடம்பு கொடுக்கும்படிதான் கண்டறிவுதியோ		வடிவில்லாத பொறியைந்துமென்றுமாம். ஒருவழிப்பட்டிருக்கையன்றிக்கேபலஅபிஸந்திகளையுடைத்தாயிருக்குமென்கை. வடிவில்லாமையாவது - தெரியாதபடி
	இவற்றிலேயின்னது கண்டேனென்று,		யிருக்கையென்றுமாம். கண்டநுபவிக்கப் பெறுவதுக்கு முன்னே ஜ்ஞாந லாப மாத்ரங் கொண்டு
கூறாய்	ஒன்றைச் சொல்லிக் காணாய்.		த்ர்ப்தி பிறந்திருக்கவொண்ணாது காணென்றபடி. ... (அரு)

அ.—எண்பத்தாறும்பாட்டு. இப்படி இவர் தந்திருவுள்ளத்தைக்குறித்து "அவனைஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கப்பெற்றிலையிறே!" என்று சொன்னது பொறுக்கமாட்டாமல் இவரிருந்தவிடத்திலே பிராட்டியுந் தானுமாகவந்துநெருக்கஅத்தைக்கண்டநுபவிக்கிறார்.

மூ.—நீயுந்திருமகளும்நின்றாயாற்குன்றெடுத்துப்
பாயும்பனிமறுத்தபண்பாளா—வாசற்
கடைகழியாவுட்புகாகாமருபூங்கோவ
லிடைகழியேபற்றியினி. (அகூ)

அ.—எண்பத்தஞ்சாம்பாட்டு "பிறராரறிவார்" என்று-தம்முடைய திருவுள்ளம் நானறிந்திருக்கவென்ன; நீயும் இந்த்ரிய ஜயம் பண்ணி ஆச்ரயணத்திலே இழிந்தாயல்லது ஸாக்ஷாத்கரித்தாயோ வென்கிறார்.

வ்யா.—(படியித்யாதி) திருமேனிகண்டறிதியோ. (பாம்பணையித்யாதி) அவனுடைய படுக்கைகண்டறிதியோ, கூறாய்-சொல்லாய். (வடிவிலித்யாதி) சரீரத்தில் இந்த்ரியங்களைந்தையுமடக்கி. வடிவில்லாத இந்த்ரியங்களித்தனையிறே.

நாமறியாதிருக்கப்பெற்றபடி என்னென்ன; திருவுள்ளத்தைக் குறித்து, வடிவில் பொறியைந்து முள்ளடக்கி, வடிவிலே-உடம்பிலே யடக்கி. வடிவில்லாதபடி - ஒருபடிப்பட்டிராதென்றுமாம்.

எண்பத்தஞ்சாம்பாட்டு. புட்கொடிகண்டறிதியே - கண்டாயோ இல்லையே யென்றபடி. வடிவு - ஸ்வபாவமாய், அத்தால்-ஒருபடிப்பட்டிராமை. இத்தை அருளிச்செய்கிறார் * (கண்டவாதிரிந்தவித்யாதி.)

மேலுக்கு அவதாரிகை யருளிச்செய்கிறார் (நாமறியாதிருக்கப்பெற்றபடியித்யாதி.) ... ... (அரு)

---

* இந்த அரும்பதத்துக்குச் சரியான மூலபாடத்தைக் கோசாந்தரங்களில் காண்க.

பதம்.	உரை.
குன்று	கண்டதொருமலையை
எடுத்து	ப்பிடுங்கி யெடுத்து,
பாயும்	மேலேவந்து சொரிகிற,
பனி	மழையை,
மறுத்த	பரிஹரித்த,
பண்பாளா	நீர்மையையுடையவனே,
வாசல்கடை	திருவாசலுக்குப்புறம்பு,
கழியா	போகமாட்டாதே,
உள்புகா	உள்ளூப்புகமாட்டாதே,
காமர்	ஸ்ப்ர்ஹணீயமாய்,
பூ	அழகிதான,

பதம்.	உரை.
கோவல்இ	திருக்கோவலூரிடை-
டைகழிபற்றி	கழியைப்பற்றி,
நீயும்	ஆச்ரிதரக்ஷணத்தில் முற்பாடனான நீயும்,
திருமகளும்	உன்னிலும் முற்பட்ட திருமகளாருமாக, எங்களோடே கலக்கப்பெற்ற வுகப்பின்கனத்தாலே பரந்தகால்பாவி,
இனி	இப்போது,
நின்றாயால்	தரித்து நின்றாயே என்று அநுபவிக்கிறார். ... (௮௬)

அ.—எண்பத்தாறும்பாட்டு. (நீயும்) இவர், தம்முடையதிருவுள்ளத்தைக்குறித்து "ஸாக்ஷாத்கரித்திலையிறே" என்னத் தரியானிறே அவன்.

வ்யா.—(நீயுமித்யாதி) "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார்" என்ற நீயும், உன்னுடையபரிகரம் நலியப்புக, "𑌨𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿" "நகஶ்சிந்நாபராத்யதி" என்றவளுமாய் நின்றாயால். (குன்றித்யாதி) உடம்பிலே விழப்புக்க மழையை மலையையெடுத்துப்பரிஹரித்த நீர்மைபோலே யிருந்தது இப்போது நெருக்கு. அபேக்ஷிதமாக நெருக்கினபடி. (வாசலித்யாதி)இடைகழிக்கு உள்ளும்புறம்பும் காடுத்தீபோலே யிராநின்றது. காமுகரானவர்கள் உகந்த விஷயத்தினுடைய கண்வட்டம்விட்டுப் போகமாட்டாதாப்போலே. (இனி) இப்போது. இனி-திருக்கோவலூரிலேநிற்கிறது கர்மபலாநுபவத்துக்கன்றிறே, ஸம்ஸாரிகளை நரகத்தில் புகாமல் காக்கவிறே.

எண்பத்தாறும்பாட்டு. இடைகழிக்குப் புறம்பு ஸம்ஸாரிகளும், உள்ளே உபாஸகரான ரிஷியுமாகையாலே, அநந்யப்ரயோஜநரான ஆழ்வார்கள் பற்றியிருக்கிற இடைகழியைப்பற்றிநின்றானென்றபடி. "இனி" என்று மேலில் பாட்டைப்பற்ற அருளிச்செய்கிறார் (திருக்கோவலூரித்யாதி.) இன்று இங்ஙனே உதவினாய். (௮௬)

(நீயுமித்யாதி) ஆச்ரிதரக்ஷணத்தில் முற்பாடனை நீயும், "[illegible]" "அக்ரதஸ்தேகமிஷ்யாமி" என்று உனக்குமுற்படும் பிராட்டியும். (பண்பாளா) அன்று அங்ஙனே உதவினாய். (சடைகழியாவுள்புக்கா) அங்கு அவர்கள் ஆபத்துத் தீர்த்தான், இங்குத் தன்னுபத்துத் தீர்த்தபடி புறம்பு காட்டுத்தீயோடொக்கும்.()

அ.—எண்பத்தேழாம்பாட்டு. இப்படி ஸர்வேச்வரன் வந்து ஸந்நிஹிதனானபின்பு நரகத்துக்கு ஆள்கிடையாது, அவ்வவ்விடங்களுக்குக் கடவார், வாசல்களையடைத்து ஓடிப்போக வமையுமென்கிறார்.

மூ.—இனியார்புகுவாரெழுநரகவாசல்
முனியாதுமூரித்தாள்கோமின்—கனிசாயக்
கன்றெறிந்ததோளான்கனைகழலேகாண்பதற்கு
நன்கறிந்தநாவலஞ்சூழ்நாடு. (அஎ)

பதம்.	உரை.
	கன்றாயும்விளவாயும் இரண்டஸுரர் தன்னைநலிகைக்கு இடம்பார்த்துநிற்க அத்தையறிந்து முள்ளிட்டுமுள்ளைக் களைவாரைப்போலே,
கனி	அஸுராவிஷ்டமான விளவின்பழங்கள்,
சாய	உதிர்ந்து விழும்படியாக,
கன்று	அஸுராவிஷ்டமான கன்றை,
எறிந்த	எறிதடியாக எடுத்தெறிந்து இரண்டையும்முடித்துப்பொகட்ட,
தோளான்	திருத்தோள்களை யுடையனான ஸர்வேச்வரனுடை,
கனைகழல்	ஆபரணத்வநியையுடைத்தான திருவடிகளை,

பதம்.	உரை.
காண்பதற்கு	கண்டு அநுபவிக்கைக்கு ஸாதநம்,
நாவல்	நாவலோடேகூடி,
சூழ்	பரந்துநிற்கிற,
நாடு	நாட்டிலுள்ளப்ராணிகளானவை, அவன் உகந்துவர்த்திக்கிற திருக்கோவலூருக்குத்தோள்தீண்டியான ஸ்தலத்தில் வாஸமேயென்று,
நன்கு அறிந்த	நன்றாக அறிந்தன; இப்படியானபின்பு,
எழு	ஸப்தவிதமான,
நரகவாசல்	நரகத்வாரங்களில்,
இனிப்புகு வார் ஆர்	இனிப்போய் ப்ரவேசிக்கக்கடவார் ஆர்; எங்கள் பதத்துக்கு அழிவாம்படி இப்படி வார்த்தைசொல்லுவதே! என்று,

பதம்.	உரை.
முனியாது	பொடியாதே, இனிஒருக்காலும் திறக்க வொண்ணாதபடி;
மூரித்தாள் கோமின்	பெரியதாளைப் பூட்டுங்கோள்.

பதம். உரை.

ஆழ்வார்களும் அருளிச்செயல்களும் நடையாடுமிடமே நாடு, அல்லாதவிடம் காடென்றுகருத்து. எழுநரகம்—எழுகிற ஸம்ஸாரிகளடங்கலும்சென்று புகுகிற நரகத்வார மென்றுமாம்; கீர்த்தியை யுடைத்தான நரகமென்னவுமாம். ... ... (அஎ)

அ.—எண்பத்தெட்டாம்பாட்டு. இப்படி திருக்கோவலூரோடு தோள்தீண்டியான நாட்டைப்பற்றியிருந்து, இவ்விஷயத்தை விட்டுப்புறம்பே அந்யபரராய்த்திரியக்கண்டபடியாலே, வழிபறிக்கும் நிலத்தில் தம்மைப்பொருள்கொண்டு தப்பினர் உகக்குமாப்போலே, என்னுடைய கரணத்ரயத்தையுங்கொண்டு நான் முன்னம் அங்கே ப்ரவணனாகப்பெற்றேனென்று ஸ்வலாபத்தைப்பேசி இனியராகிறார்.

வ்யா.—எண்பத்தேழாம்பாட்டு. (இனியித்யாதி) எழுநரகவாசலென்கிறது - கீர்த்தியையுடைத்தான நரகமென்னவுமாம்; எழுவகைநரக மென்னவுமாம். (முனியாது) யமபடருடைய கோபத்துக்கு இனி பலமில்லையென்கிறது. (மூரித்தாள்கோமின்) இனிப் புகுருவாரில்லை, மிடுக்குடையதாளைக் கோவுங்கோள். (கனிசாயவித்யாதி) கனைகழலென்றது - இலக்கைக்குறித்து நடக்கிறபோது திருவடிகளில்ஆபரணத்வநியைஜம்பூவீபமானது நன்றாகவறிந்தது. நன்றாகவறிகை - ஸம்ஸாரத்தினின்றும் போகோமென்றிருக்கை; உகந்தருளின தேசமிங்குண்டாய்த்தென்று அஸூயை பண்ணாதே பொறுத்திருக்கை.

(இனி யித்யாதி) எங்கள் பதத்துக்கு அழிவுசொல்லுவதே! என்று பொடியாதே. (கனைகழல்) ஆபரணவொலி. நாவலம் - ஜம்பூத்வீபம். "ఏకాన్తరణిమాత్రితా" "ஏகாந்தரணிமாச்ரிதௌ" - ஒருபடுக்கையிலே யிருப்பார்க்கு பயமுண்டோ. ... ... (அஎ)

எண்பத்தேழாம்பாட்டு. கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (உகந்தருளினதேச மித்யாதி.) அஸூயை என்றது - பகவத்விட்டுக்களாகையாலே திவ்யதேசத்தைவிட்டு தேசாந்தரத்தேபோதல்; அங்கொரு அதிசயங்கண்டால் ப்ராணத்யாகம்பண்ணுதல். பொடியாதே - ஆழ்வாரைப்பொடியாதே. திவ்யதேசமுள்ள நாட்டி லிருப்புமாத்ரம்போருமோவென்ன; அருளிச்செய்கிறார் (ఏకాంతరణిమి-ஏகாந்தரணிமித்யாதி.) ... ... (அஎ)

மூ.—நாடிலும்நின்னடியேநாடுவன்நாடோறும்
பாடிலும்நின்புகழேபாடுவன்—சூடிலும்
பொன்னாழியேந்தினான்பொன்னடியேசூடுவேற்கு
என்னாகிலென்னேயெனக்கு. (௮௮)

பதம்.	உரை.
நாடிலும்	நெஞ்சைக்கொண்டு தேடுமிடத்திலும்,
நின் அடியே	தேவரீருடைய திருவடிகளையே,
நாடுவன்	தேடாநிற்பன்;
நாடோறும்	ஸர்வகாலத்திலும்,
பாடிலும்	ப்ரீதி பரவசனாய் ஸ்தோத்ரம் பண்ணுமிடத்திலும்,
நின்புகழே	தேவரீருடைய கல்யாணகுணங்களையே
பாடுவன்	வாய்விட்டுப் பாடாநிற்பன்;
சூடிலும்	நான்என்தலையாலே ஸாதரமாக தரிக்குமிடத்திலும்,
பொன்	ஸ்ப்ர்ஹணீயமான,
ஆழி	திருவாழியை,
ஏந்தினான்	அழகுபெற தரித்த ஸர்வாதிகனானவனுடைய,
பொன் அடியே	அழகிய திருவடிகளையே,
சூடுவேற்கு	சிரோபூஷணமாக தரிக்கக்கடவேனாய்,
எனக்கு	இப்படி கரணத்ரயத்தாலுமுள்ள ப்ரயோஜநம் கொள்ளப்பெற்ற வெனக்கு,
என்னாகிலென்	ஏதானால் நல்லது.

நாட்டார்அறிந்து இந்த லாபத்தைப்பெறிலென், இழக்கிலென், எனக்கு ஏதானால் நல்லதென்றபடி. அன்றிக்கே, இங்கேயிருக்கிலென், அங்கேபோகிலென், ஏதானால் எனக்குநல்லதென்றுமாம்( )

எண்பத்தெட்டாம்பாட்டு. (நாடிலுமித்யாதி)நினைக்கிலும்உன் திருவடியையே நினைப்பன்;எப்போதும் பாடிலும் உன்னுடையபுகழையே பாடுவன். (சூடிலுமித்யாதி) ஒன்றைச்சூடிலும், திருவாழியேந்தின உன்னுடைய விலக்ஷணமான திருவடிகளைச் சூடாநின்றவெனக்கு பரமபதத்திலே போனாலும் வாங்மநஃசாயங்கள் அங்கே ப்ரவணமாகையாகச்செய்வது.அது இங்கேபெற்றேனாகில் எனக்கு இங்கே யிருக்கை நல்லதென்கிறார். அவன் படிக்கு ஸம்ஸாரிகள் படியைப்பார்த்தால் யமனுக்கு அவகாசமுண்டாயிருந்தது.

எண்பத்தெட்டாம்பாட்டு. “சூடுவேற்கு” என்றது - மாநஸமாகச் சூடுகையைச்சொல்லி, இப்படி மாநஸமாகச் சூடுவார்க்கு என்று பரகதமாக்குகிறார்(அவன்படிக்கித்யாதி.)இப்படி நினைத்தமட்டிலே அவனைப்பெறலாயிருக்க, அதுவும் செய்யாமையாலே யமனுக்கு அவகாசமுண்டென்றபடி.

“𑌤𑍇𑌨𑌮𑍈𑌤𑍍𑌰𑍀𑌭𑌵𑌤𑍁” “தேநமைத்ரீபவது” என்றும், “𑌯𑌦𑌿𑌵𑌾” “யதிவா” என்றும் சொல்லத் தலையறுப்புண்டிலனே. (பொன்னடியே) இதுவே ப்ரயோஜநமாக வாக்காயங்களை யொழிய நினைக்கிலும். (என்னாகிலென்னே யெனக்கு) நாட்டார் நரகம்புகிலென், தவிரிலென். ஆரானும். ... ... (அஅ)

அ.—எண்பத்தொன்பதாம்பாட்டு. கீழ்ப்பிறந்தலாபம் திரியட்டும் பின்னாட்டுகிறபடியைச் சொல்லுகிறார்.

மூ.—எனக்காவாராரொருவரோயெம்பெருமான்
தனக்காவான்தானேமற்றல்லால்—புனக்காயாம்
பூமேனிகாணப்பொதியவிழும்பூவைப்பூ
மாமேனிகாட்டும்வரம். (அகூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எனக்கு	நிர்ஹேதுகமாக இப்பேற்றைப்பெற்று, சேஷத்வமே வடிவாயிருக்கிறவெனக்கு,	தனக்கு	தனக்கு,
ஆவார்	ஒப்பாகவல்லார்,	ஆவானல்லால்	ஒப்பாமித்தனையொழிய எனக்கு ஒப்பாகவல்லனே; இந்தஜ்ஞாநலாபமாத்ரமேயாய் ஸாக்ஷாத்கரிக்கப்பெறுதகுறைகிடக்கிறதேயென்று சங்கிக்க இடமறும்படி,
ஆரொருவரோ	வேறொருவருண்டோ;	புனம்	தன்னிலத்திலே நின்று செவ்விபெற்ற,
எம்பெருமான்	நாட்டில் ஓரொப்பில்லாதவளவன்றிக்கே தான் தோன்றியான பேற்றையுடையனாய சேஷத்வ ரஸத்துக்கு இட்டுப்பிறவாத ஸர்வேச்வரன்,	காயாம்பூ	காயாம்பூவினுடைய
		மேனி	நிறமும்,
தானே	தானே,	காண	காணக்காண,

இப்படி அல்பாநுகூல்யத்திலே அவன் கார்யம் செய்யலாயிருக்க இழந்தபேருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (𑌤𑍇𑌨𑌮𑍈𑌤𑍍𑌰𑍀 – தேநமைத்ரீத்யாதி.) சூடுகை மாநஸப்பற்றாக்கி அருளிச்செய்கிறார் (வாக்காயங்களை யித்யாதி.) (எனக்கு-என்னாகிலென்) இப்படி அல்பாநுகூல்யத்திலே பெறலாயிருக்க இத்தை யிழக்கிற ஸம்ஸாரிகள் படி எனக்கு எதானால் தாவிலை; அத்தை ஆராயக்காரியமில்லை யென்றபடி. ஆரானும்-இப்படி ஆர்தான் பிறருக்கு துக்கப்படுவாரென்றபடி. ... ... (அஅ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொதியவிழும்	கட்டுநெகிழ்ந்து வருகிற,	காட்டும்	காட்டாநின்றது.
பூவைப்பூ	பூவைப்பூவினுடைய		
மேனி	நிறமும்,		
	அவனுடைய,		
மா	ச்லாக்யமான,		
மேனி	வடிவை,		
வரம்	அழகிதாக,		

வரம் - வரிஷ்டமாக அழகிதாக வென்றபடி. அன்றிக்கே, "ஶ்ரேயஶ் ஶுபவர" "வ்ரீயத இதிவர" என்றாய்-என்றாலே ப்ரார்த்திக்கப்படுகிற வடிவை அழகிதாகக்காட்டாநிற்கு மென்னுதல். (அகூ)

அ.—தொண்ணூறாம்பாட்டு. போலியைக்காட்டித்தம்மை தரிப்பித்த ப்ரஸங்கத்திலே ப்ரஹ்லாதனுக்கு விரோதியைப் போக்கித் தன்னைக்காட்டி தரிப்பித்தபடியை யருளிச்செய்கிறார்.

வ்யா.—எண்பத்தொன்பதாம்பாட்டு. (எனக்கித்யாதி) என்னோடொப்பா ரொருவருமில்லை யிறே என்னவுமாம். எனக்காவா ரெவரென்னவுமாம். என்னோடொப்பா ரொருவருமில்லையென்று நீர்சொல்லுவானென், பரமசேதநனுண்டேயென்னில்; (எம்பெருமானித்யாதி) என்னோடொத்தாரில்லையென்றே னித்தனையல்லது, எம்பெருமானுடையஉயர்த்தியில்லையென்றேனோ. நீர்என்னோடொப்பாரில்லையென்று சொல்லிற்று எத்தாலே யென்னில்; அவனோடு ஸத்ருஶமான பதார்த்தங்கள் வர்த்திக்கிறதேசத்திலே நின்றேன்,ஓரடியன்றோ குறையநின்றது.அவன்என்று ஸாக்ஷாத்கரிக்கு மத்தனையன்றோ வேண்டுவது. (புனக்காயாம் பூமேனி)புனத்திலே நிற்கிற காயாம்பூமேனியை. (காணப்பொதியவிழும்பூவைப்பூ) காணக்காண அலராநின்ற பூவைப்பூ. இவையிரண்டும் அவனுடைய வரமான மாமேனியைக்காட்டாநின்றது. நாட்டார்க்கு நினைக்கையிலுள்ள வருத்தம்போரும் எனக்குமறக்க. நானுமொருவனே!. வரமாக - தன்னிலும் விசதமாக வென்றுமாம். ... ... (அகூ)

எண்பத்தொன்பதாம்பாட்டு. எனக்கு ஹிதபரர் எவர், ஈச்வரனையொழிய வொருவரு மில்லையென்று இரண்டாமர்த்தம். ஸத்ருஶபதார்த்தம்-காயாம்பூமுதலானது. அவற்றைக்கண்டுதரிக்கலாயிருக்கையாலே என்னோடொப்பாரில்லையென்றபடி. அவற்றைச்கண்டு தரிக்கைபோருமோ, அவனைக் காணவேண்டாவோ வென்ன; அருளிச்செய்கிறார் (ஓரடியன்றோ வித்யாதி.) குறை - ப்ரத்யக்ஷமாக அவனைக்காணுமை. ஆனால் வேணதுளதென்ன; அருளிச்செய்கிறார் (அவனென்றித்யாதி.) ஸத்ருஶபதார்த்தங்களை அவனாகக்கொண்டு ஸாக்ஷாத்கரிக்குமத்தனையென்றபடி. பொதியவிழும்—கண்பொதியக்கைகாணவென்றபடி. பூக்கள் காட்டுகையாலே மறக்கவருமை. ()

மூ.—வரத்தால்வலிநினைந்துமாதவநின்பாதம்
சிரத்தால்வணங்கானுமென்றே—உரத்தினால்
ஈரரியாய்நேர்வலியோனாயவிரணியனை
ஓரரியாய்நீயிடந்ததூன். (கூ0)

பதம்.	உரை.
	ஸர்வர்க்கும் ஆச்ரயிக்கலாம்படி யிருக்கிற,
மாதவ	ச்ரியஃபதியானவனே,
ஈர்	இரண்டுகூறாகக்கிழித்துப் பொகடப்படும்,
அரியாய்	சத்ருவாய்,
நேர்	நேர்நிற்கவல்ல,
வலியோனாய	பலத்தையுடைய,
இரணியனை	ஹிரண்யனை, நாட்டில்கண்டறியாத,
ஓர்	அத்விதீயமான,
அரியாய்	ந்ருஸிம்ஹமாய்க் கொண்டு,
உரத்தினால்	அவன்மிடுக்கும் கீழ்ப்படும்படியான மிடுக்காலே,
ஊன்	மாம்ஸளமான பெரிய சரீரத்தை,
நீ	ஆச்ரித வத்ஸலனான நீ,
இடந்தது	இடந்து பொகட்டது,
வரத்தால்	ப்ரஹ்மாதிகள் கொடுத்தவரத்தால்வந்த
வலிநினைந்து	தன்மிடுக்கைக்கனக்க நினைத்து,
நின்பாதம்	ஸர்வாதிகனான வுன்னுடைய திருவடிகளை,
சிரத்தால்	தலையாலே,
வணங்கானும் என்றே	வணங்கி ஆச்ரயியாதேயிருந்தான் என்றோ;

அன்றிறே, சிறுக்கனைப்பலகறுவி நலிந்தானென்னு மிது கொண்டிறே யென்றபடி. (கூ0)

அ.—தொண்ணூறாம்பாட்டு. (வரத்தால்) நரஸிம்ஹரூபியான ஈச்வரனுடைய ஆச்ரிதவிரோதிநிரஸநசீலத்தையும் வாத்ஸல்யத்தையும் அநுஸந்திக்கிறார்.

வ்யா.—(வரத்தால் வலிநினைந்து) வரத்தாலே தனக்கு மிடுக்குண்டாக நினைத்தானல்லது வரங்கொடுத்தவர்கள்சக்திபகவததீநமென்றறிந்திலன். (மாதவன்) வரங்கொடுத்தவர்களாலும் வணங்கப்படுமவன். (நின்பாதமித்யாதி) அவனிழவுக்குவெறுக்கிறார். (உரத்தினாலீரரியாய்) மிடுக்காலே ஈரப்படும், அரியானவன் - சத்ருவானவன். பெரியசத்ருவென்றுமாம். (நேர்வலியோன்) நேரேவலியான ஹிரண்யனை.

(ஓரரியாய்) நாட்டில் நடையாடும்ஸிம்ஹமன்று, தன்னுடைய இச்சையாலே பிறந்த ஸிம்ஹமென்றுமாம். ஓரப்படும் அரியாய்-எல்லாரும் த்யாநம்பண்ணும் ஸிம்ஹமென்றுமாம்.

(வரத்தால்) தேவர்கள் வரத்தை மிடுக்காக நினைத்தான். வணங்குவித்துக்கொள்ளும் விஷயமிருக்கும்படி. (வணங்கானுமென்றே) பிள்ளைபக்கல் பரிவுதப்பச்செய்தோம், என்னுமென்றுமாம். உன வஸ்து அழியாமைக்கென்றுமாம். (ஈரரி) பெரியசத்ரு. ஓரரி-ஸிம்ஹங்களில் ஒப்புப்பிடிக்க வொண்ணாது. ... ... (கூ0)

அ.—தொண்ணூற்றோராம்பாட்டு. ஸர்வேச்வரன் ஸர்வாபேக்ஷிதப்ரதனேயாகிலும் இதரவிஷயங்களில் ருசியற்று அவனை ஆச்ரயித்தார்க்கல்லது பரமபத ப்ராப்தியரிதென்கிறார்.

மூ.—ஊனக்குரம்பையினுட் புக்கிருள்நீக்கி
ஞானச்சுடர்கொளீஇநாடோறும்—ஏனத்
துருவாயுலகிடந்தவூழியான்பாதம்
மருவாதார்க்குண்டாமோவான். (கூக)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	அகவாயில்தோஷம் தோற்றாதபடி,	இருள்நீக்கி	அத்தைபோக்ய மென்றிருக்கிற அஜ்ஞாநமாகிற விருளைப் போக்கி,
ஊன	மாம்ஸம் செறிந்து மேலெழமினுங்கித் தோற்றுகிற,	ஞானச்சுடர்கொளீஇ	ஜீவபர யாதாத்ம்யத்தை விஷயீகரித்திருக்கும் ஜ்ஞாநமாகிற விளக்கையேற்றி,
குரம்பையில்	சரீரமாகிற குடியிலே,		தன்னுருக்கெடுத்து,
	அதில்தோஷமுள்ள எல்லையளவும் செல்ல,	ஏனத்துருவாய்	நீருக்கும்சேற்றுக்கும் இறாயாத வராஹரூபத்தையுடையனாய்க்கொண்டு,
உள்புக்கு	உள்ளூற வவகாஹித்து,	உலகுஇடந்த	லோகத்தை இடந்தெடுத்துக் கொண்டேறினவனாய்,

---

தொண்ணூறாம்பாட்டு. "ஓர்" என்று – விசாரமாய் (இச்சையாலே யென்றது.) பரிவுதப்பச்செய்தோம் - பரிவுதப்பும்படி தண்டித்தோமே யென்னு மநுதாபமில்லாதவனென்னுதல்; வணங்காமையாலே தன்வஸ்துவான ஹிரண்யனுக்கு ஸ்வரூபநாசம் வாராமைக்கென்னுதல். விவேதியானசரீரத்தைப்போக்கினனென்றபடி.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஊழியான் பாதம்	இவையழிந்து கிடந்த ஸம்ஹார காலத்திலும் தன்மேலே யேறிட்டுக்கொண்டு நோக்கும் ஸ்வபாவனுடைய திருவடிகளை,	நாடோறும் மருவாதார்க்கு	நாள்தோறும் பொருந்தி ஆச்ரயியாதார்க்கு,
		வான்உண்டாமோ	பரமாகாச சப்தவாச்யமான பரமபதம் உண்டாமோ. (கூக)

அ.—தொண்ணூற்றோராம்பாட்டு. (ஊனக்குரம்பை) பரமபதம் ஸ்வயத்நஸாத்யமன்று என்றவோபாதி இச்சையும் வேண்டாவோ வென்கிறது. ஹேயத்திலே ஹேயதாபுத்தியும், உபாதேயத்திலே உபாதேயதாபுத்தியும் வேண்டாவோ பேற்றுக்கு.

வ்யா.—(ஊனமித்யாதி) சரீரங்கண்டதெல்லாம் பொல்லாதாயிருக்கச்செய்தே ஆபாதப்ரதீதியில் நன்று போலே யிருப்பதொன்றுண்டு, அந்தவிருள்சரீரத்தை அவகாஹிக்கப்போம். (ஞானச்சுடர் கொளீஇ) ஜ்ஞாநமாகிற விளக்கை ப்ரகாஶிப்பித்து. இதினுடைய ஹேயதையும் அந்யதாஜ்ஞாநமும் யதாஜ்ஞாநத்தாலே போம். ஆக யதார்த்தஜ்ஞாந பூர்வகமாக பரஜ்ஞாநம் வேணும். (நாடோறு மித்யாதி) நோவுபட்டபோது உதவினவனைய் இவையில்லாதவன்று தானுண்டாய் ரக்ஷிக்குமவனுடைய திருவடிகளில் ருசியில்லாதார்க்கு முண்டோ பரமபதம்.

(நாடோறும்) அவன் ஆபிமுக்யம்பண்ணுகிறபடியை அநுஸந்திக்க வைமுக்யசங்கையுண்டோ. ஜீயர்திருவடிகளை ஆச்ரயித்திருப்பா னொருவைஷ்ணவின்வர, நீபலநாள் வரத்தவிர்ந்தாய் என்றருளிச்செய்ய; நீர் ஒருக்காலருளிச்செய்தபடியை நினைத்திருக்கவமையாதோ வென்ன; நம்பிக்கை நிலையிலே வர்த்திக்கிறதும்மாணடி. "நாடோறுமேனத்துருவாயுலகிடந்த ஊழியான் பாதம் மருவாதார்க்குஉண்டாமோவான்" என்கிற விப்பாட்டும், கெடுவாய்! கேட்டறியாயோ வென்கிறார். ருசியில்லாதார்க்கும் ஸ்ரீவைகுண்டம் கிடைக்குமோ.

தொண்ணூற்றோராம்பாட்டு. அவகாஹிக்கை — சரீரதோஷங்களை யறிகை. ஊழியான் - ஸம்ஹாரகாலத்திலும் தான் உளனாய் ரக்ஷிக்குமவன். நாடோறும் மருவவேணு மென்னு மதுக்கு ஸம்வாதமாக அருளிச்செய்கிறார் (ஜீயரித்யாதி.)

கீழ்ப்பாட்டு ருசியுடையவனுக்குதவினபடி. (ஊனக்குரம்பை) ஹேயமாய் அல்பமாய் அஸாரமாய் அநர்த்தமாய் அகவாய் தெரியாதபடி மேலே தோலைவைத்து மினுக்கி, ஆபாதப்ரதீதியில் நன்றென்று தோற்றும்படியிருக்கிறவித்தை உள்ளபடியே அநுஸந்தித்து, அபுருஷார்த்தமென்றும் புருஷார்த்தவிரோதியென்றும் பேசிற்று. "பொய்ந்நின்ற" இத்யாதி. (ஞானச்சுடர்கொளீஇ) ப்ரகாரமான தன்னை யநுஸந்தித்து ப்ரகாரியான* தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கி. (ஏனமித்யாதி) இத்தலை நினையாதபோதும் நினைத்திருந்து நோக்குமவன் விரோதியான இவ்வாகாரத்தையன்றோ துடைத்தது. "ஏனத்துருவாயிடந்த-ஞானப்பிரான்." ... (கூக)

அ.—தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. இப்படி ஆச்ரிதரை ரக்ஷிக்குமளவன்றிக்கே, அவாப்தஸமஸ்தகாமனான பூர்த்திக்குப்போராதபடி ஆச்ரிதர்தொட்டளைந்த த்ரவ்யத்தைத்தனக்குதாரகமாக விரும்பியிருக்குமென்கிறார்.

மூ.—வானாகித்தீயாய்மறிகடலாய்மாருதமாய்த்
தேனாகிப்பாலாந்திருமாலே—ஆனாய்ச்சி
வெண்ணெய்விழுங்கநிறையுமேமுன்னொருநாள்
மண்ணையுமிழ்ந்தவயிறு. (கூஉ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்	ஆகாசம் அக்நி அலையெறிகிறகடல் காற்றுமுதலான பூதங்களாலே சமைந்த அண்டாந்தர் வர்த்தி பதார்த்தங்களுக்கு நிர்வாஹகனாய்,		இந்த உபய விபூதி யோகத்துக்கு மேலே,
		திருமாலே	ச்ரியஃபதித்வத்தால் வந்த ஐச்வர்யத்தையுமுடையவனே,
தேனாகிப் பாலாம்	பரமபதவாஸிகளுக்குஸர்வரஸஸமவாயமானதேன் ஸ்வாபாவிகரஸமான பால் இவைபோலே நிரதிசய போக்யனாய்க்கொண்டு இருக்குமவனாய்,	முன் ஒரு நாள்	பண்டொருநாளிலே,
			ப்ரளயத்தி லழியாதபடி,
		மண்ணை	பூமியையடங்கவெடுத்துவிழுங்கி, உள்ளுக்கிடந்துதளராதபடி,

நாடோறும் மருவுகைக்குப் பண்ணின உபகாரமேதென்ன; அருளிச்செய்கிறார் (இத்தலையித்யாதி.) விரோதியைப் போக்கி உபதேசித்ததெங்கேயென்ன; அருளிச்செய்கிறார் (ஏனத்துருவாயித்யாதி.) ... ... (கூக)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உமிழ்ந்த	வெளிநாடு காண வுமிழ்ந்த,	ணெய்	டைநாற்றம்குன்றாத வெண்ணெயை,
வயிறு	உன்னுடைய வயிறானது,	விழுங்க	அபிநிவேசத்தோடே அமுது செய்தருள,
ஆன் ஆய்ச்சி	பசுமேய்க்கும் குடியிலே பிறந்த யசோதைப்பிராட்டி,	நிறையுமே	அத்தாலே நிறையுமோ.
வெண்	கடைந்துவைத்தமு		

குறைக்கும் இட்டு அடைக்க வேணுமென்று கருத்து. (கூஉ)

அ.—தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு. "ஓரரியாய் நீயிடந்தது" என்று நம்மை ஆச்ரிதபக்ஷபாதியாகக் கீழேசொன்னீர், அது நீரறிந்தபடியென்னென்ன: ஹிரண்யன்மேல் பண்ணின சீற்றங்கொண்டறிந்தேனென்கிறார்.

வ்யா.—தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. (வானுகி) அவ்வவ ஜாதிகளிலே அவதரித்து அதிலுள்ளாருடைய தாரகமே தனக்கு தாரகமாயிருக்கிறபடி. ஸ்ரீவராஹமானுகில்கோரைக்கிழங்குதாரகமாம்; இடையனானுகில் வெண்ணெய் தாரகமாயிருக்கிறபடி. (வானித்யாதி) பஞ்சபூதங்களாலே ஒருஅண்டமாய் அண்டாந்தர்வர்த்திகளான புருஷர்களுக்கு நிர்வாஹகனாய். (தேனித்யாதி) "ஸர்வரஸ:" "ஸர்வரஸ:" என்கிறபடியே பிராட்டியோடேகூட பரமபதத்திலே யிருக்கிறவனே, உபயவிபூதியுக்தனாயிருக்கிற விருப்புக்குச் சேருமோ ஓரிடைச்சிவெண்ணெயை விழுங்குகை. (முன்னித்யாதி) ப்ரளயங்கொள்ளாதபடி வயிற்றிலேவைத்து வெளிநாடு காணப் புறம்பேயுமிழ்ந்து ரக்ஷித்தவயிறு. இத்தனைவெண்ணெயாலேநிறைக்கவேண்டியிருந்ததோ, பின்னை யுன்வயிற்றை வண்ணானுக்கிடமாட்டாயோ வென்கிறார். ருசியுடையாரோடு ஸம்பந்தமுள்ளதொன்றாலல்லது உபயவிபூதி யோகம் குறைப்பட்டிருக்கும் அவனுடைய ருசிசொல்லுகிறது. (ஆனுய்ச்சிவெண்ணெய்) முடைநாறும் வெண்ணெய், நிறையுமே - குறைக்குமிட்டு அடைக்கவேணும். ஸம்ஸாரிகளுக்கு ப்ரளயம்போலே இவனுக்கு வெண்ணெய் பெறுவிடில். ... ... (கூஉ)

தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. வண்ணான் தாழியில் எப்போதும் கஞ்சிதோய்க்கிறதேஸ்வபாவமாகையாலே, வயிற்றை வளர்க்கமாட்டாவிட்டால் வண்ணான்கையிலே கொடுத்தால் எப்போதும் கஞ்சியுண்டென்று லோகவார்த்தை. வயிறு தாழிஸ்தாநம். "நிறையுமே" என்றதுக்கு தாத்பர்யமருளிச் செய்கிறார்(ருசியுடையாரோடித்யாதி.) ... ... (கூஉ)

மூ.—வயிறழலவாளுருவிவந்தானையஞ்ச
எயிறிலகவாய்மடித்ததென்நீ—பொறியுகிராற்
பூவடிவையீடழித்தபொன்னாழிக்கையாநின்
சேவடிமேலீடழியச்செற்று. (கூரு)

பதம்.	உரை.
	ஸௌகுமார்யம் அழகு முதலான ஸ்வபாவத்தாலே,
பூவடிவை	பூவைப் பூவினுடைய வடிவழகை,
ஈடழித்த	தலையழித்திருப்பதாய்,
பொன்	ஸ்ப்ர்ஹணீயமான
ஆழிக்கையா	திருவாழியை தரித்த திருக்கையை யுடையவனே,
	கண்ட அநுகூலர் "என்னாகத்தேடுகிறதோ!" என்று,
வயிறழல	வயிறெரியும்படி,
வாள்உருவி	வாளை உருவிப் பிடித்துக்கொண்டு,
வந்தானை	வந்த ஹிரண்யனை,
அஞ்ச	உன் உக்ர வேஷங்கண்டு அவன் பயப்படும்படியாக,
நின்	பிராட்டிமார் பள்ளிகொண்டருளும் உன்னுடைய,
சேவடி மேல்	சிவந்த திருவடிகளின்மேலேறிட்டு,

பதம்.	உரை.
பொறி	நாநா வர்ணமான
உகிரால்	அழகிய திருவுகிர்களாலே,
ஈடழிய செற்று	கட்டுக்குலைந்து சிதறிப்போம்படி முடித்து,
	பின்னையும் சீற்றம் மாறாமையாலே,
எயிறு	திருஎயிறுகளானவை,
இலக	விளங்கும்படிக்கீடாக,
நீ	நீ,
வாய்மடித்தது என்	நாப்பிடிக்கொண்டது என்.

"பூவடிவை யீடழித்த பொன்னாழிக்கையால்" என்று பாட்டமாய்த்தாகில் - புஷ்பத்திலுங் காட்டில் ஸுகுமாரமாய்ஸ்ப்ர்ஹணீயமான திருவாழியையுடைத்தான திருக்கைகளாலே அழகிய திருவுகிராலே அநுகூலனை வைத்துக் கொள்ளுகைக்கு யோக்யமான திருவடிகளிலே அவனைவைத்துக் கொண்டு என்றுபொருளாகக் கடவது. ... ... (கூரு)

அ.—தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு. (வயிறித்யாதி) கீழ்ப்பாட்டிலே - ஆச்ரிதவாத்ஸல்யம் சொல்லிற்று; இதில் - ஆச்ரித வாத்ஸல்ய கார்யமான அவர்கள்விரோதிகள் பக்கலுண்டான சீற்றஞ்சொல்லுகிறது.

வ்யா.—(வயிறித்யாதி)வயிறழலுகிறது ஆர்க்கென்னில்; ஆழ்வாருக்கு;-முன்பொருநாள் ஹிரண்யன்செய்ததா யிராதேதம்முடைய எதிரே வாளுமுருவிக்கொண்டு புறப்படாப்போலே யிருந்தபடி.

"என்றுமென்பிள்ளைக்குத்தீமைகள்செய்வார்களங்ஙனமாவர்களே" என்கிறபடியே. (வந்தானை) தம்முடையமேலே வந்தாப்போலேயிருக்கிறபடி. (பூவடிவை யீடழித்தபொன்னாழிக்கையா) ஸௌகுமார்யத்தாலும் அழகாலும் பூவைக்கீழ்ப்படுத்துவதான கையிலே திருவாழியை யுடையவனே. (பொறியுகிரால்) பார்த்தபடியே யிருக்க வேண்டியிருக்கிற உகிராலே. (நின்சேவடிமே லீடழியச்செற்று) என்றும் நாங்கள் ஆசைப்பட்டுப் போருகிற திருவடிகளிலே அவனைப்போட்டு, இனி முளையாதபடி முடித்து. (எயிறிலகவாய் மடித்ததென்நீ) பிராட்டிமார்க்கும் ஸம்போகத்தில் திருமுத்துத்தோற்றாதபடி பண்ணும் ஸ்மிதம்வேண்டா, எயிறுதோற்றும்படிக் கிடாகப்பண்ணின ஹாஸத்தைக்கண்டால் அதுவே அமையுமென்னும்படி யிருக்கிறவாயை மடித்ததென்நீ. உனக்கும் சீற்றத்துக்கும் விஷயமுண்டோ. முடித்தபின்னும்சீற்றம்மாறாதொழிவதே!. முடித்தால் சீற்றம்மாறுவது தன்னளவுக்கு. "𑌤𑍍𑌵𑌯𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑍇" "த்வயி கிஞ்சித்ஸமாபந்நே" என்னும் விஷயங்களி லன்று. "𑌅𑌧𑌰𑌾𑌮𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾𑌃" "அதராமோமஹாதேஜா:" "கொடியவாய்விலங்கின்னுயிர்மலங்கக்கொண்ட சீற்றம்" என்று. சரணாகதர்க்குத் தஞ்சமானதநமாவது - ஆச்ரிதார்த்தமாக ஹிரண்யனைப்பற்றப் பண்ணும் சீற்றம்.

"எங்ஙனே யுய்வர்தாநவர் நினைந்தால்" என்று-நரஸிம்ஹத்தைக்கண்ட அஸுரராக்ஷஸ ஜாதியாகப் படும்பாட்டை, அவனைக்கண்டவநுகூலஜாதி படும்படி. (வயிறழல) "𑌅𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌭𑍍𑌯𑌃" "அஸ்மாந்ஹந்தும்நஸம்ஶய: ராக்ஷஸேப்ய:" இத்யாதிவத். தனித்தனியே சொல்லில் ஒருவரல்லாவொருவர்பிழைக்கிலுமாம்என்று வேர்ப்பற்றிலேநலிய. (பொறியுகிரால்) போகத்துக்கு ஏகாந்தமான அழகையுடைய அறுகாழி என்னுதல்; திருவாழி பிடிக்கத்தகுங் கையென்னுதல். செற்றுவைத்து (வாய்மடித்ததென்நீ) ஸங்கல்பந்தவிர்ந்து திருவாழி தவிர்ந்து திருவுகிராலே பிளந்து பிணத்தின் முகத்திலே நாம் பிடிகொள்வதே!. (கூ௩)

தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு. இப்படி பீதராய் மங்களாசாஸநம் பண்ணின பேருண்டோ வென்ன; அருளிச்செய்கிறார் (என்றுமென் பிள்ளைக்கித்யாதி.) முடிந்தபின்னும் சீற்றம் மாறாமைக்கு ஹேதுவையருளிச்செய்கிறார் (முடித்தாலித்யாதி.) ஆச்ரித விரோதமாகக் கொண்டசீற்றம் அதிகமென்னுமதுக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (𑌅𑌧𑌰𑌾𑌮𑌃 – அதராம: இத்யாதி.)

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (எங்ஙனே யுய்வரித்யாதி.) "𑌅𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌹𑌨𑍍𑌤𑍁𑌮𑍍-அஸ்மாந்ஹந்தும்" என்றபஹு வசநத்துக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனித்தனியேயித்யாதி.) (கூ௩)

தொண்ணூற்று நாலாம்பாட்டு. தன்னை ஆச்ரயித்தார்க்குத் தன்படிகளெல்லாவற்றையுங் காட்டும் ஸ்வபாவனானவனை யல்லது என்னாவானது வேறு சிலரை யேத்தாதென்கிறார்.

மூ.—செற்றெழுந்துதீவிழித்துச்சென்றவிந்தவேழுலகு
மற்றிவையாமென்றுவாயங்காந்து—முற்றும்
மறையவற்குக்காட்டியமாயவனையல்லால்
இறையேனுமேத்தாதென்னா. (௯௪)

பதம்.	உரை.
	அதிப்ரவ்ர்த்தமான விவற்றையழிக்கக்கடவதாகப்பெரிய உத்யோகத்தோடே,
எழுந்து	கிளர்ந்து, அகவாயில் சீற்றந்தோற்ற,
தீவிழித்து	நெருப்பெழப் பார்த்து,
செற்று	அழித்துப்பொகட்டு,
சென்ற	தன்பக்கலிலே உபஸம்ஹ்ர்தமாய் வந்துசேர்ந்துகிடக்கிற,
இந்தஏழுலகும்	இந்த ஸப்தலோகங்களையும்,
செற்று	அழித்துப்பொகட்டு,
மற்று	அதுக்குமேலே,
இவையாமென்று	அழிந்துபோன வஸ்துக்கள் இவைகாண் என்று,
வாய்அங்காந்து	தன்திருப்பவளத்தைத் திறந்து, "తతపశ్యమహం సర్వమ్" "ததபஶ்யமஹம்ஸர்வம்" என்னும்படி,
முற்றும்	ஸகலஜகத்தையும்,
மறையவற்கு	வைதிகனான மார்க்கண்டேயபகவானுக்கு,
காட்டிய	முன்பிறந்திட்டகட்டளையிலேகாட்டின,
மாயவனை	ஆச்சர்யசக்தியுக்தனா
யல்லால்	னவனையொழிய,
	ஏத்தப்பெறாமல் உறாவிக்கிடக்கிற,
என்நா	என்நாவானது, பரவ்யூஹாதிகளான அவஸ்தாந்தரங்களில்,
இறையேனும்	ஏகதேசமும்,
ஏத்தாது	ஸ்தோத்ரம் பண்ணாது.

அன்றிக்கே, பாரத ஸமரத்திலே பீஷ்மாதிகளுக்கு வைச்வரூப்யம் காட்டினபடியை இப்பாட்டிலே சொல்லுகிறதாகவுமாம்; அப்போது, கிளர்ந்து நெருப்பெழப்பார்த்து ஸம்ஹரித்துச் செல்லுகிற இந்த ஸகல லோகங்களையும், "వక్త్రాణితేత్వరమాణా విశన్తి" "வக்த்ராணிதேத்வரமாணா விஶந்தி" என்கிறபடியே தன்னுடைய கோபாக்நியாலே ஜ்வலித்துக் கிளருகிற திருப்பவளத்திலே விழுந்து நசித்துப் போகிறபடியை, வைதிகரான பீஷ்மாதிகளுக்குக்காட்டின ஆச்சர்யபூதனையொழிய என்நா ஏத்தாது என்றுபொருளாகக் கடவது. பீஷ்மாதிகள் விஷயமானபோது, "மறையவர்க்கு" என்கிற விதுரோபாந்தமாகக்கடவது; மார்க்கண்டேய விஷயமானபோது னகரவொற்றாகக்கடவது. (௯௪)

அ.—தொண்ணூற்றுநாலாம்பாட்டு. (செற்றெழுந்து) இப்பாட்டு, கீழ்ப்பாட்டில் வ்ர்த்தாந்தமாகவுமாம்; இந்தவைஶ்வரூப்யம் துர்யோதநஸதஸ்ஸிலே காட்டினதாகவுமாம்; மார்க்கண்டேயபகவானுக்கு இதடையத் தன்வயிற்றிலே யிருந்தபடியைக் காட்டிற்றாகவுமாம். "తదపశ్యమహం సర్వం తస్య కుక్షౌ మహాత్మనః" "த்தபச்யமஹம் ஸர்வம் தஸ்யகுக்ஷௌமஹாத்மந:" என்கிறபடியே.

வ்யா.—(செற்றெழுந்து தீவிழித்து) என்றது-நீயொருதூது வரவிடவேண்டாவென்று துர்யோதநாதிகளைச் சீறிப் பார்த்தபடியாகவுமாம். (சென்றவித்யாதி) நரகில் பாபகர்மம் போக்குகைக் கென்று ஸங்கல்பம் வேண்டா. (மறையவற்கு) ஸ்ரீமார்க்கண்டேய பகவானுக்காகவுமாம்; பீஷ்மத்ரோணாதிகளாதல். "సామాన్య లక్ష్యావయమ్" "ஸாமாந்யலக்ஷ்யாவயம்." (இறையேனும்) பரவ்யூஹாதிகளில் போகாது. ... ... (௯௪)

அ.—தொண்ணூற்றஞ்சாம்பாட்டு. இப்படி அவனை ஏத்துகைக்கு பரிகரமான நாவைக்கொண்டு அவனை ஏத்தாதே,சேதநர் அத்தை ஸம்ஸரிக்கைக்கு பரிகரமாக்கிக்கொண்டபடி யெங்ஙனே என்று ஆச்சர்யப்படுகிறார்.

மூ.—நாவாயிலுண்டேநமோநாரணவென்
றோவாதுரைக்குமுரையுண்டே—மூவாத
மாக்கதிக்கட்செல்லும்வகையுண்டேயென்னொருவர்
தீக்கதிக்கட்செல்லுந்திறம். (௯௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நா	ஏத்துகைக்கு பரிகரமானநாவானது, புறம்புபோய்த்தேட வேண்டாதபடி,		ன்னாலும் முடிவுகாணவொண்ணாதபடி யிருக்கை யன்றிக்கே,
வாயில் உண்டே	தந்தாம் வாயிலே உண்டே;	நமோநாரணவென்று	நமோ நாராயணாய வென்று,
ஓவாது	ஸஹஸ்ராக்ஷரீ மாலாமந்த்ரம்போலே நெடுகவிருந்து சொ	உரைக்கும்	ஒருக்காலே சொல்லி இளைப்பாறலாம்படியான,

தொண்ணூற்றுநாலாம்பாட்டு. வேண்டாவென்று சொன்ன துர்யோதநாதிகள்வதம், பீஷ்மாதிகள்,நாங்கள் கோபித்துப்பாராதே ஸாமாந்யமாக- சாந்தமாகப்பார்க்கைக்கு விஷயமென்றார்கள். (வாய்அங்காந்து) துர்யோதந பக்ஷத்தில் பொய்யாஸநவேளையிலே விச்வரூபத்தைக்காட்டினது; மறையவர்க்கும் வாயை ஆவென்று காட்டுகை. ... ... (௯௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உலா	திருமந்த்ரம்,		இப்படி உஜ்ஜீவநத்துக்குடலான நல்வழிபோகாமல்,
உண்டே	உளதாயிராநின்றதே;	தீக்கதிக்கண்	விநாசத்துக்கீடான துர்மார்க்கங்களிலே சென்று,
மூவாத	அபுநராவர்த்தி லக்ஷணமாய்,	ஒருவர் செல்லும் வகை	ஒருவர் விழுகிற ப்ரகாரம்,
மா	பரமப்ராப்யமான,	என்	என்னுயிருக்கிறதோவென்று விஸ்மயப்படுகிறார். (கூரு)
கதிக்கண்	மோக்ஷத்திலே,		
செல்லும்	செல்லுகைக்கீடான		
வகையுண்டே	உபாய முண்டே;		

அ.—தொண்ணூற்றாறாம்பாட்டு. லௌகிகர்செய்தபடிசெய்ய, நெஞ்சே! நீ முந்துற முன்னம் நான் சொல்லுகிற வித்தை அழகிதாக புத்திபண்ணென்கிறார்.

அ.—தொண்ணூற்றஞ்சாம்பாட்டு.—(நாவாயில்) இதுவிடப்போகாதாயிருந்தது, இது கீழ்ப்போகாதாயிருந்தது, இதுக்குளங்ஙனே விலக்கடியுண்டானபடி, அபரிகாராயிருக்கில்செய்யலாவதில்லையிறே யென்னில்; ஈச்வரன் ஒருபரிகாரம் தேடும்படிவைத்தானோவென்கிறது.

வ்யா.—(நாவாயிலுண்டே) "𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌨𑌵𑌾𑌸𑌾𑌯" "ஸ்ர்ஷ்டஸ்த்வம் வநவாஸாய" என்கிறபடியே நாக்காகில் அவனையேத்தக்கடவது.(நமோவித்யாதி)அந்நாக்குக்கண்டவோபாதி திருமந்த்ரமும் இவனுக்கு இளைப்பாறச்சொல்லவேண்டாததுண்டே. ஒருஸஹஸ்ராக்ஷரீமாலாமந்த்ரம். இதுசொல்லுமதில் நரகாநுபவம் அமையுமென்னத் திருமந்த்ரமுண்டே. (மூவாதவித்யாதி) அபுநராகதிலக்ஷணமான ப்ராப்யத்துக்குச் செல்லும் அர்ச்சிராதி மார்க்கமுண்டே. (என்னொருவரித்யாதி) நரகத்துக்குப் போக வழி நேராகக்கண்டிலோம், இதுவிலக்கடி எங்ஙனேயுண்டாய்த்து. ஸம்ஸாரிஹிதம் காண்கிறிலோம், நாளோ செல்லாநின்றது. (என்னொருவரித்யாதி) வலிய விலக்கடி தேடவேணும். ... ... (கூரு)

தொண்ணூற்றஞ்சாம்பாட்டு. திருநாமத்தினுடைய போக்யதையாலே விடப்போகாது, பாவநத்வத்தாலே தீக்கதியான கீழ்ப்போகாது. ஓவாது - ஓயாதே – நடு இளைப்பாறாதே ஒருமூச்சிலே சொல்லலாயிருக்கை. ஹிதம்காண்கிறிலோம் - ஹிதசிந்தைபண்ணக்காண்கிறிலோம். இவையெல்லாமிருக்க இத்தைவிட்டு வலியத் தேடவேணுமென்றபடி. .... (கூரு)

மூ.—திறம்பாதென்னெஞ்சமேசெங்கண்மால்கண்டா
யறம்பாவமென்றிரண்டுமாவான்—புறந்தானிம்
மண்தான்மறிகடல்தான்மாருதந்தான்வான்தானே
கண்டாய்கடைக்கட்பிடி. (௯௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்	எனக்கு பவ்யமான,	மாருதந்தான்	வாயுவும்,
நெஞ்சமே	நெஞ்சே,	வான்	ஆகாசமும்,
அறம் பாவம் என்று	புண்யம் பாபமென்று சொல்லப்படுகிற,	புறந்தான்	இவற்றுக்குப் புறம்பான மஹதாதிகளுமான இவற்றுக்கெல்லாம் நிர்வாஹகனாயிருக்கிறான்,
இரண்டும்	இரண்டுக்கும்		
ஆவான்	நிர்வாஹகனாய்ப்போருகிறவன்,		
செங்கண்	புண்டரீகாக்ஷனை,	தானே கண்டாய்	அந்த புண்டரீகாக்ஷன்றானேகிடாய்;
மால் கண்டாய்	ஸர்வேச்வரன்றானே கிடாய்;	கடைக்கண்	முடிவில் வந்தால், இதுவே அர்த்த தத்வமென்று,
இம்மண் தான்	இந்த பூமியும்,	பிடி	இத்தைத் தவறாதபடி மநஸ்ஸிலே பிடித்துக்கொள். (௯௬)
மறி	அலையெறிகிற,		
கடல்தான்	கடலும்,		

அ.—தொண்ணூற்றாறாம்பாட்டு. (திறம்பாது) விலக்கடியில்லையென்று இருக்கலாயிருக்கிறதில்லை, இவ்வர்த்தத்தைக் கைவிடாதேகொள்ளென்று தம்முடைய திருவுள்ளத்தைப்பார்த்து அருளிச்செய்கிறார்.

வ்யா.—(திறம்பாதென்னெஞ்சமே) நான் சொல்லிற்றுத்தப்பாதுபோருகிறநெஞ்சே. அர்த்ததத்வங்கண்டாலல்லது கால்வாங்கேனென்றிருக்கிற நெஞ்சமே. (அறமித்யாதி) விஹிதத்தைச்செய்து நிஷித்தத்தைப்பரிஹரித்துப்போருகிற நம்மோடு, விஹிதநிஷித்தங்களோடு வாசியில்லை அவனைக்குறித்து பரதந்த்ரமாமிடத்தில்; "ఏషఏవసాధుకర్మకారయతి" "ஏஷ ஏவஸாதுகர்மகாரயதி." தம்முடையபக்கல் கர்த்ர்த்வம் தவிர்ந்தபின்பு ஒரு அசேதநக்ரியையைப்பற்றுவரன்றே. (செங்கண்மால்கண்டாய்) ஸர்வேஶ்வரன் கண்டாய். "యథాకప్యాసంపుణ్డరీకమేవమక్షిణీ" "யதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ."

தொண்ணூற்றாறாம்பாட்டு. கர்மாதிகளிருக்க அவனைப்பிடிக்கவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (தம்முடையபக்கலித்யாதி.)

(இம்மண்ணித்யாதி) ப்ரதிபந்தகமான அசித்தோடேகூடின சேதநனுமவனே. அநுக்தமான மஹதாதிகளைச்சொல்லுகிறது- அவனையொழிய ஸ்வதந்த்ரமாயிருப்பதொன்றுமில்லை. (கண்டாய் கடைக்கட்பிடி) இவ்வர்த்தத்தைத் திறம்பாது, கடைக்கட்பிடி. கடைபோகப்பிடி. இவ்வர்த்தத்தினுடைய கடைப்பிடி கண்டாயே என்றுமாம். (அறமித்யாதி) ஆபாத ப்ரதீதியில் அவனை யொழிய புண்யபாபமென்று தோற்றுவது, நிலைநின்றுபார்த்தால் அவனே கடவானென்று தோற்றும். திறம்பாது என்று நெஞ்சோ டேகூட்டவுமாம்; திறம்பாது - அறம்பாவமென்றிரண்டுமாவா னென்னவுமாம்; திறம்பாது-கடைக்கட்பிடி என்னவுமாம்.

நாட்டார்க்குப்பலவழியுண்டாகிலும் நம்முடைய வழியைப்பற்றி யிராய்நீ. (திறம்பாதென்னெஞ்சமே) சொல்லென்றலைக்கிற நெஞ்சமே! செங்கண்மால், நம்முடைய விஷயத்தி லிருக்கிறபடி கண்டாயே. (அறமித்யாதி) பெறுகைக்கும் இழக்கைக்கும் அவ னுடையநிக்ரஹாநுக்ரஹங்களையொழியப் போக்கில்லை,ஸர்வமும் பகவததீநமன்றோ. (கடைக்கட்பிடி) அறுதியாகப்பிடி. (கூசு)

அ.—தொண்ணூற்றேழாம்பாட்டு. அறமும் அவனேயென்று பாவநமாகச் சொல்லாநின்றீர், கங்கைதொடக்கமானவையும் பாவ நமன்றோவென்ன; அதினுடைய பாவநத்வமும் தச்சரண கமல ஸம்பந்தாயத்தமென்கிறார்.

மூ.—பிடிசேர்களிறளித்தபேராளாவுன்ற
னடிசேர்ந்தருள்பெற்றாளன்றே—பொடிசே
ரனற்கங்கையேற்றானவிர்சடைமேற்பாய்ந்த
புனற்கங்கையென்னும்பெயர்ப்பொன். (கூஎ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஸ்வஹித மறியாதே,	சேர்	கூடிவர்த்திக்கிற,
பிடி	பிடியின் பக்கலிலே ப்ரவணமாய்,	களிறு	ஆனையை,
	அத்தை விட்டு நீங்க மாட்டாமல்,		அதின்வ்ர்த்ததோஷம்பார்த்திகழாதே,

---

கடைபோகப்பிடி - நடுவே விடாதே முடியப்பிடியென்றுக் ரியையாதல்; கடைப்பிடி - அவன்சரீரி, அல்லாதவை யெல்லாம் சரீரதயா பரதந்த்ரமென்கிற எல்லையான அர்த்தத்தைக் கண்டா யே யென்று க்ர்யையாதல். திறம்பாதே - இவ்வர்த்தத்திலே சலி யாதேயென்று நெஞ்சொத்துக் கூட்டுதல். (திறம்பாது) அறம் பாவமிரண்டும் அவனிட்டவழக்கென்னுமது தப்பாதென்னுதல்; திறம்பாதே - கடைபோகச் சலியாதே பிடியென்னுதல்.

மேலுக் கவதாரிகையருளிச்செய்கிறார் (நாட்டார்க்கித்யாதி.)

பதம்.	உரை.
அளித்த	தண்ணளி பண்ணி ரக்ஷித்த,
பேராளா	மஹாப்ரபாவனானவனே, “భస్మశయ్యాశయానః” “பஸ்மஶய்யாஶயாநః” என்கிறபடியே பண்ணின தோஷத்துக்குப்ராயஶ்சித்தமாக,
பொடிசேர்	எப்போதும் பஸ்மத்திலே சாயுமவனாய்,
அனல்	அக்நிக்கு,
அங்கை	அழகிய கையை,
ஏற்றான்	ஏற்றபாதகியானருத்ரனுடைய,
அவிர்சடை	ஒளியையுடைத்தான
மேல்	ஜடையின் மேலே,
பாய்ந்த	தச்சுத்த்யர்த்தமாக வந்துகுதித்த,
புனல்	நீரையுடையளாய்,

பதம்.	உரை.
கங்கையென்னும் பெயர்	கங்கையென்னும்பேரையுடைய,
பொன்	ச்லாக்யையானஸ்ரீயானவள், பாதகிகளையும் பரிசுத்தராக்கும் ஸ்வதஶ்சுத்தியை யுடையளான,
உன்பாதம்	உன்திருவடிகளை,
சேர்ந்தன்றே	கிட்டியன்றோ,
அருள்பெற்றாள்	அவள் அந்தப்ராஸாதமெல்லாம் பெற்றது.

விஷயப்ரவணமான களிற்றை ரக்ஷிக்கையாலே-பாபம் இவனிட்டவழக்கென்றும், கங்கையினுடைய பாவநத்வம் தத்ஸம்பந்தாயத்தமென்கையாலே – புண்யம் அவனிட்ட வழக்கென்றும் சொல்லிற்றாய்த்து. ... (கூஎ)

அ.—தொண்ணூற்றேழாம்பாட்டு. (பிடிசேர்) “அறம்பாவமென்றிரண்டுமாவான்” என்றதுக்கு வ்யாக்யாநம் இப்பாட்டு.

வ்யா.—(பிடிசேர்களிறளித்த) ஜந்மஜ்ஞாநவர்த்தங்கள். “శాన్తో దాన్త ఉపరతస్తితిక్షుః” “ஶாந்தோதாந்த உபரதஸ்திதிக்ஷு:” என்னுமவனிறே மோக்ஷத்துக்கதிகாரி. அன்றிக்கே, தன்பக்கல் ப்ரவணமாகாதே விஷயப்ரவணமாகையிறே பாபமாவது; தன்பிடிபக்கல் ப்ரவணமாய்த் தன்பக்கலின்றிக்கேயிருந்தகளிற்றை ரக்ஷிக்கும்போது பாபம் தானிட்ட வழக்காக வேணுமிறே. (பேராளா) பிடிசேர்ந்தகளிற்றைரக்ஷித்தானென்றால்அவன்செய்தானாகில் கூடுமென்றிருக்கை. (உன்றனடிசேர்ந்தருள்பெற்றாளன்றே) இத்தால்–தர்மம் அவனிட்டவழக்கென்கிறது. (பொடிசேரித்யாதி) பஸ்மச்சந்நனாய் அக்நியைக்கையிலேஏற்றானாயிருந்துள்ள ருத்ரனுடைய விளங்காநின்ற ஜடைமேல் பாய்ந்த புனலையுடைத்தான கங்கையென்று பேரையுடைத்தான விலக்ஷணையானஸ்த்ரீ, உன் திருவடிகளிலே சேர்ந்தன்றோ நாட்டுக்குப்பாவநமாய்த்து.

தொண்ணூற்றேழாம்பாட்டு. அன்றிக்கே–மோக்ஷாதிகாரிகளன்றிக்கே. அனற்கங்கையேற்றான்-அனலுக்கு அங்கையேற்றான்.

"பொடிசேர்" என்றவித்தால் – ப்ராயஶ்சித்தம்பண்ணி அத்தால் ஶுத்தனன்றியிலே யிருக்கிறவனையும் ஶுத்தனாக்கிற்று திருவடிகளில் ஸ்பர்ஶத்தாலே என்கிறது.பிடிசேர்களிறு - அவன்பிடியைநினைக்க நீ அவனைநினைத்திலையோ.ஒருக்கால் நினைத்தானாகில் முன்பு ஸ்வரூபமிதுவன்றோவென்கிறது. ஜந்மவர்த்தங்களன்று-ப்ரயோஜநமென்கிறார் (அருள்பெற்றாள்) பிறரை ஶுத்தராக்கும்படி பார்த்தருளினான். ... ... (௯௭)

அ.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு. அவன் றிருவடியில் பிறந்த கங்கையை ஜடையிலே தரித்தானென்று ருத்ரனுக்குக் குறைசொல்லுகிறதென், அவனும் ஒருகார்யத்திலே அதிகரித்து ஈச்வரனுமாயன்றோ போருகிறதென்னில்; அவனுடைய ஈச்வரத்வம் இவனுக்கு சரீரபூதனாகையாலேவந்ததித்தனைபோக்கி ஸ்வதஃ இல்லையென்கிறார்.

மூ.—பொன்றிகழுமேனிப்புரிசடையம்புண்ணியனும்
நின்றுலகந்தாயநெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால்திரிவரேலுமொருவன்
ஒருவனங்கத்தென்றுமுளன். (௯௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொன்திகழும்	பொன்போலே ஒளிவிடுகிற,	என்றும்	ஸர்வகாலத்திலும்,
மேனி	வடிவையும்,	இருவரங்கத்தால் திரிவரேலும்	இரண்டு சரீரத்தையுடையாராய் அறிவுகேடர்க்கொக்க நினைக்கலாம்படி திரிந்தார்களேயாகிலும்
புரிசடை	பின்னின ஜடையையுமுடையனாய், இப்படி ஜடைகட்டி அநுஷ்டித்த,	ஒருவன்	புண்ணியனானவொருவன்,
அம்	அழகிய,	ஒருவன்	நெடுமாலான ஒருவனுக்கு,
புண்ணியனும்	புண்யத்தையுடையருத்ரனும்,	அங்கம்	சரீர பூதனாய்க்கொண்டு,
நின்று	ஸ்வைரமாக நின்று, ருத்ரனோடு அல்லாதாரோடு வாசியற,	என்றும்	ஸர்வகாலத்திலும்,
உலகம்	ஸகல லோகங்களையும்,	உளன்	லப்தஸத்தாகனாயிருக்கும்.
தாய	அநாயாஸேந அளந்துகொண்ட,		
நெடுமாலும்	ஸர்வாதிகனான ஸர்வேச்வரனுமாகிற இவர்களிருவரும்,		

அன்றிக்கே,ஒருவன், ஒருவன் திருமேனியில் ஏகதேசத்தைப் பற்றி லப்தஸத்தாகனா யிருக்குமென்னவுமாம். இத்தால் – "பரன் றிறமன்றிப் பல்லுலகீர் தெய்வம் மற்றில்லை" என்கிறார். (௯௮)

அ.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு. (பொன்திகழுமேனி) ஈச்வரனாய் அதிகாரியாய்த் தானும் சிலர்காரியத்துக்குக் கடவனா யிருக்கிறவனை, இவனுடைய ஸம்பந்தத்தாலே சுத்தனானென்று சொல்லும்படி எங்ஙனே யென்னில்; ஈச்வராபிமாநியாயிருக்கும் போது சொல்லுமத்தை ப்ரமாணிக்கவொண்ணாது, இவனுடைய ஸ்வரூபத்தைப்பார்க்கலாகாதோ.

வ்யா.—(பொன்திகழுமேனி) ஸர்வேஶ்வரனா யிருக்கும்போது மேகச்யாமமாயிருக்குமிறே. (புரிசடை) * தாழ்சடையானுக்கும் நீண்முடியானுக்கும் வாசிபார்த்துக்கொள்ளலாமித்தனையிறே. (அம்புண்ணியனும்) "𑌹𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍋 𑌬𑌭𑍂𑌵" "ஹுத்வாத்மாநம்தேவதேவோபபூவ" என்கிறபடியே. (நின்றுகலந்தாயநெடுமாலும்)ஸ்வைரமாக அதிமாநுஷ சேஷ்டிதத்தைப் பண்ணினவனும். அவன்தலையிலும் பிறர்தலையிலுமாகத்திருவடிகளை வைத்தவனும். (என்று மித்யாதி) இருவரும் ஸபரிகரராய்த் திரிந்தாரோ யாகிலும். (ஒருவனித்யாதி) ஒருவனுக்கு ஸ்திதி, ஒருத்தன் சரீரத்தைப்பற்றி. "வலத்தனன்திரிபுரமெரித்தவன்" என்னும்படியே. ருத்ரனுடைய ஐஶ்வர்யம் பொய்யோவென்னில் பகவததீநமென்கிறார் (நின்றுலக மித்யாதி) ருத்ரன்தலையிலும் நாட்டார்தலையிலும் ஒக்க அடியிட்டவன். (இருவரங்கத்தால்) இரண்டுவடிவுகளாலே யென்றுமாம். அங்கத்தில் ஏகதேசத்திலே உளனென்றுமாம்.

அ.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. இப்படி ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரன்,க்ஷீராப்திமுதலான விடங்களிலே வந்து ஸந்நிஹிதனாய்த்து விலக்காதார்நெஞ்சுபெறுமளவுங்கிடாய்,நெஞ்சே! இத்தைபுத்திபண்ணென்கிறார்.

மூ.—உளன்கண்டாய்நன்னெஞ்சேயுத்தமனென்று
முளன்கண்டாயுள்ளுவாருள்ளத்—துளன்கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும்வேங்கடத்துமேயானு
முள்ளத்தினுள்ளானென்றோர். (கூகூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நல் நெஞ்சே	அவன் ஒருவனுள்ளன் என்றுசொன்னால் உகக்கும் நல்லநெஞ்சே,		"பிறர்க்கு நன்மை வேணும்" என்று எப்போதும் சிந்தித்தபடியே யிருக்கும்,

---

தொண்ணூற்றெட்டாம்பாட்டு.—புண்ணியனும்-புண்ணியம் பண்ணுகையாலே தேவனானானென்றபடி. இருவரங்கம்—அங்க சதுரங்கபலமென்னுமாப்போலே ஸேனை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (ருத்ரனுடையவித்யாதி.) அங்கம்-சரீரமாதல்; ஏகதேசமாதல். ... (கூஅ)

பதம்.	உரை.
உத்தமன்	புருஷோத்தமன், நம்முடைய ரக்ஷணத்தாலே தன்ஸத்தையாம்படி,
உளன்கண்டாய்	உளனுமவன்கிடாய்; நாம் உளரானவன்றோடு இலரானவன்றோடு வாசியற,
என்றும்	ஸர்வகாலத்திலும்,
உளன்கண்டாய்	நம்மை ரக்ஷிக்கையிலே தீக்ஷித்து உளனாயிருக்குமவன்கிடாய்;
உள்ளுவார்	தான்புகுரப்புக்கால் ஆணையிட்டுவிலக்காதே அத்தைப் பொருந்தியநுஸந்திக்குமவர்களுடைய,
உள்ளத்து	நெஞ்சிலே,
உளன்கண்டாய்	ஸாதரமாக நித்யவாஸம் பண்ணுமவன்கிடாய்;
வெள்ளத்து	திருப்பாற்கடலிலே
உள்ளானும்	கண்வளர்ந்தருளினவனும்,
வேங்கடத்து	திருமலையிலே நின்
மேயானும்	றருளினவனும், கிடப்பது நிற்பதாய் அங்குப் பண்ணின க்ர்ஷியின் பலமாக,
உள்ளத்தில்	நம்முடைய ஹ்ருதயத்திலே வந்துபுகுந்து, "இடவகைகளிகழ்ந்திட்டு" என்கிறபடியே அவ்வவ்விடங்களை அநாதரித்து,
உள்ளானென்று	ஸாதரமாகநித்யவாஸம் பண்ணுமவனென்று,
ஓர்	புத்திபண்ணு. (கக)

அ.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. (உளன் கண்டாய்) நாட்டில் பெரியராயிருக்கிறவர்களும் தங்களுக்கேற க்ஷேத்ரஜ்ஞராயிருக்கிறபடி அறிந்திருக்கச்செய்தே ஈச்வரர்களாக ப்ரமிக்கிறபடி கண்டு திருவுள்ளம் பயப்பட, நாம் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டால் அறுத்துவிழவிடுகைக்கு ஒருத்தனுண்டுகாணென்கிறது.

வ்யா.—(உளன்கண்டாய்) இலனானவனை யுளனென்கிறதன்று, அவனுடையஸத்தை நம்முடைய ரக்ஷணத்துக்கும், நம்முடைய ஸத்தை நம்முடைய விநாசத்துக்கும். நாம் ப்ரதிபத்தி பண்ணுகிறது பிறரையஞ்சியன்று, நம்மை யஞ்சி;

தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. பிறரையஞ்சி போதாதிகள் ஈச்வரனில்லையென்கிறதுக்கு அஞ்சி "உளன்" என்கிறதன்று, நம்முடைய நாமத்துக்கஞ்சி நம்முடைய ஸத்தையுண்டாக்குகைக்கு அவனுளனென்கிறது;

பித்தத்தாலே மோஹித்துக் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டேனாகில் அறுத்துவிழ விடுகிடாய் என்று அறிவுடையார்க்குச் சொல்லி வைக்குமாப்போலே. (நன்னெஞ்சே) எம்பெருமான் நமக்குளனென்று சொல்லப் பாங்காயிருக்கிறநெஞ்சே. (உத்தமனித்யாதி) அவனுடைய உண்மை ஸுஹ்ர்த்தாய்க் கொண்டு. அதாவது - பரஸம்ர்த்யைகப்ரயோஜநனாயிருக்கை. (உள்ளுவாரித்யாதி) இவன் ஒருநாள் உளனென்றிருக்க பின்னை இவனென்றும் நமக்குளனென்றிருக்கும்; தான் புகுரப்புக்கால் விலக்காதவர்களுடைய ஹ்ர்தயம் விட்டுப்போகவறியான். (வெள்ளத்தினித்யாதி) திருப்பாற்கடலிலே கிடக்கிறதும் திருமலையிலே நிற்கிறதும் நம்முடைய ஹ்ர்தயத்திலேபுகுருகைக்கு அவஸரம்பார்த்து என்றறி.

புறம்புள்ளார்க்குக்கிட்டி (உளன்கண்டாய்) பிறர்க்குபதேசிக்கிறவர் எம்பெருமான் உளனென்றிருக்கிறாரல்லர், நாம்நமக்கில்லாதாப்போலே அவன் நமக்கென்று முளன். (நன்னெஞ்சே) இவ்வர்த்தத்தில் என்னிலும்எனக்குபதேஶிக்கவல்லநெஞ்சே.(உத்தமன்) தன்பேறாக உபகரிக்கை. (என்றும்) * అసన్నేవసభవతి - அஸந்நேவ ஸபவதி ஆனவன்றோடு * సన్తమేనన్తతోవిదుః-ஸந்தமேநந்ததோவிதுః ஆனவன்றோடு வாசியில்லை. (உள்ளுவார்) புகுர ஸம்வதிப்பார். (உள்ளத்துளன்) "இடவகைகளிகழ்ந்திட்டு". (வெள்ளமித்யாதி) என்றுமுளனாமை காட்டுகிறார் "அணைப்பார்கருத்தனாவான்."()

அ.—நூறாம்பாட்டு. இப்படி மேல்விழுந்து நம்மை ஆதரிக்கிறவனைப் பெறுகைக்கு உபாயமேதென்ன; அவனேப்ராப்யமும், அவனைப்பெறுகைக்கு ப்ராபகமுமவனேயென்று அத்யவஸியென்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச் செய்கிறார்.

மூ.—ஓரடியுஞ்சாடுதைத்தவொண்மலரசேவடியும்
ஈரடியுங்காணலாமென்னெஞ்சே—யோரடியில்
தாயவனைக்கேசவனைத்தண்டுழாய்மாலைசேர்
மாயவனையேமநத்துவை. (௧00)

பொய்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

இப்போது உளன் என்கிறது எப்படியிருக்கிறதென்ன; அருளிச்செய்கிறார் (பித்தத்தாலேயித்யாதி.)

மேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார் (புறம்புள்ளாரித்யாதி.) அங்கங்கேயிருக்கிறதெல்லாம் இவனிடத்திலே யிருக்கைக்கோவென்ன; அருளிச்செய்கிறார் (அணைப்பாரித்யாதி.)

பதம்.	உரை.
என்னெஞ்சே	காண வேணு மென்று அபிநிவேசிக்கிற வென்னுடைய நெஞ்சே!,
ஓரடியில்	ஒருதிருவடியாலே,
தாயவனை	ஜகத்தை யெல்லா மளந்து கொண்ட சீலஸௌலப்யாதி குணங்களை யுடையனாய்,
கேசவனை	கேசிஹந்தா வாகையாலே விரோதிக்களைவெறுக்கைக் குறுப்பான ஜ்ஞாநசக்த்யாதி குணங்களையுடையனாய், ஸுலபனுமன்றிக்கே விரோதியைவளர்க்கிலும்விட வொண்ணாதபடி,
தண்	குளிர்ந்த,
துழாய்மாலைசேர்	திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனாய்க்கொண்டுநிரதிசயபோக்யனாய், ரக்ஷிக்கு மிடத்தில் ஸஹாயாந்தரங்களைஅபேக்ஷியாத,

பதம்.	உரை.
மாயனையே	ஆச்சர்யபூதனுமாயிருக்கிறஸர்வேச்வரனையேஉபாயமென்று,
மநத்து	மநஸ்ஸிலே,
வை	அத்யவஸாய புரஸ்ஸரமாக வைத்துக்கொள்ளு; இப்படி அவனே உபாயமென்று அத்யவஸித்தால்,
ஓரடியும்	லோகத்தையளந்து கொண்ட வொரு திருவடியும்,
சாடு	சகடம்முறிந்துவிழும்படி,
உதைத்த	உதைத்துத் தள்ளிப் பொகட்டதாய்,
ஒண்	அழகிய,
மலர	பூப்போலே அதிஸுகுமாரமான,
சேவடியும்	சிவந்த திருவடியுமான,
ஈரடியும்	இரண்டுதிருவடிகளையும்,
காணலாம்	ஸாக்ஷாத்கரித் தநுபவிக்கலாம். (௬00)

அ.—நூறாம்பாட்டு.—(ஓரடியும்) பெறுமத்தாலேபெறுமது அவன் திருவடிகளை அவனாலே பெறுவதென்கிறது.

வ்யா.—(ஓரடியும்). லோகத்தை யடங்கவும் தன்னதாக்கின திருவடியையும். (சாடித்யாதி) சகடாஸுரனை நிரஸித்த போக்யமான திருவடியையும். (ஈரடியும் காணலாம்) இவ்விரண்டு திருவடிகளும் ப்ராப்யம். (என்னெஞ்சே) காணவேணுமென்றிருக்கிற வென்னெஞ்சே. இதுக்குபாயமேதென்னில்; அவனென்கிறது (ஓரடியில் தாயவனை) ஓரடியாலே எல்லாவற்றையு மளந்த ஸுலபனை.

நூறாம்பாட்டு. திருவடிகளே உபாயமும் உபேயமுமானாலும் அவையிரண்டும் அவனாலே பெறவேணு மென்றபடி.

(கேசவனை) விரோதிநிரஸநசீலனானவனை. (தண்டுழாய் மாலைசேர் மாயவனையேமநத்துவை) ஸ்ஹ்லபனுமன்றிக்கே விரோதியைப்போக்குமவனு மன்றிக்கே யிருக்கிலும் விடவொண்ணாத் போக்யனான மாயவனையே, "நாமும்ஸஹகாரிகள்" என்றிராதே காண்பதும்அவனையே, காட்டுவானும் அவன், நமக்கு ப்ரதிபத்தியே உள்ளது.

(ஓரடியித்யாதி) சாடுதைத்த ஓரடியையும் திருவுலகளந்தசேவடியையுங்காணலாம், காணவொண்ணாதோவென்றிருக்கிற வென்னெஞ்சே.! (தாயவனை) கீழ்ச்சொன்னவோரடி. (கேசவனை) சாடுதைத்த திருவடிகளையுடையவனை. திருவடிகளைத்தருவானும்விரோதியைப் போக்குவானும். (தண்டுழாய்) போக்யதை. (மாயவன்) இவன் ஒன்று நினையாதபடி பண்ணவல்லவன். (மநத்துவை) அநுஸந்தி.(வையமித்யாதி)நினைத்தவர் பேசியல்லது நிற்கமாட்டாமல் பேசுகிறார். ... ... (௧00)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அந்தாதியாகையாலேமுதற்பாட்டுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (நினைத்தவரித்யாதி.) ... ... (௧00)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அடிவரவு - வையம் வாய் நின்று புரி குன்று எளிது உலகு நன்று ஆளமர் ஊனக்குரம்பை அன்பே தகளி.

ஆ பாட்டு ௧00.

முதல் திருவந்தாதி வியாக்யாநங்கள்

ஸம்பூர்ணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பிள்ளைலோகஞ்சீயரருளிச்செய்ததனியன்

வ்யாக்யாநம்.

———:o:———

அவதாரிகை.—(என்பிறவிதீரவித்யாதி) இதில் - திவ்ய ப்ரபந்தப்ரதாதாவுமாய் திவ்யதேசத்தை ஜந்மதேசமாக வுடையருமாயிருக்கிற பூதத்தாழ்வாருடைய ஸ்ப்ர்ஹணீயமான திருவடிகளை ஜந்மஸம்பந்த மறும்படி பஜித்தே னென்கிறது. இன்னமுதா அன்பேதகளி அளித்தாருமாய், * நன்புகழ்சேர் சீதத்தார் முத்துக்கள் சேருங்கடல் மல்லைப்பூதத்தார் பொன்னங்கழல்களை-என் பிறவிதீரவிறைஞ்சினேனென்கிறது.

திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்தது.

நேரிசைவெண்பா.

என்பிறவிதீரவிறைஞ்சினேனின்னமுதா
அன்பேதகளியளித்தானை - நன்புகழ்சேர்
சீதத்தார்முத்துக்கள்சேருங்கடல்மல்லைப்
பூதத்தார்பொன்னங்கழல்.

வ்யா.—(என்பிறவிதீரவிறைஞ்சினேன்) என்பிறவியாவது-இவர்தாம், "இப்பிறவியாவது" என்றருளிச்செய்தபடியே *மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து * பல்பிறவியில் படிந்து * பிறவிப் பெருங்கடலிலே * உடலாழிப்பிறப்பிலே புக்கு உழலுகை. ஏவம்விதமான ஜந்மபரம்பரைகள் தீரும்படி ஜந்மவைபவத்தையுடைய பூதத்தார் பொன்னங்கழலை இறைஞ்சினேனென்கிறது.இறைஞ்சுகை - பஜிக்கை. அதாவது - ஸேவிக்கை யென்றபடி. "பொன்னங்கழலே தொழுமின் முழுவினைகள் முன்னங்கழலும் முடிந்து" என்னுமாப் போலே பூதத்திருவடிகளுடைய பொன்னங்கழற் காண ஜந்மங்கழலுமிறே.

இனி, அவர் உபகாரகத்வவைபவம் சொல்லுகிறது. இன்னமுதாவன் பேதகளியளிக்கையாவது - அமுதன்னசொன்மாலையான * இருந்தமிழ்நன்மாலையிணையடிக்கே சொன்னேன், "நாரணற்குஞாநத்தமிழ்புரிந்த நான்" என்னும்படி,யான்-"அன்பேதகளி" என்னும்படியான ப்ரபந்தத்தை, "உத்தமன் பேரேத்தும்திறமறிமின்" என்னும்படி உபகரிக்கை. அளிக்கை - கொடுக்கை.

கீழ் - ஜ்ஞாநவைபவம்சொல்லிற்று; இனிஜந்மவைபவஞ்சொல்லுகிறது (நன்புகழ்சேர் சீதத்தார் முத்துக்கள் சேரும்கடல்மல்லைப் பூதத்தார் பொன்னங்கழலென்று.) அதாவது-ச்லாக்யமான யசஸ்ஸு சேருமூருமாய், சீதளாதிசய முக்தாமணிகள் சேரும்படி